O-,2/MVV1,P
191

உ

சிவமயம்

# பொன்னர்சங்கர் அம்மானை.

இஃது

வாரணவாசிக்கவிராயரவர்களால்

பாடியதை

கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு தாலூகா ஊஞ்சலூர்
கிராமங்கொளத்துப் பாளையத்திலிருக்கும் மகா௱-௱-ஸ்ரீ
விஸ்வநாத பிள்ளையவர்கள்
குமாரர்
உபாத்தியாயர் கருப்பண்ண பிள்ளையவர்களால் ஏட்டுப்
பிரதிகளைக்கொண்டு பிழையறப்பரிசோதித்து

ஈரோடு:

அ. இராமசுவாமி முதலியாரவர்களது

சென்ட்றல் அச்சுக்கூடத்தில்

பதிக்கப்பட்டது.

முதற்பதிப்பு காப்பி 500.

இதன் விலை அணா 8.

1891.

இந்தப்புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

உ

சிவமயம்



பொன்னர். சங்கர். நல்லதங்காள்.

# விளம்பரம்.

———:o:———

இப்புத்தகம் வேண்டியவர்கள் ஈரோடு தாலூகா வஞ்சஊர்க் கிராமங்கொளத்துப் பாளையத்திலிருக்கும் உபாத்தியாயர் கருப்பண்ண பிள்ளையிடத்திலும் "ஈரோடு ஸெண்ட்றல் அச்சுக்கூடத்திலும்" விலை சாசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு
☞ வி. கருப்பண்ண பிள்ளை,
உபாத்தியாயர்.

உ

கடவுள் துணையிருப்பார்.

வாரணவாசிக்கவிராயர் பாடிய

# பொன்னர்சங்கர் நல்லதங்காள் அம்மானை.

## விநாயகர்தோத்திரம்.

### வெ ண் பா.

பொன்னர்சங்கர்நல்லதங்காள்புலம்பியதோர்காவியத்தை
யின்னிலத்தில்யானுமியம்பவே-தன்மையாய்
சங்காறூர்போர்க்களத்தைதான்பாடவேயுலகில்
ஐங்கரன்வெள்ளானைமுகன்காப்பு

### வெ ண் செ ந் து றை.

முந்திவிநாயகனேமுருகாசரஸ்பதியே
கந்தனுக்குமுன்பிறந்தகர்ப்பகமேமுன்னடவாய்
தோந்திவயிற்றோனேதொழுதேன்பலநாளும்
தந்திமுகமுடையதயாபரனேமுன்னடவாய்
பேழைவயிற்றோனெபெருமாள்மருமகனே
வேழைமுகமுடையவிநாயகனேமுன்னடவாய்
தாழைமரத்தடியில்தனியேயிருந்தகண்ணே
தழைந்தமரத்தடியில்தண்ணீர்மதம்பொழியும்
யிலைமரத்தின்கீழிருந்துவெண்ணைமதம்பொழியும்
வாயாறவாழ்த்திவழியிலிருந்தகண்ணே
தாய்வழிவுதேடித்தடத்திலிருந்தகண்ணே
எந்தன்குருவேஎன்னையந்தவிள்த்திடுவாய்
சிந்தைதன்னிலுன்னுடையசீர்பாதம்நான்மறவேன்.
குளத்தங்கரைப்பிள்ளையாரேகுரலோசைநீதருவாய்
கழைந்தமயிலேறிவரும்காங்கயனெமுன்னடவாய்.
அவல்கடலையெள்ளுருண்டைஅள்ளியமுதுகொள்ளும்

நாவலடிவிநாயகனேநல்லோசைமங்காமல்
ஆலிலையில்ப்பள்ளிகொள்ளும்ஆயன்மருகோனே
வேலடிவிநாயகனேவேறுவினைவாராமல்
நித்தம்உனைப்பணிந்துநின்பாதம்போற்றிசெய்து
புத்தடிவிநாயகனேபுத்திமெத்தத்தந்தருள்வாய்
கூவுங்குயில்ப்போலெகுரலோசைமங்காமல்
நாவுதவறாமல்நல்லோசைமங்காமல்
யேடுதவறாமல்யெழுத்தாணிசாயாமல்
ஆடிமயிலேறிவரும்அய்யனேமுன்னடவாய்
சாற்றரியபாருதத்தைதப்பாமலெப்பொழுதும்
யேற்றறியகொம்பாலெயெழுதுவிநாயகனே
அப்பளமுந்நூறுஅதிரசங்கள்முந்நூறு
செப்பரியஎள்ளுருண்டைசேரவொருஆயிரமாம்
மொந்தம்பழமாம்முழபயறுஞ்சக்கரையாம்
சந்தமாய்க்கொண்டுவந்துதப்பாமல்நான்படைப்பேன்
கல்க்கண்டுசீனிகதலிபிலாச்சுளையும்
அம்மையப்பன்பூசாரிஅட்டவுடனேகொண்டுவந்து
வெள்ளிக்கிழமைவிரும்பியேதான்படைக்க
அவ்வியமுதுசெய்யும்ஆனைமுகக்குஞ்சரமே
வெள்ளைவிநாயகனேவேண்டியமுதுகொள்ளும்
அம்மையப்பன்பூசாரிஅட்டவுடனேதான்படைப்பான்
விரும்பியமுதுசெய்யும்வேழமுகத்தோனே
நச்சரவில்ப்பள்ளிகொண்டநாராயணருளால்
நிச்செயமாய்ப்பொன்னர்சங்கர்நீதியுள்ளகாவியத்தைத்
இச்செகத்தில்ப்பாடுகிறேன்யெல்லவருங்கொண்டாட
நாவில்சரஸ்பதியேசலமாகவந்துதவும்
சிறுக்கான்புலியூருசென்றோடுங்குன்றுடையான்
கோனாடுதாளுங்குன்றுடையான்குமாரர்சங்கர்
மேனாடுபடைபொருதிரீண்டகதைநான்பாட
வெற்றியுள்ளவீரமலைவென்முடியில்த்தானிருக்கும்
சித்திவிநாயகனேதேசிகனேமுன்னடவாய்
வெள்ளைவிநாயகனேவேழமுகமுன்னடவாய்
அந்திரநாட்டிந்திரனேஅடைக்கலமேகாத்தகண்ணே
யிந்திரநாட்டிந்திரனைஎங்குநிரைந்தகண்ணே
எரும்பரிபூண்டருளும்பிரவிநாராயணனே
நாள்வில்லாக்குன்றுடையான்தன்மதனைக்காவியத்தை
மருவளரும்பூஞ்சோலைவய்யநெல்லிவளநாட்டான்
திருக்கதையைநான்பாடசெய்தவினைவிட்டோட.



## நகரச்சிறப்பு நால்வரலாறு.

வண்டார்டும்பூஞ்சோலைவளர்கிசவநாதபுரம்
சென்றோடுங்குன்றுடையான்செய்யபொன்னிவளநாடு
சிற்றாலைப்பட்டணமும்சிறந்தநெல்லிவளநாடு
நெல்லிவளநாடுங்கரில்லாக்கோனாடு
மேலானதட்டையநாடுவெற்றியுள்ளவீரமலை
சிறுக்கான்புலியூருசெய்யபொன்னிவளநாட்டான்
தாயாதிக்காரனவன்தன்காணிக்கொற்றவனும்
செல்லாத்தக்கவுண்டனவன்தென்னிவளநாட்டான்
குன்றுடையாக்கவுண்டனவன்குறைவில்லாவீரியனும்
ஆருமுதனையிலேஅவன்பெரியகாராளன்
வளநாட்டுக்காராளன்வறகுதின்றுப்பெருங்குடியான்
பெரியகுலதுதித்தபேர்பெரியகுன்றுடையான்
குன்றுடையாக்கவுண்டனுக்குகுழந்தைகளும்யில்லாமல்
அரியபெரியநாச்சிஅவள்புத்திரருமில்லாமல்
தாமரைபெரியநாச்சித்தானெடுக்கப்பிள்ளையில்லை
பிரியமுடன்தானெடுக்கப்பிள்ளைகளும்யில்லாமல்
அநேகநாள்த்தானும்அரியபாலகரும்யில்லாமல்
சந்தானம்பக்கம்தன்னுலெதான்மெலிந்து
அந்தநகரங்கிலெவாழ்வுகளும்யில்லாமல்
முன்வினைத்திரனைத்துமுகமுமதுதானொடுங்கி
மலடிமலடியென்றும்மாளிடங்கள்தானேச
பெருமலடியென்றுபேருலகம்பேசுதுகாண்
தாமரைபெரியநாச்சிதன்மனதுதான்கலங்கி
மேனாடுதானேக்கிவிரும்பியிருவர்களும்
தானுனுஞ்சீர்மைவிட்டுதனித்தேயிருவர்களும்
செல்லாத்தக்கவுண்டன்செய்தசிறுமைகளும்தாளாமல்
பாந்தமுடனிருவர்களும்பாண்டியன்சீர்மையிலே
சாந்தைநபதிநகரில்தனித்துக்குடியிருந்தார்
மண்டலத்தையாளுமணியனிடம்சென்றேகி
தண்டல்மணியம்தயவுடனேதான்வாங்கி
சாந்தைமாநகரத்தில்தண்டல்மணியம்பண்ணி
இப்படித்தானேஏழாண்டுதானிருந்தார்
அப்பவும்பிள்ளையில்லைஅதிகசெல்வம்தானுமில்லை
என்றிருவருமாகவேவங்கிமுகம்வாடி
சிற்றாலைப்பதிநோக்கிசீக்கிரமேவந்தல்லவோ
அப்பவும்பிள்ளையில்லைஅதிகசெல்வம்தானுமில்லை

பிள்ளையில்லாமலடியென்றுபேருலகிலேசிடவே
தாமரைப்பெரியநாச்சிதான்கலங்கியென்னசொல்வாள்
எண்ணிமனதிலேங்கிமுகம்வாடி
பிள்ளையில்லாமல்பெருமலடியானேனே
எண்ணிமனதுநொந்துயியல்பானகுன்னுடையான்
சிறுகான்புலியூருசிற்றுலைப்பட்டணத்தில்
வந்துகுடியிருந்துவருமைமெத்தத்தானுகி
ஆச்சிமாடொன்றுஅவ்வூரில்த்தான்கொடுக்க
பசுவுவாவேபவுசுமெத்தஉண்டாச்சு
நாளுக்குநாளாய்நல்லபவுசுண்டாச்சு
ஆயிரங்கிடாரிஆடுமாடாய்ப்பெருக
தாமரைப்பெரியநாச்சிக்குத்தனமும்மெத்தஉண்டாச்சு
மோருவித்தகாசுமுகடுமுட்டஉண்டாச்சு
தயிருவித்தகாசுதங்கக்களஞ்சியமாய்
பாலுவித்தகாசுபாக்கியங்களுண்டாச்சு
வத்தாதசெல்வம்வளர்ந்தவள்தனக்கு
கொளுமிகுதியாலேகோடிதிரவியமுண்டாச்சு
வத்தாதகளஞ்சியமாய்வளந்தவள்தனக்கு
அப்பவும்மலடியென்றுஅம்புவியோரேசிடவே
தாமரைபெரியநாச்சிதயங்கிமுகம்வாடி
பிள்ளையுமில்லாமல்பெருமலடியானேனே
காயாமலடிகருமலடியானேனே
அய்யோசிவனேஆதிநாராயணனே
யென்றுமனதுநொந்துவங்கிமுகம்வாடி
அருதிபரதேசியற்குஅன்னம்படைத்துவைத்தேன்
கல்லென்றகோவிலெல்லாம்கையெடுத்துக்கும்பிடவே
பூசையில்லாக்கோவிலெல்லாம்பூசைமுடித்துவைத்தேன்
மலடிமலடியென்றுமானிடங்களேசுதுகாண்

## தாமரை பெரியநாச்சி குழந்தையில்லையென்று புலம்பல்.

அழுதுபுலம்பியவள்பெரியநாச்சியரும்
அய்யோசிவனேஆதிமகாதேவாநீ
தலையிலெழுத்தோயிதுதலைநாளில்விதிப்படியோ
முதாக்கள்செய்தமுறைப்பாடோநானறியேன்
நாதாக்கள்செய்தல்வினையோநானறியேன்
தண்ணிப்பந்தல்வைத்துதடங்களுங்கட்டிவைத்தேன்
வாவிகுளம்வெட்டிமடங்களுங்கட்டிவைத்தேன்
அருதிபிராமணற்குஅள்ளிப்பணங்கொடுத்தேன்



அரசக்குப்பிள்ளையில்லைஅரெக்கிளைக்குபெண்ணுமில்லை
யென்றுபெரியநாச்சியேங்கியேதானழுது
மார்மேலேகண்ணீருதாரைவிழத்தானழுது

## குன்னுடையான் காசிப்பிராமணரை அழைப்பிப்பது.

காசிப்பிராமணற்குக்கடிதியோலைவிட்டு
பஞ்சாங்கவேதியற்குபாங்குடனேஆளனுப்பி
காசியிலேதானிருந்துகனகமுடிவேதியரும்
முந்நூறுபிராமணர்கள்மூர்க்கமுடன்வந்தார்கள்
ஆசாரமேடைகையைஅலங்கரித்தான்குன்னுடையான்
வேதபிராமணற்குவிடுதிகளும்விட்டானே
குன்னுடையாக்கவுண்டன்கூடியங்கேதானிருக்க
காசிபிராமணரும்காரிளையைத்தான்பார்த்து
யெங்களையழைத்தவிவரமென்னசொல்லுமென்றார்

## தாமரை பெரியநாச்சி குழந்தையில்லையென்று வேதியனைக் கேழ்க்கல்.

தாமரைபெரியநாச்சிசலிப்புடனேயென்னசொல்வாள்
என்னப்பாவேதியரேஎனக்குமைந்தனில்லை
பிள்ளையில்லாமலடியென்றுபேரானேன்வையகத்தில்
மைந்தனில்லாக்கவலைமனக்கவலைதான்கேழ்க்க
பிள்ளையில்லாச்சோறுபுளுவோடேஒன்னல்லவோ
மஞ்சனில்லாச்சோறுமருந்தோடேஒன்னல்லவோ
அருதிபிராமணர்க்குஅள்ளிப்பணங்கொடுத்தேன்
அப்பவும்பிள்ளையில்லைஅன்பானசோசியரே
மலடிமலடியென்றுமானிடங்களேசுதய்யா
தாமரைபெரியநாச்சிதயங்கிமனங்கலங்க
காசிப்பிராமணரும்கலங்காதேமங்கையரே

## வேதியற் சோசியம் பார்த்துச்சொல்லல்.

புத்திரசந்தானம்பொருமையுடன்தான்பார்த்து
காசிப்பிராமணரும்சாஸ்திரங்கள்தான்பார்த்து
புத்திரசந்தானமினிஉண்டாமோமங்கையரே
முந்நெத்திநரைத்துமுகமுமதுதாறொடுங்கி
பிள்ளையுனக்குண்டாமோபேய்கொண்டமங்கையரே
என்றுசொல்லமங்கையரும்வங்கிமுகம்வாடி
அழுதுபுலம்பிஅய்யோசிவனேயென்று
மாரளவுகண்ணீருதாரைவிழத்தானழுதாள்

### வேதியர்கள் மறுபடி சாஸ்திரம்பார்த்து தபசுக்கு போகச்சொல்லல்.

அப்பவங்கேவேதியரும்அன்புடனேயே துரைப்பார்
நாலுவேதம்ஆறுசாஸ்திரம்நன்மையுடனேபார்த்து
பொன்னும்பலவர்புகழ்பெரியசன்னதியில்
அரியதவமேயிருந்தால்அரசுக்குப்புத்திரருண்டாவார்
அடுக்கிடைக்குப்பெண்ணுமுண்டுஆண்புத்திரர்தானுமுண்டு
அந்தநல்லசன்னதிக்குப்போகவினிக்கூடாது
ஒற்றைச்சடாமுனிகள்ஒருகோடிதானுமுண்டு
சன்னதியைச்சுற்றிசடாமுனிகள்காவலுண்டு
வழிநடக்கக்கூடாதுவகையுடனேசொல்லுகிறோம்
அந்தமுனிகள்கண்டால்அடித்தூரத்தம்கொள்ளுமது
அந்தமுனியைவிட்டுஅப்புறமேபோனுக்கால்
பொன்னும்பலவர்புகழ்பெரியசன்னதியாம்
அந்தநல்லசந்நிதிமுன்அரியதவமிருக்க
பொன்னுலகம்பம்முன்னுலேவனிருக்கும்
அந்தநல்லதூண்மேலேபொன்கும்பம்கவிழ்ந்திருக்கும்
கும்பத்தின்மேலேபொன்னூசிதானிருந்தி
ஊசிமுனைமேலேபாசிமுனைதானிருந்தி
பாசிமுனைமேலேபாறத்தவமிருந்தால்
புத்திரனுமுண்டாகும்பொற்கொடியேஉந்தனுக்கு

### பிராமணர்களுக்கு வெகுமதிகொடுத்தனுப்பிவிட்டு தாமரை பெரியநாச்சி தபசுக்குப்போகுதல்.

நல்லதென்றுசொல்லிநளினமுள்ளகுன்றுடையான்
தாமரைபெரியநாச்சிசந்தோஷமுண்டாகி
வந்தபிராமணர்க்குவாரிப்பணங்கொடுத்து
துப்பட்டிபாகுசோமன்சேலைதான்கொடுத்து
ஊருக்குஅனுப்பிவைத்தான்உகந்ததொருகுன்றுடையான்
காசிப்பிராமணரும்கடுகியேபோனபின்பு
அரியதவம்செய்யஅவள்பெரியநாச்சியரும்
வழிகூடித்தானடந்தாள்வகையுடனேஅப்போது
தனித்துவழிநடந்துதாமரைப்பூநாச்சியரும்
பொன்னும்பலவற்சன்னதிக்கேவாராளாம்
சன்னசிக்கோம்பைக்குதனிச்சுவருகையிலே



### முனிகள் தாமரையாளை மிறட்டிவருகிறது.

கண்டுதாம்அந்தமுனிகாரிழையாளவாரதை
சடாமுனிகள்கண்டல்லவோதடமுங்குருக்காட்டி
தாமரைப்பூனச்சிதனைகண்டுதடாஅந்தமுனி
கால்கள்ரெண்டும்எந்தனுக்குகண்ணுரெண்டும்எந்தனுக்கு
மூக்குரெண்டும்உந்தனுக்குமுளிகள்ரெண்டும்எந்தனுக்கு
துடைகள்ரெண்டும்உந்தனுக்குதோளுரெண்டும்எந்தனுக்கு
கைகள்ரெண்டும்உந்தனுக்குசடைவிலாயெந்தனுக்கு
பங்கிட்டுக்கொள்ளுதடாபாராமுனிகளெல்லாம்
தாமரைபூநாச்சிதன்னருகேவந்திடவே
முனிகள்வந்துசூழ்ந்துதடாமொய்க்குழலாள்பக்கலிலே
அருகில்வரப்பயந்துஅகலவங்கேநின்றிடுமாம்
பத்தினியைக்கண்டவுடன்பாராமுனிகளெல்லாம்
அருகில்வரப்பயந்துஅடிபணிந்துதெண்டனிட்டு
தாயாரைக்கண்டுதனித்துவழிகூட்டிடுமாம்
அரியபெரியநாச்சிஅதுகடந்துதானடந்தாள்
சன்னாசிக்கோம்பைக்குத்தான் வந்தாளப்போது
பொன்னுலேகம்பமுன்னுலேதானிருந்தி
பொன்கும்பங்கவிழ்த்திபொன்னூசிதானிருத்தி
ஊசிமுனைமேலேபாசிமுனைதானிருத்தி

### தாமரை பெரியநாச்சி தவமிருக்கல்.

பாசிமுனைமேலேபாரத்தவமிருந்தாள்
ஆறாண்டுதிங்கள்அரியதவமேயிருந்தாள்
படர்ந்தசடைபந்தலிடவிழுந்தசடைவேரூண
சிவனேமகாதேவாதேவியாமேஸ்பரியே
அய்யோசிவனேஆதிமகாதேவாநீ
யெழுதவிருமாவேபிசகாயெழுதுநீரோ
புத்திரரும்யில்லாமல்ப்போவேனோவையகத்தில்
மஞ்சன்கவலைமனக்கவலைதீருமய்யா
பிள்ளைக்கவலைபெருங்கவலைதீருமய்யா
அழுதுபுலம்பிஅரியதவஞ்செய்யிலே
ஈஸ்பரியேதஞ்சமென்றுவணங்கிப்பெரியநாச்சி
மாரளவுகண்ணீருதாரைவிழத்தானழுதாள்

### ஈஸ்பரனும் ஈஸ்பரியும் தாமரையாள் பக்கம் வருகிறது.

அழுதகுரல்தான்கேட்டுஅயிலாண்டஈஸ்பரியும்
பரமனுடபக்கல்வந்துபார்வதியும்அன்னேரம்

மானிடசெம்மவகையானபெண்ணாளும்
அரியதவமிருந்து அலரிப்புலம்புஞ்சத்தம்
கேழ்க்கவினிகூடா துகிளிமொழியாள்புலம்புஞ்சத்தம்
பாரத்தவசுநிலைபார்த்துவரவேணுமினி
ஆதிசிவனாரேஅறிந்துவரவேணுமினி.
உத்தமியாள்தன்தபசுஉண்மையுடன்தான்பார்த்து
பத்தினியாள்தன்தபசுபார்த்துவரவேணுமென்றார்
ஆதிநாராயணரும்அன்பான மூவர்களும்
மூவர்கள்கூடிமொய்குழலாள்தவநிலைக்கு
வந்தாரேமூவர்களும்மானிடவர்தன்னருகே
ஆரடிபெண்ணாளும்அழுதுபுலம்புறது
என்னகுறையுனக்குஎன்னகாரியம்சொல்லுமென்றார்

தாமரைபெரியநாச்சி ஈஸ்பறரை
பிள்ளைவரம்கேழ்க்குதல்.

தாமரைபூநாச்சியரும்தானுரைப்பாளப்போது
பாலால்குறைவுமில்லைபாக்கியத்தால்தாழ்வுமில்லை
மஞ்சன்கவலைமனக்கவலைதீருமய்யா
பிள்ளைக்கவலைபெருங்கவலைதீருமய்யா
அந்தமொழிகேட்டுஆனதொருஈஸ்பரியும்
அரனாரைப்பார்த்துஅம்மையுமைதானுரைப்பாள்
பிள்ளைவரந்திருமய்யாபேதையிந்தபெண்ணாளுக்கு
என்னடிஈஸ்பரியேஎன்னவகைசொல்லுகிறாய்
முன்னெத்திரைத்துமுகமதுதானொதுங்கி
பாகப்பழம்போலேபழுத்தக்கிழவியற்கு
பிள்ளைகளும்உண்டாமோபொய்வார்த்தைபேசுறாய்
அல்லவய்யாஈஸ்பறரேஅவள்பாவம்பொல்லாது
பாரத்தவசுதனைப்பார்க்கினிப்போகாது
சந்தானபாலன்அவள்க்குத்தான்கொடுக்கவேணுமய்யா

ஈஸ்பரர் பிள்ளைவறம்கொடுக்கிறது.

நல்லதென்றுஈஸ்பறரும்நாடியங்கேதான்பார்த்து
தபசுநிலைநாலிருக்கும்தாமரைப்பூநாச்சியற்கு
வெள்ளைவிசெவ்வரலிவிதமானபூவுரண்டு
தாமரைபெரியநாச்சிதன்கையிலேதான்கொடுத்தார்
பூவையிருங்கால்புத்திரருமுண்டாகும்
தையநல்லாள்பாரவதியுந்தம்பலமுந்தான்கொடுத்தாள்
தம்பலமுந்தான்கொடுக்கதங்காளும்உண்டாவாள்



காணிக்குப்புத்திரரும்நடுகிவரங்கொடுத்தார்.
அடுக்கிடைக்கிப்பெண்ணொருத்திஅன்பாய்வரங்கொடுத்து

ஈஸ்பாறர் வரங்கொடுத்து கயிலைங்கிரிக்குப்போகுதல்.

மாயமுடன்போய்மறைந்தார்வகையானஈஸ்பாரும்
புத்திரர்க்குவரங்கொடுத்துப்போய்மறைந்தாரன்னேரம்

தாமரைப்பெரியநாச்சி வரம்வாங்கி சிற்றூலைப்பட்
டணம் வருகுதல்.

தாமரைபெரியநாச்சிசந்தோஷமுண்டாகி
சிற்றூலைப்பட்டணமேசீக்கிரமேவந்தாளாம்
அதுவேநிலையாச்சுதுகாண்அன்பானமங்கையற்கு
மூன்றுநல்லதிங்களிலேமுகம்வெளுத்துத்தானுமங்கே
ஆறுநல்லதிங்களிலேஅடிவயருமுண்டாகி
பூரணகெற்பமுந்தான்பொற்கொடியும்அன்னேரம்
திங்களுமேபத்தாகிதேன்மொழியாள்நாச்சியற்கு

செல்லாத்தாக்கவுண்டன் மருத்துவச்சியை அனுப்பி
குழந்தைதனை கொல்லும்படியாய்ச்சொல்லல்

சிறுக்கான்புலியூருசெல்லாத்தாக்கவுண்டனவன்
அரப்புலிக்கும்கிழவியைப்போல்ஒருதளயாரைத்தானழைத்து
நமக்கு சத்திராளிஆகியதோர்குன்றுடையான்
அவன்வயிற்றிலாண்பிறந்தால்நம்ம அரசுக்குயீனம்வரும்
அவனுடையவாசலுக்குஅறப்புலிக்கப்போறாப்போல்
நீபோய்மருத்துவமும்நேராகத்தான்புகந்து
ஆண்பிறந்தால்நீயும்அர்ச்சினமேகழுந்தொடித்து
ஆழகுழிபறித்துதானப்புதைத்துவிடு
பெண்ணாய்ப்பிறந்தால்பிரபலமாயெண்ணையிட்டு
யெண்ணையிட்டுக்குளுப்பாட்டியிங்கேநீவந்துவிடு
வந்தநல்லநாழிகையில்வருசைபண்ணிநான்தாறேன்
பட்டுப்பட்டாய்வளியும்பண்புடனேநான்தாறேன்
நல்லதென்று அம்மையரும்நாடியங்கேஓடிவந்தாள்
அறப்புத்தலையில்வைத்துஅவளுமங்கேவருகையிலே

குன்றுடையான் மருத்துவச்சியை அழைத்துவருதல்

மருத்துவச்சியில்லாமல்வகையான்குன்றுடையான்
தளயாரெதிரவேஅழைத்தங்கேகூட்டிவந்தான்
வருகுமந்தவேளையிலேவாள்மயிலாள்நாச்சியரும்

மெய்சோர்ந்துவிழுகுறதைக்கண்டாளாம்அம்மையரும்
பத்துமாசக்தானுகிபாங்கானநாச்சியரும்
சோபமதுதானுகிசோர்ந்திருக்கும்வேளையிலே

குழந்தைபிறக்க மருத்துவச்சி கழுத்தொடித்து குழியில்
புதைக்கிறது.

செவ்வரலிபூவானார்தீர்க்கமுள்ளபொன்னுண்டார்
வலதுவிலாவில்வகையாகத்தான்பிறந்தார்
வெள்ளரலிப்பூவானார்வீரியவான்தம்பிசங்கன்
இடதுவிலாவில்இயல்பாகத்தான்பிறந்தார்
அந்தநல்லவேளையிலேஅரியபெரியநாச்சியரும்
ஜீவனும்இல்லாமல்தியங்கியிருக்கையிலே
அந்தநல்லபாலகனைஅவையார்கழுத்தொடித்து
ஆழக்குழிபறித்துத்தாழப்புதைத்தாளே
அப்பாலேயீஸ்பரனும்தியானித்திருக்கையிலே
தம்பளமுந்தின்றதினால்தங்காளும்தான்பிறந்தாள்
ஆதிசிவனாரும்அன்புடனேதானறிந்து
வெண்ணீரைஉச்சரித்துவிரும்பியங்கேவிட்டெறிந்தார்
வெண்ணீரும்விட்டெறியப்புண்ணியரும்அரியாமல்
பால்க்குள்சிறகுபாங்காதக்கூடியதே
நிலவரையின்கீழேவளத்திருநீஸ்பரனும்

தாமரை பெரியநாச்சி மருத்துவச்சியை குழந்
தை யெங்கேயென்று கேட்குதல்.

சோபந்தெளிந்துதானுக்கென்றுதானெழுந்து
பாலகனும்எங்கேயடிபார்தகத்திநாய்க்கிழவி
முன்னேபிறந்ததுதான்உதிரமாய்ப்போச்சுதம்மா
பின்னாகத்தான்பிறந்தாள்பேடைமயில்த்தங்காளும்
தாமரைப்பூநாச்சியரும்தயங்கியேதானிருந்தாள்
நிலவரையின்கீழேவளர்ந்தாரிருவர்களும்
பதினறுவயதில்பறமனுடகட்டளைதான்
எட்டானைப்பிலமுடையான்மியல்பெரியபொன்னருந்தான்
ஏழானைப்பிலமுடையான்எழிலுடையதம்பிசங்கன்
நிலவறையின்கீழேவளர்ந்தாரிருவர்களும்
தங்காளுக்கென்னையிட்டுதயவாகக்குளுப்பாட்டி
தாமரைபெரியநாச்சிதன்கையிலேதான்கொடுத்து
தங்காளுக்குமுலைகொடுத்துதான்வளர்த்தாளப்போது
அவையாரும்தானும்அன்புடனேதான்போனாள்



அவையாற்கு செல்லாத்தாக்கவுண்டன் வெகுமதி
கொடுத்து அனுப்புதல்.

சிறுக்கான்புலியூருசெல்லாத்தாக்கவுண்டனிடம்
வந்துஅவையாரும்வகையுடனேதானுரைக்க
ஔவையாற்குத்தானேஆபரணந்தான்போட்டு
சேலைபனுதிகளும்சிறப்புடனேதான்கொடுத்தான்
வாங்கிஔவையாரும்வகையுடனேதான்போனாள்
அப்படியேதானேஅவனிருக்கும்நாள்தனிலே

அத்தைமலைக்கொழுந்தி பிள்ளையில்லையென்று
தபசுக்குப்போகிறது.

அத்தைமலைக்கொழுந்திஅம்மான்பெருமாளும்
தாமரைநாச்சியுடன்தம்பியம்மான்பெருமாளும்
செம்மானின்பின்போனசெங்கண்மால்சன்னதியில்
அம்மான்பெருமாளும்அவனும்மனஞ்சலித்து
புத்திரரும்இல்லாமல்போதமனஞ்சலித்து
அத்தைமலைக்கொழுந்திஅரிராமன்சன்னதியில்
புத்திரரைவேண்டிபோதத்தவமிருந்தார்
அரியதவநிலையைஅரிராமர்தானும்கண்டு

ஸ்ரீகிருஷ்ணபகவான் பார்ப்பானைப்போல் வந்து
அத்தைமலைக்கொழுந்திக்குப்பிள்ளைவரம்
கொடுக்கல்.

புத்திரசந்தானமதுநான்கொடுக்கவேணுமென்று
ஆதிநாராயணரும்அன்பாகத்தான்மகிழ்ந்து
பஞ்சாங்கவேதியர்போல்பாங்காய்வடிவெடுத்து
அத்தைமலைக்கொழுந்திஅவளருகில்வந்துநின்று
என்னவரம்கேழ்க்கவந்தாயியல்பெரியமங்கையரே
மாயனுபாயன்வகையுடனேதான்கேழ்க்க
அத்தைமலைக்கொழுந்திஅன்புடனேஎன்னசொல்வாள்
பிள்ளையுமில்லாமல்பெருந்தவசுகேழ்க்கவந்தேன்
புத்திரரும்யில்லாமல்பொருந்திவரம்கேழ்க்கவந்தேன்
சந்தானமயக்கம்தான்தீர்க்கவேணுமய்யா
நல்லதென்றுநாரணரும்நாடிவரமேகொடுத்தார்
ஆண்புத்திரரும்உண்டுஅடுக்கிடைக்குப்பெண்ணுமுண்டு

வறங்கொடுத்தப்பெருமாள் போனபின்புசிறுக்கான் புலியூருக்கு வந்து குழந்தைகளைப்பெற்றது.

மாயன்வரங்கொடுக்கவகையுடனே தான்வாங்கி
அம்மான்பெருமாளும் அறமனையேவந்தாளே
அதுவேகிலியாகஅந்தைமலைக்கொழுந்தி
வய்யபெருமாளேவகையுடனேயீன்றெடுத்தாள்
செய்யபெருமாளும்திறமுடனே தான்பிறந்தார்
அரியபெருமாளும்அருமையுடனேபிறந்தார்
தங்கையிருவரும்சமுத்தருடனே தான்பிறந்தார்
சிறுக்கான்புலியூரில்சிறப்புடனே தான்பிறந்தார்

சாம்புவன் பிறந்தது.

காரும்பாச்சிகாரணமாய்ப்பெற்றெடுத்தாள்
வீரமலைச்சாம்புவனும்வீரியனுமேபிறந்தான்
அரியவறமுடையஆண்மையுள்ளசாம்புவனும்
இப்படியேதானும்யிருக்குமந்தவேளையிலே

பென்னர்சங்கர் நிலவறையில் வளருகிறது.

சிவநருளினாலேவந்தசிறுபுலிதம்பிசங்கன்
நிலவறையிலேவளர்ந்தார்நிகரில்லாப்பொன்னர்சங்கர்
அஞ்சுபிராயமட்டும்அவர்கள்நிலவறையில்
சிலம்பங்கள்செய்யுறதுசேல்போலேபாயுறதும்
இவன்தட்டஅவன்தட்டஅவன்தட்டயிவன்தட்ட
படியாதவித்தையெல்லாம்படித்துயிருவர்களும்
இப்படித்தானேஇருக்குமந்தநாள்தனிலே

பொன்னர்சங்கர் நிலவறையைவிட்டு வெளியே வருகிறது.

பொன்னருடன்தம்பிசங்கர்புண்ணியர்களிருவர்களும்
துலுக்கனைப்போல்ப்பாகுகட்டிதோதவாள்கைபிடித்து
குன்னுடையானரமனைக்குவந்தார்களப்போது

குன்னுடையானை செல்லாத்தாக்கவுண்டன் காட்டுக்கடமை வாங்க அடிக்கிறது.

அந்தநல்லவேளையிலேஆனதொருதாயாதி
சிறுக்கான்புலியூருசெல்லாத்தாக்கவுண்டனவன்
ஊருகடமைவாங்கஉண்மையுடனப்போது
குன்னுடையான்பக்கலுக்குக்கொடியநல்லசேவுகரெ



சோடாளனுப்பிதூருகடனைகூட்டிவந்து
காட்டுக்கடமைகடுகியங்கேவாங்கவென்று
அஞ்சுமணிக்கயற்றிலேஅடித்துப்பணங்கேட்டு
நெத்தியில்க்கல்லைவைத்துநிறுத்தினான்வெய்யலிலே

பொன்னர்சங்கர் அரமனைக்குவந்து தாயாரைக் காணல்.

பொன்னருடன்சங்கருமேபொருந்தியிருவர்களும்
குன்னுடையாநரமனைக்குகுறிப்புடனேவந்துநின்று
அரியபெரியநாச்சிஅவள்பதறித்தானெழுந்து
எங்கேவந்தீர்சேவுகரேஎன்னகாரியம்சொல்லுமென்றாள்
ஆத்தாளேதாயேஅரியாயோமாதாவே
மருத்துவச்சிகளுந்தொடுத்துவகையாயிருவரையும்
ஆழக்குழிபறித்துநாளப்புதைத்துவைத்தாள்
ஈஸ்பறனார்தன்னருளால்யிருவருமேதான்பிளைத்தோம்
பிழைத்துவந்தோம்தாயேபெருலகையாள்வதற்கு
என்றுசொல்லமாதாயிருதோளும்பூரிதமாய்
வாரியெடுத்தல்லவோவர்ணமுகம்முத்தமிட்டு
சேத்தியெடுத்தல்லவோதிருமார்பைமுத்தமிட்டாள்
அருசுவையும்போசனமும்அன்புடனேதான்படைத்தாள்
உண்டுபசியாறிஉத்தமரும்வீற்றிருந்தார்
என்தாயேமாதாவேஎங்களையெறங்கையென்றார்
தாமரைபெரியநாச்சிதயங்கிமிகவேயுரைப்பார்
அப்பாமகனேநீஅதுசேதிகேளாயோ
சிறுக்கான்புலியூரான்சேவுகரைத்தானனுப்பி
காட்டுக்கடமையென்றுகளநீதிதான்வாங்க
கூட்டிபோயங்கேகொல்லுகிறான்பாதகனும்

பொன்னர்சங்கர் சிறுக்கான்புலியூருக்கு வந்து தகப்பனை கூட்டிவருதல்.

அப்படியோதாயேஅர்ச்சினமேயோம்நாளும்
வத்தினகுளத்தில்வாளைகுதித்தாப்போல்
சிறுக்கான்புலியூருசீக்கிரமேவந்தார்கள்
செல்லாத்தாக்கவுண்டனையும்சினத்துடனேதான்பிடித்து
அஞ்சுமுதனமஅடித்துக்கருவறுத்து
தகப்பன்தனையழைத்துதன்பதியேவந்தார்கள்
சிற்றூலைப்பதிநோக்கிசிக்கிரமேவந்தார்கள்
வந்தாறரமனைக்குவகையுடனேஅப்போது

தாமரைப்பூநாச்சியழைத்தாள்கேழ்ப்பாகப்போது
அந்தநல்லசேவுகரும்ஆரடியோபெண்ணரசே
நம்முடையமைந்தநல்லோநாயகரேசொல்லுகிறேன்
வந்தவறலாற்றைவகையுடனேதானுரைத்தாள்
இப்படித்தானும்இருக்குமந்தவேளையிலே

### பொன்னர்சங்கர் அரமனை கட்டுகிறது.

சுத்துமதில்கோட்டையிட்டார்சூரியனைக்காணமல்
அரமனைகட்டிஅன்புடனேதானுமப்போ
தங்காளரமனையும்தயவுடனேசோடினையாய்
பவளக்கால்நாட்டிபக்கவளைதான்போட்டு
வெள்ளித்தூண்யிடைநடுவேவிளக்குமாடம்உண்டுபண்ணி
பளிங்குநால்மண்டபமும்பந்தடிக்குமேடைகளும்
எரும்பேருமண்டபமும்மியல்புடனேஉண்டுபண்ணி
பாம்பேருமண்டபமும்பந்தடிக்குமாடங்களும்
அன்னவூஞ்சல்த்தானுடபொன்னுலெசங்கிலியும்
தங்காளரமனையைதயவுடனேதான்சமைத்தார்
இப்படித்தானும்யிருக்குமந்தநாளையிலெ

### பொன்னர்சங்கருக்குக்கல்யாணம் செய்கிறது.

எழுவயதாகிஎதுத்தாற்குமார்பாணி
பத்துவயதாகபகைத்தார்களஞ்சிமெனார்
சங்கருடன்பென்னுண்டார்தன்வயதுதான்மீரி
பனிரெண்டுதன்வயதுபாங்குடனேசென்றபின்பு
சோபனஞ்செய்யத்துருசுடனேகுண்ணுடையான்
நெல்லிவளநாட்டான்நீதியுள்ளகுண்ணுடையான்
மக்களிருவருக்கும்வகையுருமைகொள்ளவென்று
அத்தைதமலைக்கொளுந்திஅம்மான்பெருமாளும்
கோனுட்டுக்காருளன்குணம்பெரியமைத்துணனே
அம்மான்பெருமாள்அரமனைக்குவந்தல்லவோ
வந்தநல்லஉறமுறையைவாவென்றுதான்கேட்டு
பட்டுப்பாய்போட்டல்லவோபங்காயிருங்களென்று
வன்மையுடனிருந்துவருசையுடன்தான்பேசி
பெண்ணுமதுகேட்டல்லவோபிரியமுடன்சம்மதிச்சு
வலுமையுடன்பேசிவருசையுடன்சம்மதிச்சு
கலியாணநாள்க்குறித்துகடிகியேகுண்ணுடையான்
பரியஞ்செலுத்திபாங்குடனேநாள்க்குறித்து
வரிசையுடன்பேசிவகையுடனேசம்மதிச்சு



பவளக்கால்நாட்டிபந்தலெங்கும்தான்போட்டு
மேக்கல்ட்டிகட்டிவிதமாயலங்கரித்து
சோலைகளும்தானெழுதிதுய்யபிலாத்தானெழுதி
வாழைமரம்யெழுதிவாகனங்கள்தானெழுதி
தென்னமரங்கள்யெழுதிசெவ்விழநீர்குலையெழுதி
அன்னமுடன்தாருவும்அதுமேல்கிளியெழுதி
மாடப்புராவெழுதிவர்ணமுள்ளமயிலெழுதி
பொன்னருடன்சங்கருக்குபொன்பூட்டிநீர்வார்த்து
பிறம்புவலமாகபேய்க்கரும்புமுன்னாக
அம்மிவலமாகஅரசாணிமுன்னாக
ஆயிரப்பெருந்திரியும்அன்புடனேதானெடுத்து
மாப்பிளையிருவரையும்வகையாயலங்கரித்து
பொன்னுலெகண்டுவிறல்புகழ்பெறவேஉண்டுபண்ணி
பொன்னின்விறல்பிடித்துபிரியமுடன்தானிருத்தி
கலியாணசோபனங்கள்கடிகிமுடித்தல்லவோ
கொட்டிமுளக்கிக்கோதையர்கள்பாடிநிற்க
அருகுமணஞ்செய்தார்கள்அனவோருந்தானறிய
பெண்ணையுமாப்பிளையும்பிரியமுடன்கூட்டிவந்து
நாலாநீராட்டியங்கேநல்லோரைத்தான்பணிந்து
கலியாணந்தான்முடித்துகாராளன்பொன்னர்சங்கர்
பேறவியுந்தான்முழுசிபெண்களையுந்தானழைத்து
சிற்றுலைப்பட்டணம்சீக்கிரமாய்கூட்டிவந்து
வெள்ளிபொன்னுஞ்சங்குடனேவிரும்பியங்கேதானெடுத்து
வந்தஉறமுறைக்கிவகையாயாசனமிட்டு
ஊருக்கனுப்பிவைத்துஉகந்திருக்கும்நாளையிலெ

### பொன்னர்சங்கர் பெண்சாதிமார்களை சிறை போட்டு வைப்பது.

இப்படிக்கித்தானேஇருக்குமந்தநாள்தனிலே
பெண்ணுவிபட்டால்பிலமுங்குறையுமென்று
கொண்டுசிறைபோட்டார்குண்ணுடையான்தன்மகனும்
பொங்கியிடுஞ்சோற்றைபுகைவாசம்வீசுதென்பார்
ஆக்கியிடுஞ்சோற்றைஅனல்வாசம்வீசுதென்பார்
அண்ணுந்துபாத்தாலெஆனப்பிலங்குறையுமென்று
கொண்டுசிறைபோட்டார்குமாரர்சங்கர்தானுமங்கே
தம்பிசங்கர்பொன்னர்தாஷ்டிகரிருவர்களும்
இப்படியேதானும்யிருக்குமந்தநாளையிலெ

### சோழராசாக்களுடைய வறலாறு.

சோழராசனுட்டுறைமக்கள்தன்பருபேறு

மாடப்பிருச்சோழன்மணிப்பிருச்சோழனென்றும்
கங்காளச்சோழனென்றுங்கனகமுடிச்சோழனென்றும்
முத்துமுடிச்சோழனென்றும்பவளக்கால்சோழனென்றும்
சோழன்சோழனென்றுதொண்ணூறுசோழபட்டம்
ஆருக்கொருகூருஅரமனைக்குமேல்வாறம்
காந்துவைத்தபால்தனைகாகம்வந்துதீண்டாது
பசுவும்புலியுமதுஒருதுறையில்த்தண்ணீர்குடிக்கும்
எலியுடனேபூனைகளும்யிருந்துவிளையாடும்
நீதியுள்ளசோழமன்னன்நெல்லிவளநாட்டில்
ஆரிலொருகடமைவாங்கிஆராச்சிமணிஅசையாமல்
வாளுகின்றநாளையிலெவருசையுடன்வாழ்ந்திருந்தார்
தேடுந்திரவியமுந்திரட்டுப்பால்சறக்கறையும்
அனியாயமென்றொருநாள்அபகிர்த்திவாராமல்
தானதருமம்பெருத்துவாளுகின்றநாளையிலெ
ஆராச்சிமணித்தொடரும்அசையாமலாண்டிருந்தார்
செங்கோல்செலுத்திசெகமெல்லாம்ஆண்டிருந்தார்
வங்காரசிங்காரமுடன்வகுப்புடனேவாழ்ந்திருந்தார்
ஆடையுடன்செம்பொன்னாபரணந்தான்பூண்டு
மாடையுடன்தங்கம்மதிக்கவொண்ணாமாணிக்கம்
பொன்னின்வகைமாலைகளும்பூஷணங்களுள்ளதெல்லாம்
காமவிகாரங்கன்னியர்கள்சீராட்டு
நோக்கநின்றுநீதியுடன்வாழ்ந்திருந்தார்
இப்படியேதானே இருக்குமந்தநாளையிலே

### சோனுடைய சீர்மையில் மழையில்லாமல்ப் போனது.

சோனுடசீமைசிறந்ததிருமதிளுகளும்
கொங்குதாராபுரம்மலையாளமாட்டாக
மாரிமரித்துமழைமாரியில்லாமல்
சேறநிழல்நீருமற்றுநீயந்துநிலமாவெடித்து
பாருலகமெங்கும்பருந்தீயைப்போட்டாப்போல்
தணலைமிதித்தாப்போல்தானிருக்கஉலமெங்கும்
கொங்குவெருத்துக்குடியிருக்கமாட்டாமல்
இராசநீதியில்லாமல்ராச்சியத்தையாண்டிருந்தார்
அன்னமயமில்லாமல்பின்னேமதம்பித்தாகி
காலங்கருப்புஆகிநிக்குங்காலத்திலெ
தழைதாய்புயிலைகரியைநாகறுந்தமாட்டாமல்
பிலங்குரைந்துசீமையெல்லாம்பிளப்பொன்றும்யில்லாமல்



### சோழனுடசீமைக்கு கொள்ளைக்குப்போகுதல்.

கரிக்காலன்சீமையிலேகளவுக்குப்போவோமென்று
நாடுகூடிசம்மதிச்சுநல்லபதியளிக்கவென்று
வேடுவர்கள்தான்வெகுண்டுவிழைசீர்மைகொள்ளையிட
கூடியேபோயிக்கொள்ளையிட்டார்வேடுவர்கள்
திருக்காம்புலியூரையிருக்காலும்கொள்ளையிட்டார்
செக்கடிநத்தம்சேந்தகிராமமெல்லாம்
வள்ளடிக்கொள்ளையிட்டுவான்சிறையுந்தான்பிடித்து
ஆடுசிறைமாடுசிறைஅனவருக்குமுள்ளபடி.
மேல்நாட்டுவேட்டுவறும்கீழ்நாட்டைக்கொள்ளையிட்டு
பெண்சிறைகள்தான்பிடித்துபோகுமந்தவேளையிலெ

### பொன்னர்சங்கர் வேடுவர்கள் கொள்ளைகொண் டுவரும்போது கண்டுபிடிக்கிறது.

நெல்லிவளநாடன்நிகரில்லாக்கோனுடன்
குன்றுசூழ்ந்தவளநாடன்குன்னுடையான்தன்மகனும்
எதிரில்லாப்பெருமாளும்யிளையமாவுஞ்சேவுகரும்
திருக்காம்புலியூறைவேடுவர்க்கொள்ளையிட்டுப்போம்போது
கொள்ளைகடிங்காலுகூப்பிட்டசத்தமுமாய்
அய்யோவென்றசத்தம்மெய்யாகத்தான்கேட்டு
பெண்துறல்சத்தம்பெரியசத்தம்தான்கேட்டு
எதிரில்லாப்பெருமாளேசிறைமீழ்க்கவேணுமென்றார்
வய்யபெருமாளேவாண்சிறைதிருப்புமென்றார்
செய்யபெருமாளேசிறைமீழ்க்கவேணுமென்றார்
அய்யோவென்றசத்தம்அடங்குவருகுதுகாண்
சல்லிப்புறவிராமேனிதடங்கட்டிவழிமறித்து
சோன்சீமைநாட்டாரேசெய்கயிழைமெத்தவுண்டு
பெண்சிறைகள்தான்பிடித்துப்போகநீவல்லாயோ
பொல்லாதவேடுவர்கள்பொரிகலங்கித்தானிருக்க
நில்லாமல்சீமைவிட்டுநெடுங்கானம்போயொழிந்தார்
ஒளிந்தவர்தம்மையெல்லாம்ஒருநொடியில்வளைந்துகொண்டு
கொட்டம்பன்னும்வேடுவரைகுறுக்கறவேவீசிவிட்டார்
யட்டுப்பட்டவேடுவர்கள்மணிக்குடல்களற்றுவிழ
கருங்களவுசெய்தவரைகண்டதுண்டம்செய்துவிட்டார்
பழிகாரவேடுவரைபறந்துகளும்பசிதீற
கொன்றொருநொடியில்குலவிருதுக்காராழன்

### திருக்காம்புலியூரார் வந்து பொன்னர் கிட்ட முறையிடல்

யெல்லாமறசேவேந்தருக்குமேலானவரே
கள்ளர்சிறைமீட்டவரேகாராளர்கற்பகமே
மேழிக்கொடியுடையவரேமேகப்பதியுள்ளவரே
தேவர்சிறைமீட்டார்திருமால்தன்னருளால்
வானவர்கள்சிறைமீட்டார்வய்போகறங்கருமே
இந்தப்புதுமையெல்லோரும்கேட்டிருப்போம்
நாங்கள்சிறைபோனதுவுநன்றாகமீட்டவரே
எங்கள்சிறைமீட்டவரேஎங்கெங்கும்போக
வார்த்தைகளுமுண்டுஎங்களுக்குவலதுகளுமுண்டுங்காண்
கீர்த்திகளுந்தாநடக்கும்கிருபைக்கடல்போலே
வெள்ளாமுறென்றாலெல்லவற்குமொவ்வுமென்று
இறைமீட்டசீமானேபிழைபொருத்தபுண்ணியனே
கையெடுத்துத்தலையில்வைத்துகண்ணீர்ததும்பிடவே
கரிக்காலன்சீர்மையிலேகலக்கமிகவாழ்ந்திருந்தோம்
பழிகாரர்வந்துபதியைக்குலைத்துவிட்டார்
குலைந்துவிட்டோம்சங்கரேகுடியிருக்கக்கூடாது
தாலிகூறைதந்தவரேஎங்களுக்குநாயகரெங்கேயென்றார்
ஆளுகின்றகரிக்காலன்அடவுடனேதானாய்
எங்களுடசீமையிலேயியல்பெறவேவாழ்ந்திருங்கள்
ஒருவர்க்கொருவர்உதவியல்லோஅண்ணாவே
கனகமுடிவேந்தன்கரிக்காலன்சோழனுக்கு
அரிக்கையிடவேணுமென்றுஅடவுடனேதானடந்தார்
இப்படியேதானடந்துயிதுகருமமுறையுமென்றார்
காராளரையனுப்பிகள்ளர்சிறைமீட்டவரும்
அஞ்சாதேயென்றுசொல்லிஅப்புறவிமேதேறி

### சங்கரும் அக்கைதங்கைகளும் சித்தூலைப்பட்டணம் வருகிறது.

சித்தூலைப்பதிநோக்கித்துறகதமுங்கடந்திடுமாம்
தம்பிவருகிறதைதமையனார்தான்கேட்டு
எதுக்கவருவாராமியல்பானபொன்னுண்டார்
தமையனையுங்கண்டு சரிகுதிரைவிட்டிறங்கி
பாதம்பணிந்துபரமனேதஞ்சமென்று
படிந்தவனைகைதூக்கிபதிமுகத்திலணைத்து
கட்டியெடுத்தணைத்துகண்ணோடுறவனைத்து



வாய்த்ததொருதம்பியரேவான்சிறையைமீட்டீரே
உத்ததுணைதம்பியரேஉலகமெல்லாம்போக
நாட்டார்மனமகிழநற்சிறையைமீட்டவரே
இந்தமண்ணுள்ளமட்டும்கருமலைகளுள்ளளவும்
போராகநிற்குந்தம்புபெரியசிலைவீரியனே
சந்தோஷமாகதங்கள்மனையுள்புகுந்தார்
பள்ளியறைவிட்டிடல்பதிவாகவீற்றிருந்தார்
சித்தூலைப்பதியில்சிறக்கவேவீற்றிருந்தார்

### திருக்காம்புலியூரார் சோழராசனிட முறையிட வருவது.

கொள்ளைகுடுத்துகுடியிருக்கமாட்டாமல்
உறையூர்ப்பதிவாசன்உத்தமனன்கரிக்காலன்
நாடுநகராண்டார்நற்சோழன்கரிக்காலன்
தேடுந்திரவியமும்திரட்டுப்பால்சர்க்கரையும்
வேண்டுந்திரவியமும்அநுபவித்தோமின்றுநாம்
குடியிருக்கப்போறதில்லைகொங்கருடசில்லறையால்
கேள்விகளுமில்லையென்றுமுறையிடவேதானடந்தார்
எல்லவருங்கூடியிருந்தபதிவிட்டகன்றார்
ஒருகறைவளியோடேஉபாயமாய்த்தானடந்தார்
திருக்கடம்பர்சன்னதியில்திருநெனைவந்திறங்கி
கடம்பவனநாதருக்குசிலகாணிக்கைதானுமிட்டு
வய்யாளிவேணிதலைமேலேவந்திறங்கிக்காராளர்
திருவெங்கிமலைவாழும்இரக்கம்புரிந்தீஷ்பரரை
எல்லவருந்தெண்டனிட்டுஎழுந்திருந்துதானடந்தார்
மாத்தவிள்ளியம்மையைனிக்கித்துணையென்றுசொல்லி
தெற்குமுகம்திரும்பிதிருமாணிக்கமலைநோக்கி
அந்தியொளிதாங்குஞ்சூரியன்வெட்டுப்பொருத்தவரே
வடமுகமாயருக்குவாய்க்கொடுத்தஈஸ்பரரே
தங்கைதரித்தவரேகன்னாற்றின்மலைக்கொழுந்தே
பள்ளிகொண்டார்பாதம்பணிந்துதொழுதுநின்று
எங்கள்முறைகேளும்வய்போகநாயகரே
வந்தமுறைகேளும்வய்போகறங்கரே
முறையிட்டோட்டாருமுறையூரினுள்புகுந்து
சிங்காரத்தோப்பிலேசிறக்கவேவிடுதிவிட்டார்
அந்திரவுதாபரித்துஅனைவருமாயெழுந்திருந்து
எந்தவூறனிந்தோதானவ்விடமோகொள்ளோமென்று
நாடுஅளிந்ததோதநற்சோழன்சீர்மையிலே
எல்லவருங்கூடிப்போதுகருமமென்றுசொல்லி

நாட்டுத்துயரமெல்லாம்கெட்டேதெனநடுங்கி
உறையூருவீதியிலெஉபாயமாகத்தானடந்து
ஆசாரக்கூடத்திலெஅட்டவுடனேவந்துநின்று
இராசாவும்எங்கேயென்றுவிசாரிக்குமவ்வளவில்
கனகமென்றினமாளிகையில்கண்துயின்றாராசாவும்
இதுக்கென்னசெய்வமென்றுஇருக்குஞ்சமயத்திலெ
பந்தியாயிரம்புரவிகட்டும்படைமிகுந்தசெம்பயனும்
வந்தானதுவழியாய்அரமனையில்த்தானிருந்து
கண்டானேநாட்டாரேகண்குளிரத்தான்பார்த்து
இத்தினைநாளிதுகாலம்இங்கொருவர்வந்ததில்லை
கோனாட்டுக்கொற்றவரேகூடிவந்தகாரியமென்
நாங்கள்வந்தகாரியந்தான்நன்றாகநீர்கேளும்
திருக்காம்புலியூருதிருப்பணிக்குத்தானடக்கும்
எண்ணாயிரம்பொன்சீர்மையிருந்தொருகுடிதனிலெ
கரிச்சுட்டுகரியளப்போம்கரிக்காலர்சொல்ப்படிக்கு
சொன்னபடிசெய்துசுகமாகவிற்றிருந்தோம்
ஆரிலொன்றுகடமைதந்துஅசதியறவாழ்ந்திருந்தோம்
திருமதிருக்குமேற்கேசேரநாட்சீமையிலெ
மாரியரிந்துமருகடலும்தானும்வத்தி
ஏரிகுளம்வத்தியிருக்குமவர்சீமையெல்லாம்
கொங்குவெறுந்துக்குடியிருக்கமாட்டமல்
அன்னமயமில்லாமல்கொங்கர்அலங்கோலப்பட்டதினால்
வெங்கலநாட்டுவேடுவரும்தான்கூடி
கோட்டைக்கரைமதிலிடத்திலெகொள்ளைகொண்டுபோனார்கள்
திருக்காம்புலியூரையிருக்காலுங்கொள்ளையிட்டார்
பெண்சிறைகள்தான்குடுத்துபேதலித்துவந்தோமே
தாலிபறிகுடுத்துதான்குலைந்துவந்தோமே
மாணியம்சிறைபோச்சுதுகாணமந்திரியேநீகேளு
ஆடுசிறைமாடுசிறைஅனைவருக்குமுள்ளபடி
பெண்சிறைகள்தான்குடுத்துபூமியிலெவாள்வாரோ
எங்கள்முறைகேட்டீரேஇனிராசாக்குறையுமென்றார்

செம்பயன் ராசாவுடன் குடிகள்வந்த சமாசாரம் சொல்லல்.

அந்தமொழிகேட்டுஅலரியெழுந்திரிந்து
உங்கள்சிறைபோனதல்லோஎங்கள்சிறைநாட்டாரே
காட்டாரேக்கையமுத்திகடந்தானேசெம்பயனும்
ஆசாறவாசலிலெஅட்டவுடனேநின்றுக்கொண்டு
அசையாமணித்தட்டேறஅசைத்தானெசெம்பயனும்



ஆராச்சிமணியசையஅரமனைகளதிர்ந்திடுமாம்
நித்திரைசெய்மண்டபத்தில்நீதியுள்ளசெழுந்திருந்து
இத்தினைநாளிதுகாலம்இராச்சியத்தையாண்டிருந்தோம்
இப்பவந்தமுறையேதுஇயல்புடனேசொல்லுமென்றார்
மெய்நடுங்கிஉள்குலைந்துமேனியெல்லாம்வேர்த்து
சிந்தையுநொந்துருகிசிவனேசிவனேயென்றான்
ஆராய்ந்துபார்த்துஅளவருக்கமாட்டாமல்
உறையூர்பதிவாசன்உத்தமனும்சோழமன்னன்
கண்கள்பொறிபறக்ககடுங்கோபச்சினத்துடனே
யேகாந்தக்கூடத்துக்குயெழுந்துநடந்தாரே
நின்றதொருராசாவைசெம்பயன்நோக்கித்தெண்டனிட்டான்
ஆண்டவனேசெப்புகிறேன்அட்டவுடனேகேளுமென்றான்,
சொல்லுமென்றுசோழன்செவிகொடுத்துக்கேட்டிருந்தான்
திருக்காம்புலியூருதிருப்பணிக்கிராமமது
எண்ணாயிரம்பொன்சீர்மையிருப்பிளழந்துபோனோமே
தென்தலைசிவாலையமும்வடதலைசிவாலையமும்
வேலைகள்நின்றுதய்யாஉளியடியற்வாராமல்
கரிச்சுட்டுக்கரியளக்குங்காராளர்வங்குசங்கள்
திருக்காம்புலியூரார்யிருக்காலும்வந்தார்கள்
சேரநாட்சீமையெல்லாம்சோநீழலுமற்று
கொங்குவெறுத்துகோட்டைமதிலிடித்து
கோவில்கிராமமெல்லாம்கொள்ளைகொண்டுபோனார்களாம்
அடித்தமாடுபிடித்துசிறைஅன்பிடனேகொள்ளையிட்டு
தாலிபறிகூறைபறிதன்தாரம்சிறைகுடுத்து.
கொள்ளைகுடுத்துகுடியிருக்கமாட்டாமல்
இருக்கமுடிப்போகாமல்நெருக்கமுடன்வந்தார்கள்
நாட்டவரைத்தானழைத்துநலவேந்தன்கரிக்காலன்
அரமனையைவிடுதிவிட்டுஅரவனைத்தான்கரிக்காலன்
துயரப்படவேண்டாமென்றுசொல்லியேநாட்டாற்கு
வன்னமாயிரம்புறவிகட்டும்வடிவுள்ளதொண்டமானே
பந்தியாயிரம்புறவிகட்டும்படைமிகுந்தசெம்பயனெ
திருக்கான்புலியூரும்திரும்திளும்கார்க்கவென்று

செம்பயனை ராசா காவலுக்குப்போகச்சொல்லல்.

விடைகொடுத்துக்கரிக்காலன்விபரமுடன்போமென்றான்
வேடுபெருத்தசீமைவில்ப்பெருந்தராச்சியங்கள்
காடுபெருத்தநாடுகருவேலல்முளைத்தகாடு

குதிரைவிட்டுப்படைநடந்தால்க்குருவிபோலப்பார்ப்பார்கள்
குதிரைப்படைக்கஞ்சார்கொங்குநாட்டுப்புறத்தார்கள்
என்படையுந்தில்லையாதவர்படையுந்தங்காது
என்றுசொல்லித்தொண்டமானெழுந்துநடந்தானே

சாமீன். காவலுக்கு ஆள்தேடி வரும்படியா
மந்திரியை அனுப்புதல்.

பத்தியாயிரம்புரவிகட்டும்படைமிகுத்தசெம்பயனை
வில்ப்பெருத்தசேவுகனைவிபரமுடன்பாருமென்றார்
அந்தவுரைகேட்டுஆனதொருசெம்பயனும்
மேக்குவாசல்க்காத்திருக்கும்வீரையனையழைத்துவந்தால்
அவனுக்கிணையானபேருமில்லையெதுத்தபடைதானுமில்லை
அந்தவீரயனைக்கொண்டுவரவுத்தாரந்தாருமென்றான்
அந்தவுரைகேட்டுஅனுப்பிவிடைகொடுத்தார்
செம்பயனும்போயன்றுசெம்பொன்திருமேனியெங்கும்
பூசணங்கள்தானுமிட்டுப்பொற்பட்டின்கச்சைகட்டி
இட்டதொருசரப்பளிகளியல்பாகத்தான்பூண்டு
தோகைநல்லதோள்பாரம்தோளணிகள்தான்பூண்டு
மேகவர்ணப்புரவிமேல்வாய்கயறுதான்பிடித்து
கல்லணைசோடுகட்டிக்கட்டியங்கேசிங்காரித்து
அங்குவடிமிதியாமல்அப்புறவிமேல்க்கொண்டு

செம்பயன் வீரயனைத்தேடிப்போனது.

உய்யகொண்டான்நனைக்கடந்துஉசன்தேரிமலைகடந்தான்
இராசாண்டான்திருமலைநாயகனைத்தெண்டனிட்டு
வித்தகனைத்தெண்டனிட்டுவிரைந்தேநடக்கலுற்றான்
மதுரைப்பாண்டியனைவிசாரித்துமார்மீள்வோமென்றுசொல்லி
சேவலூற்வழியாகதெற்குமுகம்போகையிலே
சிற்றூலைப்பதியாசன்சேர்ந்தபொன்னிவளநாடன்

பொன்னர்சங்கர் சிலம்பங்கள்செய்யுறசத்தம்
செம்பயனுக்குகேழ்க்குதல்.

குன்றுசூழ்ந்தவளநாடன்குன்னுடையான்தன்மகனும்
வெற்றிசெய்யும்பொன்னண்டார்வீரவாள்தானெடுத்து
வெள்ளிகட்டும்பருசைகொண்டுமிகவிருதுதான்போட்டு
கச்சைகட்டித்தொங்கல்விட்டுகளத்தவாள்தானெடுத்து
செம்பரிசைகைப்பிடித்துகால்ச்சிலம்பக்கொள்ளையிலே



கால்ப்பரிசைச்சத்தமதுகாதவழிகேட்டுமாம்
கட்டுமரம்போலேகுதிரைகட்டுப்பட்டுநின்றிடுமாம்
திடுக்கிட்டுத்தான்பயந்துதிசைநோக்கிப்பார்ப்பதல்லோ
மாட்டாயன்சிறுபயல்கள்மகிழ்ந்திருந்துபார்ப்பார்கள்
மயக்கந்தெளிந்தபின்புபயகள்பக்கம்வந்துநின்று
இன்னுடுகோனுடுஇரங்குபொன்னிவளநாட்டில்
மேகமில்லாமழையுமுண்டோமின்னலில்லாஇடியுமுண்டோ
கல்மாரிபொழிந்துதோகரிக்காலன்சீமையிலே
கல்லுஞ்சரிந்ததென்னகருமலைகள்தந்ததென்ன
பூமியதிர்ந்ததென்னபொன்னிவளநாட்டில்
யென்னபுதுமையிதுவெடுத்துரையுந்தம்பியென்றான்

சிறுபையல்கள் பொன்னர்சங்கர் விர்த்தாந்தங்களைச்
சொல்லல்.

வாருமய்யாசேவுகரேவாழ்வீரன்பொன்னண்டார்
கோனாட்டுவெள்ளாளன்குன்னுடையான்குமாரர்சங்கர்
அருந்தவசுதானிருந்துஅயவர்கள்தான்பிறந்தார்
சீமையாளும்கரிக்காலனைசென்றுவந்துகண்டதில்லை
சேவலும்பகுதிசெலுத்தாமல்க்குடியிருந்து
கொளுமிகுதியாலேகோடிதிரவியமுள்ளவர்கள்
எட்டாணைப்பிலமுடையான்இயல்பெரியபொன்னண்டார்
ஏழாணைப்பிலமுடையான்எளையதம்பிசங்கருந்தான்
எழுபதடிக்கிறடியிலேயிணைசிலம்பம்தான்பொருதி
மல்ப்போர்பொருதுவதும்மயக்கமல்லோசேவுகனே
திருக்காம்புலியூருசில்லறையனைத்திருத்தினவர்
பெண்சிறையைமீட்டபெருமாள்காண்சேவுகனே
வேட்டுவற்குத்தம்பிசங்கன்ஒருவேங்கைபுலியல்லவோ
எதுத்ததொருமன்னியரைஇருபிளவாய்க்கொன்றிடுவார்
பகைத்ததொருமன்னியரைபதைபதைக்கக்கொண்டிடுவார்
சன்னசிவறம்பெற்றசவுரியமுள்ளவர்காண்
போனதொருமன்னியரைமீளவறவொட்டார்காண்
எல்லைவழிபோனவரைபல்லையுதிர்த்திடுவார்
ஒருவர்வழிபோகஉபாயமல்லசேவுகனே
வந்தவழிதன்னுடனேவழிவிலகிப்போகும்
மாட்டாயன்சொல்க்கேட்டுமறையவேவந்துநின்று

உரையூருக்கு வந்து நாட்டாரைக்கேழ்க்கல்.

உரையூர்பதிநோக்கிஓட்டமிட்டான்செம்பயனும்
திருக்காம்புலியூராரைதிருத்தமுடன்தானழைத்து

உங்கள்சீமைபுதுமைதனை திருத்தமுடன்சொல்லுமென்றான்
நெல்லிவளநாடன்நிகரில்லாக்கோனாடன்
குன்றுபோலொளிவிளங்கும்குன்றுடையான் தன்மகனும்
பொன்னரெட்டானைப்பிலத்துடையான்பெற்றபோனசேவுகன் காண்
தம்பிசங்கன்எளானையிலத்துடையான்சணைகளத்துமன்னனியன் காண்
எங்கள்சிறைமீட்டவர்காண்எங்கள்முடி தித்தவர்காண்
நாட்டார்தன்சொல்க்கேட்டுநகைத்தானே செம்பயனும்

## சோழராசனிடம்மந்திரிவந்து பொன்னர்சங்கர் பெருமையைக்கூறல்.

சோழநிருக்குமந்தசொர்க்கமுள்ள கோவிலிலே
ஆடலன்றிபாடலன்றி அரமனையில்த்தானிருந்தான்
சத்தாமரணம்போல்சதுரமொக்கவீற்றிருந்தான்
வீற்றிருந்தான்கரிக்காலன்விபறமுடன்செம்பயனும்
அடிதொழுதுதெண்டனிட்டு ஆசாரம்போற்றிசெய்து
வாய்புதைத்துக்கைகட்டி வணங்கிநின்றான்செம்பயனும்
ஏரிட்டுப்பார்த்தென்னசொல்வான்கரிக்காலன்
போனதொருகாரியம்பொங்கமுடன்சொல்லுமென்றார்
வீருள்ளாற்தேடுமென்றுவிண்ணபஞ்செய்நீரே
மதுரைப்பெருந்தடமாய்குதிரைவிட்டுப்போகையிலே
சேவலூர்வழியாகஆவலுடனபோகையிலே
வீரமலைக்கிழ்ப்புறமாய்விசையநகர்பட்டணம்போல்
சுத்தாலைத்தூரும்சிறந்தமதில்கோட்டையுமாய்
வத்தாதபொய்கைகளும்மாறாதமாய்கைகளும்
செங்கோல்ச்செலுத்திசேதமறவாழ்ந்திருக்கும்
பாதிரைபட்டமும்பகல்க்காணுமுத்தங்களும்
வண்டாடுங்குன்றுடையான்வய்யநெல்லிவளநாடான்
கோனாட்டில்க்குடியிருந்துகோடிதிரவியம்தான்படைத்து
நீதியுடன்வாழ்ந்தார்நெகதியுடன்பூசைபண்ணி
தவமிருந்துபெற்றதார்வெந்தர்பொன்னுண்டார்
சங்கானைநோக்கிதவத்தில்வந்தசங்கருந்தான்
சன்னுசிவறம்பெற்றபொன்னுழிக்கையநவன்
பேருக்கோவெள்ளாளன்போருக்கோவிசவிசையன்
வாள்வுக்கோவேளாளன்வாள்வீரன்பொன்னுண்டார்
அவறத்தைபிள்ளைமூவர்இயவர்களும்தான்பிறந்து
வளநாட்டுக்காராளன்கோனாட்டுவேளாளன்



திருக்காம்புலியூரார்சில்லரையைநிலைநிருத்தி
பெண்சிறையைமீட்டபேற்போனசேவுகன்காண்
மேனாடுநடுநடுங்கும்வெள்ளாளன்வில்லெடுத்தால்
கோனாட்டார்நடுநடுங்கும்குமாரர்சங்கர்வாளெடுத்தால்
எங்குந்திசையாகயிருக்குதையா அவற்கீர்த்தி
அவரையழைத்துவந்து அவர்க்கானநம்பிக்கையும்
நம்பிக்கையும்ஆளும்நடந்துபோய்த்தானழைத்தால்
வருவார்களாண்டவனேநேருகக்கண்டுவந்தேன்
தேவரீர்பயணம்எழுந்தருளவேணுமய்யா
இதுவேபயணமென்றுஎழுந்திருந்தான்கரிகாலன்
பட்டணங்கள்சூழபடைமுரசையறையுமென்றார்
பல்லக்குப்பிடியுமென்றுஎல்லவரும்வாருமென்றார்
பந்திக்குதிரைகளும்படைமன்னர்தான்சூழ
இடியம்புதுபாக்கிளரிவானக்குழலுடனே
தம்பட்டம்பேரிகைதனி முரசுஎக்காளை
பட்டணங்கள்தானடுங்கபயணம்பிறப்பட்டார்
அப்போமதனைச்சிருசோழன்மதியங்கிஓடிவந்து
அய்யாசரணமென்றுஅடிவணங்கித்தெண்டனிட்டு
ஏதுபயணம்எடுத்துரைக்கவேணுமென்றான்
மதனைச்சிறுசோழனைமன்னவனுந்தான்பார்த்து
நெல்லிவளநாடுநிகரில்லாக்கோனாடு
போய்வாறேனென்றுபுத்திரற்குத்தானுரைத்தார்
நான்போயிவாறேனென்றுநளினமுள்ளசிறுசோழன்
யின்னேரம்வாரேனென்றுயெடுத்துரைத்தான்சோழனவன்

## சோழராசன் மகனும் மந்திரியும் பொன்னர் சங்கரைக் கூட்டி வற போகிறது.

கடுங்கோபச்சினத்துடனேகடும்பரியின்மீதேறி
வெள்ளைக்குடைபிடிக்கவெஞ்சாமறம்வீசிவற
முத்துக்குடைபிடிக்கமுளுமாணிக்கநின்றிலங்க
பவளக்குடைப்பிடிக்கபவளக்குடைசூழ்ந்துவற
வெள்ளையிடக்கயமும்விருதுகளுந்தான்போட
சந்திரகாவிப்பாவாடைசாதிமொக்கத்தான்போட
வன்னமாயிறம்புறவிகட்டும்வடிவுள்ளதொண்டமானும்
பந்தியாயிறம்புறவிகட்டும்படைமிகுத்தசெம்பயனும்
எல்லவரும்கூடியெழுந்திருந்துபோவறல்லோ

நிருபந்தனையெழுதினின்னயமாய்வாருமென்று
நம்பிக்கைநின்னயங்கள்நன்றாகத்தானெழுதி
செப்பமுடன்தானெழுதிசெந்திருக்கைஉள்ளடக்கி
செம்பயன்கையில்குடுத்துசேதிபிழைவாருமல்
நல்வசனத்தோடேஅழைத்தோடிவாருமென்றார்
போமென்றுதானனுப்பிப்போய்ப்புகுந்தான்மாளிகையில்
உய்யகொண்டான்தனைக்கடந்துஉசந்தேரிமலைக்கடந்தார்
மருதாருந்தன்வசந்தன்மண்டபமுந்தான்கடந்து
அள்ளிதுறையும்விட்டுசெந்தபுறம்தான்கடந்து
பந்தைப்பறைகுடமுருட்டிப்பதியாள்தனைக்கடந்தான்
தங்குவார்கொங்குநொச்சி‌ணிக்கோடுதான்கடந்தார்
அரியலூர்தான்கடந்தான்அழகுசோழன்தன்மகனும்
போதலூர்புண்ணைவாசல்வந்துபுரந்திடுமான்தன்மகனும்
சுந்தாலைப்பதிநோக்கிதுறகதமுமநடந்திடுமாம்
எல்லையில்ச்சென்றபின்புபுறவிளட்டியடிவய்யாமல்
கட்டுமறய்போல்நின்றார்களெல்லவரும்.

### நல்லதங்கா ளுக்கண்டு அண்ணமார்களிடம் சொல்லல்.

எழாந்தழமும்பெரும்பேறுமண்டபமும்
எட்டாந்தளமும்எண்ணெண்கால்மண்டபமும்
பத்தாந்தளமுந்தங்கையற்குபந்தடிக்குங்கூடங்களும்
பந்தடிக்குங்கூடம்பளிங்குமணிமண்டபமும்
பஞ்சணைமெத்தையின்மேல்கண்துயின்றாள்பத்தினியும்
அசதியறப்பள்ளிகொண்டுஆதேசங்கண்டல்லவோ
ஆதேசங்கண்டுஅண்ணரையுந்தானழைத்து
என்னபுதுமையம்மாயென்பிறவிதங்கையரே
சீமையாளும்கரிக்காலன்சிறக்கவறக்கண்டேனே
தேசமாளுங்கரிக்காலன்தெரிசிக்கக்கண்டேனண்ணா
வந்துகரிக்காலன்நம்மமனையிலிருக்கக்கண்டேன்
உம்பளிக்கைஉடுகரையும்உமதுகையில்குடுக்கக்கண்டேன்
நாடுநகராளும்நல்வேந்தன்நடுக்கமுடன்வறவும்
பல்லக்கும்விட்டுஅண்ணாவிபகல்வீதிவறவும்கண்டேன்.
சென்றதிசைவென்றவரும்அண்ணாவிஒருநாள்சிறையிருக்கக்கண்
காவல்வைத்தகரிக்காலன்கலங்கிமிகத்தெளிந்துநின்று | டேனே
சீமைபாதிராமாளஎன்தெரிசினையில்கண்டேனே
உரையூர்பதிவாசன்உத்தமனும்சொழமன்னன்



இங்குவறக்காரியமென்னதென்றுநானறியேன்
உப்பரிகைமேலேரிசெப்பமுடன்தான்பார்த்து
ஊருக்குங்கிழபுறம்ஒருவனோடிவருவனல்லோ
ஓடிவந்தான்தெண்டனிட்டுதேடிவந்தேநென்றானே
தெய்வக்கரிக்காலன்நம்மதேசத்துக்குவந்தான்காண்
வந்தார்களெல்லவரும்நம்மயெல்லையிலெநின்றார்கள்
வந்தபடைகண்டுமுந்தவேஓடிவந்தேன்.
என்றசொல்தான்கேட்டுயிருவரும்யேதுசெய்வார்
கச்சைகட்டிதொங்கல்விட்டுகடியங்கேவந்துநின்று
அத்தைதப்பிள்ளைமச்சினரைப்புத்தியுடன்வரவழைத்து
இணைசிலம்பந்தான்பொருதியியல்பானகச்சைகட்டி
வந்ததொருசேவுகரும்வந்தவளிதன்னோடே
போகவென்றுவாளெடுத்தான்வாள்வீரன்பொன்னுண்டார்
செம்பரிசைகையில்ப்பிடித்துசேசேயென்றுவிளையாடி
கால்ப்பருசைமோதவிட்டான்கல்க்கட்டுஅதிர்ந்துவிள
பூமியதிர்ந்திடுமாம்பொன்னருடபருசைசத்தம்
சத்தந்தனைக்கேட்டுதம்பிசோழநப்போது
மதனைச்சிறுசோழன்மதிமயங்கிநின்றானே
வந்ததொருராஜாக்கள்வந்தவழிபோவோமென்றார்
இதுயேதுதிருவிளமோயீஸ்பாணர்கட்டளையோ
ஏதுவகையென்றுயேமாறிநிற்பாநல்லோ
சோழன்குமாரன்முன்னேசெம்பயனுந்தெண்டனிட்டு
காருலவுங்கைத்தலத்தான்காராழர்தன்னையுமே
தார்வேந்தரையுந்தாமறியோமென்றீரே
ஏரக்குடிவெள்ளாளன்யினையாமோவென்றீரே
அவர்திருமுகமும்ஆண்மைகளும்யெப்படியோராஜாவே
அவர்ஊருக்குப்போவமென்றால்புறவிகளும்போகவில்லை
என்னபுதுமையென்றுயெடுத்துரைத்தான்செம்பயனும்
சிலம்பந்தின்சத்தம்சோழன்செவிதனிநமேலதான்கேட்டு
வந்ததொருராசாக்கள்வந்தவளிதன்னுடனே
சிந்தைமிககொந்துருகிசேர்ந்துவழிபோகையிலே
உப்பரிகைமேலிருந்தஉத்தமியும்யென்னசொல்வாள்
சின்னண்ணாபெரியண்ணாசிறந்துவந்தகரிக்காலன்
உரையூர்திசைநோக்கிமறையவேபோரார்காண்
உடுகரைகள்தான்கொடுத்துஓடியழையுமென்றாள்
தங்கைநல்லாள்சொற்கேட்டுதமையமார்தானோடி
அத்தாரைதாநழைத்துஅனவருமாஓடிவந்து

இருவருமாகஅந்திசீக்கிரம்ஓடிவந்து

சோழராஜா மகனை பொன்னர் அழைத்துவருகிறது.

மண்டலத்துராசாவேமரிச்சுவளிமீண்டதென்ன
மீண்டதொருகுதிரைமுக்கொம்பைத்தான்பிடித்தான்
எல்லவரைத்தானிருத்திஉடுவரையைத்தானெடுத்து
கண்ணீருசுத்தியல்லோகடக்கவேவிட்டெரிந்தார்
தெக்கத்திராசாவேதிகைத்துவழிவந்தீரோ
வடக்கித்திராசாவேவழிவிலகிப்போனதென்ன
வேட்டைக்குவந்தீரோவிடாயத்துமெள்ளப்போறீரோ
வெள்ளாளன்வீடுமட்டும்விரும்பிவரவேணுமென்று
குதிரைக்கயற்பிடித்துகூப்பிட்டழைத்தானே
அழைத்ததொருபொன்னரையும்அந்திகோபமுடனேதுசொல்
என்குதிரைக்கம்பியைத்தொட்டதென்ன துணிவோதான்[வார்
குதிரைக்கம்பியைத்தொட்டவன்தான்குதிரையுடன்ஓடவேணு
குதிரைமுன்னேடாவிட்டால்குறுக்கறவேவீசிவேனென்றார்[ம்
கோபமுடன்சொன்னாலும்குதிரைமுன்னோடுவதில்லை
யில்லையென்றசொல்கேட்டுயிருபிழவாய்தான்விழவே
வீசினான்சிறுசோழன்வீரவாள்தன்னாலே
அவ்வீச்சுத்தப்பிஅருபதடிதான்குதித்தார்
குதித்துநின்றுபொன்னண்டார்குமாரனைபார்த்துச்சொல்வார்
வன்னமாயிரம்புரவிகட்டும்வடிவுள்ளதொண்டமானே
பந்தியாயிரம்புரவிகட்டும்படைமிகுந்தசெம்பயனே
உங்களுக்குச்செய்தகுற்றமுண்டோஎன்மேலேகோபமென்ன
கோபமில்லைபொன்னண்டேகுதிரைக்கம்பித்தொட்டாயே
முடிபெருத்தராசாக்கள்படிந்தெதிராய்த்தொடுவார்கள்
அப்புறவிதன்னையுமேசெப்பமுடனீர்பிடித்தீர்
செய்றுசிறுசோழன்சினத்துடனேவீசினான்
ஆண்டவரேகோபமடக்குமென்றார்பொன்னண்டார்
குதிரைக்கம்பிதொட்டவன்கூடவரவெணுமென்று
பந்தயங்களோடசிந்தைமனமுண்டாகி
நீதோத்தால்ப்பொன்னண்டேயிப்புறவிபெறுதவிலை
நான்தோத்தால்ப்பொன்னண்டேயிப்புறவியுன்னுதென்றார்
மெய்யெனத்தான்பொருந்திமேகவன்னப்புறவிக்குமுன்
யெழுதபடிமுன்னாகயெழிலுடையபொன்னண்டார்
அருபதடிமுன்னேடேயென்னடப்பக்காரனொருவனுண்டு
ஏழுதுபடிமுன்னேடஎன்னுளவாளொருவனுண்டு



அருபதடிக்கப்புறம்போய்அப்புறவிவிடுமென்றார்
எழுதபடிபின்னாகபழுதில்லாமல்வாறுமென்றார்
காதவழிக்கப்பாலேகடப்பையென்றுவன்னிமரம்
வன்னிமரப்பொட்டிடுங்கால்வான்பெரியராசாவே
கடப்பைமரப்பொட்டிடுவேன்கண்குளிரபாருமென்றார்
சந்தனப்பொட்டெங்களுக்குகுங்குமப்பொட்டிடுங்களுக்கு
பந்தயங்கள்தான்பொருதிபதிவாகநின்றுக்கொண்டு
மேகம்போலபுறவிகாக்கம்போலப்பறந்திடுமாம்
சீதைபதிராமர்சீதைலட்சுமியைத்தான்தேடி
வாருதியைத்தாநழைத்துவருத்தமுடனேதுசொல்வார்
திருவாளிதனையெடுத்துதிருவனுமான்கையில்க்குடுத்து
நஞ்சாளிதனைத்தாண்டிநாயகியைத்தேடிவற
ஆர்ப்பரித்துஅனுமானும்அலைகடலைத்தாண்டவென்று
திருவாளிதலையில்வைத்துஅனுமான்தென்கடலில்குதித்தாப்
கடப்பைமரப்பொட்டிட்டுகெடுகியேஓடிவந்தார் [போல்
ஓடிவந்தாநரைக்காதம்உத்தமரைத்தான்பிரித்தார்
புறவியைத்தான்விட்டிறங்கிபேதழித்துநிற்பனல்லோ
கைக்கத்தியுண்டானால்பொன்னண்டேகழுத்தையருப்பையல்
அடித்துப்பறிப்பாயேஅனியாயஞ்செய்யாயே [லோ
அடியேன்செய்ததொருகுத்தமுண்டோகொடியதொருராசா
[வே
முந்துவதேனென்றுசொல்லிமுக்கொம்பைத்தான்பிடித்தாய்
கடியதொருசேவகரேகடுகியங்கேதாநழைத்து
உன்னுடஆள்க்கூட்டிஒருநொடியில்வாருமென்றார்
தடிக்காரப்பில்லானைத்தாநழைத்துப்பொன்னண்டார்
முத்திரிமனுஷனுக்குமுன்போயிப்பொட்டுங்காட்டி
இத்தலத்திலோடிவறவென்றாரேபொன்னண்டார்
இருவரையும்கைகட்டிவிட்டார்இருந்ததொருராசாக்கள்
கடிகிவந்தான்தனைப்பார்த்துக்கண்டாயோகடப்பமரம்
யிருவருந்தான்மீண்டுஉங்களுதேவெற்றியெனறார்
வெற்றியென்றுநடப்பானல்லோபேடையில்ப்பிள்ளானும்
அண்ணேஎன்னைவிட்டுப்போகதேஎனக்குத்துணையில்லையென்
உன்னைவிட்டுப்போறதில்லைஒருநொடியில்த்தான்திரும்பி [றார்
முத்திரிமனுஷனைமுதுகிலேதான்போட்டு
மயில்ப்போல்ப்பறந்துவந்துமதனைச்சோழன்முன்பாக
வந்ததொருராசாக்கள்வலுபந்தந்தான்பார்த்து
வறத்தினால்பிறந்தவர்கள்வரமுள்ளபொன்னண்டார்

மானிடசென்மமென் றுமதிக்கொருநாள்க்கூடாது
தோர்த்துவிட்டோம்ராசாவேதோர்வையேநம்முதென்றார்
அவற்கருதேவெற்றியென்றா அப்புறவியிறங்குமென்றார்
யெறிவந்தபுறவியும்யிந்திரசீலச்சகலாந்து
தம்பிசோழன்விட்டிறங்கிஉடன்சலித்துப்போயிருந்தான்
பேடையில்ப்பிள்ளானும்புறவிவாய்க்கயற்றான்பிடித்தான்
தோற்றோமேயென்றுசொல்லிசோர்ந்துமெள்ளப்போயிருந்
கரிக்காழச்சோழருக்குகவலைவிடாய்த்தீர்த்தவரே [தீ
உறையூருச்சோழருக்குஉலகாளும்உத்தமரே
அழகுதிருமேனியரேஅடையாழமறந்ததென்ன
அஞ்சாதோராசாவேயப்புறவியம்முதென்றார்
தோற்றபுறவியைத்தான்திரும்பியினிவாங்குவனே
உளுதாணிவெள்ளாளனிடம்உறையூர்விட்டுவந்தீரே
என்மனையைநாடிவந்தீர்யிப்புறவிஉம்முதென்றார்
ஒருதூணாய்நின்றகல்லுஇருதூணாய்ச்சாஞ்சுதென்றார்
இருதூணைத்தான்பார்த்துஇருவருமென்னசொல்வார்
ஆர்ப்பறித்துயெழுந்திருந்துஆலைக்கிடுங்கரும்பதுபோல்
வீசினார்பொன்னுண்டார்விழுந்துதேகல்த்தூணு
இருதூணாய்வீசிவிட்டார்இளவாழைத்தண்டதுபோல்
பார்த்திருந்தராசாக்கள்பஞ்சனையைவிட்டிறங்கி
சூளிகைமண்டபத்தில்சுத்தமுடன்போயொழிந்தார்
ஓடிப்போவோமென்பாரும்ஒழிந்திருப்போமென்பாரும்.
அரியாமலிவனிடத்தில்வந்தஅறிவீனமெத்தவுண்டு
நம்முடஆனைபடைசேனையெல்லாம்அவறவர்களெங்கையோ
உறையூருக்குப்போய்வாவொட்டாரேபொன்னர்சங்கர்
இதுக்கென்னசெய்வமென்றுயிருக்கின்றவேளையிலே
இருந்ததொருராசாவேயெங்கேயென்றுதேடுமென்றார்
சுத்தியேபார்க்கையிலேசூளிகைமண்டபத்தில்
பார்த்ததொருபொன்னுண்டார்பாதீவித்தென்னசொல்வார்
கள்ளைப்பிள்ளைதேனுன்களைக்கண்டார்தன்னருளால்
கெட்டுத்தவரமிப்படிக்காண்கொற்றவரோசாவே
தென்தலைச்சிவாலயமும்வடதலைச்சிவாலயமும்
சிவபூசைகுருபூசைசிவலிங்கபிரதிஷ்டைகளும்
குருந்துமகாமேருவுந்தான்குதுங்காநகரியெல்லாம்
வீசியங்கேதானிருத்திவீரியவான்யென்னசொல்வார்
எதுப்பசுவுதான்பிடிக்கவல்லவரைஅழையுமென்றார்
விறபோகசாம்பானைவெற்றிக்கொம்புபிடியுமென்றார்



சல்லிப்புறவிகளும்சறவனையாய்க்கொண்டுவர
ஓட்டக்காரன்தனையழைத்துஒருகோடியில்ஓடியங்கே
திட்டமுடன்தனைவருடன்சீர்ப்பாதஞ்செப்புமென்றார்
தாள்வொன்றுமில்லாமல்சபைத்திரந்தார்சங்கருமே
தெய்வராசன்தனையழைத்துதேவரீர்வாருமென்று
முத்தழக்குஞ்சோழன்முடிபொருந்தராசாவே
உலகாளும்கரிக்காலாஉத்தமனேவெழுந்தருளும்
என்வீட்டுக்கெழுந்தருளிவிடாய்களுமேதான்தீர்த்து
பந்தியாயிரம்புறவிகட்டும்படைமிகுத்தசெம்பயனே
மதனைச்சிறுசோழருக்குமனமகிழஉண்டாக்கி
பொன்னருடவாசலுக்குபோய்வாவேணுமென்று
நல்லதென்றுசொல்லியெல்லாருந்தான்கூடி
தேறின்மேலேறிதெய்வராசனுந்தானடந்தார்
எதுப்பசுதான்பிடித்தார்இளையதொருதம்பிசங்கர்
சல்லிக்குதிரைதானேரிசாவனையுடன்வந்துநின்றார்
மதனைச்சிறுசோழனையும்தியாமல்வாருமென்றார்
குதிரைமேலேறிகொற்றவனும்வருகலுற்றான்
சரிகுதிரைதாமேரிசாசமுடன்வருகலுற்றார்
காவனத்திலுள்புகுந்துகடியங்கேதானடந்தார்
கோட்டைவாசலுள்ப்புகுந்துகொற்றவரும்வீதியலம்
வீதிவலம்போயிப்புகுந்துவீற்றிருந்தான்சோழனவன்
பாலக்கங்கொண்டுவந்துபறிமாறினார்பொன்னுண்டார்
தாபமடங்கிசலிப்பாறிவீற்றிருந்தார்
பஞ்சனமெத்தையும்பறங்கிநாககாலிதான்போட்டு
மதனைச்சிறுசோழன்மனமகிழ்ந்திருக்கவென்று
ஆனையாளுந்திருமுகமும்நம்பெறியஆண்டவனும்
சீமையாளுங்கரிக்காலன்செல்வகுமாரன்முன்னே
என்னைக்கச்சைவரிஞ்சுகட்டியினிவாருந்தம்பியென்றார்
வாணக்கச்சைவரிஞ்சுகட்டிவாகுபுரிதாயித்தும்
பட்டுநல்லக்கச்சைக்கட்டிபறிவுடனேவந்துநின்றார்
என்னவிளையாட்டுஆடுவோம்அண்ணாவி
விளையாட்டுப்பாராமல்தம்பிவீரியமுள்ளவனே
சேவுகமறியவேணும்ராசாக்குமாரனுந்தான்
எழுபதடிக்கல்த்தூணைஎளுப்புன்புயததாலே
புயத்தாலேதாமெடுத்துபுண்ணியரும்வருமளவில்
படர்ந்ததொருபாறைதனில்விரல்நிகத்தால்குழிபறிக்க
இதுவோசிலபாரமென்றுஎழுந்திருந்தார்தம்பிசங்கர்

படர்ந்தவொருபாறையிலேபறித்தானேகுழிதனையே
குழியுமுழுந்ததுகாண்கொற்றவரேஅண்ணாவி
பெருவிரலில்த்தாமரைத்துபுயத்தாலேதாமெடுத்தார்
எடுத்தவொருகல்த்தூணையிடம்புரியாய்தான்திருப்பி
குதித்துவிளையாடிபறித்தகுழிதனிலேதானிருத்தி
முக்கண்ணன்தேங்காயைதிக்கனவேதாமுடைத்து
விக்கினேஸ்பரன்தனைப்பணிந்துவேற்வையுடன்வந்துநின்று
பச்சமுடன்வந்துநின்றுபறித்தகுழியில்விட்டான்
விட்டவொருகல்த்தூணைவிளையாட்டுப்பார்த்திவின்று
கண்டுகரிக்காலன்கவலைகளுமுண்டாகி
சிந்தைமனம்வெருகிசெம்பயன்தனையழைத்து
என்னுமல்ப்பேசிவிட்டேன்இவர்களான்மைகளைக்காணாமல்
பொன்னம்பலந்தனிலேபூசைசெய்தபுண்ணியனே
மனத்தலேநாகினைந்துமதிமயங்கிததானிருந்தான்
எடுத்தவொருகல்த்தூணைநம்பியிருபிளவுசெய்யுமென்றார்
உருட்டியேபார்த்தானேஉயிர்க்குருவிவாள்ப்போலே
நெடியவொருகல்த்தூணைகடிகியங்கேதான்பிளந்தான்
நித்தஞ்சிவாலயமாய்நிறைவேட்டுங்கரிக்காலன்
ஆரிவொன்றுகட்டமைவாங்கிஅனியாயமில்லாமல்
நீதிநெறிகட்டத்திநீடூழிகாலம்
அசையாமலாண்டிருந்தார்ஆராச்சிமணிகட்டி
தெய்வசிறுசோழரேநிகைத்துவளிவந்ததென்ன
உலகாளும்ராசாவேநீசொழியவந்தகாரிமென்
இருந்தசபையைவிட்டுயெழுந்திருந்துபோவார்களோ
ஏர்க்குடிவெள்ளாளன்வீட்டுக்கெழுந்தருளியித்தூரம்
கரிக்காலராசாவேகைநெகிளவிட்டாரே
சங்கறனார்சக்ஷியாகஉன்சதிரத்தோடொத்தவன்காண்

சோழ ராஜன் மகனுக்கு அசனமிடல்பொன்னர்.

கையைப்பிடித்தெடுத்துறற்றினக்கம்பளியில்த்தானிருத்தி
எல்லவரைத்தானிருத்திவகாந்தம்தான்பேசி
முகந்திருத்திஆண்மைசெய்துபொன்னர்முன்னாலேநின்றல்ல
பசித்திருந்தீராசாவேபகல்பொழுதுமாச்சுதுகாண் [வே
பாவாடைதான்போட்டுபதிவாகத்தாமிருந்து
குமரிவாழையிலைக்குலையைகொய்துமொள்ளத்தான்போட்டு
கைக்குநீர்வார்த்துக்கால்களுவிசுத்தம்பண்ணி



இயல்பெறவேதான்சமைத்துவிட்டாரேபோசனத்தை
போட்டார்பிலாச்சுளையைப்பெருவாழைக்கனியுடனே
மாங்கனியும்தென்கிழங்கும்மணப்பாகுசறக்கரையும்
திரட்டுப்பால்தன்னுடனே திருந்தமுடன்தான்படைத்தார்
கடலைதுவரையுடன்காராமணிப்பருப்பு
புத்துருக்குநெய்வார்த்துபொறிகறியும்தானுமிட்டு
காய்கறிகளுள்ளதெல்லாம்கண்குளிரத்தான்படைத்தார்
உண்ணுமுண்ணுமென்றுஉபசரித்தார்பொன்னுண்டார்
அமுதுண்டுகைபூசிஆலித்தெளிந்திருந்து
சந்தனம்குங்குமம்சவ்வாதுதான்பூசி
கந்தகஸ்தூரியுடன்கலக்கவேதான்பூசி
எல்லவற்குந்தான்பூசியிருந்தாரேபொன்னுண்டார்
மதளைச்சிறுசோழன்மாதளம்பூப்பட்டெடுத்து
உதையருகப்பட்டெடுத்துஉடுவரையுந்தான்போற்றி
தாழிச்சவுக்களியும்தான்பூட்டிபொன்னருக்கு
கடுக்கன்சவளியும்மேலானவழங்கிகளும்
பொன்னருக்குப்பூட்டினார்கள்பெரியராசாவும்
அத்தனையும்பெற்றுக்கொண்டுதங்களறமனையிலுள்புகுந்து
பட்டுக்கபாயும்பாருமுந்துச்சவுக்கழியும்
பொன்னின்கபாயெடுத்துபுகழ்பெரியபொன்னுண்டார்
விலைமதியாஆணிமுத்தேதலைசேறத்தானெடுத்து
சந்திரசூரியப்பட்டெடுத்துதார்வேந்தர்பொன்னுண்டார்
உடுவரையைத்தானெடுத்துஉரையூரார்க்குமுன்னேவைத்தார்
பாத்தானேதம்பிசோழன்பரிவுடனேதான்மகிழ்ந்து
ஆணிமுத்தைதன்கையிலெடுத்துஆலித்துப்பார்ப்பதல்லோ
இந்தமுத்துவந்தவகையேதென்றுநீகேட்டனும்
மறவர்மேல்படையெடுத்துக்கொடுமலைக்குப்போகையிலே
கடற்கரையில்சாம்பானில்கள்ளர்கொண்டுவந்தமுத்து
மாவொல்லாங்கூடிவந்துவருசையுடன்கண்டமுத்து
வெள்ளிக்கொம்பனையும்விதமானஆணிமுத்து
உங்களறமனைக்குவேணுமென்றுஒழித்துவைத்திருந்தமுத்து
எங்களறமனைக்குயில்லையென்றான்சோழனவன்
சந்தோஷமாச்சுதுகாண்சதுமுடிப்பொன்னுண்டே
எந்தவகைசெய்தாலும்ஏதுவகையானாலும்
வந்தவொருகாரியந்தான்வகுப்புடனேநீர்கேளும்
எங்களய்யருடதிருப்பந்தனை ஆராய்ந்துபாருமென்று
வாகாகதிருப்பந்தனைவாழ்விறன்கைக்குடுத்தார்

இருகையால்த்தான்வாங்கிதிருமுடிமேல்வைத்துக்கொண்டு
செந்திருக்கைசுருள்பிடுங்கிஅந்தமுடனுள்ப்படுத்தி
வாருங்காரத்தாரேவாசகத்தைப்பாருமென்று
வந்தோலைவாசகத்தைவாள்வீரன்தான்பார்த்து
மதனைச்சிருசோழனுடன்மறுவசனமில்லாமல்
பேசிக்கொள்ளக்காரியந்தான்பிறபலங்கள்மெத்தவுண்டு
இன்னேரம்வாருமென்றுயிருந்ததுகாண்ஓலையிலே
இந்தோலைவாசகத்தைஎல்லவருந்தான்கேட்டு
அந்திக்கொலுவிலேஆசாரவேழையத்தே
சந்திக்கவேணுமென்றுசாவலையாய்ப்பயணமென்றார்
உத்தமாபத்தினியேஒருசொல்லுவாசகியே
உடப்பிறப்புநல்லதங்கைஉறமுறைக்குப்போய்வாறேன்
போய்வாரும்அண்ணாவிபொற்பல்லக்குப்பெருவீர்
கரிக்காலற்சீர்மையெல்லாம்நீராளுவீரென்றுரைத்தாள்

## சோழராசனிடம் பொன்னாண்டார் வருகிறது.

போய்வாறேனென்றுசொல்லிபிறப்பட்டார்பொன்னருமே
பல்லாக்குப்பிடியுமென்றார்குதிரைக்கல்லணையைவையுமென்றார்
பயணமென்றுபிறப்பட்டார்பரிவாறகூட்டமுடன்
மதனைச்சிருசோழரும்மந்திரியுஞ்சூழ்ந்துவர
குதிரைமேலேறிகூடிவழிநடந்தார்
சல்லிப்புறவிதாநேரிசரிகுதிரைதாநடத்தி
உறையூருவீதியிலேஉள்புகுந்துதாநடந்தார்
இராசாவிருக்கும்ஆசாரக்கூடத்திலே
வாறார்சிருசோழரென்றுமன்னவற்குத்தாமுரைத்தார்
வாசகத்தங்கேட்டுவாய்திறந்தங்கென்னசொல்வார்
பொன்னரையழைத்துவாரானோபாருமென்றார்
வாராரேஎன்றுசொல்லிவழிவசமாய்ச்செப்பலுற்றார்
கனகமுடிவேந்தன்கரிக்காலர்வீற்றிருக்கும்
கொலுக்கூடம்உள்புகுந்துகுமாறனும்தெண்டனிண்டான்
போற்றிவணங்கிபொன்னருங்கைமுகஞ்சார்
கைமுகஞ்சபொன்னரைகண்டுமிகராசாவும்
கண்குளிரக்கண்டேன்காராழவங்கிஷத்தை
மேழியுடையவரேமெத்தெனவேகேட்டிருப்பேன்
பொன்னர்சங்கரென்றபிறபலமுங்கேட்டிருப்பேன்
காதாரக்கேட்டிருந்தேன்கால்கடியசேவகனே
என்னூறழிந்துபோகுதுகாண்உத்தமனேபொன்னாண்டர்



சீமையழியாமல்செங்கோல்செலுத்துமென்றார்.
நாடழிந்துபோகாமல்நன்றாகக்காருமென்றார்
காருமென்றசொல்கேட்டுகாராளனென்னசொல்வான்
என்தம்பிசிறியவன்காண்என்கையிலுமாமோதான்
எந்தவகைகேட்டாலும்அதுவகைசெய்தாலும்
என்கையிலுமாகாதுயீசாக்கள்தம்பிரானே
நீரெந்தவகைசெய்தாலும்அதுவகையானாலும்
அந்தவகைஎன்கையிலும்ஆகாதுராசாவே
எழுந்திருந்துகைப்பிடித்துவருந்துவனோபொன்னாண்டே
வருந்தியென்னைக்கைப்பிடிக்கவலுவந்தனோராசாவே
திண்டுமிண்டுசெய்த்திரியோதனன்போலே
கோவித்துக்கண்சிவந்துகொடுஞ்சினமாய்த்தான்பார்த்து
படைமன்னரைத்தாமழைத்துபதுங்கவைத்திருங்களென்றார்
ஆனைபடைமன்னரியரேஅணியணியாய்த்தானிருத்தி
குதிரைபடையைபொன்னர்முன்னாகத்தானிருத்தி
காலாள்கள்சூழ்ந்திருக்கமேலாள்கள்வீற்றிருக்க
வடிவுள்ளதொண்டமான்விடிவளவும்காத்திருக்க
பொன்னருக்குப்புத்திசொல்லிபோசனம்படையுமென்றார்
அடவுடனேவைத்திருங்கள்ஆசாரக்கூடத்திலே
என்றுரைத்துராசாவும்எழுந்திருந்தார்மாளிகைக்கு
சுத்திமிகப்பார்த்தான்சுத்தாலைப்பதிகாரழன்

## பொன்னர் தம்பி சங்கருக்கு ஓலையெழுதல்.

சூரிக்கத்தியெழுத்தாணிசுருளோலைதானெடுத்து
வாரிமிகஒப்பமிட்டுவாள்வீரன்தம்பியற்கு
கரிகாலராசாவும்கனமுடனேநம்மையுந்தான்
சீமையாளுமென்றுசொல்லிசெங்கோலுமுன்னுதென்றான்
அத்தாரைக்கேளாமல்வித்தாரம்பேசிவிட்டேன்
கொத்தவரேஅத்தாறேகொடியதொருதம்பிசங்கர்
உங்கருடையூன்னமதனைகரிக்காலன்தானறிய
உறையூர்பதிவாசன்உத்தமனும்சோழனுந்தான்
செப்பமுடன்படைநடத்துயிப்பவேவாருமென்றார்
எழுதினார்சீட்டைபழுதபடாமேனியற்கு

## ஓலையைப் பிள்ளான்கையில்க் கொடுத்து ஊருக்கனுப்பி தம்பியை வரவழைத்தல்.

வாடாபிள்ளானேபோடாநம்பதிக்கு

இவடத்தப்புத்தைமதனையிவல்பெறவேகானுரைத்து
அவடத்திங்நீபோயடவுடனேபடைகூட்டி
நிட்டெனவேயாருமென்றுவிட்டெரிந்தார்சீட்டையுமே
நிருபந்தனையெடுத்துத்திருமுடிமேல்வைத்துக்கொண்டு
கல்தக்கோட்டைதாக்குதித்துகுடிவழிநடந்தான்
வில்படைகள்தான்கூட்டிப்பொருதவொருவென்றார்
ஆண்டவரேபாக்கென்றுஅடிவணங்கித்தெண்டனிட்டான்
ஆர்ப்பறித்துப்பிள்ளானும்குருவிபறந்தாற்போல்
செப்பமுடன்தான்குதித்துவென்றநரைக்கொடியில்
கண்டார்களெல்லோருங்கரிக்காலர்சேனையெல்லாம்
குதிரைப்பிடித்தவன்தான்குதித்தோடிப்போனதையும்
பறந்தொருபறப்பயல்தான்பாய்ந்துமெள்ளப்போனான்காண்
ஆனைபடைசேனையெல்லாம்அடங்கஅலுக்குழந்திருக்க
கண்டோரெல்லவரும்பறப்பயல்களாய்விட்டதை
தெண்டிரைசூழுலகாளும்தேவராசன்கரிக்காலன்
இந்தப்புதுமையையெடுத்துரைக்கவேணுமென்று
வன்னமாய்சம்புறவிகட்டும்வடிவள்ளாளோடிவந்து
ஆண்டவரேபாக்கென்றுஅடிவணங்கித்தெண்டனிட்டு
பொன்னரிருக்கும்ஆசாரக்கூடத்திலே
சேனைபடைகளெல்லாம்சிறக்கவேதானிருக்க
இத்தினையுந்தான்கடந்தானியல்பானபிள்ளானும்
என்றுசொல்லக்கரிக்காலனின்றுமனமடிவாய்
பொன்னரையுமிங்கேயின்னேரம்அழையுமென்றார்
மந்திரிகள்தாமோடிதந்திரமாய்ப்பொன்னர்முன்னே
மேனிதரித்தவரேமேகப்புரியுள்ளவரே
ஆனிதரித்தவரேஅரனார்அருள்பெற்றவரே
காரளவங்கிஷமேகரிக்காலரழைக்கச்சொன்னார்
கொலுமிகுதிகொண்டவரேபகுதில்லாப்புண்ணியரே
வந்தருளவேணுமென்றுமந்திரிகள்தாமழைத்தார்
சந்தோஷமாகச்சிந்தையிலேதானினைந்து
சங்கரனைத்தானினைந்துசிங்கம்போல்த்தானெழுந்து
மந்திரிமார்முன்னடக்கதந்திரமாய்த்தானடந்து
கனகறத்தினமாளிகையில்கரிக்காலன்கொலுவிருந்தார்
கட்டுச்சரவணையுடகையில்மந்திரவாளுடனே
இஷ்டமுடன்பொன்னுண்டார்கரிக்காலன்சோழனையும்
கைமுகஞ்சபொன்னரையும்பஞ்சணையிலிருமென்றார்
பஞ்சமெத்தைதனையொதுக்கிபரிவுடனேவீற்றிருந்தார்



கையில்ப்பிடித்துகனகரத்தினக்கம்பியில்த்தானிருத்தி
எண்ணையிட்டுக்கரிக்காலன்வண்ணமுடன்முழுகுமென்றார்
மந்திரிமாரெழுந்திரிந்துமயிர்கோதிஎண்ணையிட்டு
கொப்பரையில்த்தண்ணீர்வைத்துக்குளிரவேதலைமுழுகி
செப்பமுடன்மயிர்கோதிசிறக்கமயிர்முடித்து
சிவகருணைத்தாக்ஷினைந்துசிவாயமென்றுநீறுமிட்டு
போசனச்சாவடியில்ப்போயிருந்தான்கரிக்காலன்
பொன்னரையழையுமென்றுபேர்பெறியார்சாவும்
வந்தருகேயாசனத்தில்மகிழ்ந்திருந்தார்பொன்னுண்டார்
கரிக்காலரர்சாவும்கனமுடனேஎன்னசொல்வார்
நம்பினேனுன்னையென்றுநயமுடன்தானுரைத்தார்
சிமையாளுங்கரிக்காலன்செங்கோல்செலுத்துமென்றார்
போசனமுந்தாகருந்திவாசமுடன்வந்துநின்று
ஆசாரக்கூடத்திலேஅனைவருமாய்த்தாமிருந்தார்

## பிள்ளான் ஓலையைக்கொண்டுவந்து சங்கர்முன் வைப்பது.

சங்கரும்அத்தைபிள்ளைதானேகொலுவிருந்து
ஏகாந்தந்தான்பேசியிருக்குமந்தவேளையிலே
தாடிக்காரப்பிள்ளானுங்கம்பீரங்கர்முன்னாக
ஓலையைக்கொண்டுவந்துஒருகொடியில்முன்னேவைத்தான்.
நிருபந்தனைப்பார்த்துப்பொருமலுடன்படையெடுத்தார்
எரிட்டுப்பார்த்தானேஎதிர்வீரர்தாநடுங்க
சுத்திமிகப்பார்த்துஅத்தாரைத்தாமழைத்தார்
வந்ததொருவாசகத்தைவகுப்பாகப்பாருமென்று
வாசகங்கள்தான்கேட்டுவகுப்பாய்ப்படையெடுத்தார்
கச்சைகட்டிதொங்கல்விட்டுகனத்தவாள்தானெடுத்து
இட்டசோடுந்தலைக்கிடும்எடுத்ததாளும்வல்லயமும்
எடுத்தான்படைதனையேஎங்குந்திசையாக
பட்டையம்வில்வாளும்பரிவுடனேதான்போட்டு
சல்லிவில்லுக்காரர்களும்சவறம்பூண்டகுதிரைகளும்
கட்டுக்குதிரைகளும்கலந்துவரும்காலாளும்
இட்டபனுதிகிடுகிடெனஎடுத்தார்படையதனை
மலுக்கர்துலுக்கர்மருபாஷைக்காரர்களும்
எதிரில்லாப்பெருமாளும்விரைமாளுஞ்சேவுகரும்
செய்யபெருமாளும்சிலைக்காரசேவுகரும்
வய்யபெருமாளும்வாண்பெரியகூட்டமுடன்

சிங்காரமெக்கயமும்சிறக்கவேதான்பிடித்தார்
கனத்தபடைகூட்டமிட்டுகடுகெனவேபடையெடுத்தார்

### சோழராசன்மேல் சங்கரும் அத்தைபிள்ளையும் படையெடுத்துப் போகுதல்.

வீரபோகசாம்பானும்விரைந்தங்கேஓடிவந்து
அடிதொழுதுதெண்டனிட்டு ஆசாரம்போற்றிசெய்து
படைநடக்கக்காரியமென்றிடமுடயஆண்டவரே
கரிக்காலராசரைவக்காணவென்றுஎங்களண்ணர்
எண்ணவொண்ணச்சேனையுமாராசாக்கள்சூழ்ந்திருக்க
நடுச்சமயம்வைத்தாணும்நாடாளுங்கரிக்காலன்
திட்டமுடன்போகவென்றுபொட்டெனவேபடையெடுத்தேன்
அந்தவுரைதான்கேட்டுவீரபோகன்செந்தூள்ப்பறந்தாப்போல்
வெங்கலக்கடிங்காலுவிருதுகளுமேல்போட்டு
வெளியில்ப்பிறப்பட்டுவெளிவசமாய்வந்துநின்றான்
வெற்றிமுரசரைந்துவிருதுகொம்புதான்பிடித்தான்
சத்தியுடன்தாநடந்தார்முத்திபெற்றசங்கரண்ணர்
முத்துக்குடைபிடிக்கமுழுமாணிக்கநின்றிலங்க
பவளக்குடைபிடிக்கபாவாடைநின்றிலங்க
செம்பருஞ்சைபிடித்துசிறக்கப்பணிதான்பூண்டு
வெள்ளிகட்டும்வேலெடுத்துவிருதுகளுமேல்ப்போட்டு
உறையூர்தனைநோக்கிஉபாயமுடன்தாநடந்தார்
அந்துமிகொட்டத்திடுதெனப்பறைமுழங்க
காககூரமூதகவரிபரிமாரிவர
செகமென்குந்தாநடுங்கசென்றான்சினத்துடனே
செங்கைமுகில்சங்கற்சினந்துபடைபோகையிலே
தாரைமுரசரைந்துசடுதியாய்ப்போகையிலே
கருமேகஞ்சூழ்ந்தாப்போலகரும்பருஞ்சைக்காறருடன்
இடியப்பதுப்பாக்கிஎரிவானக்குழலுடனே
மின்னிமிடிபிடித்தாப்போல்மேகம்மழைபொழிந்தாப்போல்
வீரபோகன்கழிங்கால்முளங்குவனும்கரிக்காலன்மனநடுக்க
கரிக்காலன்பட்டணமும்கலங்கித்தடுமாரி
ஆரவாரந்தான்கேட்டுஅரமனைகளதிர்ந்திடுமாம்
கோட்டையதிர்ந்திடுமாம்கொத்தளங்கள்கிடுகிடென
அரைந்தான்பரிசைதனைஅரனருளால்ப்பெற்றசங்கர்
காரிடிதான்போலேகால்பரிசைமோதிவிட்டான்



பரிசைவாள்சத்தம்செம்பயனும்தான்கேட்டு
அரமனையிலுள்ப்புகுந்துஅன்பாகப்பார்ப்பகல்லோ
இருவருமாய்த்தானிருந்தவகாந்தவேளை
கும்பிட்டுக்கைமுகஞ்சுகொற்றவரேராசவே
கோட்டையிடியிதுகாண்கொத்தளங்கள்சாயுதுகாண்
ஊருக்குமேற்கேஉய்யகொண்டான்வெளிதனிலே
சீமையளியுதுகாண்செங்கோலுமாறுதுகாண்
இளக்கெளுந்தசூரியந்தான்தெற்குவடக்காணப்போல்
செங்காத்துமழையதுபோல்மங்காமல்வருகுதுகாண்
இத்தினைநாளிதுகாலம்இப்படைகள்கண்டதில்லை
கருமேகஞ்சூழ்ந்தாப்போல்கனபடையும்வருகுதய்யா
என்னமனதெண்ணியிருந்தீரோராசாவே
என்றசொல்லைத்தான்கேட்டுஎங்கிமுகம்வாடி
இருந்ததொருபொன்னர்தமைவருந்தமுடனதாநழைத்து
ஆருபடையென்றுஅளவருக்கப்போகுதில்லை
இருந்ததொருராசாக்கள்வருந்தமுடன்தானோடி
கோட்டைகொத்தளமேலேறிகொம்பாளுப்பாருமென்றார்
இருவருயாகஒருமுகமாய்நின்றுகொண்டு
கனத்தபடையைக்கண்டுகரிக்காலனென்னசொல்வான்
இண்டுமுண்டுசெய்ததிரியோதனன்படையோ
தர்மரோஅர்ச்சுனரோசகாதேவன்தன்படையோ
யின்னதென்றுநானறியேன்எனக்குறையும்பொன்னாண்டே
கோட்டைபடையுமென்றான்கொத்தனத்துக்காள்வையுமென்
உரையூருபட்டணமும்சிறைபோகநாளாச்சே [றான்
தெருத்தெருவேபடைகூட்டிதிகைத்துமெள்ளதான்பார்த்து
பட்டணத்திலுள்ளவர்கள்கெட்டெனவேநடுநடுங்க
கொத்தளத்துமேலேரிபொன்னர்குறிப்புடனேதான்பார்த்து
வெள்ளைக்குடையெங்களுதுவெள்ளைக்கூடாரம்யெங்களுது
சல்லிப்புறவியின்மேல்சதுர்மொக்கவருகிறவர்
வெள்ளிக்கட்டும்பரிசைவீரியவான்சங்கரென்றான்
மேகவர்னபுறவிவிட்டுவிளையாடிநிக்குறவர்
எங்களத்தைபிள்ளைமச்சினாள்ளதிரில்லாப்பெருமாள்காண்
என்தம்பிபடையெடுத்தால்என்வசனங்கேளானே
வன்மமுடன்வாரான்காண்வான்பெரியராசாவே
திங்கள்முகமுடையவனேதெய்வமகாராசாவே
உம்முடஆனைசேனையெல்லாம்அடங்கலுங்கொன்றிடுவான்
சேனைபடையுள்ளதெல்லாம்தீர்க்கமுடனேரசென்று

காதவழியென்னகடக்கவகைசெய்யுமென்றான்
காருளன்சொல்க்கேட்டுகரிக்காலனென்னசொல்வான்
பந்திக்குதிரைகளும்படைமன்னர் நூறாயிரம்
சந்தமுடன்வாளெடுங்களென்றுசொல்வான்கரிக்காலன்
தெருக்தெருவேபடைகூட்டிவ துக்கத்துடன்போகையிலே
இந்தஆரபாரந்தான்கேட்டுயிளமதனைச்சோழனவன்
அஞ்சிப்பயந்துதங்களய்யரை அடிதொழுது
என்னபுதுமையென்றுஎடுத்துரைத்தான்குழந்தையவன்
பொன்னரைவறவழைத்துஎன்னவகையென்றுகேளு
அவன்தம்பிபடையிதுவாறால்வறவழைக்கவேணுமய்யா
ஆனைபடைசேனையுடன் அநுமானஉடுவரையும்
செப்பமுடனிப்பவேஅழையுமென்றான்மதனையவன்
பந்திக்குதிரைவருகுதய்யாசெந்நாள்ப்பறக்க
அநுமானதேசிஅஞ்சஆபரணந்தான்பூட்டி
விலைமதிக்கவொண்ணாதபுறவிதனைக்கொண்டுவந்து
பொன்னரையழைத்துவந்துஉன்தம்பியற்குஇப்புறவி
தாளிச்சவுளியும்சன்னபின்னதாயிந்து
மேலானபொற்பணுதிமேலங்குதான்பூட்டி
அடவாடனேசெம்பொன்னாபரணந்தான்பூண்டு
பொன்னரெழுந்திருந்துபுகழ்பெறவேதான்போயி
எதிரில்லாப்பெருமாளைசின்னவர்தன்னாரே
கொடியதொருசங்கர்படிக்கெதிருய்நின்றுக்கொண்டு
சீட்டுவறவிட்டதென்னசினந்தபடைவேணுமென்று
நாட்டமுள்ளகரிக்காலன்நடுக்கமுடன்காவலென்ன
காவலில்தானிருக்ககாரியமேன்அண்ணாவி
காவலென்றுவைத்தவனைஆவலுடன்காண்தரிப்பேன்
மேகாவல்வைத்தவனைபாகாயுருக்கிடுவேன்
காகம்போல்ப்பறந்துகருவையறுத்துவிடுவேன்
மேகம்போல்பறந்துமேலானஅரமனையை
கல்க்கோட்டையத்தினையும்கடுருப்பொடியாக்கிடுவேன்
அரமனையைத்தானிடித்துயானுமழிப்பேனென்றான்.
கோபமிட்டவேண்டாங்காண்கொடியதொருதம்பிசங்கர்
தெய்வறுசாச்சொல்படிக்குதேசமாளவேணுமென்றார்
மந்திரிகள்தந்திரிகள்ஆனதொருராசாக்கள்
சங்கரையும்அரவனைத்துசிங்காரதேசிமுன்னே
கீறேறிவிளையாட்டூண்டவரிப்புறவிதந்தார்காண்
கைக்கூலிதந்தானேகரிக்காலன்எங்களுக்கு



மெய்க்காறவல்லவரெஎங்களாண்டவர்மெய்ப்பாகத்தான்குடித்
சீர்மையிலெபாதியேசிறந்தாளுஞ்சங்கரென்றார் [தார்
அரமனைக்குவாருமென்றுஅழைத்தார்கள்மந்திரிகள்
பொன்னர்தம்பியரைக்கைப்பிடித்துப்போனாரசபைக்கு
கரிக்காலச்சோழரையும்நம்பிகைமுகயவேணுமென்றார்
நாம்ஆரியவங்கிஷந்தான்அவர்சூரியவங்கிஷந்தான்
கைமுகயக்காரியமென்னென்றாரேசங்கருந்தான்
ஏழைப்புத்திபேசுவதுக்கள்கோளைப்புத்தியுள்ளவர்கள்
நமக்கெதிருமுண்டோட்டிலெஉள்ளவர்கள்
பொன்னர்சங்கரென்றுகர்ணனென்றுந்தாமிருக்க
வணங்கவந்தகாரிமென்துஞ்ஙகளுள்ளஅண்ணாவி
வந்ததெல்லாமறிவமென்றுஅந்தமுடன்கூடிச்சொன்னார்
பந்திக்குதிரைகளும்படைமன்னரெதிர்வந்தார்
பூமியதிரபொற்காளைமுளங்கிடுமாம்
பேறிகையதிர்ந்திடுமாம்பெரியதொருபட்டணத்தில்
பட்டணத்திலுள்ளவர்கள்திட்டெனவேஓடிவந்து
மாட்டார்கடோர்க்கயனேவாளுக்குவீமனோதான்
வீராகவில்வாங்கும்விசையனென்றஅர்ச்சுனனோ
வீரானகீஷகனைவிளவுநைத்தவீமனோ
சத்தியரிச்சந்திறனோசத்தியகீர்த்திதானோ
முத்தியுடன்பிறந்தசத்தியவாசகரோ
என்றென்றுராசாக்கள்எல்லவருங்கொண்டாட
சிங்காறக்கூடத்திலெராசாசிறக்கக்கொலுவிருந்தார்
கொலுவிருக்கும்வேளையிலெகொற்றவருங்கைமுகஞ்சார்
எல்லவருங்கைமுகஞ்சயிருந்தார்கள்ராசாக்கள்
வேற்கவிருவிருக்கவெற்றிசங்கறென்னசொல்வார்
கரிக்காலன்முகநோக்கிகாரியங்களானதென்ன
எத்தியழைத்துவந்துஎன்தமையனையும்முடைய
காவலனேகரிக்கலாமுற்கதையறியீரோ
ஒருபூவுக்காகவல்லோஉலாயூறளித்ததுவும்
கோவிலனைக்கொன்றதினால்குடிகெட்டான்பாண்டியனும்
அய்வரையும்ஓட்டிவிட்டுஅரசாண்டான்திரியோதனன்
துரோபதையைத்துயிலுரிந்தான்துர்ச்சாதனன்தன்னைவிட்டு
விறித்தகுழல்முடியாமல்வீரபாசைதான்கூறி
பதிகெட்டுஎக்குரோணிபடைமன்னர்பட்டுவிழ
துற்சாதனன்தலையறுத்துதுரோபதையாள்முன்போட

அருந்தசிறசின்மேலிருந்துவிரித்தகுழல்முடிந்தாளே
பாண்டவர்கள்தன்கையிலேபட்டான்துரியோதனன்
முற்கதையறிந்திருந்துமுடிபெருத்தராசாவே
என்தமையனையழைத்துவந்துஎன்னமுடன்செய்நதென்ன
மீசைதுடித்திட்டவெபாசையுடனெழுந்திருந்தான்
எழுந்திருந்ததம்பியேசேயியல்புடனேதானிருந்தி
அரவனைத்துத்தம்பியவரை அவர்கோபமடக்கினின்றார்
மதனைப்புத்திதன்னிலல்லோமனதிலேயெண்ணாதே
வந்ததொருகாரியந்தான்அந்தமுடனறுப்புமென்றார்
சொன்னவேபொன்னன்செட்டசெவியிலேகேளாதோ
பாதிக்காவலொப்புமென்றுபண்புடனேதானுரைத்தார்
எந்தவகையானாலும்எனக்குரையும்அண்ணாவி
சந்திமுகமுண்டையவனேசறசமுடன்சொல்லுகிறேன்
தெய்வராசாவேசினத்துடனேபேசாதே
வற்மமுடன்பேசாதேவளமைஎல்லாம்சொல்லுகிறேன்
சீமையாளுமென்றுசினத்துடனேகரிக்காலன்
தேசமாளுமென்றுசொல்லிதெய்வராசன்தானுரைத்தார்
இப்பவேபட்டயத்தை நயெழுதுமென்றான்தம்பிசங்கன்
பட்டயத்தைதத்தானெழுதிபறிவாகஉம்பளிக்கை
சுத்தாலைத்தாரும்பரணையப்பட்டென்றுசொன்னார்
புல்லூருவட்டசேறிபூம்பானைநெல்வினையும்
மாம்பூண்டிக்குளமோமன்வாத்திகுட்டநென்றார்
கோனூடுமுங்களுதுகொற்றவரேபொன்னண்டே
என்சிற்மையெல்லைபறங்கேளுமிளவறசேபொன்னண்டே
வடக்குவிசையகர்கிழக்குந்தஞ்சாவூர்மட்டாக
தெற்குமதுறைவாசல்மேற்குமதுங்கரையும்
இந்தசீமையிலேபாதிசிறந்தாரும்பொன்னண்டே
என்றுநான்ராசாவும்இதமுடனேதானுரைத்து
ஆனையஞ்சுகுதிரையஞ்சுவர்கொண்டுவாறமென்றார்
பொற்பல்லக்குந்தானுமிட்டுபுகழ்பெறவேவருஞ்சையுந்தான்
வீதிவலம்வருமென்றுவிடைகொடுத்தார்பொன்னண்டார்
வெற்றிசங்கரெழுந்திருந்துவெள்ளானைவேணுமென்று
பட்டத்துக்குறியதொருபால்வெள்ளையானையென்றார்
பட்டத்துயானைதனைபன்பாகக்கொண்டுவற
ஆனையுமேமொமொக்குளிகான்அடங்காமதவானை
வெள்ளிநல்லமுருகனைத்துமேல்க்கொம்புதான்பூட்டி



சறப்பளியைமேல்ப்பூட்டிசகலாத்துமேல்விரித்து
நாலுகால்நெகிளம்பூட்டிநவமணிகளோசையிட
நடத்தக்கொண்டுவந்தானேநிட்டத்துடனேயானைப்பாகன்
குடோரிக்குமஞ்சாமல்கோபமுடன்நடத்திடுமாம்
தம்பியரேதம்பியரேதப்பியவான்சிங்கமே
கால்மீறிவருகுதுகாண்கதித்தமதவானை
ஆனைப்பாகன்தனையழைத்துஆனைச்சன்னையென்னவென்றான்
ஆனையோமொக்குளிகாண்அடங்காமதவானை
தன்பிலத்தையறியாமல்தண்ணிழலைப்போய்ப்பாயும்
குடோரிக்குமஞ்சாதுகுணத்திலேதிலும்பாது
நீற்பெருக்கப்போலகையிலேநெகிளம்பூட்டவேணுமென்றான்
கட்டுங்கம்பத்திலச்சேறமட்டும்மீட்டிக்காரர்வேணுமென்றான்
அதிகோபங்கொண்டதொருஅடங்காமதவானை
செவியைப்பிடித்துயானைப்பாகனையிறங்குமென்றான்
ஆனையைவிட்டிறங்கிஅப்புறமாய்ப்போய்நின்றான்
நாலுகால்நெகிளமும்நன்றாகவாங்குமென்றான்
ஆலர்க்கள்பயந்தாற்போல்ஆனைமஸ்தகத்திலேப்போயிருந்தார்
உறையூர்வலமாகஉபாயமாய்த்தானுமவந்தார்
ஆனைவிட்டுவிளையாடிஆர்ப்பரிக்கான்தம்பிசங்கன்
சோழன்சிங்காசனத்துமுன்னேசலாமென்றான்தம்பிசங்கன்
அண்ணாந்துதான்பார்த்துஆனைப்பாகனென்னசொல்வான்
நீராருடவங்கிஷங்காண்அடிதொழுதுஎன்னசொல்வான்
வீமாகுலன்விசையனுடஅங்குலமோ
திரியன்குமாரனையும்நடுப்படந்தலிலேகட்டிவைத்து
சுந்தரின்பக்கைப்பிடித்தசொல்கேளாஅபிமன்னனே
ஆவுசிறைமீட்டஅர்ச்சுனனும்நீர்தாமோ
காவுடத்திலக்கண்ணனைக்கழுத்தருத்தவீமனோ
வாலியுடவாலில்வல்லறக்கன்கட்டும்பட்ட
ஈறேழுசமுத்திரமும்பிழுபட்டகதைபோலே
மெச்சினேனுன்னையென்றுவிழுந்ததகேதெண்டனிட்டான்
சிக்கிச்சுஉன்கையிலேசின்னெருமைக்கன்னதுபோல்
ஒப்பமிகக்குடுத்துஒதுக்கினானானைப்பாகன்
வெள்ளைவிருதுமிகவிருதுதான்பூட்டி
சல்லிவிருதுகளும்சாவளியுடன்பூதான்கட்டி
பஞ்சவர்ணவிருதுபாவாடைதான்போட்டு
வீறபோகசாம்பானும்வெங்கலமுறச்சைய

வெற்றிக்கொம்பைத்தான்பிடித்துவீறபோர்கன்முன்னடக்க
பச்சைப்பல்லாக்குமேலேபொன்னசெபகல்வீதிவாருமென்றார்
மேகக்குடைப்பிடிக்கவீதிவலம்வருவதல்லோ
தம்படையைமுன்னடத்திதம்பிசங்கன்வருவதல்லோ
பட்டணத்திலுள்ளவர்கள்பரிவாரத்தாலுங்கூடி
மிகவிருதுதான்பேர்ட்டுவெள்ளானைமீதேறி
கொம்புதமுக்குடிக்கொடியசங்கன்வருவதல்லோ
வாரவனைவழிமறிக்கவொருவல்லவனுமுண்டோதான்
என்றுமோராசாவுமெடுத்துவிட்டான்ராணுவத்தே
ஆயிரம்அஞ்ஞூறுஅநுபானபேற்கூட்டி
வம்புசெய்யவேணுமென்றுவலுவந்தமாய்த்தான்நடந்தார்
பார்த்தான்பொறிபறக்கப்பல்லிசையுமூடுறுவ
செம்பரிசைதனையெடுத்துசேர்ந்தவர்கள்மனநடுங்க
கால்பரிசைமேல்திவிட்டான்கல்கட்டுஅதிர்ந்திடுமாம்
சத்தந்தனைக்கேட்டுசதியாகவந்தவர்கள்
மெத்தையங்கிலிருந்தார்க்கெல்லவரும்
கிழக்குவீதிவந்துதெற்குமுகத்திலும்பையிலே
மல்லகசெட்டிகளும்மல்பேருக்குவழிமறித்தார்
எந்தவூர்மல்லாண்டேஎன்னமல்வழிமறித்தீர்
விசையநகர்பட்டணங்காண்உனையூருக்குவந்தமென்றார்
மல்பொருதவந்தோம்சொல்பெரியசேவுகனே
என்றுரைக்கமல்லறிவதுரைப்பான்தம்பிசங்கன்
என்முன்னெதுப்பதுண்டோஇந்தபூவுலகிலுள்ளவர்கள்
என்றுரைத்துச்சங்கர்யினிவர்டாவென்றுரைத்தார்
மப்புதட்டிமல்லர்களும்மதையானைவிட்டுவாருமென்றார்
சுப்பறனைத்தானிவர்ந்துயிறங்கினானைவிட்டு
மோதினார்மல்லர்களைமுடியறுந்துத்தரையில்விழ
சாடினார்மல்லர்களைதந்தங்களுதிர்ந்துவிழ
கொன்றுமிகக்கொக்கரித்தான்கோனாட்டுக்காரனன்
வென்றுதிரும்பிசங்கறவீதியிலேதின்றதொரு
கல்த்தூணைவீசிவிட்டான்கண்டதுண்டமாய்விழ
என்முன்னெதுப்பாருண்டேயிவ்வுலகில்ராசாக்கள்
என்றுவரினுனையின்மேல்யியல்பெறவேசங்கருந்தான்
உப்பரிகைமேலிருந்துஉறையூரானென்னசொல்வான்
பாண்டவர்களிவர்களென்றுபகைதவித்துப்பயந்துநின்றான்
ஆசாரச்சாவடியில்அஞ்சிமிகவந்துநின்று



அரமனையிலாலத்திஅடவுடனேதானெடுத்து
வாங்கவென்றுசொல்லிவடிவுடையான்தானுரைத்தான்
ஆலாத்திசுத்திஅப்புறமேவிட்டெறிந்தார்
நீடூழிவாழுமென்றுநீதிபனுந்தானுரைத்தார்
தேசமெங்கும்ஆளுமென்றுதேசாதிபன்தானுரைத்தார்
கல்த்தூண்விழுந்ததையுங்கண்டான்கரிக்காலன்
கண்டுகரிக்காலன்கடும்புலிகள்தான்குடுத்தார்
நாடுநகரொன்றுமிதன்றுநகற்சோழன்தானுரைத்தார்
ஊருவலம்வந்துபொன்னர்சங்கர்ஒழுகுமேல்சாய்ந்திருந்தார்
ஆலாத்திப்பெண்கள்அடிதொழுதுஎன்னசொல்வார்
சந்திரரோசூரியரோவானுலகுயிந்திரரோ
சத்தியரிச்சந்திரரோசத்தியகீர்த்திதாரோ
இளமதியமுகத்தாரோஎழுந்தருளிவந்தீரோ
கஸ்தூரிதங்களுடகொலுவாகவீற்றிருந்தீர்
அய்யருடஒப்பினைபோல்அழகாகவீற்றிருந்தீர்
இத்தினைநாளிதுகாலம்எழுபதுதலைமுறையாய்
உந்துமிகப்பார்த்தால்உலகளந்தார்தமையனைப்போல்
நளினமுடன்பார்த்தால்நளன்வடிவுதப்பாது
என்றுசொல்லிப்பெண்கள்யிருகைதலையில்வைத்து
கையில்விடும்பூசனங்கள்காலில்விழுந்திடும்பாரும்
காலில்விடும்பூசனங்கள்கையில்விட்டிடுதுபாரு
பாராரோதிரும்பிமுகம்வாராரோவென்பாரு
எங்கள்துயரந்தீறஎழுந்தருளுமென்பாரு
காமவிகாரத்தில்கல்விரலம்பாராட்டி
இருஸ்தனங்கள்தைத்துருவவகாந்தப்பள்ளியிலே
கால்ச்சிலம்புகலகலெனகட்டுகளழுந்திடுமென்றார்
என்றுசொல்லிப்பெண்களேங்கிமுகந்தான்பார்த்து
பொன்னும்பலந்தனிலேபுகழ்பெரியசன்னதியில்
சன்னசிவறம்பெற்றார்தாருழுலேகேழுமென்றார்
பெண்ணுவியண்டிவிட்டால்விலங்குறையுமம்மானை
விலைமதியாப்பட்டெடுத்துவேசியற்குதான்போற்றி
களைசோறதின்றவர்க்குவிலைமதியாப்பணிகளுந்தான்
வீடேபோமென்றுசொல்லவிறைந்துஎழுந்திருந்தார்
கனகறற்றினமாளிகையில்கரிக்காலனையுந்தான்தொழுது
ஊருவிட்டுவந்துஒருமூன்றுநாளாச்சு

பேர்பெறியராசாவேபோகவிடைதாருமென்றார்
வெள்ளிலையடைக்காயும்மெத்தவாரித்தான்கொடுத்து
தெள்ளியசந்தனமும்அள்ளியேதான்பூசி
பொன்னருடைகையில்பொன்னாழிதான்போட்டு
சற்றின்கம்புளிகுடுத்துராச்சியத்தையாருமென்று
அந்தவுறைகேட்டுஅழகுபொன்னமொன்னசொல்வார்
சோவேதான்சிரித்துசிவனார்காணைகளுக்கு
நாங்கள்செய்ததொருதீவினையைபொருத்தருளும்ராசாவே
இரும்பூசிபோலேபொன்னூசிதருவமென்றார்
இருகையிலும்பொன்னேந்திஇராவளிகட்டவுமென்றார்
இருவரையுஞ்செப்பிஇருந்தகொலுவிட்டெழுந்து
வந்துவழிகடந்துவழிவிட்டார்பொன்னரையும்

## சோழராசன் பொன்னர்சங்கரை ஊருக்கனுப்புதல்.

செய்யபெருமாளசிங்காடிவில்லெடுத்து
கல்க்கோட்டைஊடுறுவஎய்யுமென்றார்பொன்னுண்டார்
கண்டுகரிக்காலன்சோழன்பெருமையைப்போல்
தெண்டிறைசூழ்வையகத்திலிகத்திலையுமில்லையென்றார்
பண்டுபோற்சீமையாண்டுபரிவுடனேவீற்றிருங்கள்
என்றுசொல்லிக்கரிக்காலன்வகாந்தமாகவே
பல்லக்குயானையும்பரிவாரகூட்டமுடன்
தங்களூற்றிசைநோக்கிஎங்குந்திசையாக
பதிகெட்டுமேளமுடன்பலமணிகளோசையிட
பெறையூர்தனைநோக்கிப்பிறப்பட்டுப்போகையிலே
பேறணியாய்வந்துகண்டான்பெறையூரான்றனை
கழுகுபறக்குதுகாண்பழுதில்லாத்தம்பியரே
சொன்னவுடனேதான்கேட்டுகழுகுவிளய்துநின்றான்
கழுகுபட்டுவிழுந்துவிட்டகழுகாடியென்றுரைத்து
பெருமிட்டுப்பொன்னுண்டார்பெருவழியாய்ப்போகையிலே
வானவர்கள்பெரும்வான்படையும்போகையிலே
தோகைமயில்ப்பறந்துதுயரமுடன்போகையிலே
மயில்ப்பறந்துபோறதைக்கண்டோராத்தாவே
சொன்னவுடன்வில்லெடுத்துசோர்ந்துவிளய்த்துநின்றார்
தோகைபட்டுவிழுந்துவிடவும்தோகைமயிலென்றுரைத்து



புல்லூர்வடச்சேரிபொன்னின்பூம்பானைசெல்விளையும்
தூளிக்கிடாய்வெட்டிதோரணத்தேகட்டுமென்றார்
கரிக்காலன்சீமையெங்கும்பரிவுடனேதோரணமும்
சுத்தாலைத்தூருசுத்திப்படைதான்யமைத்தார்
குமாரர்வருஞ்சேதிகுன்னுடையான்தான்கேட்டு
தெருத்தூத்துமண்பரப்பிதெருவீதியலங்கரித்து
ஆலாத்திக்காறிகளைஅழகுபெறச்சிங்காரித்து
அண்ணரும்தம்பியரும்அரமனையிலுள்ப்புகுந்து
ஆலாத்திசுத்தியல்லோஅழகுபெறகீருயிட்டு
வாழ்வீர்வளந்திருப்பீர்வண்மைகளைபெற்றிடுவீர்
பகைத்தவற்களுடல்பிடுங்கிப்பரிவுடனேவாழ்ந்திருப்பீர்
எதுத்தவற்மூக்குவாங்கிகேட்டற்றமுண்டாவீர்
சகத்திலுள்ளோர்கொண்டாடதேசமெல்லாம்வாழ்ந்திருப்பீர்
இம்மையறிவுண்டுமருமையுமோதானுமுண்டு
வாழ்ந்தாலுமிருந்தாலும்வலதுகளுந்தானுமுண்டு
கல்லுங்காவேறியுள்ளமட்டுபோராகவாழ்ந்திருப்பீர்
சோழருடசீமைதுயரமெல்லாந்தான்தீர்த்து
செல்லாண்டியம்மன்சிலதனத்தைதந்தானும்வைத்து
எலகுபுனம்பார்த்துவறயிளையவறையனுப்புமென்றார்
கருங்களவுசெய்தவரையிருபிளவுசெய்யுமென்றார்
முடிபொருத்தராசாக்கள்மூன்றுமன்னர்களறியாமல்
செடிபெருத்தகாட்டார்க்கள்சில்லரையும்வாராமல்
கடியியுமேபடிந்தெதிரெகள்ளருமேவாராமல்
நாலுதிக்குந்தானடுங்கமேனுட்டார்தானடுங்க
செங்கோல்ச்செலுத்திஇட்டமுடனிருக்கையிலே
அத்தனையிலாமூலவர்களும்ஆனைபடைசேனைகளும்
பொன்னருடன்சங்கரும்புகழ்ந்துஇருக்கையிலே

## நல்லதங்காயி அண்ணமார்களை குயிலுமயில் பிடித்து தரச்சொல்லிக் கேட்கல்.

நல்லதங்காளுத்தமியுங்காடியங்கேவந்துநின்று
அண்ணமார்தன்னருகில்அன்புடனேவந்துநின்று
என்பிறவியண்ணாவிறகையுள்ளமன்னவரே
சின்னண்ணாஎன்பிறவிசெல்வத்திருமுகமே
கொஞ்சிபிங்கேவிளையாடகுலக்கொடியாளெந்தனுக்கு

பஞ்சவர்ணநற்கிளியும்பவளவர்ணத்தாராவும்
மயிலுங்குயிலுகளும்மாடைப்பிராவினமும்
பேடையுந்தாராவுங்கான்பிடித்துவிளையாட
அண்ணாவிஎன்பிறவியதுவேட்டைதானுடி
கொண்டுவந்துதறவேணும்குலக்கொடியாளெந்தனுக்கு
அறியபிறவியேறஅம்மாஅதுவோசிலபாசம்
அப்படியேநல்லதென்றுஆண்மையுடன்தம்பிசங்கன்

## சங்கர் வேட்டைக்குப் போகுதல்.

வேட்டைகளுந்தானுடவிதவிதமாய்க்கச்சைகட்டி
அத்தைபிள்ளைமூவரையும்ஆண்மையுடன்தான்கூட்டி
ஆயிரங்காலாளுடனேஅன்புடனேகூட்டமிட்டு
வில்லெடுத்துஅம்புதொட்டுவெள்ளிகட்டும்வேலெடுத்து
எரிவல்லயங்கன்னிகளும்யின்பமுடன்தானெடுத்து
எண்ணைக்கச்சைவரிஞ்சுகட்டியிருபுறமும்சொங்விட்டு
மாதளம்பூச்சல்லடங்கள்வகைவகையாய்த்தானணிந்து
துத்திப்புஅங்கிதொட்டுசோடுவச்சிறச்சீராவும்
வர்ணக்கச்சைவரிஞ்சுகட்டிவலதுபுறஞ்சொங்குவிட்டு
அத்தைபிள்ளைமூவர்களும்ஆனதொருகாலாளும்
வீறசாம்புவன்தன்னுடனேவீரியருமுன்னடக்க
வெள்ளாங்குளத்துருமேல்புறஞ்சோலையிலே
இரண்டுநிகர்வன்னதனிலேயிபல்வேட்டைதானுடி
கன்னிகளெக்கட்டிகடியதொருபச்சிகளெ
பஞ்சவர்ணநர்க்கிளியும்பவளவர்ணத்தாராவும்
மயிலுங்குயிலுங்களும்மாடைப்புராவினமும்
பேடைமயிலினங்கள்பிடித்துவிளையாடையிலே

## தலையூருக்காளி வேங்கையைக் கொல்லுவது.

மண்டியிட்டுத்தானிருந்துவகையுடனேநீர்குடித்து
தண்ணீர்குடிக்கிறதைத்தான்கண்டான்வேங்கைதன்னை
அதம்பியேவேங்கையதுஆக்கரித்துத்தானெழுந்து
வத்தினதுளந்தனிலேவாளைகுதித்தாப்போல்
தம்பிசங்கன்கண்டுதாண்டிக்குதிகுதித்து
வீறவாள்தன்னாலேவீசினான்வேங்கைதனை



பட்டுருவிவேங்கையதுப்தரிவிழுகையிலே
தலையூருக்காளிக்கமையமென்றுவிழுந்ததுவே
அமையமென்றசத்தம்அவன்காளிதன்செவியில்
செப்புகாராசமதுசெவியிடித்தாப்போல்
தலையூருக்காளியவன்தன்செவியில்க்கேட்டதுவே
வேங்கைதனைவெட்டிவிழியவான்நம்பிசங்கன்
தங்காளரமனைக்குத்தான்வந்தாநப்போது
பந்தடிக்குமாளிகைக்குமுன்னாகவந்துநின்று
அரியபிறவியபோஅன்புடனேயானழைத்து
என்பிறவிதங்கையேநானென்றழைத்தான்தம்பிசங்கன்
அன்னதுஞ்சல்விட்டிறங்கிஅன்புடனேதங்கையறும்
சின்னண்ணன்பக்கமதுக்குசீக்கிறமாய்வந்தாளாம்
மயிலுங்குயிலுமாடைப்பிராவினமும்
பஞ்சவர்ணநற்கிளியும்பவளவர்ணத்தாராவும்
தங்காள்கையில்க்குடுத்துதன்விடுதிபோனபின்பு
வேங்கை விழுந்த சத்தம் தலையூருக்காளி கேட்டு

## பார்த்து வரும்படியாய் ஆளனுப்பல்.

வெள்ளாங்குளத்தருகேவேங்கைவிழுந்தசத்தமது
அமையமென்றசத்தம்அவன்காளிதான்கேட்டு
தன்னுடையசேவுகரேநீதானழைத்துஅப்போது
வெள்ளாங்குளத்தருகேவிழுந்தசத்தமது
கண்டுவறச்சொல்லிகடிதனுப்பிவைத்தான்
ஆளோடிக்குளத்தருகேஆராய்ந்துபார்க்கையிலே
வெள்ளாங்குளத்தோரம்வேங்கைமடிந்திடத்தில்
கண்டார்கள்சேவுகர்கள்கண்கொள்ளாவேங்கையைத்தான்
வெள்ளாங்குளத்தாரில்விசாரித்தார்சேவுகர்கள்
வெள்ளாங்குளத்தாரவிபரமதுதானுரைப்பார்
செல்விவளநாட்டான்நிகரில்லாக்கோனுட்டான்
பூங்காவனத்தனிலேபுனல்வேட்டைதானுடி
மயிலுங்குயிலுகளும்வானவாபக்ஷிகளும்
பாவைமயில்பிடித்துபார்க்கானதம்பிசங்கன்
குளக்கரையிலோடிவந்துகுளத்தையிட்டுநீர்குடித்து
தண்ணீர்குடித்துவிட்டுதான்கண்டுவேங்கையது
தண்டையிட்டுவால்முறுக்கிதம்பிசங்கன்மேல்ப்பாய

எழுபதடிதான்குதித்துயிருபிளவுசெய்துவிட்டான்
வேங்கையதுதானலறிவிழுந்ததுகாண்சேவுகரே
வெள்ளாங்குளத்தாரார்விபறமதுதானுரைக்க
அந்தமொழிகேட்டுஅச்சினமேஓடிவந்தார்
தலையூருக்காளியுடன்தானுரைத்தாறப்போது
சீறியவன்காளிசினத்துடனேஎதுரைப்பான்
கண்கள்சிவந்திடவேகாளியவனார்ப்பரித்து
வேங்கைதனைக்கொன்றவனைவெட்டுறதேயல்லாமல்
வெட்டாதேபோனால்வேட்டுவனும்நானல்லவோ
என்னுடையவேங்கைதனையிவன்தானோவெட்டுறவன்
நான்வளர்த்தவேங்கைதனைநாடியிவன்வெட்டுவானோ
என்றுசொல்லிடாவையிட்டெரியவேகண்சிவந்து
தலையூருக்காளியவன்தான்சினந்துகண்கலங்கி
படைமன்னர்சேவுகறேபாங்குடனேகூட்டமிட்டு
நெல்லிவளநாட்டைகொள்ளையிடவேணுமென்று
படைகூட்டம்பேசிபாங்குடனேகூட்டமிட்டு

நல்லதங்காள் கெனாக்கண்டு சொல்லுகிறது.

அந்தநல்லவேளையிலெஆனதொருதங்கையரும்
அன்னஊஞ்சல்மேலெஅசந்துநித்திரைசெய்கையிலெ
ஆதேசங்கண்டல்லவோஅலரியேதானெழுந்து
அன்னருடபக்கலுக்குஅன்புடனேஓடிவந்து
அண்ணாவியென்பிறவிஒருஆதேசங்கண்டனடா
சின்னண்ணாயென்பிறவிஒருதெருசினைகள்கண்டனடா
மேனாட்டுவேடுதளம்வெகுகூட்டம்வறவுங்கண்டேன்
தட்டான்சதிக்கக்கண்டேன்தனிவழியேபோகக்கண்டேன்
தலையூருக்காளியவன்தான்வளர்க்கும்பன்றியது
சென்னல்கதிரையெல்லாம்தின்றளிக்கக்கண்டேனான்
பச்சனாமுதலிமகள்பாறசிறைபோகக்கண்டேன்
அரியபிறவியரேஆனதங்காளுத்தமியே
வேங்கைபுலிமேலெவெள்ளாடெதுப்பதுண்டோ
தவளைகுதித்தால்தண்ணீர்கலங்கிடுமோ
வந்தவந்தவேடுவறேவாளாலைச்சங்கரிப்பேன்
என்றுசொல்லத்தங்கையவள்ஏழாந்தளம்புகுந்தாள்



தலையூருக்காளி நெல்லிவளநாட்டை கொள்ளை யிட யோசனை செய்யல்.

தலையூருக்காளியவன்தன்படையைக்கூட்டமிட்டு
மந்திரிதளக்கருத்தரையும்வகையுடனேகூட்டமிட்டு
கோனாட்டைக்கொள்ளையிட்டுகுண்ணுடையான்தன்மகனே
வெட்டிச்சிறைபிடித்துவிருதுசின்னந்தான்முழக்கி
சேனைபடைகாவலரைசெந்தூளியாக்கிவிட்டு
நெல்லிவளநாட்டைநிற்தூளிசெய்துவிட்டு
வாருமென்றுசொல்லிவருசையுடன்தான்பேசி
எல்லவருங்கூடியங்கேயிவ்வார்த்தைபேசையிலெ
பாள்மூலைப்பல்லிப்பலபவென்றுசொல்லுதடா
தீமூலைப்பல்லிதிக்கென்றுசொல்லுதடா
ஆலைக்கொட்டிப்பள்ளியதுஆக்கரித்துச்சொல்லுதடா
பொல்லாநிமித்தமிதுபோனமேயாமானால்
போனதேயாமாகில்பிழைமோசம்வந்துவிடும்
ஆள்வருத்துப்பாராமல்நான்போகவொண்ணாது
கொங்கர்மேல்ப்போனால்குடிகேடுவந்துவிடும்

குறிக்காறரை அழைத்தல்.

குறியில்த்தெறிந்தவரைகூட்டிவறவேணுமென்று
கனத்தபடைமன்னரெல்லாம்காளிக்கரிக்கைசெய்து
மதவானைக்காளியவன்வருசையுடன்தான்கேட்டு
கோடங்கிக்காரரைக்கூட்டிவறச்சொன்னானே
எவ்வூரில்த்தானும்யிருப்பானோகுறிக்காறன்
வெங்கலநாட்டுக்குள்ளேவேதியரொருவருண்டு
தட்டையநாட்டுக்குள்ளேஒருவனாவனுந்தானுமுண்டு
இருவரெண்டுபேருகளையும்பிச்சினமேகூட்டிவற
தலையூருக்காளிதாஷ்டிகனுமப்போது
அழைத்தோடிவாருமெனஅச்சினம்ஆளனுப்பி
துருசாயழைத்துவறச்சொன்னானேகாளியவன்
நல்லதென்றுசொல்லிநாடியங்கேஆளோடி
சீக்கிறமேதானோடிஅச்சினமேஅழைத்துவந்து
எல்லவருங்கூடியிருக்குஞ்சபைதனிலெ
வந்தாரேசாஸ்திரிகள்வாகானசபைநடுவே
இருங்களென்றுசொல்லிஇன்பமுடன்தானுரைத்தார்

சாஸ்திரியார்தானிருந்துதயவுடனேதானுமங்கே
எங்கள்தனையழைத்ததின்னமென்றுசொல்லுமென்றார்
வாறுமய்யாசாஸ்திரியொருநிமித்தமதுநான்பார்க்க
அழைத்துவரச்சொன்னோம்அன்பாயிருவரையும்
நல்லதென்றுவேதியனும்நன்றாகத்தானுமங்கே
வள்ளுவனைஅருகிருத்திவகையாயிருவர்களும்
பனிரெண்டுராசிகளும்பாங்குடனேதான்பார்த்து
கெவுளிகளும்சொன்னதிசையறிந்துதான்பார்த்து
பாள்மூலையிலிருந்துபதறியேசொன்னபல்லி
புத்தியிலேசொல்லும்பல்லிவாள்க்கூழையாயிருக்கும்
சிக்கதையில்நினைத்ததெல்லாம்சின்னமுட்டர்சாவுசொல்லும்
வந்திடுமேதுதாக்கள்வல்வினைகள்மெத்தவுண்டாம்
அந்திமமேபோனாலும்அகிலமனமும்பயில்லையென்று
குறிதானும்கண்டுதய்யாகொற்றவரேநாட்டாரே
சொல்லுமய்யாசாஸ்த்திரியேதோற்றமுடனெங்களுக்கு
பல்லிசொன்னவிபறம்பார்த்தறிந்தோய்நாட்டாரே
நீங்களெல்லொருங்கூடியொருவஞ்சினைகள்செய்தாப்போல்
கொள்ளையிடவேணுமென்றுகுறித்தாப்போல்க்காணுதய்யா
போனதேயாமாகில்பிழைமோசம்மெத்தவுண்டு
தலைகளுருண்டுவிடும்தனங்களெல்லாம்தான்மடியும்
மிண்டங்கள்துள்ளிவிழும்வெட்டுறண்டுதான்சாகும்
போறதேயில்லாமல்மிஞ்சிவறப்போறதில்லை
என்றுதான்பல்லியதுதிடமாகச்சொல்லுதுகாண்
போவதுஞாயமல்லப்புண்ணியரேசொல்லுகிறோம்
அப்படியேயானால்அதக்குவகைசொல்லுமென்றார்
மறுகுறிதனையும்வகையுடனேதான்பார்த்து
நெல்விளைநாடுநகரில்லாக்கோனாடு
சிற்றூரைப்பட்டணம்சேர்ந்தபொன்னிவளநாடு
திருக்கான்புலியூருந்தெய்வதலங்காணுமய்யா
வீரமலையும்வெற்றியுள்ளரங்கதளம்
வட்டத்திருகாளியம்மன்வடிவுள்ளசன்னதியில்
மதுக்கரைசெல்லிமாகாளிகோவில்முன்னே
களித்தின்னிமல்லற்காவலாய்க்காணுது
அந்தநல்லகாவலிலேபோகவினிக்கூடாது
மேனாட்டைவிட்டுப்போறதுஞாயமல்ல



அல்லவென்றுபோனாலும்மிஞ்சிவறப்போறதில்லை

### வேதியனை மறுகுறி பார்க்கச் சொல்லியது.

கோனாடுகொள்ளையிடக்குறியறிந்துரைத்தார்
பச்சிலைகட்டமுடன்பச்சைவடந்தாரமய்யா
பாகுடனேதுப்பட்டியும்பரிவானசாலுவையும்
வள்ளுவற்குத்தானேவகையுடனேதந்திடுவோம்
இருவரும்குறிபார்த்துயியல்புடனேசொல்லுமென்று
மதவானைக்காளியவன்வன்மையுடன்தான்கேழ்க்க
ஆறுநல்சாஸ்திரமும்நால்வேதமுள்ளதெல்லாம்
பனிரெண்டுராசிபாங்குடனேதான்பார்த்து
ராசிதனையாராய்ந்துநற்குறியும்கண்டார்கள்
ஆனமட்டுந்தானேஅறிந்தமய்யாநாட்டாரே
அறிந்தமட்டும்சொல்லுகிறோம்அன்பானகாளிமன்னு
மதுக்கரைச்செல்லிமாகாளியம்மனுக்கு
தேனிலபிஷேகம்செய்துவைக்கவேணுமய்யா
பாலும்பழமும்பாங்கானமுக்கனியும்
நல்லெண்ணெநெய்தயிருநாடியபிஷேகஞ்செய்து
களித்தின்னிமல்லனுக்குகனபூசைசெய்யவேணும்
அதுக்குவிபறம்அன்பாகச்சொல்லுகிறோம்
கம்பரிசிமாவிடித்துகருப்பட்டிதான்கலந்து
களியுறண்டைதான்கிளறிகனமானஉண்டைசெய்து
அறசாணிப்பழம்போலேஅன்பாகத்தானுருட்டி
எழுபதுகளியுறண்டையினையுடனேதானுருட்டி
நாற்பதுகலவுஞ்சிகன்றாகப்பொங்கியிட்டு
ஆட்டுக்கிடாய்நூறுஅடவாய்சமைத்துவைத்து
முட்டையிடுங்கோழிமுந்நூறுசுட்டுவைத்து
மதுக்குடங்கள்நூறுவரிசையுடனேதானுமங்கே
எழுபதுகூளவண்டியினையுடனேதான்சேர்த்து
வண்டிதனிலேற்றிவரிசையுடன்கொண்டுசென்று
காளிக்குஅபிஷேகமாய்முடித்தபின்பு
களித்தின்னிமல்லனுக்குக்கனபூசைசெய்தாக்கால்
இன்பங்குறைந்தயிருந்தாலும்பூரிதமாய்
கொள்ளைக்கிடங்குடுப்பான்குணமானமல்லனுந்தான்
நல்லதென்றுதானேநாட்டாருஞ்சம்மதிச்ச

குறிசொன்னஅய்யருக்கும்வள்ளுவற்கும்குணமாவகருளும்
போய்வாருமென்றுப்பாருந்திவிடைகுடுத்து

### களித்தின்னி மல்லனுக்குச் சாமான் சேர்த்தல்.

கம்பரிசிகளியுறண்டைகனமாகத்தானுமங்கே
எழுபதுகளியுறண்டைவர்க்கையுடன்தான்சேர்த்தி
ஆட்டுக்கிடாய் நூறு அடவுடனேசுட்டுவைத்து
முட்டையிடுங்கோழிமுந்நூறுசுட்டுவைத்து
நாற்பதுகலவரிசிநன்றாகப்பொங்கிவைத்து
எழுபதுசூலவண்டியிலெவத்தியேசோறுகறி
நாட்டார்கள்கூடிநாடியங்கேகொண்டுசென்று
மதுக்கறையம்மனுக்குஅபிஷேகஞ்செய்தபின்பு

### களித்தின்னி மல்லனுக்குப் பூசை செய்கிறது.

களித்தின்னிமல்லன்முன்னேகனபூசைசெய்வதற்கு.
அன்பதுமாத்து அடவுடனேதான்விரித்து
கொண்டுவந்தசோறுகறிமுன்னுகவேகுமித்து
ஆட்டுக்கிடாய்கோழி அடவுடனே முன்னேவைத்து
மதுக்குடங்கள் நூறுவரிசையுடன்முன்னேவைத்து
பாக்கிலைகள்வைத்துப்பரிவாகத்தூபமிட்டு
யெல்லவருங்கூடியிணைசேர்ந்துதெண்டனிட்டு
கைகட்டிநின்றார்கள்கனமானநாட்டார்கள்

### களித்தின்னி மல்லன் சாதஞ்சாப்பிடுகிறது.

களித்தின்னிமல்லநவன்கண்ணுருட்டித்தான்பார்த்து
முட்டைபோல்கண்களென்றும்முளித்தேவிளியுருட்டி
கொட்டாவியிட்டுவாயைத்திறக்கையிலே
பல்லும்ஒருமுழமாம்பருத்தசுரக்காய்போல
கண்டந்தநாட்டாருகால்நடுங்கிகைநடுங்கி
கண்டானேமல்லநவன்காளிமக்கள்சேவகத்தை
பயப்படவேண்டாமென்றுபாங்குடகையமுத்தி
காலலம்பிக்கையலம்பிகனிவாய்க்கொப்பளித்து
மண்டியிட்டுத்தானிருந்துவடிவுடையமல்லநவன்
களியுறண்டைதன்னைகையிலவன்தானெடுத்து
வாய்தனக்குஒருஉறண்டைவகையுடனேதான்போட்டு



எழுபதுகளியுறண்டையிச்சனமேதான்முழுங்கி
ஆட்டுக்கிடாய் நூறு அச்சினமேதான்முழுங்கி
முட்டையிடுங்கோழிமுந்நூறும்சாட்டோடே
பொங்கிவைத்தசோத்தில்பிறட்டியவன்தான்மிழுங்கி
அண்ணாக்கவிட்டான்ஆனமதுக்குடநூறும்
அப்பவும்அறைவயறுநம்பவில்லைமல்லனுக்கு
இன்னம்எங்கேநாட்டாரேஎன்வயறுநம்பவில்லை
அப்பவங்கேநாட்டாரும்அடிதொழுதுதெண்டனிட்டு
நாங்கள்நினைத்தபடிநாடிவறம்நீர்குடுத்தால்
யின்னம்ஒருபூசையியல்புடனேதந்திடுவோம்
நல்லதென்றுமல்லன்நாடியங்கேதானெழுந்து
காவேரியாற்றுகரையோரம்சென்றல்லோ
காலாலேயாற்றைக்கடுகியவன்குறுகட்டி
சாலாலேமடைதேக்கிகடுகியேமண்டியிட்டு
உறுஞ்சினான்தண்ணியெலலாம்ஒருகறண்டியில்லாமல்
வயருமதாமபிவாயிரம்பிவிட்டபின்பு
நாட்டார்கள்கிட்டவந்துநயனமுள்ளமல்லனுந்தான்
என்னவறம்கேழ்க்கவந்தீர்இயல்பானநாட்டாரே
ஒளியாமல்தானேஉள்ளபடிசொல்லுமென்றான்
நீங்கள்வந்தசேதிஎனக்கறியசொல்லுமென்றான்
நாங்கள்வந்தசேதிநன்றாகச்சொல்லுகிறோம்,

### களித்தின்னிமல்லன் கொள்ளைக்குப்போக நாட்டாற்கு வரங் குடுத்தது.

நெல்லிவிளநாடுநிகரில்லாக்கோனாடு
கொள்ளைக்குப்போகவேணுமகுணமாய்வரங்குடுங்கள்
என்றுதான்கேள்க்கஎன்னசொல்வான்மல்லனுந்தான்
அப்படியேஆகட்டுநமக்கென்னதாரீர்நாட்டாரே
கொள்ளைசிக்கனதேயாமாகில்கொண்டுவருகையிலே
பாதியுனக்குபண்பாகத்தந்திடுவோம்
ஊருபோய்ச்சேர்ந்தால்யின்னம்பூசைகளும்தாராமய்யா
நல்லதென்றுகளித்தின்னிநலமாகச்சம்மதிச்சு
கொள்ளைக்குப்போங்களென்றுகுடுத்தான்வறமதனை
வறம்வாங்கிக்கொண்டுவளகையாவூரில்வந்து
கொள்ளைகொள்ளையென்றுகூடிமுரசறைந்து

வேடுபடைகள்வெகுகூட்டம்தான்கூடி
பம்பைத்தலைவேடுவர்கள்பதினாயிரங்கூட்டமிட்டு
மூளைத்தலைவேடுவர்கள்மூவாயிரங்கூட்டமிட்டு
வெள்ளிக்கிழமைவிரும்பிப்பயணமென்று
கட்டிச்சோறுகட்டிக்கடும்பயணம்தான்கூடி

### வேடுபடை செல்லிவள நாட்டுக்கு கொள்ளைக்குப் போகல்.

நாய்பிடிக்கும்பயல்களைப்போய்நாலாயிரங்கூட்டமிட்டு
சாயரக்ஷைவேளைக்குப்பிறப்பட்டானுவங்கள்
பொளுதுவிழுந்தபின்புநடந்துதோனுவங்கள்
பாதிபதிஞ்சியில்பாங்கானவேடுதளம்
செல்லிவளநாட்டைக்கொள்ளையிட்டார்வேடுதளம்
பச்சைமுதலிமகள்பாங்கானதங்கையரே
மூணுஞ்சாமந்தனிலேமூர்க்கமுள்ளவேடுவர்கள்
மூடுபல்லாக்கில்வைத்துஎடுத்தார்சிறையதனை
கொள்ளையிடுத்தகுளத்தாளொருவனுமாய்
வேண்டியேகொள்ளையெல்லாம்விரும்பியேதானெடுத்து
பச்சைமுதலிமகள்அவளைப்பாறச்சிறையெடுத்து
நித்திரைகுலையாமல்நேர்மையுடன்தானெடுத்து
மதுக்கரைச்செல்லாண்டிவளியதனில்வாருமல்
களப்பூர்வழியாகஓடிவந்தார்வேடுதளம்
தடம்போட்டுத்தடந்தம்பிமயங்குதேவேடுதளம்
என்னவிதியிருக்கஎன்னவிதிவந்ததோதான்
வணந்தோருஞ்சுத்திவகையாய்வெடியுமுன்னே
வெடியவொருசாமமென்னவந்தார்களெல்லையிலே
எல்லைபிசகிதங்கள்எல்லையிலேவந்தபின்பு
சந்தோஷமாகித்தயவாய்ச்சுமையிறக்கி
மூடுநல்லபல்லாக்கைமுன்னாகத்தானும்வைத்து
கிலுநள்கட்டுவாரும்கெச்சிதங்கள்பாடுவாரும்
தட்டுகள்கட்டிதயவாயிருப்பாரும்
சடுகுடுவென்றுதயவாகப்பாடுவாரும்
இப்படியேதானேயிருக்குமந்தவேளையிலே



### முதலிமகள் நித்திரை தெளிந்து புலம்புகிறது.

பச்சைமுதலிமகள்பாங்கானநித்திரையும்
நித்திரைதெளிந்தல்லவோநினைவுதடுமாறி
ஆனந்தந்தெளிந்தல்லோஅறிவுகளுமுண்டாகி
மூடுபல்லாக்கைப்பார்த்துதிறந்துமெள்ளத்தங்கையரும்
வனத்தையுங்கண்டுவகையானபெண்மயிலாள்
எனத்தையுங்காணாமல்ஏங்கிமுகம்வாடி
கண்டாளோவேடுதளம்காதலியும்போது
அய்யோசிவனேஆதிமகாதேவாரீ
என்னைக்கெடுத்தாயோஎன்பெருமாளீஸ்பரனே
இனத்தைப்பிரிந்துயிங்குவந்தேன்விறுமாவே
தாயும்அறியாமல்தகப்பமார்காணாமல்
கொண்டுவந்துவிட்டாரேகொடியநல்லவேடுவர்கள்
என்னைக்கெடுக்கஎவனோநான்பார்த்திருந்தான்
முகத்திலரைந்துகொண்டுமுக்கண்ணாதஞ்சமென்று
மார்பிலரைந்துகொண்டுமகாதேவாதஞ்சமென்று
மார்மேலேகண்ணீரைத்தாரைவிட்டுத்தானழுது
நல்லதங்காள்க்கபயமென்றுஅழுதாளேதங்கையரும்
சங்கர்க்குஅபயமென்றுஅழுதாளேதங்கையரும்
செப்புநாருசாங்காச்சிதங்காள்செவியிலிடித்தாப்போல்
உருக்கூசிகாய்ச்சிஉள்செவியில்விட்டாப்போல
யிருந்துதேதங்காளுக்குயியல்பால்செவிதனிலே
தவரியெழுந்திருந்தாள்தடுமாரித்தங்காளும்
அன்னஊஞ்சல்விட்டிறங்கிஅவள்பதறிஓடிவந்து

### நல்லதங்காள் அண்ணமார்களை எழுப்பிச் சொல்லல்.

சின்னண்ணாஎன்பிறவிசெல்லஉடப்பிறப்பே
பெரியண்ணாயென்பிறவிபேர்போனஅண்ணாவி
சீர்மைக்குக்கேடுவந்ததுஅண்ணாவி
ஏதோதெரியாதுயென்மனதுகலங்குதடா
ஆரோஒருமங்கைக்குஅபகேடுவந்துதடா
இப்படிச்சொல்லியிருக்குமந்தவேளையிலே
ஊருகொள்ளைபோச்சுதென்றுஉத்தாரும்ஓடிவந்தான்
நாடுகொள்ளைபோச்சுதென்றுகூக்குரலும்ஆச்சுதப்போ
பொன்னரும்தம்பிசங்கர்பொருந்தியேகோபமதாய்

## கொள்ளை கொண்டுபோன வேடுவரை பொன்னர் சங்கர் திருப்புதல்.

கச்சைகட்டி ஆயிதமும்கடுகியேதானெழுந்து
அத்தைபிள்ளைமூவர்களும்ஆர்பரித்துக்கொக்கரித்து
வெள்ளிகட்டும்வேலெடுத்துவிதமானஅம்பெடுத்து
கடிங்காலடியுமட்டாகநித்ததொருசாம்புவனை
கடிங்காலடித்துகணபடையுதான்கூட்டி
கோட்டைவிட்டுபோனுக்கால்குடிகேடுவந்துவிடும்
கோட்டைக்குக்காவல் அண்ணரையுந்தானிருத்தி
தங்காளுக்குக்காவல்பொன்னுண்டார்தனையிருத்தி
சிறுதுதளத்தேசிக்கிரமேதானிருத்தி
அத்தைபிள்ளைஇருவரையும்அன்பாகத்தானிருத்தி
தலைக்கோழிகூவுமுன்னேதம்பிசங்கன்அத்தைபிள்ளை
சாம்புவனைக்கூட்டிக்கொண்டுதானுந்நடந்தானன்னேரம்
மூவருங்கூடிமூர்க்கமுடன்போகையிலே
கிளிகள்கட்டிகேக்கைவிட்டுபாடுறதும்
தம்பிசங்கன்தன்செவியில்தனியாகக்கேட்டபின்பு
குமிடுபாறைவளியில்கொடியசாம்புவனைக்காவல்வைத்து
தம்பிசங்கன்அத்தைபிள்ளைஇருவருந்தான்கூடி
அவர்களுக்குமுன்னாகஆனதொருசங்கம்புதை
சங்கம்புதையிலேஅடங்கினான்தம்பிசங்கன்
அம்மான்பெருமாளும்அடங்கிமெள்ளத்தானிருந்தார்
புனுகுசதம்பங்கள்போதவேஅணிந்ததினால்
சவ்வாதுபரிமளங்கள்தான்மிகுந்துபூசியதால்
ஆடுகின்றவேடுவர்க்குஅவ்வாசம்வீசிடவே
ஆடாஅண்ணமாரேபுனுகுவாசம்வீசுதடா
சவ்வாதுவாசம்தனித்தனியேவீசுதடா
புனுகுநல்லபூனைஇந்தப்புதையிலிருக்குதடா
புதைகளையும்சுத்துங்கடாபுனுகுபூனைதான்பிடிப்போம்
என்றுசொல்லிவேடுவர்கள்எல்லோருந்தடியெடுத்து
புதைதனைக்கலக்கையிலேபுலியுருமினாப்போலேதான்
வேங்கைகுமறிடவேவிழுந்தார்கள்வேடுவர்கள்
கால்கள்தடுமாறிகதறியங்கேவிழுவாரும்
சிறுபுலிதம்பிசங்கன்சீறியேதான்பாய்ந்தான்



அம்மான்பெருமாளும்ஆக்கரித்துப்பல்கடித்து
வீசினார்வேடுவரைவெள்ளிரிக்காய்பிளந்தாப்போல்
வெள்ளிகட்டும்வேலெடுத்துவீறிடவேகுத்திடுவார்
பன்றிவேல்தானெடுத்துபதறிடவேகுத்திடுவார்
கொக்கிறகண்டவாளாலேகுலவைவிட்டுவெட்டிடுவார்
அய்யோசிவனேயென்றுஅலறியங்கேவிழுவாரும்
இந்தநல்லகொள்ளைக்குயேன்வந்தோமென்றுசொல்லி
மூட்டைகளைதான்போட்டுமுடிகியங்கேஓடுவாறும்
கொள்ளைக்குவந்திடத்தில் குடிகேடுவந்ததென்று
போட்டது போட்டாப்போல் புலம்பியங்கேஓடுவாறும்
குருக்காட்டிக் குருக்காட்டி குடல் சரியக்குத்திடுவார்
முரிந்துதே வேடுதளம் மூக்கனுங்குறிச்சிமட்டு
குமிடுபாறைவளியில் ஓடுதேவேடுதளம்
சாம்புவனுங்குருக்காட்டிதடமரித்துக்கொண்டானே
குலவைவிட்டுச்சாம்புவனும்குருக்காட்டிக்கொண்டானே
அய்யோசுவாமியென்றுஅடிபணிந்துதெண்டனிட்டு
குளைமுறித்துக்கும்பிடவேகொடியதொருசாம்புவனும்
சீருவைந்தானுருவிசினந்துமெள்ளசாம்புவனும்
மூக்குகளைத்தான்பிடித்துமுடிக்கியறுத்துவிட்டான்
வந்தவந்தவேடுறைவகையாகமூக்கரிந்தான்
விடாதேவிடாதேஎன்றுவெட்டித்துறத்தையிலே
ஆயிரம்மூக்கரிந்துசாம்புவகடவாக்குமித்துவிட்டான்
தம்பிசங்கன்வந்துதயவாகச்சாம்புவனை
விட்டுவிடும்வேடுனரையினியிருக்கவேண்டாமே
போயிப்பிழைக்கட்டும்புனல்வேடர்தானுமிப்போ
யென்றுசொல்லிச்சாம்புவனும்விலங்கியேவிட்டுவிட்டான்
குமித்ததொருமூக்கையெல்லாம்கொடியதொருசாம்புவனும்
தோரணமாய்க்கோத்தல்லவோசுடியாகசாம்புவனும்
மூக்கறையம்மனுக்குத்தோரணங்கள்கட்டினானே
சாமிதனைத்தான்பணிந்துசாம்புவனும்அப்போது
தம்பிசங்கன்முன்னாகசாம்புவனுபணிந்துநின்றான்
அத்தைபிள்ளைதன்னுடனேஅன்பானமூவர்களும்
வந்ததளத்துடனேவகையானமூவர்களும்
கொள்ளைமுதலையெல்லாம்குடுத்தேயனுப்பிவிட்டு
பச்சணுமுதலிமகள்பண்பானதங்கையரோ

முடுபல்லாக்குடனேயெடுத்துவந்ததங்கையரே
பச்சனுமுநலியவன்பாங்கான அரமனைக்கு
குடுத்தேஅனுப்பி விட்டுகுணமான தம்பிசங்கன்
தங்காளறமனைக்குநான்வந்தறப்போது
அண்ணருடன்சொல்லி அன்பாகவிற்றிருந்தார்
இப்படித்தானேயிருக்கமந்தநாளையிலே

தலையூருக்காளி வளத்தினபன்றி நெல்லிவளநாட்டில்
வந்து பயிர்களைத்தின்று அழிகிறதற்கு

மேனாட்டுவேடுவரும்வீத்திருக்நாளையிலே
மாரிமரித்துமழைமாரியில்லாததினால்
தலையூருங்காளியவன்தானிருக்கும்நாளையிலே
இட்டபயிர்விளையாமல்எல்லாஞ்சருகாகி
பூடுஞ்செடியும்பூமிகளுந்தான்வறண்டு
மழைமாரியில்லாமல்வாய்த்தபயரில்லாமல்
தலையூருக்காளிதான்வளத்தபன்றியது
எழுபதடிக்கொம்பன்யின்பமுடன்வ்ளத்தினது
தலையூருக்காளிதன்னாட்டைத்தான்கடந்து
இறையமதுசிக்காமல்வங்கியேபன்றியது
நெல்லிவளநாட்டில்நெல்வயலும்தான்தேடி
வயலில்ப்புகுந்துவாய்த்தகதிரையெல்லாம்
செந்நெல்கதிரையெல்லாம்தின்றழித்துப்பன்றியது
பொன்னருட்பூங்காவில்பூந்துபடுத்துறங்கும்
பகல்முப்பதுமாகப்படுத்துறங்கும்பன்றியது
இரவிலெழுந்துஇனியகதிரையெல்லாம்
தின்றுகறுவறுத்துத்திரும்பிவந்துபூங்காவில்
படுத்துறங்கும்வேளையிலேபண்பானபூங்காவில்

பூவெடுக்க வேதியற் வந்து பன்றியைக் கண்டது.

இப்படிப்பன்றியதுயிருக்குமந்தநாளையிலே
பூக்கொடலைக்கொண்டுநம்பியான்பூவெடுக்கப்போகையிலே
பன்றியருகில்வந்துபாந்தோடிபூவெடுத்தான்
பன்றியைக்காணான்பாப்பானும்அப்போது
அதம்பிச்சுபன்றிபாப்பான்அய்யோவெனவிழுந்தான்
குத்திக்கிளித்துகொடியநல்லபாப்பானை
குத்திக்கிளித்துப்பன்றிகொடியவயல்பூந்திடவே



பாப்பானெழுந்துபதரியுங்கேஓடிவந்து
பொன்னருடன்சொல்லிபொங்கமுடன்தானழுதான்
பன்றிவந்தவறலாறுபாப்பானும்சொல்லிடவே
பூங்காவில்நான்போயிபூப்பொரிக்கும்வேளையிலே
பூங்காவில்த்தானிருந்துபுலியுருமிநாப்போல
உறுட்டிஉறுட்டிக்குத்திஒதுக்கிச்சேபன்றியது
தவரியெழுந்துதடுமாரிஓடிவந்தேன்

பன்றியின் மேல் வேட்டைக்குப் போகிறது

என்றுரைக்கபாப்பானதுசெய்தார்பொன்னுண்டார்
அந்தச்சினமேஆனையெல்லாங்கூட்டமிட்டு
நாய்கள்பதினாயிரம்நானூராள்க்கூட்டமிட்டு
வெளியிலேவந்துவிபறமுடன்தான்கூடி
படைமுரசைமுளக்கிபாங்காகக்கூட்டமிட்டு
பூந்தோட்டம்நோக்கிப்போகுமந்தவேளையிலே
இச்சேதிகேட்டுவிளவறகில்லதங்காள்
சங்கரேபொன்னுண்டார்தமிழ்வியாஅண்ணாவி
வறத்தால்பிறந்தபொருமாகாளிபன்றியது
வெள்ளிக்குளம்பன்வெகுசயனக்காறனது
அறுபதடிக்கொம்பன்ஆனையில்முள்ளதுகான்
தியானித்துப்பார்த்துதிட்டமுடன்போய்ப்பாரு
அச்சேதிகேட்டுஆனதொருசங்கருந்தான்
அரமனைக்குஆளனுப்பி அன்பானதம்பிசங்கன்
எளானைக்கையில்யிரும்புலக்கைதான்குடுத்து
தான்சயெடுத்துதம்பிசங்கன்தான்நடந்தான்
குப்பைகிளரிகுருமுனிசித்துளிகாய்
பின்னேதொடர்ந்துபிசாசேலவந்திடுமாம்
வந்ததைக்கண்டுவகையுடனேசங்கருந்தான்
அடித்துறத்திஅகலமுடுக்கிடுவார்
முடுக்கித்துறத்திமூர்க்கமுடன்போனார்கள்
பூங்காவில்தம்பிசங்கன்போய்ப்பார்த்தாரப்போது
தாரையுங்கண்டுதம்பிசங்கனப்போது
வெள்ளிகட்டுவேலைவிதமாகத்தானெடுத்து
தானையெடுத்துத்தம்பிசங்கன்வறவே
அத்தைதபிள்ளைகூடஅன்புடனேவேலெடுத்து

சங்கரும்அத்தைபிள்ளைதாரையெடுத்துவந்தார்
தாரையெடுத்துத்தாநடந்தாறப்போது
வீரமலைச்சார்புக்குவிதமாகத்தான்போனார்
வீரமலைக்கொம்பையிலேவிதமாகப்படுத்துறங்கும்
உறங்குமந்தவேளையிலேஉபாயமாய்த்தம்பிசங்கன்
ஏழானைக்கையில்யிருப்புலக்கைதான்குடுத்து
ஏவிவிட்டான்ஆனைகளையிருப்புலக்கைதான்குடுத்து
போடுதேஆனைகளும்பொங்கமுடனப்போது
பூமிகுழியெழும்பப்போடுதேஆனைகளும்
மலைச்செல்லுக்கடிக்குதென்றுமல்லாந்துஉறங்கிடுமாம்
கொள்ளுக்காய்போட்டாப்போல்போடுதேஆனைகளும்
வீரவிளிக்கண்கள்றெண்டும்விளிச்சுமுளிக்கையிலே
ஆனையைக்கண்டுஅதம்பியேபன்றியது
மலைகள்சிலேயோடமண்டியிட்டுத்தானெழுந்து
தன்னூருதிசைநோக்கிப்போகுதேபன்றியது
மீரியேபோகுதென்றுவிட்டானேநாய்களெல்லாம்
நாய்களதுபோயிநலமாகக்குறுக்காட்டி
குறுக்காட்டும்வேளையிலேகொடியநல்லபன்றியது
சீறிச்சினந்துசெங்கண்பொறிபறக்க
முடிக்கியேகுத்தையிலேமூர்க்கமுள்ளநாய்களெல்லாம்
வாலையொடுக்கிவகையுடனேஓடையிலே
குடல்சரியக்குத்திகொம்பன்குத்தையிலே
மடிந்ததேநாய்களெல்லாம்வகையுடனேஅப்போது
மீறியேபோகுதென்றுவிசாரமுடன்தான்அடந்தான்
மானம்பார்த்துவனையிபிம்மங்கைநல்லாள்சித்துளிநாய்
மீறியேபோகுதென்றுமின்னல்ப்போலேகுதித்து
ஆகம்பறந்தாப்போல்கடிகியங்கேபோயிடுமாம்
முடிக்கிக்குறுக்காட்டிமூர்க்கமுடன்மரித்ததுவே
மரித்ததைக்கண்டுவெகுகோபந்தானாகி
பார்க்குமந்தவேளையிலேபதுங்கிப்பிடித்தது
பின்காலைப்பற்றிபிடித்தேயிழுத்திடுமாம்
யிழுத்தவுடன்பன்றிவங்கிமுகம்வாடி
கேட்டந்தசத்தமதைகிருபையுடன்தம்பிசங்கன்
ஓட்டமாயோடிவந்துஒருநொடியில்மூவர்களும்



கண்டந்தபன்றியைகடியதொருவேல்வாங்கி
குத்தினார்பன்றிதனைகுலவையிட்டுஅப்போது
அண்டங்கள்கிடுகிடுங்கவேயொடஅலறியேபன்றியது
தலையூருக்காளிகையமென்றுவிழுந்ததுவே
தலையூருக்காளிதன்செவியிலப்போது
செப்புநாருசம்செவியிலிடித்தாப்போல்
உருக்குநாருசம்உருக்கிவிட்டபாவினைபோல்
கேட்டுமந்தக்காளிகிலேசமெத்தத்தானாகி
மயங்கியேதானேவண்மையுடன்தானிருந்தான்
பன்றியைக்குத்திப்பரிவாகத்தானெடுத்து

## பன்றியைக் கொண்டுவந்து ஊற்காரர்களுக்கு பங்கிட்டுக் கொடுப்பது.

ஊரிக்குக்குறுப்பாட்டிகனபடையுங்கூட்டமிட்டு
பல்லாக்குமேலேபரிவுடனேசங்கருந்தான்
சித்துளிநாய்க்குட்டியைசிறப்புடனேதானும்வைத்து
பல்லாக்குத்தானும்பரிவுடனேகடத்தியதே
சிற்றூலைப்பட்டணமேசீக்கிரமேவந்தார்கள்
வந்துமெள்ளப்பன்றியைவகையுடனேதானிறக்கி
வாருநல்லசனதயும்வகையுடனேதானிருந்து
பதிகாயிரங்கூறுபாருங்குடனேதான்போட்டு
வீடுகள்தப்பாமல்விதமாகத்தான்குடுத்து
இப்படியேதானேயிவர்களிருக்கையிலே

## இனித் தட்டான் காவியம்.

### தலையூருக்காளி படைகூட்டல்.

தலையூருக்காளிதன்படையைக்கூட்டமிட்டு
மந்திரிதளக்கருத்தரையும்வகையுடனேகூட்டமிட்டு
பன்றியைக்குத்தியபாவியைத்தான்கேட்டு
தானாபதிகள்தளக்கருத்தரையுங்கூட்டமிட்டு
வேடுபடையைமெத்தவேகூட்டமிட்டு
செல்விவளநாட்டைக்கொள்ளையிடவேணுமென்று
சிற்றூலைப்பட்டணத்தைசேறவேகொள்ளையிட
போறதுக்குப்பயணமென்னவென்றுகேட்டானும்
இருபத்திநாலுநாட்டாருமெல்லவரும்தான்கூடி

வெள்ளாளனைசெயிக்கவேணுமென்றுபேசயிலே
திருக்கினைத்துத்தட்டானுந்திகைத்துவழிவருவனல்லோ
கட்டுமணிவித்துத்தட்டான்கடைவீதிபோவனல்லோ
அப்பத்தளக்கருத்தர்அன்புடனேசொல்வார்கள்
போறதொறுதட்டானைபொங்கமுடன்தானழைத்தான்
செம்பநெனுந்தட்டானைசீக்கிரமாய்த்தானழைத்து
கொடியநல்லதட்டானுங்கூப்பிடவேவந்துவிட்டான்
செம்பகுலஆசாரிதிருக்கினைத்துத்தட்டானே
ஏனையாசுவாமிஎன்னையழைத்தகாரியமென்
செம்பத்தட்டான்கேழ்க்கசெப்புவான்காளியவன்
நம்மளுடபன்றிதனைக்கொன்றானேநம்பிசங்கன்
நாடுபடைகூடிநாமளவன்நாட்டையெல்லாம்
கொள்ளையிட்டுஅவனைக்கொண்டுவரவேணும்
இதுக்குஎன்னஉபாயம்சொல்லுமடாஆசாரி
அப்படியேயானால்அடியேனும்சொல்லுகிறேன்
சிப்பசாஸ்த்திரத்தைசிக்கெனவேதான்பார்த்தேன்
பார்த்தேன்பலகாலும்பலசாஸ்திரம்பொய்யாது
பொய்யாதுநாட்டாரேபுஸ்தகத்திலுள்ளபடி
பொன்னர்சங்கரிருவரையும்போர்க்களத்தில்வெல்வருண்டோ
பொன்னசெட்டானைப்பிலத்துடையான்பேர்போனசேவகன்காண்
தம்பிசங்கனேழானைப்பிலத்துடையான்ரணகளத்துவன்னியன்காண்
கடிநாயுஞ்சங்கிலியுங்காவலுமுள்ளவர்காண்
அவர்களைச்செயிக்கஉங்களாலாகாது
அரனார்செயப்பார்காண்யாவருமெதிரில்நில்லார்
உங்கள்கூட்டமேகண்டால்ஒருநொடியில்கருவறுப்பார்
வேட்டுவரேநீங்கள்வீடுபோய்ச்சேருமென்றான்
சதிகாரத்தட்டானேஎங்களைஊதாசினமாய்ச்சொன்னாயே
வேடுகருவுள்ளதெல்லாம்வெட்டுண்டுசெத்தாலும்
திரும்பியேஓடுவதுண்டோதிருட்டுநல்லதட்டானே
செத்தாலும்செத்திடுவோம்சிவலோகம்சேர்ந்திடுவோம்
இந்தவகைதுணிந்தீரேயினிக்கேளும்நாட்டாரே
பொன்னர்சங்கரிருவரையும்வேருகூறுக்கவல்லோன்
பொன்னுசிபன்னிபொன்னர்கிட்டத்தான்போயி



சூதுமாதுபண்ணிசத்தியத்துக்குள்ளாக்கி
வாரேநாட்டாரேவலுவுடனேயிப்போது
எனக்கென்னஉச்சிதங்கள்செய்திடுவீர்நாட்டாரே
கோவிலனைக்கொன்றுகொடியகளுப்போட்டவனே
மதுரைப்பாண்டியனைகுடிகெடுத்தமாபாவிநீயல்லவோ
பொன்னரிருவரையும்பிரித்துநீவந்தாயானால்
திருக்கணமும்உன்னுதென்றுசெப்புப்பட்டயம்தந்திடுவோம்
ஊழியுள்ளகாலமட்டும்உன்னுடையகாணியென்று
வழிப்பயணம்போவதற்குவழிச்சிலவுதாருமென்றான்
போனதொருகாரியந்தான்பார்த்துநீவென்றுவந்தால்
வேணுமென்றஉடுகரையும்வெகுமதியும்தந்திடுறோம்
செம்பகுலஆசாரிசீக்கிரமாய்த்தானெழுந்து
போய்வாறேநாட்டாரேபொன்னருடபக்கலுக்கு
என்றுசொல்லிசெப்பலும்தன்னிருப்பிடமேபோவனல்லோ
மனையிடத்தேசென்றதற்பின்மாதாவைதானழைத்தான்
என்னையழைத்ததென்னஎன்மகனேசெம்மாசீ
உன்னையழைத்ததுதான்ஒருநொடியில்கேளுமென்றான்
சிப்பநல்லசாஸ்த்திரத்தைசிருகநான்பார்த்தேன்
பார்த்தேன்பலசாஸ்த்திரத்தைபலதொன்றுமில்லையம்மா
என்னையிழந்தையடிஎனக்குயிருப்பிடமும்வேறுச்சு
உன்னையிழந்துநான்ஊதாரிப்பிணமானேன்
என்தலைவிதிப்படிதான்சடுதியிலேவந்ததம்மா
வெள்ளாழன்தன்கயிலேஎழுதிவிட்டான்விருமாவும்
நாளுங்கிளமையிலேநல்லதொருதிங்களிலே
எனக்குமரணமுமாச்சுதுமாதாவேஎன்தாயே
வேட்டுவர்கள்தான்கூட்டிவெள்ளாளன்பக்கலுக்கு
போய்வாருமென்றுபொருந்திவிடைகொடுத்தார்
திருக்குணமூன்காணியென்றுசெப்புப்பட்டையமுதந்தார்கள்
காலமேபோகவேணும்கட்டுச்சோறுகட்டுமென்றான்
என்னவினையாலேசெம்மாஇந்தநினைவானாய்
முன்கொன்றகுலையோகொடுவினையுமுண்டோடா
பேய்போலேநின்றுதட்டாத்திபுலம்பியேகையமைந்தாள்
நாடுநகரிருக்கமகனேநடுச்சாவிபோனதென்ன
பாடுபளிசெய்தவன்போல்படுகுலைகள்வந்ததென்ன

பொன்னர்கையில்வதையாகவந்தாயோஎன்மகனே
போற்றிவளத்தேனேபொன்னர்கையில்வதையாக
பெத்தவ்யிரெரியுதடாபிலன்குறைந்துங்குதடா
அற்றைப்பிளப்புஅனேவந்திகோலமுமாய்
மணியாட்டிபிள்ளையைமறந்துவிட்டாய்செம்பகுலம்
பிள்ளைமுகம்பாராமல்பிரித்தவளுறேநான்
எனமானதட்டாரும்எல்லவருந்நான்கேட்டு
கண்டதில்லைஒருகாலத்திலும்யிப்பயிவனிடத்தில்கண்டோமே
பாதிகாள்வாழ்ந்ததுவும்யிப்பபடுகுலைகளானதுவும்
உனக்குவருவதுசொன்னாயேஉனக்கிணையானபேருமில்லை
பொன்னர்கையில்வதையாலேபூசைவறம்பெறலாமே
சங்கர்கையில்வதையாலேசவுரியமுமுண்டாமே
வெள்ளாளன்கொன்றலெவீரசொர்க்கமுண்டுங்காண்

தட்டான்மறநளிகடைந்து பொன்முலாம்பூசி நாட்டார்
களிடம் கொண்டுவந்து காண்பித்தல்.

மாவுலிங்கமறத்தைவெட்டிமறநாளிதான்கடைந்து
வெள்ளிகட்டுகட்டிவேலையிட்டுத்தான்கடைந்து
அசமாத்துப்பொன்னெடுத்துஅதின்மேலேதான்பூசி
பூச்சுவகையாலேதட்டான்பொருதிமிகமுடித்தான்
பித்தாளைத்தணியுருக்கிபின்னல்முகந்தான்போட்டு
கனமாய்யிட்டுத்தட்டான்கடுகச்சமைத்தானே
பெண்பாவக்கொள்ளையிட்டுப்பிறப்பட்டான்தட்டானும்
செப்புக்குட்டந்தனிலேசெப்பமாய்த்தானடைத்தான்
பட்டுப்புடவையிலேபரிவுடனேசுத்திக்கொண்டான்
நாட்டாரிருக்குமந்தநடுச்சபைதனுள்புகுந்தான்
நான்கொண்டுபோரகருவலத்தைநன்றாகப்பாருமென்றான்
விலைமதிக்கவொண்ணாதபொன்னாழிபண்ணினது
என்கையிலுள்ளமுதல்களும்என்மனைகளும்அடவுவைத்து
மணமனையாளுள்ளதெல்லாம்மணியாட்டிபிள்ளைகளும்
ஒத்திவைத்துப்பொன்வாங்கிஒருநொடியில்சமைத்தநய்யா
பாருங்கோளென்றுபட்டையுந்திறந்துவைத்தான்
பொய்வார்த்தையில்லைதட்டான்பொன்னாழிபண்ணினது
விலைகளைச்சொல்லுமென்றுவேட்டுவருங்கேக்கையிலே



ஆயிரம்பொன்னென்றுஅடவுடனேசொல்லியல்லோ
ஒழியாமல்சொன்னேனைளூழிநாட்டாரே
நாட்டுக்குநூறுபொன்னாய்நல்வரிசைதானும்வைத்து
இருபத்துநாலுநாட்டாரும்யின்பமாய்த்தான்குடுத்தார்
முடிப்பையெடுத்தல்லோமுடிமேலேதானுவைத்து
திருக்குணமுங்காணியென்றுசெப்பமுடன்குடுத்தார்கள்
கையெழுத்துத்தானுமிட்டுகோணியாச்சியுன்னுதென்றூர்
பிழைத்தேனேயெனறுசொல்லிபோர்போனதட்டானும்
சோகத்தாநடந்துநெல்லிவளநாட்டில்
தனம்பெருத்தபொன்னரையும்தனித்துவழிகொண்டுபோறேன்
மனம்பொருந்தவார்த்தைசொல்லிஒருவழக்குகளுமுண்டாக்கி
இனம்பிரிந்தமான்போலேயிருவரையும்பிரிக்கவல்லேன்
நீங்களொன்றுக்குமஞ்சாதீர்திண்ணமாய்ச்சொல்லுகிறேன்
என்றுஎழுந்திருந்துஎல்லவரைக்கையமுத்தி
நடந்தானேதட்டானும்யிடம்பெரியமனையிடத்தே
வெட்டிவிருதுபெற்றவர்போல்வீம்புகளும்தான்பேசி
வேட்டுவர்களெல்லாம்என்வெள்ளாட்டிக்கொவ்வுமென்று
ஊளியுள்ளகாலமெல்லாம்உண்டிருக்கததேடிவந்தேன்
கொண்டுவந்தபொன்னையெல்லாம்தாயாரிடங்கொடுத்து
போறனென்றுசொல்லிபுரப்பட்டான்தட்டானும்
பொன்னாழிதானெடுத்துபுறப்பட்டான்தட்டானும்
சிற்றூலைப்பட்டணத்தைத்திசைநோக்கித்தட்டானும்
வாறூணும்ஆசாரிவழியிலொருவனுமாய்
சிற்றூலைப்பட்டணமேவந்தானேஆசாரி
செம்பகுலஆசாரிதிருக்குணத்துத்தட்டானும்
பொழுதிறங்கும்வேளையிலேபொன்னாழிதானுங்கொண்டு
பொன்னர்கொலுவிருக்கும்புகழ்பெரியமண்டபத்தில்
எந்திழைபாள்நல்லதங்காளிதமுடனேயிருக்கையிலே
கொலுவிருக்கும்வேளையிலேகொண்டுவந்தான்தட்டானும்
மதிக்கவேவந்துவகையாகத்தட்டானும்
வாடாநீஆசாரியெங்கேவந்தாய்பார்தகனே
தட்டானும்கேட்டுதானுரைப்பாநப்போது
கரிக்காலச்சோழன்கனகமுடிவேந்தனுக்கு
பொன்னாழிபண்ணிக்கொண்டுவந்தேனேஆண்டவனே

உரையூருப்பட்டணந்தானென்றுசொன்னான்தட்டானும்
பொன்னருங்கண்டுஎங்கேவந்தாயாசாரி
அப்பவேஆசாரிஅன்புடனேக்கைமுகஞ்சான்
ஆண்டவனைக்கைமுகஞ்சுஆசாரிஎன்னசொல்வான்
ஆண்டவனேநீர்கேளும்நானன்புடனேசொல்லுகுறேன்
கரிக்காலச்சோழன்காரணமாயெனையழைத்து
பொன்னாழிவேணுமென்றுபொன்மூவாயிரங்குடுத்தார்
என்கையிலேதான்குடுத்துயின்பமுடன்தானனுப்ப
வாங்கியேநானும்வகையாதென்மதுரை
திருணவல்லிமட்டும்சீக்கிரமேநான்போயி
தங்கத்தைவாங்கித்தான்சமைத்துப்பொன்னாழி
யிங்கேவறநமக்குயிறங்குபெளுதாச்சுதய்யா
போகப்பொளுதில்லைபொன்னண்டாரேன்சுவாமி
சமைத்துவந்தபொன்னாழிதயவுடனேதானெடுத்து
பொன்னண்டார்கையில்புகளுடனேதானளித்து
தட்டானும்அப்போதுதயவுடனேஎன்னசொல்வான்
யிறவுமட்டும்பொன்னாழியிருக்கட்டும்ஆண்டவனே
என்றுசொல்லித்தட்டான்யியபுடனேகையில்குடுத்தான்
வாங்கியேபொன்னண்டார்வகையுடனேதான்பார்த்து
தங்காளறமனையில்தயவுடனேவச்சிறென்றார்
தங்காளும்பார்த்துதயவுடனேஎன்னசொல்வாள்
மாறாட்டம்பண்ணவந்ததொருபொன்னாழி
வந்தகதையண்ணாவிவாய்மறந்துபேசாதே
சதிசெய்யப்பொன்னாழிதட்டானுங்கொண்டுவந்தான்
வெட்டிவிருந்திடுகள்நம்மவேட்டைக்காறவீறருக்கு
சீமைதனைப்பாளாக்கச்செம்பத்தட்டான்கொண்டுவந்தான்
உங்கள்ஊருபறிபோகஉறவாகத்தட்டானும்
வந்தவிபறமிதுவகையானஅண்ணாவி
கேடுவரும்போதுகெடுமதிகள்தோணுது
இப்பவெருநிறனுயிறயவனாகறபினையோ
என்வார்த்தைகேளாமல்வளிதிங்கள்செய்யாதே
உத்தமாபத்தினியேஉடப்பிறப்பேதங்கையரே
நம்பியேதட்டானும்நம்மஅரமனையில்வந்தவனை
கொத்தார்குழலாரேஅவனைகொன்னுகுலைசெய்வாரோ



அந்தரமாய்வந்தவனைஅடிப்பார்களோ
அடைக்கலமாய்வந்தவனைஅனியாயஞ்செய்வதுண்டோ
பெண்புத்தியாலேபெருமாள்பிழைபோனார்
சீதையுடசொல்க்கேட்டுஸ்ரீராமர்செம்மானின்பின்போனார்
மாதருடசொல்க்கேட்டுமாயமான்பின்போனார்
லட்சுமியாள்சொல்க்கேட்டுஇலட்சுமணர்பின்போனார்
அந்தக்கதைபோலேத்தட்டானைஆக்கினையும்செய்வார்களோ
இந்தமண்ணுள்ளமட்டும்வருமேஅபகீர்த்தி
நம்மஆதிக்கப்போனாலும்ஆபகீர்த்தியாகாது
நாடுபறிபோனாலும்நம்மஅடைக்கலமாய்வந்தவனை
அடைக்கலமாய்வந்தவனைஅளிவுசெய்யப்போகாது
என்பிறவிதங்கையர்க்குயினிப்பிருதிசொல்லக்கூடாது
என்பிறவிதங்காநீஎழாந்தளமேறு
போமென்றசொற்கேட்டுபொற்கொடியாளேதுசொல்வாள்
உன்விதியும்அவன்விதியும்உள்ளபடியாகுமென்றாள்
என்சொல்க்கேழ்ப்பீரோஎன்பிறவிஅண்ணாவி
உனக்குச்செம்மச்சனியனதுசிறசிலிருந்தாக்கால்
நம்முடையசொல்தனையும்கேழ்ப்பீரோஅண்ணாவி
குருகுலைதான்குலையநிருபமதுவந்திருந்தால்
விதியின்விதிப்படியோவிருமாவின்கற்பனையோ
என்றுசொல்லிதங்காளும்எழுந்திருந்தாளப்போது
எழாந்தளம்புகந்தாள்எரும்பேரமண்டபத்தே
சீறிவரும்நாகம்போலேசினந்துஎழுந்திருந்தாள்
பஞ்சணைமெத்தையிலேபாதவித்துத்தானிருந்தாள்
கருவலமாய்க்கொண்டுவந்தகடியபொன்னாழியைத்தான்
தங்காளரமனையில்தயவாகவையுமென்றார்
அரமனையைத்திறந்தல்லவோஅன்பாகவைத்தார்கள்
உள்க்கதவைத்தாளுமிட்டுபிறக்கதவைதாள்சாற்றி
தாதியரைநம்பாமல்தங்களும்தாளுப்பூட்டி
தட்டானைத்தானழைத்துதயவாகக்கூட்டிவந்து
அன்பாயிலைபோட்டுஅசனமதுதானுமிட்டார்
உண்ணுமென்றுசொல்லிஉபசரித்தார்தட்டானை
அசனஞ்செய்துகையலம்பிதட்டான்ஆலித்தெழுந்திருந்து
நம்மகைவசமேஆச்சுதென்றுகண்டானேதட்டானும்

காருளர்பெருமையெல்லாங்கண்ணுளர்தம்மாலே
என்றுபெரியோர்கள்சொல்படியுமெய்யாச்சு
மனந்தனிலேதானினைந்துஇருந்தானேதட்டானும்
அரிபிளவும்வெள்ளிலையும்அன்புடனேகுடுத்தார்கள்
சித்திரைக்கூடத்திலேதட்டானைநித்திரைபோவென்றார்கள்
பொய்புறக்கமாகப்போரானேதட்டானும்
நாலாஞ்சாமந்தனிலேதட்டான்நல்லுறக்கந்தாந்தெளிந்து
கோழியுங்கூவகோட்டைவாசல்தான்திறந்தார்
ஆத்தாங்கரைக்குப்போய்தட்டான்அன்பாகச்சுத்தம்பண்ணி
மூந்தானிகொண்டுமுகத்துநீர்தான்துடைத்து,
காலுமுகஞ்சுத்திபண்ணிகடிகியேஓடிவந்தான்

தட்டான் கிருக்கண்டனென்று பொன்னருடன் சொல்லல்.

பொன்னர்கொலுவில்வந்துபொங்கமுடன்தெண்டனிட்டு
தெண்டனிட்டுக்கைமுகஞ்சுழுந்தெரிசினைகள்கண்டனென்றான்
ஆசாரக்கூடத்திலேநான்அசந்துநித்திரைசெய்கயிலே
நான்கண்டஆதேசம்அடைக்கலமேபோகக்கண்டேன்
என்னைஅடித்துப்பிரித்துஅனியாயஞ்செய்யக்கண்டேன்
கரிக்காலச்சோழனுக்குநான்கள்ளனுமேஆகக்கண்டேன்
விலைமதிக்காப்பொன்னாளிவேறுபரிபோகக்கண்டேன்
கரிக்காச்சோழனையுங்கண்டுதெண்டனிடவேணும்
நான்வைத்தஅடைக்கலத்தைத்தாருமென்றான்தட்டானும்
நான்ஒப்பிவைத்தபொன்னாளிஒளியாமல்தாருமென்றான்
பொறுமையுடன்கேள்க்கப்புகலுவார்பொன்னண்டார்
தட்டான்சதிகாறனென்றுதங்காள்சொன்னதுமெய்யாச்சு
மெய்யாச்சுதென்றுமெத்தனவேநாணந்தார்
பொய்வார்த்தையல்லபொற்கொடியாள்சொன்னகதை
திக்கெனவேபொன்னண்டார்தங்காள்முன்ஓடிவந்தார்
என்பிறவிதங்காளேயெழுப்பியேபொன்னருந்தான்
தங்காளைத்தானெழுப்பத்தவிரியேதானெழுந்தாள்
அன்னஊஞ்சல்விட்டிறங்கிஆனபிறவியரும்
தாளைத்திறந்துதங்காளுடக்கைக்கயிலே
வைத்தஅடைக்கலத்தைத்தாருமம்மாதங்கையரே
அன்னஊஞ்சல்விட்டிறங்கிஅடைக்கலத்தானெடுக்க
அக்கினிச்சுடர்ப்படவேமறநாழியாச்சுது



அண்ணாவிதன்கையிலேதங்காளம்புடனேதான்குடுத்தாள்
தன்கையிலேவாங்கிபொன்னர்தட்டான்கையில்குடுத்தார்

மறநாழியைவாங்கிதட்டான்கல்லில்உடை
த்துவிட்டுபொன்னரைசத்தியம்செய்யச்சொல்லல்

இருகையினால்வாங்கிதட்டான்வங்கிமுகம்வாடி
படியானகாளிதனைப்பழிகாதட்டானும்
கல்த்தூணில்த்தானடித்தான்கருவளிவான்தட்டானும்
முகப்புகல்லசாவடியில்முட்டிக்கொண்டான்தட்டானும்
மண்மேலேபிறண்டழுதுமார்மேலேதானறைந்து
தன்முகத்திலறைந்துகொண்டுதயாபரனேதஞ்சமென்று
தங்கத்தினால்ச்சமைத்ததாழ்விலாப்பொன்னாழி
முத்துவெற்றினத்தால்முடிவைத்தபொன்னாழி
கோமேதகத்தாலேகுளிர்ந்துவைத்தப்பொன்னாழி
பொற்கம்பியாலேபொருந்திவைத்தபொன்னாழி
விலைமதிக்கப்பொன்னாழிவிளக்கமுடனேமுடித்து
கரிக்காலச்சோழனுக்குகாணிக்கையாக்கொண்டுவந்தேன்
மாநாழிதானெடுத்துகொடுத்தீரேஆண்டவரே
நான்கண்டஆதேசம்அடியேனுக்குப்பலித்துதய்யா
என்னுடையகட்டுமில்லையினிகட்டுத்தானுமில்லை
வைத்தஅடைக்கலத்தைவயரெரியக்கொண்டீரே
என்னையடித்துப்பிரித்தீரேஅனியாயஞ்செய்தீரே
என்றுசொல்லிததட்டான்எடுத்தானேஓட்டமுந்தான்
ஓடுகிறதட்டானைபொன்னர்ஒருநொடியில்த்தானழைத்து
நீவைத்தஅடைக்கலத்தைவயரெரியக்கொண்டதில்லை
உனக்கென்னநின்னயங்கள்செய்துதரவேணும்
என்றுசொல்லத்தட்டான்யிருகோணம்பூரிதமாய்
வெள்ளாங்குளத்தடியில்லுமக்குநின்னயங்கள்செய்யவேணும்
என்றுசொல்லத்தட்டான்பொன்னருஞ்சமமதிச்சு
சத்தியமென்றசத்தம்தம்பிசங்கர்தான்கேட்டு
பொட்டிமகன்தட்டானும்பிழைமோசம்செய்தானே
என்றுதான்தம்பிசங்கனெரிபறக்கக்கோபமதாய்
வெட்டுவேன்தட்டானைவீரவாள்தன்னாலே
பிறங்கிகத்திபெறியகத்திதானெடுக்க
தட்டான்பதரிதடுமாறியேவிழுந்தான்

விழுந்துயெழுந்திரிந்து விறையவேதானோடி
பொன்னர் இடுப்பைக்கட்டினான் தட்டானும்
தம்பிசங்கன் அப்போது தாண்டிக்குதிகுதிச்சு
கண்கள்பொறிபறக்ககடுங்கோபந்தானாகி
வெட்டுகிறேன் தட்டானைவிட்டுவிடு அண்ணாவி
என்றுசொல்லி தம்பிசங்கன் எரிட்டுத்தான் பார்க்க
காலோடேதான்களிவான் கருவளிவான் தட்டானும்
பொன்னருங்கையமுத்திபோர்வீமர் தம்பிசங்கா
கோபங்கொடியவனைகோனாட்டுப்பரிகுலா
கரிக்காலச்சோழருக்குப்போரகருவலத்தை
நாமளடித்துப்பரித்தமென்றுஅபகீர்த்திவந்துவிடும்
வெட்டிப்பறித்தமென்றுவீண்வார்த்தைவந்துவிடும்
அவன்கேட்டதொருநின்னயங்கள்செய்துதரவேணும்
நாளைக்கிழமைநல்லதொருதிங்களிலே
நின்னயங்கள்செய்துதாறேன்நீபிக்காதேஆசாரி
திங்கக்கிழமைநாள்திரும்பிவரச்சொன்னார்காண்
தம்பிசங்கன்நிற்கிறதைக்கண்டதந்தட்டானும்
கால்நடுங்கிக்கைநடுங்கிவாய்போற்றித்தட்டானும்
அடியேன்நம்பிவருவேனோஆண்டவனேகுமியென்றான்
மன்னோருஞ்சொல்வதில்லைநாங்கள்பொன்னோருஞ்சொல்வதில்லை
சொன்னபடிசெய்குவோம்சோமவாரத்தில்வாருமென்றார்
அஞ்சிப்பயந்துதட்டான்அடிவணங்கியேதுசொல்வான்
கோனாட்டுக்கொற்றவனேகுண்ணுடையான்தன்மகனே
வளநாடாளும்வளநாட்டுக்கொற்றவனே
போருக்குக்காருமுர்புகளுக்குத்தன்மருந்தான்
வார்த்தைக்குக்காருமுன்வளக்குக்குத்தன்மதுரை
பூவிரண்டுபூத்தாலும்நாவிரண்டுபேசாதான்
நம்பிவருவேனோசுவாமிநல்லதொருதிங்களிலே
எரிட்டுப்பார்க்கததட்டான்எடுத்தானேஓட்டமுந்தான்
திரும்பிமுகம்பார்த்துயெடுத்தானேஓட்டமுந்தான்

## தட்டான் பொன்னரை சத்தியத்துக்கு உள்படுத்தி ஊருக்கு வருகிறது.

போனானேதட்டானும்பொன்னரைக்கைவசமாக்கி
புலிவாயிலகப்பட்டபுள்ளிமான்தானதுபோல்



மான்பாருஞ்சேவல்மான்கடவுதான்கடந்து
மேல்திசைநோக்கிஓடுகிறான்தட்டானும்
வருகுறான்தட்டான்முன்வாரவளிதனிலே
எழுந்துமெல்லெபொதிபோட்டுசெட்டிமாரெதாக்கவருகையிலே
தட்டானைக்கண்டெருதுபொதிதவரிவிசினதே
வாருமடாஆசாரிபொதியெடுக்கவேணுமினி
பொதியெடுக்குஞ்செட்டிமாரேன்பொதியெடுக்கவல்லவனோ
யெருதுபிடியுமென்றுதட்டான்கையில்குடுக்க
நெடுங்கயிற்றைப்பிடித்துத்தட்டான்நிலமரம்போல்நின்றானே
நின்றதொருதட்டானைஎருதுநிணவரியப்பாய்ந்ததுவே
அடிவயற்றில்காயம்பட்டுஅழறிவிழுந்தானே
விழுந்ததொருதட்டான்வெருவாயெடுத்தாப்போல்
குத்தியேபாயலேகூவென்றான்தட்டானும்
அய்யய்யோசெட்டிமாரேஎருத்தைப்பிடியுங்கடா
பிணிவெல்லயென்வேனையோகுடாசெட்டிமாறே
செட்டிமாரோடிப்பிடித்தாரெருத்தையப்போ
உருண்டுகிடந்துதட்டான்உட்கார்ந்துயெழுந்திருந்து
பூண்டவிதிப்படியோயிதுபொன்னரிட்டவாய்ச்சதியோ
கருவளிவான்சொல்க்கேட்டுகடந்துவந்தவிதிப்படியோ
வழியில்ச்சனியன்நமக்குவந்துபலித்துதென்று
மண்ணில்ப்பிறண்டுந்தட்டான்மெய்நொந்துதவித்துப்பின்பு
தடவியெழுந்திருந்துதன்ஊர்திசைநோக்கி
சத்தியத்துக்குள்ளானாய்பொன்னர்சங்கரென்றுசொல்லி
குருஞ்சிரிப்புச்சிரித்துக்கொண்டானேதட்டானும்
நாடுகாணிதான்கடந்துநாட்டார்சபையில்வந்து
வந்ததொருதட்டானைநாட்டார்வகுப்புடனேதானழைத்து
சிந்தைமிகநொந்தாப்போல்சிகப்புந்திரேகம்வெதென்றார்
மாருகிழிந்தாப்போல்மார்பிலுதிரமென்ன
வாருமய்யாநாட்டாரேவந்தகதைசொல்லுகுறேன்
பத்தியுள்ளபொன்னரையும்பறவசமேசெய்துவந்தேன்
சத்தியுள்ளபொன்னரையும்சத்தியத்துக்குள்படுத்தி
காலேழுதினம்நல்லதிங்கக்கிழமையிலே
திங்கக்கிழமைநாள்திரும்பிவரச்சொன்னார்காண்

சிங்கத்தின்கையில்திரளானைபட்டாப்போல்
பங்கப்படுத்திவந்தேன்பறவசமேசெய்துவந்தேன்
ஊரைவிட்டுக்காதவழிநானோடிவருகையிலே
புலிவந்தெதுத்துபொட்டெனவேகைபோட்டேன்
கழுத்திலேகைபோட்டுகெடிகியிறுக்கையிலே
காலையுதறியதுயென்மார்பைகிழித்துதய்யா
பொட்டெனவேவீசிவிட்டேன்போய்விழுந்துபுலியுமது
விழுந்தபுலியதுவுமிறண்டோடிப்போனதுவே
என்றுசொல்வானாசாரிஅதுசொல்வார்நாட்டார்கள்
பொய்யென்பார்சிலபேர்கள்மெய்யென்பார்சிலபேர்கள்
ஆகட்டும்ஆசாரிஅந்தவழிகாட்டுமென்றார்
காட்டுமென்றசொல்க்கேட்டுகாதலிவான்தட்டானும்
கண்ணீர்தளும்பிடவேகண்டுமெள்ளப்பொன்னுண்டார்
ஒக்கமடிந்தீரோஒருவருங்காணாமல்
நான்வந்துகூடுமுன்னேநாடியிங்கேவருவார்களோ
ஊழிவிதிப்படியோஒருவரைச்சொல்லப்போகாது
கண்டுநினைந்துமெள்ளகடுங்கோபந்தானுகி
தங்காள்பிறவிதனைதனித்துவிட்டுயிங்கேவந்தோம்
சலன்செய்வினைபறிப்போரார்களோ
பினிமேலுநாமிருந்தால்இவ்வுலகுக்கேற்காது
வென்றுமனதிலெண்ணியிறந்துமடிவமென்று
கன்னுடிச்சனையருகில்க்கைவாளைத்தானிருத்தி

பொன்னர் தன் வாளாலே மடிந்தது.

சல்பானேதஞ்சமென்றனத்திசையுந்தானினைந்து
ஈங்காளுர்தஞ்சமென்றுஅடிபணிந்துதெண்டனிட்டு
மாயன்பெருமாளேமலர்த்தூவித்தான்தொழுது
எறுமயில்வாகனனையின்பமுடன்தானினைந்து
பருசையுந்தோல்போட்டுபாங்கானபொன்னருந்தான்
மண்டியிட்டபாவிலையாய்வாள்மேலேதான்விழுந்தார்
பிரத்துடித்தாரேசெல்லவருந்தானுமங்கே

இனி சுல்லங்காயி படுகளம் தேடிப்போற காரியம்.



அண்ணனைக்காணுமென்றுஅரியபெரியவரும்
இன்னம்வரவில்லையென்றுயேங்கிமுகம்வாடி
அண்ணர்இருவர்அத்தைபிள்ளைகளும்வார்களும்
வாக்காணுமென்றுசொல்லிதங்காள்வாடிமனதுகலங்கி
தங்காள்புலம்பியங்கேதங்களண்ணனைக்காணுமல்
அன்னஊஞ்சல்விட்டிறங்கிஅவள்பதறித்தானெழுந்து
வேடுபடைபொருதிவ்வடமலையடிவாரம்
நாடுபடைபொருதநாகமலையவ்வனத்தில்
மடிந்தகளந்தானறியவாரேனேபத்தினியாள்
படைபொருதிவென்றநிலைபதறியுடன்தான்தேடி
ஏழாந்தளமும்தங்கள்பொதும்போமண்டபமும்
எட்டாந்தளமும்பெரியமாளிகையும்
பதினாந்தளமும்பந்தடிக்குங்கூடங்களும்
பந்தடிக்குங்கூடங்களும்பளிங்குமாமண்டபமும்
சாந்தல்த்தரைமெழுகித்தானிருக்குமாளிகையும்
குத்துவிளக்கெரியுந்துமந்தால்க்கோலமிட்டு
தூண்டாவிளக்கெரியுமேகாளிமார்பந்தடிக்க
காலைவிளக்கெரியுங்கவரிகுஞ்சம்பரிமாறும்
தூணுக்குத்தூணுகட்டுமுன்னைக்குஞ்சநிரைய
வெள்ளிவிளக்கெரியும்வெடிமின்துலக்கமிடும்
பஞ்சவர்ணக்கிளிகள்பறந்துவிளையாடும்
மாணிக்கத்தால்துலக்கமிட்டுமயிலிருந்துகூத்தாடும்
அன்னக்கிளியாடிஆகாசம்பந்தெரிஞ்சான்
பந்துதவரியிங்கேபஞ்சணைமேல்விழுந்திடுமாம்
எடுத்துப்பந்தெவரிச்சென்றுவமாரிநதங்காளும்
மாளிகையில்தானிருக்கும்மங்கைநல்லாளதிலே
தோழியரேத்தானழைத்துதயாமெல்லாஞ்சொல்லலுற்றுள்
தோழியரேத்தானழைத்துதயாமெல்லாஞ்சொல்லலுற்றாள்
துயரம்சொல்லியம்மென்றிருக்கச்சேர்ந்துவருந்திதனைதான்
அப்போமெய்புறக்கந்தானுகிமேபேணிபெல்லாம்வைவட்டு
பொய்யுறக்கமாகபோராளேமெத்தையிலே
ஆதேசங்கண்டல்லவோஅலரியங்கேதானெழுந்து
மாதுதுரோபதையாள்வந்தவிதிசொன்னாப்போல்
கன்னியிளமான்போலேதங்காள்கலங்கியேதானெழுந்து
அன்னஊஞ்சல்விட்டிறங்கிஆதேசங்கண்டேனென்றுள்
வன்னக்கிளிபோலேதங்காள்வாய்திறந்துயென்னசொல்வாள்
பாரதங்கள்போதுயிற்றம்பதிகெட்டுநாளையிலே
நார்தமுனியுரைத்தநடந்தகதைபோலே

ஏவுதுபள்ளிடதுஇருப்பிடங்களில்லையென்று
தாவுமாம்பள்ளிதரிப்பிடங்களில்லையென்று
கீழிலைப்பல்லியது கிக்கென்றுசொல்லுகுது
பாள்மூலைப்பல்லியதுபக்கென்றுசொல்லுகுது
உச்சியில்ப்பல்லியது அச்சமுடன்சொல்லுகுது
ஆண்டுசொன்னநிமித்தமதை அறிந்துமெள்ளதங்காளும்
அன்னிருந்து அரசாளுமண்டபத்தே
சென்னதுகாலமென்றுதிப்பல்லிசொல்லுகுது
என்னரியயீன்பாதார்எழுந்தும்படி தப்பாமல்
மண்ணிளந்துமயிலையிளந்துமாளிகையும்வெறுபட்டு
விடுவிட்டுப்போகமுடிவிதியும்விதித்தாளே
நாடுவிட்டுக்காடுசேரயாமனோர்விதிப்படியோ
மண்ணும்பகையாச்சுமாளிகையும்வெறுச்சு
கண்ணிளந்தமான்போலதங்காள்களங்கமனம்நொந்து
துள்ளியெழுந்திருந்துதேவியரோவாருங்கடி.
வெள்ளிப்படிகடந்துவிதமாகத்தானெழுந்து
பள்ளியறைமாளிகைமுன்பைங்கொடியாள்வந்துநின்று
அண்ணமார்தேவியரோ அருக்காணியிளவாசே

கல்தங்காயி படுகளம்பார்க்க அண்ணமார்
தேவிகளை கூப்பிடல்.

பெரியண்ணன்தேவியரேபேடைமயில்வாகனமே
சின்னண்ணன்தேவியரேசெல்வத்திருமுகமே
பேருலகையாண்டிருந்தபெரியண்ணன்தேவியரே
சீருலகையாண்டிருந்தசின்னண்ணன்தேவியரே
கோலப்பசுங்கிளியேகுமாரசங்கன்தேவியரே
வாலப்பசுங்கிளியேவாள்வீரன்தேவியரே
என்றுசொல்லிதங்காளும்அன்பமுடன்தானழைக்க
பறந்துவந்துதாதியரும்பாதந்தனைப்பணிந்து
முந்தாணிகொண்டலலவோதங்களின்முகமுமதுதான்துடைத்து
என்தாயேமாதாவேவாலழைத்தாய்தங்கையரே
அப்போஅண்ணருடன்பிறந்தஅருக்காணியிளவாசு
பொன்னருடன்பிறந்தபேடைமயில்வாய்திறந்து
சங்கருடன்பிறந்ததங்காளும்என்னசொல்வாள்
எங்களண்ணமார்தேவியரேஎடுத்துரைக்கக்கேளுங்கடி
தங்கையுந்தனிப்படிகாத்தியரேகேளுங்கடி
அண்ணமார்தேவியும்அப்போதுதானென்னசொல்வார்
எங்களையழைத்ததனகையினால்குயிலேசொல்லுமம்மா



நடையிருந்தபரியேறிநாட்டிலேபோனவர்கள்
படையெடுத்துப்போனவர்கள்பாடுகேடானதுண்டோ
சத்தியமெய்யாகசதிகாரன்சொல்க்கேட்டு
வெத்தியுள்ள அண்ணமார்க்குவினைகள்வந்துநேர்ந்ததுண்டோ
நடனமிடும்பரியேறிநல்லவேடுவரைச்சங்கரிக்க
வெத்தியன்னவீரியர்க்குவேடுபடைபோனிடத்தே
உங்களத்தனயின்னமூவருக்கும்ஆனபிழைவந்ததுண்டோ
பாண்டவரும்நூற்றுவரும்போருங்களசெய்தாப்போல்
ஆனபடைசேனைதளமடங்கலுமேமாண்டதுண்டோ
பொன்னிவளநாட்டில்புகள்பெரியஆத்தாரு
மன்னிழந்துபோனதுண்டோபடையிலெல்லாம்சொல்லுமடி
உன்மனதுக்குறைநடக்கையெல்லாம்உத்தமியேசொல்லுமடி
என்மனதுபேர்க்கையிளவரசேசொல்லுமடி
அந்தமொழிகேட்டுஅருந்ததியும்மேதுசொல்வாள்
சிந்தைதளங்கியங்கேதங்கைநிறுமைசொல்வாளாம்
என்னமொழியுரைப்பேன்பெத்தவன்றுநானறிவேன்
வன்னமயில்த்திதானியரேவாய்திறந்துசொல்லுகிறேன்
வேடபடைதான்கூடிவேடுவரைச்சங்கரிக்க
போனதிசையறியேன்போய்மாண்டகாடறியேன்
மல்ப்போர்பொருதயல்லோமாண்டகளமதானறியேன்
அங்குகொத்தாக்கல்விகட்டிஆபரணந்தான்பூண்டு
கொஞ்சபரிமீதிலேறிகொங்குமேலைபோனவர்கள்
வெள்ளிகட்டும்வேல்வாங்கிவேடுவரைச்சங்கரித்து
கன்னிவளநாடுகடந்துகடுகிவரக்காணேனே
நாடுபடைபொருதிநம்மநகரிவந்துசேராமல்
வேடுவரைச்சங்கரித்துவீடுவந்துசேராமல்
தலைமுந்தமரத்தடியில்தன்னரசுவாசலயத்தே
குருந்தமரத்தருகேகூடாரம்போட்டடித்து
கூடாரச்சாவடியும்துலக்களத்தைநானறியேன்
தாடாளும்தங்கைபவள்தங்கைகல்லாளுந்தமியும்
வாசல்படிதாண்டிவழியறியாப்பத்தினிநான்
தேசங்கடந்துஅண்ணமாரைதேடிவழிபோகவேணும்
வழிக்குத்துணைவாருங்கடிவர்ணமயில்த்தோகியரே
நாமளும்போவம்டிநங்கையரேவாருங்கடி
எனக்குத்துணையாகவாருங்கடிதங்கையரே
நமக்குத்துணையாகவாருங்கடிதேவியரே
செம்மான்பேசினாலுமனங்கலங்கி

அம்மான்பெருமாளும் அரியதவமிண்டுபெற்ற
பெரியம்மான்தானீன்றபெடைமயில்வாகனமே
சின்னம்மானீன்றருளும்சிறுமுகமேவாருங்கடி
அன்னம்மானீன்றெடுத்தயிளஞ்சியமேவாருங்கடி

தோளிமார்கள் தங்களை சிறை வைத்த சங்கதிகளை
ஆதியோடந்தமாய் தங்காளிடம் சொல்வது.

அப்போதுதோளியரும் அருந்துதிறையைத்தான்பார்த்து
அன்னக்கிளியதுபோல் அம்மாமார்தன்மகளாம்
கிளிகொஞ்சும்பாவைபோல் கிளிமொழியுமாய்திறந்து
ஆடிபதினாறில் ஆனதிங்கக்கிழமையிலே
வாலைப்பிராமணர்கள்மறையோர்கள்தான்கூடி
நல்லமுகூர்த்தமிட்டுநாளேழுதிங்கள்வைத்து
வேளைமுகக்குஞ்சறனைவிருபனையுண்டுபண்ணி
நாளுமுகூர்த்தமிட்டுதேங்காய்நன்றாகவேயுடைத்து
வல்லதோருசாஸ்திரிகள்மறையோர்கள்தான்கூடி
சோதிரிஷஞ்சொல்லிசோபனங்கொண்டாரைந்து
பட்டணத்திலுள்ளவர்கள்பறிவாரந்தான்கூடி
தட்டிப்பறையதிர்ந்துதளம்பெரியவளநாட்டில்
செல்விபெறும்பெருமான் தேன்மொழியாளவள்தனக்கு
சல்விசவறமுடன் தண்டிகையும் சேனையுடன்
ஆனைபலசேனையுடன் அம்பாகவந்திறங்கி
என்னவெர்ண்ணுச்சேனையுடன்எங்களய்யருடவாசலிலே
வெற்றியுள்ளமாயன்மகள்விதயானவந்திரிக்கி
அத்தமுடையன் ஆனதிரியோதினமும்
மெத்தப்பரியம்மோராய்க்குமித்தாப்போல்
உத்தவளநாட்டார்உத்தமர்கள்வந்திறங்கி
பொன்னாலேபந்தலிட்டுப்புகளஅலங்கரித்து
கண்ணாடிதூக்கமதுகடிகியலங்கரித்து
முத்தாலேதானிருத்திமுன்னாலலங்கரித்து
முத்துநவரத்தினங்கள்முளுவயிறத்தாலலங்கரித்து
மணவரைசோடித்துமல்லிகைப்பூத்தொங்கல்விட்டு
முல்லையிருவாச்சிமுகமலர்ந்தசெண்பகமும்
நால்வரும்கொண்டாடநடுவேசிங்காதனங்கள்
பூவாலலங்கிறித்துபொன்னிவளநாட்டார்கள்
ஆலத்தூர்ப்பட்டணமும்அழகுபொன்னிவளநாட்டார்
சீலத்துடர்மார்பன்நெல்லிவளநாட்டாரும்



வய்யநெல்லிநாட்டாருவடசேறிநாட்டாரும்
செய்கைமறவாதசெட்டியபெருமாளும்
இந்திரனுக்கொப்பானஎதிரில்லாப்பெருமாளும்
மந்திரிகள்போலெமைத்துனமார்சூழ்ந்துவற
பாசையறியாதபடைமன்னர்முன்னடக்க
தேசத்துராசமன்னர்சேனைபடைமுன்னடக்க
ஆனைகுதிரைதளம்அணியணியாய்முன்னடக்க
சேனைபடைகாவலரும்சேறவேமுன்னடக்க
வாகாய்முரசரைந்துவலம்புரிச்சங்கூத
சிங்காரமாகிடவேசிறந்தடால்வீசிவற
சின்னங்கள்ஊதிவறதிருவாசகந்தான்படிக்க
வாணமுளங்கிடவேமணிமுரசுதான்முளங்க
ஆகாசவானமதுஅண்டமெல்லாந்தான்முளங்க
தம்பட்டம்பேரிகையும்தறணியதிர்ந்திடவே
தும்பிவிட்டவாள்க்காறர்சொல்லரியவில்க்காறர்
வில்க்காறர்கோடிவேகமுடன்முன்னடக்க
மல்ப்பொருதுஞ்செட்டிகளும்மணிவேலுமுன்னடக்க
கட்டியங்கூறிவறகனவசந்தமாடிவற
நட்டுமுட்டுக்கொட்டிவறநாடகங்களாடிவற
சேனைமன்னர்காவலர்கள்சேறத்திறண்டுவற
ஆனையேறிமாலைசூடிஐங்கறநார்கோவிலுக்கு
அருமையுடன்பெரியோர்கள்அண்டினர்கள்வந்துநிர்க்க
பெருமையுடன்தேங்காயும்பிரியமுடன்தானுடைத்து
தேங்காயுடைத்துசிதறவிறுவில்மிஞ்சிவிட்டு
பந்துசனங்களெல்லாம்பரிவுடனேபார்த்துநிர்க்க
தேசத்துராசாக்கள்திட்டமுடன்பார்த்துநிர்க்க
நச்சொல்லான்தானும்நன்றாகவந்துநிர்க்க
மங்களவாத்துவகையுடனேபாடிநிர்க்க
ஓமப்புகைதானும்உலகமெங்கும்பாடிநிர்க்க
துந்துமிநாகசுரம்துரிதமுடன்பாடிநிர்க்க
எக்காளையூதபிடிபோல்முரசதிர
தோரணமாலைகளும்தலங்கஅலங்கரித்து
ஊரிலுள்ளசனங்களெல்லாம்உண்மையுடன்பார்த்துநிர்க்க
எச்சாளபறைமேளம்பிங்கையேதானதிர
சிறந்தமணவரையில்திருச்சங்குஓசையிட
பட்டுப்பாய்போட்டுப்பாங்காயிருந்தார்கள்
அந்தச்சினமேஅடவாகக்கூட்டி வந்து

பாங்காய்மணவறையில்பலபேருஞ்சுத்தியிருக்க
ஆயிரந்தேங்காயும்அரசாணிமுன்னேவைத்து
தாய்மாமன்பெண்ணையெடுத்துதனதுபக்கம்வைத்ததுண்டு
செம்மீனுதிக்குமுன்னேசிறுகோழிகூவுமுன்னே
பிறப்புவலமாகப்பேய்க்கரும்புமுன்னாக
கரும்புவலமாககரகசால்முன்னாக
அஞ்சுவயதிலெநாங்களறியாதகாலத்திலே
சோமனிந்திராணியைப்போல்சோடித்தாரெங்களையும்
மாமனெடுத்துவலதுபக்கம்வைத்ததுண்டு
பரமசிவனாரும்பார்வதியுந்தானறிய
வேதப்பிராமணர்கள்வேதியர்கள்தானோத
சாதிப்பிராமணர்கள்சாஸ்திரங்கள்தானோத
ஓமமுந்தான்வளர்த்துஉதகிரித்தமங்கிலியம்
மங்கிலியம்வாங்கிமணவாளன்முன்பாக
நாத்தியிளங்கிளியாள்நலமாகத்தான்வாங்கி
செங்கையிலேவாங்கிதிருக்கழுத்திலேபூட்டி
மாத்தில்லாமங்கிலியம்மணிக்கழுத்திலேபூட்டி
மங்கிலியந்தரித்தபின்புமணவறையிலுள்ளவர்கள்
அருகுமணஞ்செய்துஅன்புடையபெரியோர்கள்
ஐவர்களுங்காணஅருந்ததியைத்தொழுது
தெய்வசபைநடுவேதிருந்தமுள்ளமணவறையில்
பெண்ணாவிபட்டால்உங்களண்ணர்பிழையுங்குறையுமென்று
பொன்னாலேகண்டு[illegible]ல்பொருந்தவேஉண்டுபண்ணி
உங்களண்ணர்கண்டுவிசனவிட்டுஅருமையுடனெங்களையும்
அந்தப்பொன்னின்விலைபிடித்தத்தொருகண்டமுண்டு
நாங்கள்சுண்டுவபிடித்துசுத்திவந்தபர்வமுண்டு [நார்கள்
அன்றுமுதலின்னளவும்உங்களண்ணர்அருஞ்சிறையில்வைத்
தொண்டுவிட்டுஉங்களண்ணர்கொடுஞ்சிறையில்வைத்தார்கள்
அன்றுமுதலின்றளவும்நாங்களிருக்கும்வகையறியோம்
காகம்பிடித்தறியோம்கைக்குநீர்வார்த்தறியோம்
பிரியமுடனிருந்தல்லவோபிறமுறுக்குத்தைத்தறியோம்
ஏழுத்துமுளைக்களிக்கலைநாங்கள்ளைகாத்தம்பேசறியோம்
மதியுள்ளபத்தினியேநாங்கள்வாழ்ந்ததுவுங்காணீரோ
நாங்களாக்கியிடுஞ்சோருகறிஅருந்தலாய்விசுதென்பார்
பொங்கியிடுஞ்சோருகறிபுகைவாசம்வீசுதென்பார்
எங்கள்முகம்கண்டவுடன்பிணிப்பிழையுங்குறையுமென்று
கண்ணெடுத்துப்பார்த்தறியார்காரிகையேதங்கையரே



நாங்கள்பாவியிந்தில்படுத்திருந்தகோரமோதான்
மண்பிடித்துப்போடையிலேமகாதேவர்சொல்ப்படியோ
முன்னாளெழுதிப்படியோமுக்கண்ணனார்சொல்ப்படியோ
பெண்ணாய்ப்பிறந்ததுண்டுபெருவசிவிப்போது
மன்றோரைஞ்சொன்னமோவணக்கோறஞ்செய்தமோ
இன்றளவரைக்கும்நாங்களிருந்தவகைகேளாயோ
காராளவங்கிஷமேகண்ணேனகமணியே
தாரமென்றுசொல்லியபெண்ணைத்தனிக்கேட்டிருப்போம்
ஒருமனைமுடியில்வாய்நாங்களுந்தாயாரோமே
என்றுசொல்லத்தங்கையறம்பயங்கிமுகம்வாடி
சிந்தைகலங்கித்தங்காள்சிவனேமகாதேவா
அண்ணருடன்பிறந்தஅருக்காணியிளங்கிளியும்
பொன்னருடன்பிறந்தபேடைமயில்தங்காளும்
சங்கருடன்பிறந்தசாதிமரிக்கொழுந்து
தங்கக்கொதித்தாய்ப்போல்தளர்ந்துமுகம்வாடி
அன்றுசெய்தவார்த்தைஅய்யருக்கேபிராதியென்று
இன்றுசெய்ததெல்லாம்எடுத்துரைப்பாள்தங்கையரும்
அண்ணமார்தேவியரேஅருக்காணியிளவரசே
சின்னண்ணன்தேவியரேசேதிசொல்லக்கேளுங்கடி
நானொருவிபிறந்தவள்க்குஉத்ததுணையென்றிருந்தேன்
ஆணபிறப்பையிளந்துஅம்பலத்தில்நின்றேனே
பெண்பிறப்பேதங்கையர்க்குபெரியதுணைவாருங்கடி
இருவருடன்பிறந்தவிளப்பமாய்ப்போனேனே
ஒருவிதனித்தேனடிஉத்தமியேவாருங்கடி
வாருமென்றுசொல்லிவருகையுடன்தானழைக்க
ஊருவழிபோவதற்குநீங்களுந்ததுணைவாருங்கடி
நாங்கள்துணைவரத்தாக்குநல்லதங்காளுத்தமியே
உன்தாதிமரசெங்கையடிடையநல்லாளிளங்கிளியே
அன்னம்போல்வாய்திறந்துஅரிபிரவியரும்
சொன்னஞ்சொரிந்தாப்போல்தோகைமாரும்என்னசொல்வார்
நான்பத்தினியாள்போறவழிபதைதாரிதுணையாமோ
நான்உத்தமியாள்போறவழிஊதாரிதுணையாமோ
பலதாரிபின்போனால்பத்தினியுங்குன்றுமடி
உத்ததுணைவாருங்கடிஉத்தமியேதோளியரே
பத்தினியாள்போறவழிபத்தினியேவாருங்கடி
ஒருசொல்லுவாசகமேஉத்தமியேதங்கையரே
பட்டபடிகளும்பாரதமும்காண்பார்க்க

பெரியண்ணன்தேவியரேபேர்பெறியநங்கையமே
சின்னண்ணன்தேவியரேநீங்கள்சீக்கிரமாய்வாருங்கடி
இட்டசிவனாரும்எங்கள்தலைநனிமேலெழுதவில்லை
நாங்களும்வருவதில்லைநாயகியேபோடியம்மா
ஒருவரும்வருவதில்லைஉத்தமியேபோடியம்மா
போமென்றசொல்க்கேட்டுபொற்கொடியாள்நல்லதங்காள்
அய்யோசிவனே ஆதிமகாதேவா
பொலம்பியேநல்லதங்காள்பொற்கொடியாளென்னசொல்வாள்
அண்ணுசெய்தகுற்றம்அஞ்சுரெட்டியானாலும்
பெண்ணாய்ப்பிறந்தவர்கள்பொருக்கவிதியல்லவோ
என்னைமுகம்பார்த்தெனக்குத்துணைவாருங்கடி
சின்னண்ணன்தேவியரேதெய்வப்பசங்கிளியே
பெரியண்ணன்தேவியரேபேடைமயில்வாகனமே
அண்ணமார்தேவியரேஅருக்காணியிளவரசே
நானொருத்திவழிபோவேனோஉத்தமியேவாருங்கடி
நான்தனித்துவழிபோவேனோதங்கையரேவாருங்கடி
என்னதான்சொல்லித்தங்காளிதமாயுரைத்தாலும்
நாங்கள்வருவதில்லைநாயகியேஏகுமம்மா
இன்றுவருவதில்லையிளங்கிளியேபோடியம்மா
என்றுசொன்னபோதேதங்காளேங்கிமுகம்வாடி
முன்கைநெரித்தல்லவோதங்காள்முகத்தோடேதானறைந்தாள்
செங்கைநெரித்தல்லவோசிவனேயென்றுபுலம்புகிறாள்
கண்கள்பொரிப்பறக்கச்சடைக்கண்ணீரோட
சிங்கம்போலேசீறிசினந்துமிகவழுதாள்
மார்மேலேகண்ணீறைதாரைவிடத்தானழுதாள்
தங்காளுடகோபமினிதான்பொருக்கக்கூடாது
என்றுதான்நங்கையரும்இருவர்களும்ஓடிவந்து
கோதிமயிர்முடித்துக்குளுந்தமுகந்தானுங்கி
முந்தாணிகொண்டல்லவோதங்காள்முகமுமதுதான்துடைத்து
தங்காளுடகண்ணீரைநங்கையருந்தான்துடைத்து
அஞ்சாதேதங்கையரேஉனக்கானதுணைநான்வாரேன்
வஞ்சினையும்சொல்லவில்லைவாய்த்ததுணைநான்தானே
இன்னமொருபுதுமைஎடுத்துரைக்கக்கேளுமம்மா
பண்ணும்பணுதியில்லையெங்களுக்குப்பட்டுகளும்நானுமில்லை
ஆணைப்பட்டுடுத்தவில்லைநாங்களாபறணம்பூணவில்லை
பூண்டுவரப்பணுதியில்லையெங்களுக்குப்பொற்கம்பிச்சேலையில்
உடுத்திவறப்பட்டுமில்லைஉள்ளாடைதானுமில்லை [லை



அப்பஅண்ணருடன்பிறந்தஅருங்கிளியாள்நல்லதங்காள்
பொன்னருடன்பிறந்தபேடைமயில்நல்லதங்காள்
உக்கிரானமாளிகைக்குஉள்ப்பூட்டுத்தான்திறந்து
பொக்கிஷமாளிகையைபொட்டெனவேதான்திறந்து
அண்ணமார்தேவியர்க்குஆபறணமெடுத்து
மேதினியோர்தான்மதிக்கவேணுமென்றஆபறணம்
சொர்னமயம்போலேசோடிக்கவேணுமென்று
பின்னச்சவுக்களியும்பிதாம்பறப்பட்டுகளும்
கருக்குருவிவாலதுபோல்கண்ணுக்குமையுமிட்டு
குப்பியசைந்தாடகொண்டையிலேதான்முடித்து
செங்கையிலேதங்கவளைசிறப்புடனேதானணிந்து
பொங்கமுடன்கட்டுவடம்பொன்சறடுதானணிந்து
கடவம்பவளமிட்டுகாலாழிதானணிந்து
குடம்போலேகொப்பணிந்துகோலச்சிந்தாக்குமிட்டு
காலுக்குத்தண்டையிட்டுகலகலெனசிலம்பணிந்து
மேலுக்குப்பட்டுவிநமுடனேதானணிந்து
நெத்திக்குபொட்டுமிட்டுநிலாப்புறைகள்தானுமிட்டு
முத்துவர்ணநற்றுயிலேமுடிசிறக்கக்கொய்துடுத்தி
அல்லித்துறைக்கதம்பம்ஆனைசிகப்பணிந்து
கல்லுக்கொசுவம்வைத்துகீழ்க்காலில்ப்பாடகமும்
சாந்துபுனுகணிந்துசவ்வாதுமேல்ப்பூசி
ஏந்துதனதாள்க்குயிருதோளும்பூரித்து
ஒப்பித்தாள்தோளியர்க்குஉலகமெல்லாந்தான்மதிக்க
ஒப்பினையுந்திருவளரும்ஒப்பிவைத்தாள்நங்கையர்க்கு
நாத்தியிளங்கிளியாள்நல்மாமன்தன்மகளும்
உத்தமியேதங்கையரேஒருசொல்லுவாசகியே
பத்தினியேதங்கையரேபார்வதியேநீகேளும்
பளிங்குமாவண்டமும்பாங்கானகூடங்களும்
ஏழாந்தளமும்தங்காள்பிடம்பெறியமாளிகையும்
சித்திரமாளிகையுஞ்சிறப்பானமேடைகளும்
அண்ணுமுதலின்னவருநாங்களறிந்ததில்லைத்தங்கையரே
ஒருநாளுங்கண்டறியோம்உத்தமியேதங்கையரே
சுத்திமெள்ளப்பார்த்துச்சுருக்காவருவமம்மா
பார்த்துவருகிறோம்பளிங்குமாமேடையெல்லாம்
என்றுசொல்லிநங்கையரும்யின்பமுடன்தான்கேழ்க்க
நல்லதுதோழியரேநன்றாகப்போய்வாரும்
என்றுசொல்லத்தோழியரும்எழுந்தார்களன்னேரம்

சென்றவிடம்விட்டுதிக்கெனவெதானடந்தார்
அரமனைகளெல்லாம்அன்புடனேசுத்திவந்து
பார்த்துமெள்ளத்தோளியரும்பாங்குடனேஒடிவந்து
தங்காளிருக்குமந்ததங்கமணிமாளிகையில்
சித்திரமாளிகையில்சிறப்புடனேஉள்புகுந்தார்
உள்த்தாளுமிட்டுப்புறத்தாளுதாளுமிட்டார்
இப்படியேதானிருக்கஇயல்புடையதங்காளும்
அண்ணருடன்பிறந்தஅருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்தபொற்கொடியாள்நல்லதங்காள்
முத்துவர்ணத்துயிலைமுடிசிறக்கக்கொய்துடுத்து
அந்தமுடனாபரணம்அழகுடனேதான்பூண்டு
இந்திரந்தானுலகமதிலெல்லாருந்தான்மதிக்க
சூரியகாந்தபட்டுடுத்துசுத்திமுக்காடுதானுமிட்டு
அண்ணருடாகத்துக்குஅன்பானதங்கையரும்
வால்மிளகுசுக்குவல்லகிராம்புடனே
ஏலம்லவங்கமயினிதானசர்க்கரையும்
வெல்லமுடன்கலக்கண்டுசீனிவிரும்பியேதானெடுத்து
கானகத்திலண்ணருக்குக்களைதேற்றவேணுமென்று
பானக்கம்சேர்க்கவென்றுபைங்கொடியுமடியில்க்கட்டி
வெற்றியுள்ளபோர்க்களத்தில்வேணுமென்றுஆபரணம்
பணமுந்திரவியமும்பாங்குடனேதானெடுத்து
போர்க்களத்தில்த்தானமிடபொன்னெடுத்துமடியில்க்கட்டி
ஆக்கமுடனின்றுக்கொண்டுஅரமனைகள்தான்பார்த்து
சுத்திமுகம்பார்த்துசூழ்ந்தமனைதான்பார்த்து
எத்தரியஅரமனையைஏறிட்டுத்தான்பார்த்து
வாழ்ந்தநாளப்போதுமென்றுவருத்தமேயின்பறமே
ஏழைதலையிலிப்போஎழுதினீரோபிருமாவே
இருந்தநாள்ப்போதுமென்றுஎழுதினரோஎமனுந்தான்
வருந்திமெள்ளத்தங்கையரும்மகாதேவாதஞ்சமென்று
அரமனையைவிட்டல்லவோஅப்புறமேநின்றுக்கொண்டு
பரமனேதஞ்சமென்றுபார்த்துமனமுருகி
நின்றாள்நெடுநேரம்நிலைமரம்போல்த்தங்காளும்
அன்றுகடலைஅடைத்தவொருஅச்சுதனார்
நூற்றுவர்க்கும்பாண்டவர்க்கும்நோக்குடையவாளியர்க்கு
ஏற்றமுள்ளயிலங்கையிலேவாழ்வதற்குப்பாடிலையோ
ஆத்திரியகோபமெல்லாம்தங்காளன்புடனேதானுமப்போ
தேற்றியேதன்மனத்தைதெய்வமேதஞ்சமென்று



பதியிளந்தபஞ்சவர்கள்பாங்காட்டில்ப்போகிலையோ
விதியினெழுத்தைஅண்ணமாரோவிலக்கமுடிப்போகாது
சலமதியசூரியனைகடியவிஷம்தீண்டிலையோ
தலையிலெழுத்தைஅண்ணமாரேதள்ளிவைக்கக்கூடாது
என்றுமனந்தேற்றியல்லோயீசுபரனேதஞ்சமென்று
சின்னண்ணன்தேவியரெசிக்கிரமாய்வாருங்கடி
பெரியண்ணன்தேவியரேபேடைமயில்வானமே
பண்டுபழிகாரிபாதகத்திவாருங்கடி
கூப்பிட்டாள்தோளியரைகொற்றவனார்தங்கையரும்
கூப்பிட்டகுரல்க்கேட்டுகொம்மனையாள்தோளியரும்
துளபமணிபார்பழகுதூய்யமணிவாயாளும்
அழகுதிருமேனியரும்அன்பாகஏதுசொல்வார்
உத்தமபத்தினியேஒருசொல்லுவாசகியே
நற்றுணையேயிளவரசேநல்லதங்காளுத்தமியே
திங்கள்முகக்காளுதெய்வப்பசுங்கிளியே
தங்கத்திருமேனியரேநாங்கள்தனித்துவழிவாரதில்லை
போரவழிதனிலேஒருபொல்லாங்குவந்துவிட்டால்
வேடுவர்கள்கண்டால்வெகுமோசம்வந்துவிடும்
பண்டுசிறைகள்பிடித்தால்பழிகள்வந்துசேர்ந்துவிடும்
துணையொருவரில்லாமல்துலைதூரம்போவர்களோ
அருந்துணையில்லாமல்அந்தரத்தேபோவர்களோ
சதிகாரவேடுவரைதன்னைநம்பப்போகாது
அறியாதவேடுவர்கள்நம்மைஅரிந்தால்விடுவர்களோ
என்னசெய்வோமென்றுஎடுத்துரைத்தார்தோளியர்கள்
அன்னம்போல்த்தோளியரும்அவ்வார்த்தைதானுரைக்க
ஏழைமதிபேசாதேஎங்களண்ணமார்தேவியரே
கோழைமதிபேசாதேகுமாரசங்கன்தேவியரே
நில்லென்றுசொன்னவரைநெருப்பாயெரித்திடுவேன்
பொல்லாதவேடுவரைப்பொரிகலங்கிப்பார்த்திடுவேன்
தீயாயெரித்திடுவேன்செங்கதிரைவிட்டல்லவா
உத்ததுணைவாருங்கடிஉத்தமியேதோளியரே
மெத்தமயங்காதேவினைக்கேடிவாருங்கடி
அனதுணையில்லாமல்நாங்களவ்வனத்தேவாரதில்லை
போரவழிதனிலேஒருபொல்லாங்குவந்துவிட்டால்
வாசமுள்ளதங்கையரேஎங்களைமாளிகையில்த்தானிருத்தி
தேசம்போனவர்கள்திரும்பிவழிவந்தாக்கால்
மோசமதுவந்தாக்கால்மெய்குளலேதங்கையரே

ராசபிலக்குறையுமடிநல்லதங்காளுந்தம்பியே
அப்போவரிட்டுப்பார்த்தவதுசொல்வாள்தங்கையரும்
வதிவிட்டோதிராடிவளக்குறைத்துநில்லாதே
செம்மச்சனியனைப்போல்சிலுங்கிமெல்லப்பேசாதே
தம்பிசங்கன்பொன்னருடன்றாஷ்டகன்தங்கையவள்
அருமைத்திருமேனிதனை ஆருவந்துதீண்டிடுமோ
பொன்னுந்திருமேனியிலெபொற்கொடியெதோளியரே
அக்கினித்தான்தன்னை அணுமோயிக்குலங்கள்
உக்கிரமுள்ளதான்தன்னை உருகுவந்துதுளைத்திடுமோ
வழிமறிப்பாருண்டோடிவாள்வீரன்தேவியரே
தனித்துமறிப்பார்கள்தானுமுண்டோவையகத்தில்
கோகமுடன்நான்பார்த்தால்க்கோடிபடைமாண்டுவிடும்
தீயாயெரித்திடுவேன்சிந்தினையும்பேசாதே
போகநேரமாகுதல்லோபொற்கொடியேவாருங்கடி
வேகமுடன்போகவேணும்விருசாகவாருங்கடி
அந்தமொழிகேட்டுஅரிவில்லார்போயிருந்தார்
சிந்தைநகலங்கியல்லோசிரிநிதவெழுந்து
பார்த்தாள்பொரிப்பரக்கப்பலதிக்குந்தின்றதிர
வேற்றுமுகங்கடுத்துவேங்கைபோல்த்தான்சிரி
அந்தநல்லவேளையிலெஆணதொருதோளியர்கள்
தங்காள்தனைப்பணிந்துதயவாகவதுசொல்வார்
சிந்தைகுளிரதங்காளைசீர்பாதம்போற்றிசெய்து
அஞ்சிப்பயந்துதோளியர்கள்அடவாகவதுசொல்வார்
வஞ்சிமனதிலெண்ணிவார்தைகளும்வதுசொல்வார்
நங்கைமதனியடிநாத்திபிளங்கிளியெ
திங்கள்நுதலரளெதெய்வப்பசுங்கிளியே
நாங்கள்வாழ்ந்தமனைதாள்பூட்டிவருகிறோம்தப்பாமல்
பாக்குமயில்போலெபாதுகமாய்த்தோளியர்கள்
அரக்குநல்லமாளிகையை அடவாகத்தாள்பூட்டி
கள்ளிதிருடிகள்போல்கல்நெஞ்சில்த்தோளியர்கள்
கள்ளிக்கதவடைத்துத்தாள்பூட்டிமண்ணைரைந்து
சாத்திக்கதவடைத்துதாள்பூட்டிமண்ணைரைந்து
மறுபேச்சுப்பேசாமல்மாளிகையில்த்தானிருந்தார்
இன்னம்வாகாணுமென்றுவந்திழையால்தங்கையரும்
அன்னம்போல்வாய்திறந்துஅருந்துதியாள்நல்லதங்காள்
வழாந்தளந்தளிலெளதிராகதின்றுக்கொண்டு
நாளேபகலாச்சுநற்றுணையேவாருங்கடி



வர்ணக்கிளியினமேவாய்த்த துணைவாருங்கடி
பெண்ணேமடமயிலெபூங்கிளியேவாருங்கடி
சின்னண்ணன்தேவியரேசெல்வத்திருமுகமே
பெரியண்ணன்தேவியரேபடைமயில்வாகனமே
வெக்கமில்லாத்தோளியரேஇன்னொருஞ்சோலியென்ன
குலக்கொடியாளப்பேர்துகூப்பிட்டாள்தோளியர்கள்
கூப்பிட்டகுரல்க்கேட்டுக்குலக்கொடியாள்தோளியர்கள்
அப்பவேதோளியர்களன்பாகவதுசொல்வார்
காப்பிட்டகால்நோகநாங்கள்கானகத்தேவாரதில்லே
நாங்களங்கேவருவதில்லைஉத்தமியேநீபோடி
எப்பாடுபட்டுநீயெடுத்துஉரைத்தாலும்
எங்களுக்குப்பூமிபொசிகாரணமில்லையடி
சாமிதுணையெனவேசாய்ந்திருந்தார்மாளிகையில்
நாங்கள்வாழ்ந்தநாளப்போதுவருவதில்லைதங்கையரே
நாங்களிருந்திடுவோம்மங்கையடிமியல்பானதங்கையரே
ஓலைவாவிட்டார்களுந்தம்பியேதங்கையரே
வாலைப்பிராயத்திலெநாங்கள்வாழ்பெறுங்காலத்திலெ
ஓலைச்சுருள்பிடித்துநாங்களுள்படித்திக்கொண்டோமே
தப்பாதசொல்லுடையதாஷ்டகன்தங்கையரே
மெய்ப்பானதங்கையரேஉங்கள்வீரியத்தைக்கண்டறியோம
அந்தமொழிதான்கேட்டுஅரியபிரவியரும்
சிந்தைதகலங்கித்தங்காள்சிவனேஅபயமென்று
காவேருவிபிறந்தவள்க்குஉந்ததுணையென்றிருந்தேன்
அருந்தடத்தில்போவேனோஐயோசிவனேரே
சின்னண்ணன்தேவியரேநீதைத்துவழிபோவேனோ
என்னைமுகம்பார்த்துயெனக்குத்துணைவாருங்கம
அரியவனகாடாளும்அம்மானும்பெருமாளும்
பிரியமுடனீன்றெடுத்தபெரியம்மான்தன்மகளே
நீலமரத்தியடிநெடுநேரிகாந்தாரி
சாதிமரத்தியடிசற்றிறக்கமில்லையடி
நான்வஞ்சினையுஞ்செய்தேனோவனபகையுமுண்டோடி
தஞ்சமொருநாள்வருவதில்லைதார்குழலெவாருங்கடி
என்னெஞ்சத்துயரமெல்லாம்நீயாற்றவாருங்கடி
வன்னெஞ்சத்தோளியரேவழித்துணையேவாருங்கடி
பெண்ணாய்ப்பிறந்தவள்க்குப்பெரியதுணைவாருங்கடி
பண்டுபழிகாரிகளேயென்பாக்கியரேவாருங்கடி
பண்டுபழிகாரிகளேயென்பாக்கியரேவாருங்கடி
அன்னாளில்ச்சேர்ந்தாப்போல்நாமளிங்கிருப்போம்வாருங்கடி

நமக்களியாப்பதவியுண்டும் அங்கேபோவோம்வாருங்கடி
லோகமியக்கையுண்டு உத்தமியேவாருங்கடி
என்னவகைசொல்லியேபித்து உணர்ந்தாலும்
நாங்கள்வருவதில்லைநல்லதங்காளுத்தமியே
அண்ணுசெய்தபாவமது அப்புபட்டாப்போலிருக்கும்
இன்னைக்கென்னவாருது தடியிளவரசேதங்கையரே
செப்பரியாத்தோளியரும்சினந்துமுகங்கடுத்து
ஒப்பிலையுந்திருவாக்கும்உபசாரம்போதுமடி
வருவதில்லைத்தங்கையரேமகாதேவர்தாநரிய
பரமனுர்தாமரியநாங்கள்பத்தினியேவாறதில்லை
நின்றுமயங்காதேநெருப்புகளைவய்யுமடி
கண்டுமயங்காதேகடுநெருப்பைமூட்டுமடி
எங்களையும்விட்டுப்போனால்உனக்கிடேற்றமில்லையடி
நீமூட்டிவெள்ளிசெய்துநெக்கெனவேபோனுக்கால்
விட்டுநீபோனாலும்உமக்குவிரியமுமில்லையடி
எட்டியடிவய்யாதேயீஸ்பானார்தாநரிய
என்றுசொல்லித்தோளியர்கள்எடுத்துரைக்கும்வேளையிலே
அன்றில்லைதன்னை அனுமாறனித்தாப்போல்
தம்பிசங்கருடன்பிறந்தகாழ்வில்லாப்பத்தினியே
பொன்னருடன்பிறந்தபேடைமயில்வாகனமே
சங்கருடன்பிறந்தசாதுமரிக்கொழுந்தே
சிங்கம்போல்ச்சீரினத்துடனேதானெழுந்து
ஆதிசிவன்கருத்தாலேஅய்யாஉனக்கடிமை
பாதியெழுத்தைஎழுதியாருங்கில்ப்போட்டாப்போல்
நிறையெழுத்தைஎழுதாமல்நீளிவாளாமல்
குறையெழுத்தைநீரெழுதிகொண்டேசேபிதுமாவே
என்றுசிவனோடெயெல்லோருங்கைதொழுது
கன்றிழந்தமான்போலேதங்காள்கலங்கிநிற்கும்வேளையிலே

தகப்பமார்கள் வந்து காணல்.

அரியவளநாடாளும்அம்மான்பெருமாளும்
பெரியருடனின்றெடுத்தபேடைமயில்மாமியரும்
சித்தைதனந்துமங்கேசிக்கிரமேவந்தார்கள்
வந்தநல்லமாமியரேதங்காள்வாவென்றுதான்கேட்டு
அண்ணமார்தேவியரேஉங்களப்பமார்வந்தார்கள்
தகப்பனுடன்மாதாவும்தயங்கியிங்கேவந்தார்கள்
வந்தவரைவென்றுகேளுங்கடிதோளியரே



வந்தவர்க்குபுத்திவண்மையுடன்தானுஞ்சொல்வாள்
தண்ணீருந்தாமரையும்நான்தளம்புபாங்கினைபோல்
கண்ணீர்சொரிந்திடவேகார்குழலாள்தான்பார்த்து
தோழிமார்சொல்வார்கள்தோகையெனுமாதாவும்
வாழுங்குடியிட்டுநாங்கள்வாழ்ந்தநாள்போதுமடி
செளிக்குகுடியிட்டுநாங்கள்சேர்ந்தநாள்போதுமடி
எந்தாயேமாதாவேபெண்ணையின்றமடமயிலே
வந்தாயோயென்தகப்பாவய்யகத்திலுள்ளவர்போல்
பூதகிமுலையுண்டருளும்பெருமாள்தவத்தாலே
எங்களையின்றெடுத்தயென்தகப்பாவந்தாயோ
எங்களுடகாச்சிகளையினிக்கேளுஞ்சொல்லுகிறோம்
அன்னையெனுந்தாயானவள்வயற்றில்ப்பிறந்து
பொன்னர்சங்கர்தாமென்றுநாங்கள்புகழுடனேவாழ்ந்ததுவும்
இன்றளவில்நின்றதடாயென்தகப்பாபாதகனே
எனையீன்றமாதாவேயிளஞ்சியமேகேளுமடி
உத்தமபத்தினியேஒருசொல்லுவாசகியே
அப்பவேசொல்வாளாம்ஆனதொருதங்கையரும்
முத்தானவாய்திறந்துஉத்தாரஞ்சொல்வாளாம
அண்ணமார்தேவியரேஅருங்கிளியேவாருங்கடி
உங்களுடதகப்பன்உண்மையுள்ளதாயார்க்கு
பெத்தார்க்குஆபரணம்பிரபலமாய்தாருங்கடி
மெத்தமகிழ்ந்தல்லவோவண்டிபணுதிதானெடுத்து
ஆண்டபணுதியெல்லைப்அன்பாகத்தானெடுத்து
பூண்டபணுதிபூட்டுகளும்தான்தரித்து
சேனைபணுதியெடுத்துசெலவமுடன்தானுமப்போ
ஆனபணுதியெல்லாம்அய்யனுக்குமுன்போட்டாள்
சந்திரகாந்தப்பட்டுகளும்தளதளெனத்தான்போட்டாள்
சூரியகாந்தப்பட்டுகளும்தோகையருந்தானெடுத்து
சந்தரமாஅய்யருக்கும்தாயார்க்குமுன்போட்டாள்
பீதாம்பரப்பட்டைபிரியமுடன்முன்போட்டாள்
சீதனங்களெல்லாம்சிறந்ததொருதோளியர்கள்
இதுவேபொசிகாரணம்எனையீன்றமாதாவே
சிவலோகம்சேருகிறோம்செப்பமுடனேன்தாயே
பரலோகம்சேருகிறோம்பாதகனேஎன்தகப்பா
என்றுசொல்லத்தாயாரும்ஏங்கிமுகம்வாடி
கண்ணீர்சொரியக்கலங்கியேதாயாரும்
தாயுந்தகப்பனும்தயங்கியழுகையிலே

தங்காளும்ஓடிவந்து தயவுடனே எதுசொல்வாள்
விதியைவிலக்கமுடியா துயெவராலுங்கூடாது
என்னைக்கிருந்தாலும்யிருப்பதுவு நிச்சயமோ
அழுகவந்தகாரியமென் அண்ணைகடந்துபோனவெள்ளம்
நில்லென்றால்நிற்குமோ மாநீளநியுள் என்மாமா
அப்படிச்சொல்லியல்லோ அருங்கிளியாள்நிற்கையிலே
கனிவயிளமயிலெகாரிழையாள் தங்கையரே
இன்னேரமுன்னேடாயினி நெருப்பைமூட்டுமம்மா
அப்போ அண்ணருடன்பிறந்த அருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்தபேடைமயில்வாகனமும்
சங்கருடன்பிறந்தசாதிமாிக்கொளுந்து
தங்கத்திருமேனிகார்குழலாள்நல்லதங்காள்
பொன்னருடன்பிறந்தபேடைமயில்த்தங்காளும்
சிங்கம்போல்ச்சீறிசினந்துமுகங்கடுத்து
பொங்கியேகோபமுடன்பொற்கொடியாளன்னேரம்
சிரிவரும்நாகம்போலேசினந்துடனே தான்பார்த்து
ஐந்துதலைநாகமது அலரியெழுந்தாப்போல்
செந்தலைநாகமது சீறிச்சினந்தாப்போல்
இன்றளில்ச்செய்ததெல்லாம்யீஷ்பரனே தஞ்சமென்று
சன்னுசிவறம்பெற்ற அய்யரையுந்தான்பணிந்து
ஆதிசிவன்கர்த்தாவே அய்யரையுந்தான்பணிந்து
ஆதிவடமாயவனே அய்யனே சரணமென்று
அன்றளில்த்தவசில் அதியவாக்குடுத்தாப்போல்
பொன்னும்பலவரையும்தங்காயிபோற்றியேதெண்டனிட்டு
அசையாதே தன்மதுரை அங்கயக்கண்மீனாட்சி
திருமலைக்கள்த்தியம்மாதேவிசடாமணி
ஒருபூவுக்காகஉரையூறளித்தவளே
கரும்பார்குளவாரைத்தொழுதுமெள்ளத்தங்காளும்
மாகதவள்ளியம்மாவாக்குதவிசெய்யுமம்மா
முல்லையிருவாச்சிமுகமலர்ந்தசெண்பகமும்
அள்ளிமலர்குவித்து அக்கினியைகைதொழுது
மாதாபிதாவையுமனதில்நினைத்துகொண்டு
பாதஞ்சரணமம்மாபைங்கொடியேஎன்தாயே
கோவென்றழையயிட்டாள்கொடுந்தணலுமூட்டிடவே
ஆவென்றழையயிட்டாள் அக்கினிகள்சூழ்ந்திடவே
ஆக்கரித்துப்பல்க்கடித்து அக்கினியைக்கைதொழுது
நல்லதங்காயி அரமனையில் அக்கினியை வைக்கிறது.



திட்டமுடனக்கினியைச்சிறப்புடனே தான்பணிய
அக்கினியைக்கைத்தொளவேஅணைள்வந்துசூள்ந்திடவே
வட்டமுள்ளவைகுந்தம்வகையுடனே கைதொழுது
செட்டியெனும்பட்டணத்தார்செய்தகதைபோலே
பட்டணத்துபிள்ளையவன்பாங்குடனே தாய்தனக்கு
அன்பானஅக்கினியை அள்ளியிட்டபாவிலையாய்
உத்தமியாள்வைக்கிறது உடனேயங்கேமூண்டிடுமாம்
பத்தினியாள்வைக்கிறதுபல்திக்குமூண்டிடுமாம்
கோட்டையிடிதம்பிசங்கன்குமாரசங்காஎன்பிறபிறவி
காடைபறந்தாப்போல்டக்கேபறந்துநின்று
சுத்திமிகப்பார்த்தல்லவோசூழ்ந்தபுகைத்தாவனவித்தாள்
வெற்றியுள்ளஎங்களண்ணர்விடையாத்துமண்டபத்தே
பத்திப்பத்திவயரெரியபைங்கொடியாள்தான்புலம்பி
வெந்துவிருவிருந்துதங்காள்மேனியெங்கும்புண்ணாகி
முட்டிக்கொண்டாள்தங்காளும்முகத்தோடேதனைந்து
கட்டிப்பிறண்டழுதுகண்கள்விளிநீர்சொரிய
கூந்தல்குலைத்தாடக்குத்திக்கொண்டாள்மார்மேலே
மெத்தமயங்கியங்கேமேனிவெங்குப்வேசாகி
அடித்துவிழுந்துஅய்யோசிவனேஎன்று
முடித்தமயிர்குலைந்துவிளமுட்டிக்கொண்டாள்துணையுடன்
தஞ்சமொருவரில்லைதாபரிப்பாருமில்லை
வஞ்சனைகள்செய்தாப்போல்வகைமூன்றாய்த்தான்பிரிந்தோம்
சிக்குமணிமேடைகளும்சித்திரமணிக்கூடங்களும்
ஆக்குநல்லமாளிகையும்அக்கினிகள்சூழ்ந்ததே
அண்ணமார்தேவியரேஆனசொற்கஞ்சருங்கடி
சின்னண்ணர்தேவியரெசிவலோகஞ்சேர்ந்தீரோ
எனக்குதவியாயிருந்துயிறகளமானீரோ
கூடாரச்சாவடியும்கொலுவிருக்குமாளிகையும்
ஆடரங்கமாளிகையும்அக்கினிகள்சூழ்ந்ததுகாண்
சூளிகையுமாளிகையும் துய்யதிருவாசல்களும்
மாளிகையுமுள்ளதெல்லாம் அண்ணுவிவளைந்துபத்திவேகுதடா
பலகணியும்வாசல்களும்பந்தடிக்குங்கூடங்களும்
அலங்காரநகரியெல்லாம்அக்கினிகள்சூழ்ந்துதடா
நெலுங்கர்வந்துகப்பமிடும்சித்திரமணிச்சாவடியும்
குலுங்கநகரியெல்லாம்கூடம்பாளாகுதடா
துரைபெரியஆசனமும்சொக்கட்டான்விளையாடும்
அரமனைகளத்தினையும் அக்கினிகள்சூழ்ந்துதடா

பல்லாக்குச்சாவடியும் பறங்காடிக்கூடங்களும்
சொல்லத்தொலையாத சூரியவான்வல்லயமும்
பொக்குசச்சாவடியும் பொன்னெழுத்துச்சேனைகளும்
அக்கினிகள்சூழ்ந்த நல்லோ அனிகலந்துவேகுதடா
வாள்சாத்துமண்டபமும் வயிரமணிச்சாவடியும்
தம்பிசங்கன்வீற்றிருக்கும் தங்கமணிமாளிகையும்
அண்ணன்விவிடையாத்தும் ஆசாரச்சாவடியும்
தீய்பற்றவேகுதடா சின்னண்ணன் பிறவி
எட்டாந்தளமும் யிடம்பெரியமாளிகையும்
விழாந்தளமும் யிலங்கு மணிச்சாவடியும்
பெருகும் அம்பலமும் பெரியகல்லகோட்டைகளும்
எழுபதுயிருப்புகட்டியிளையுடனே தானடித்து
கேட்டையமுந்தானடித்துக்கி நடையுடன் தான்சாத்தி
ஆடரங்கமாளிகையும் அனிகலந்துவேகுதடா
தாருடனே வாழைகளும் தழைசாய்ந்துவேகுதடா
இத்தூருஅம்பலமும் சிலம்புச்சாவடியும்
வெற்றியுள்ளசங்கரண்ணர் விசித்திக்கும் மந்திரவாள்
அத்தினையுந்தானும் யிப்போ அனிகலந்துவேகுதடா
பச்சைக்கபாயுகளும் பருத்தசாப்பளியும்
வச்சிரங்கள் தான்பதித்தவடிவானபதக்கங்களும்
பட்டுக்கபாயுகளும் அண்ணன்விபாங்கானசல்லடமும்
தங்கமணிக்சொருகளும் தான்பத்திவேகுதடா
பாதிரையுஞ்சாலைகளும்பகல்காணுமுத்தங்களும்
பொட்டுகேகோல்மன்னியர்கள்போர்முனையிலேயும்
வேதங்களைத்திவரும் வேதமணிமாளிகையும்
சல்லிசவரங்களும் சின்னண்ணன் கலைத்துப்பச்சைவடம்
வில்லுசரவளையும் வெள்ளிகட்டும் வேலுகளும்
விதமானசட்டைகளும் வில்லுகளும் சரவளையும்
சவுக்களிகள்மோதிரமும் தங்ககலச்சாயத்தும்
முத்தாரவருத்தின முன்கைமுதாரிகளும்
வெற்றியுள்ளமார்பதக்கம் விருதுபலச்சாடிளையும்
மொஞ்சிக்கடுக்கன்களும் பொன்னெழுத்துக்குல்லாவும்
பஞ்சவாணடால்விருதுபகபத்திசோடிளையும்
அந்தமுள்ளபொர்க்கடகம் அரையோடியமும்
தங்கச்சரக்கொலுசு தாயித்துவ்ரதண்டை
சிங்கமுகடால்விருது சிறந்துபத்தவேகுதடா
வெங்கலத்தட்டுமுட்டுவிதமானசெயபுகளும்



அஸ்தமானதெல்லாம் அனிகலந்துவேகுதடா
உன்னுடைய ஆயுதங்கள் உண்மையுள்ள கெரிசமும்
என்னுடைய ஆபரணம் யினிக்கலந்துவேகுதடா
கேடையங்கட்டாரிகிரீடிவேல்கெரிசமும்
கோடையிடிவாளைப் பொக்கிறகண்டமந்திரவாள்
பரிகலங்களத்தினையும் பத்தியிப்பவேகுதடா
காலகத்திலென்னைவிட்டுத் தோளியரோகானவிலேபோனீரோ
நான்பெண்பாவம்கேரிட்டேன் பெண்கள்பெருமானே
என்பாவம்பார்க்கயினிஒருவரையுங்காணெவெ
ஒருத்திதனித்தேடிஒருவுத்ததுணைகாணேனே
எருத்தின்மேலேறிவருமயீஸ்பரனே தஞ்சமென்று
இனம்பிரிந்தமான்போலெ தங்காளெங்கிமுகம்வாடி
தனயிளந்தசெட்டியைப்போல் தயங்கியே தானழுதாள்
மார்துளிருமேனியெல்லாம் மண்மேல்பிறண்டழுது
முன்கைநெரித்தல்லவோ முகந்தோடே தானரைத்தாள்
செங்கோல்நெரித்தல்லவோ சினத்துமிகத்தானழுதாள்
கூந்தல்விரித்தல்லவோ குப்பையில்பிறண்டழுதாள்
விளைந்துருத்தங்கையரே மெல்லியர்கள்தானெடுத்து
குளிர்ந்ததீர்தான்குடித்து குணந்திரும்பியேதுசொல்வாள்
அஞ்சாதே தங்கையரே அண்ணா அரைநாளியில்வந்திடுவார்
கொஞ்சம்பரிநீதேகொங்கர்மேல்ப்போனவர்கள்
வெள்ளிக்கட்டுமயலைவடுவடுவரைச்சங்கரித்து
தெள்ளும்பரியேரிஎங்களண்ணர்சேர்ந்துவரக்காணேனே
வேடுபடைபொருதிவிரும்பிவரக்காணேனே
நாடுபடைபொருதிகம்மநகரிவந்துசேருவார்கள்
என்றுசொல்லித்தாதியாகவெடுத்துரைக்கும்வேளையிலே
பண்டுபழிகார்காதியரோபாதகத்துகேளுங்கடி
நான்கண்டஆசைமங்கைமேல்பலிக்குமடி
ஆதிசிவனாரும்அய்யரிட்டகட்டளைதான்
வேதியநாற்சொல்படிக்குவிதியெழுத்தைநம்புவரோ
முன்கைநெரித்தல்லவோதங்காளமுகந்தாடைசேர்த்துகொண்டு
பொங்கியெழுந்திருந்துபொற்கொடியாள்தான்புலம்பி
வறணக்கச்சைவரிந்துகட்டிவலதுபிறஞ்சொருகிவிட்டு
என்னைக்கச்சைவரிஞ்சுகட்டியிருபிறமும்சொருகிவிட்டு
இடியம்புகேரியம்பிடிவாளைக்குழலெடுத்து
படைகள்துரத்தும்படைவாளந்தானெடுத்து.
தம்பட்டம்பேரிகையும்தவில்முரசுதானதிர

கும்பிட்டசேவகரும்கொற்றவர்கள்பெரும்படையும்
கொங்கரையுஞ்சங்கரித்துக்கோடிபடைகருவறுத்து
சங்கரண்ணர்வென்னுதனித்துவரக்காணேனே
வட்டமிடும்பரியேறிவருவேடாத்தினையும்
வெட்டிக்கருவறுத்துஅண்ணர்வீதிவரக்காணேனே
கட்டும்பரியேறியெங்களண்ணர்கடிவரக்காணேனே
இட்டதொருசிறுவும்எரிவேலும்கேரிசமும்
செம்பரிசைக்கைப்பிடித்துச்சேனைதளமுன்னடக்க
வெண்பரியின்மீதேறிஅண்ணர்வீதிவரக்காணேனே
திங்குவருவகையும்தெரிசனத்தில்க்கண்டுரைத்தேன்
ஏங்கியேநல்லதங்காள்யீஸ்பரனேதஞ்சமென்று
கல்க்கட்டுமோதிரங்கள்களண்டுதெரித்துவிள
சந்தனமுங்குங்குமமும்சாந்தனிந்தபன்னீரும்
கெந்தமுடன்கஸ்தூரிக்கலந்துமிகத்தெளித்து
வஞ்சியர்களெல்லோரும்மார்புதட்டிவார்த்தைசொல்லி
திக்குக்கெட்டதிசைமாறிதிகைத்துவிழுந்தழுதாள்
ஏந்தியெடுத்தல்லவோதங்காளையெடுத்துமடியில்வைத்து
சேந்தியெடுத்தல்லவோதங்காள்செம்புழுதிதான்துடைத்து
தாங்கியெடுத்துமெள்ளதங்காளைமடியில்வைத்து
பாங்கியர்களோடிவந்துபானக்கந்தான்கொடுத்து
அஞ்சாதேதங்கையரேஅண்ணர்அரகாளியில்வந்திடுவார்
தேருதலைசொல்லித்தேத்திடுவார்தோளியர்கள்
ஆருதலைச்சொல்லவந்ததாதிகளைத்தான்பார்த்து
அண்ணோம்தங்கையரும்அருவையரைத்தான்பார்த்து
என்னமதிதானுரைத்தீரேழைமதித்தாதியரே
எரிட்டுப்பார்த்தல்லவோஎன்னசொல்வாள்தங்கையரும்
விரிட்டசேனைகளும்வெகுகோடிமன்னவரும்
இவ்வளவும்போதாமல்அத்தைபிள்ளைசேனையுடன்
பொன்னுலகம்போனவர்கள்பொருந்திவருவதுண்டோ
வேட்டைச்சங்கரிக்கவிசையுடனேபோனவர்கள்
மாண்டார்வருவதுண்டோமதியில்லாததாதியரே
தானமதுசெய்திடவோசாவேஸ்பாரைதாங்கினந்து
முழுகிவறநீருமில்லையென்றுசொல்லித்தங்காளும்

## அண்ணமார் தேவியர்க்கு சாஸ்திர சடங்கு செய்கிறது.

மேகத்தைநோக்கியல்லோமிகவேபுலம்பலுற்றார்



வருணனைநல்லருசனையும்வாகாயடிபணிந்து
மேகருசனைப்பணிந்துவிரைந்தேபொழியுமென்றார்
தங்காளும்ஆக்கரித்துத்தான்புலம்பும்வேளையிலே
மங்கியேமேகமெல்லாம்மலைச்சார்வேபோயிரங்கி
பொங்கியெழுந்துஒருபூமாரிபொழிந்திடுமாம்
மாரிபொழிந்துமகாவெள்ளந்தான்பிறண்டு
அக்கினிகள்தூத்துத்தங்காளரமனையிலுள்புகுந்து
நிக்கனவேதங்காளும்சிறுகலசம்தானெடுத்து
தோளிமாரெங்கமெல்லாம்தோகையருந்தானெடுத்து
புதுக்கலசந்தனிலடைத்துபொருமையுடன்தங்காளும்
தங்கத்திருமேனியரும்தார்குழலாள்நல்லதங்காள்
கும்பமெடுத்தல்லவோகுளக்கரையின்மேல்ப்போயிருந்து
செம்பொன்மணிறதமேறிசெங்கதிரோனுதிக்குமுன்னே
வேதப்பிராமணர்போல்வேதமதுதானோதி
சாதிப்பிராமணர்போல்சாஸ்திரங்கள்தான்முடித்து
அங்கமெல்லாம்தானெடுத்துஅன்பாகநீரில்விட்டு
நீர்க்கடன்களுள்ளதெல்லாம்நிறைவேற்றித்தங்காளும்
கெங்கையிலேநான்போட்டுகிலேசங்களுள்ளதெல்லாம்
கல்லுக்கடன்கழித்துகைலாசஞ்சேருமென்று
சொல்லியேதங்காளும்துயரமெல்லாம்உள்ளடக்கி
மூதாக்கள்சீர்பாதம்சேருமென்றுதோளியரே
மாதாக்கள்தங்களுடன்மகிழ்ந்திருங்களென்றுசொல்லி
கண்ணீர்க்கடன்கழித்துசாஸ்திரமுந்தான்முடித்து
துக்கமுள்ளசாஸ்திரங்கள்துயரமெல்லாந்தான்முடித்து
திக்கெனத்தானம்பண்ணிசிவநாரைத்தெண்டனிட்டு
மானத்தைத்தானோக்கிமழைமேகத்தைத்தானழைத்தாள்
ஊசிமேனமின்னல்மின்னிஉச்சிதமாய்க்காலிறங்கி
கருமேகந்தான்சூழ்ந்துஒருகனமாரிபொழிந்திடுமாம்
மங்கியேமேகமதுமாசாரவேதானிறங்கி
பொங்கியேதானெழுந்துஒருபூமாரிபொழிந்திடுமாம்
மலையில்வெள்ளம்பிறண்டுவையனதிதன்னில்வற
தலையானகாவேரிதானேபெருகிவர
விந்தையுடன்தானம்பண்ணிதங்காள்விசகரிபோகாமல்
அந்தநல்லவேளையிலேஆயிழையாள்நல்லதங்காள்
அண்ணருடன்பிறந்தஅறக்காணித்தங்காளும்
பொன்னருடன்பிறந்தபேடைமயில்வாகனமும்

சங்கருடன்பிறந்தசாதிமரிக்கொழுந்து
பாற்கடலில்பள்ளிகொள்ளும்பச்சைமால்தன்னருளால்
பொற்களத்தைத்தான்தேடி புலம்பிவழிபோகவென்று
படுகளத்தைத்தான்தேடி பத்தினியாள்தானடக்க

தங்காள் படுகளம் தேடிப் போகிறது.

வைகைநதிபோயிவந்துவெள்ளத்தங்காளும்
தீர்த்தங்கள்தானாடி திசைதோறும்தெண்டனிட்டு
உடுத்துந்துயில்புனைந்துஒருசிறகுமுக்காடுமிட்டு
எடுத்தாள்திருக்கரகம்ஏந்திழல்பொற்கரகம்
நற்கரகந்தானெடுத்துநல்லதங்காளுத்தமியும்
பட்டுநிலந்தூர்ந்துவரபாடகங்கலோலமிட
இட்டபணிதான்குலுங்கவந்திவந்தாள்திருக்கரகம்
முத்துவடந்தானசையமுகமதிலேமுத்துருள
பக்கங்குடைபிடிக்கபவளச்சங்குஓசையிட
திக்குத்திசைநானிரதிருச்சங்குஓசையிட
நாகங்குடைபிடிக்கநல்பாம்புதாலாட்ட
மேகங்குடைபிடிக்கவெள்ளமுரசுதானதிர
காருளவங்கிஷத்தில்கண்மணியாய்வந்துதித்த
பொன்னருடன்பிறந்தபொற்கொடியாளன்னோம்
சங்கருடன்பிறந்தாள்குளலாளன்னோம்
அண்ணனைத்தான்தேடி அருக்காணியிளவரசு
விண்ணுலகம்தனியாளும்வெய்யோனும்தானுமப்போ
அக்கினியைக்கோட்டையிட்டான் ஆதபகவானும்
சக்கிரகிரிக்கோட்டையெனசமைத்தானேசூரியனும்
வாயுராசன்வழிதூர்க்கவருணராசன்தீர்த்தமிட
மேகராசன்குடைபிடிக்கவெள்ளாமரசியுந்தான்
அன்னமுடன்தாராவும்அருகிருந்துபேசிவர
வன்னக்கிளியினங்கள்வாய்வார்த்தைபேசிவர
மயிலினங்கள்குயிலினங்கள்மாடப்புறாவினங்கள்
வெயிலினங்கள்தான்மறைத்துமேகமதுசூழ்ந்தாப்போல்
பருந்துடனேபச்சிகளும்பக்கமேசூழ்ந்துவர
சிறந்ததொருபச்சிகளும்செங்கனிகள்கொண்டுவரும்
தொடர்ந்துவந்தமானிடரேதூரத்தேநில்லுமென்று
அணுகிவந்ததாதியரேஅப்புறத்தேநில்லுமென்று
ஊருக்கனுப்பிவிட்டாள்உத்தகொருதாதியெல்லாம்



கட்டதாள்பிறவியருமல்லஅண்ணனையுந்தான்தேடி
சீதையெனும்பெண்பிறந்துதென்னிலங்கைசிறையிருந்தார்
மாதுடையதன்பொருட்டால்மடிந்தானேராவணனும்
அய்யோத்திநகருளும்அச்சுதனார்தன்னாலே
சென்றதுரோபதையாள்செத்தான்துரியோதினன்
சூர்ப்பநகைதான்பிறந்துசுந்திரனார்தன்னருளால்
முன்னுப்புப்பகையாலேலச்சுமணனார்தனனருளால்
கன்னகையாள்தான்பிறந்துகணவழிமீண்டாப்போல்
நானொருவிபெண்பிறந்துஎங்களண்ணனையும்மீட்டிடுவேன்
வெய்யனையதோளியரைவிண்ணுலகம்யேற்றிவிட்டு
நாயனையுங்காணுதநான்நடுவனத்தேவந்துவிட்டேன்
ஆதிசிவனேஅறியேன்பிறமதேவா
பாதியெழுத்தையெழுதிசிவனேபாருலகில்விட்டீரோ
குறையெழுத்தைநீரெழுதிகொடுவனத்தேவந்தேனே
மதியூகியானாலும்சிவனேமண்ணுலகில்பிறந்தவற்கு
விதியைவிலக்கமுடிவிசாரமுண்டோஅண்ணாவி
ஆனதொருபஞ்சவர்கள்அருங்கானகத்தேதான்போயி
கானகத்தில்த்தான்போயிகனிகளையுந்தானருந்தி
மெய்யெழுத்தையெழுதிமீண்டுவந்தார்பஞ்சவர்கள்
பொய்யெழுத்தைநீரெழுதிபோனீரோநடுவனத்தே
அண்ணருடன்பிறந்தஅருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்தபொற்கொடியாலன்னோம்
சிங்கம்போல்ச்சீறிசிவனேஅபயமென்று
பொங்கியெழுந்துபுலம்பியேதானழுது
திக்குத்திசையறியேன்திகைத்துவளிவாறனடா
பக்கத்துணையில்லாமல்அண்ணாவிபடுகளத்தில்மாண்டேசன்ன
உற்றதுணையில்லாமல்நானொருத்திவளிவாறனடா
பிறந்துணையில்லாமல்நான்பேதகமாய்வாறனடா
வாசல்ப்படிகடந்தறியேன்நான்வழிதேடிவாறனடா
தேசங்கடந்தல்லவோதிகைத்துவளிவாறனடா
ஆண்டவனாருளாலேநீங்கள்அய்வருமேதான்மடிந்தீர்
தன்மரேபொன்னுண்டார்தமிழ்வீமன்தம்பிசங்கன்
அம்பெடுக்கும்விசையனைப்போல்அத்தைபிள்ளைபெருமாளும்
பரிக்குநகுலனைப்போல்பாங்கானமைத்துனரும்
சகாதேவராசனைப்போல்தாஷ்டிகமுள்ளவர்கள்
பாருளும்புண்ணியர்கள்பஞ்சவர்கள்தான்பிறந்து

பொன்னர்சங்கர் அம்மானை.

ஏருள் துரோபதைக்குயிலையானநல்லதங்காள்
ஆனதொருபஞ்சவர்கள் அருங்காணியில்த்தான்போயி
பாருளும்புண்ணியர்கள்பஞ்சவர்களய்வரைப்போல்
விதிவிளக்கமுடிவிசாரமுண்டோ அண்ணாவி
மானத்தருந்துதிபோல் அண்ணாவிமயங்கவளிவாரனடா
அய்வரைப்போல் அய்வர்கள்நீங்களதிலீர்தான்பிறந்து
சொல்ப்படியுந்தப்பாது துரோபதையாள்காரொருவி
அய்வர்பிறந்துநீங்கள் அரசாண்டவளநாட்டை
மெய்வாழ்வோமென்றுவீத்திருந்தோமின்னாட்டில்
சிற்றாலைப்பட்டணமும்சூழ்ந்தநெல்லிவளநாடு
ஆலத்தூர்பட்டணமும்அளகுபொன்னிவளநாடு
நெல்லிவளநாடுநிகரில்லாக்கோனாடு
அந்தவளநாட்டைஆண்டிருக்கும்நாளையிலே
கோனாட்டுக்காருளன்கோடையிடிதம்பிசங்கன்
மேனாட்டுக்காருளன்வீரியவானத்தைதபிள்ளை
வெட்டிக்கெலித்துவா வேடுவர்மேல்ப்போனவர்கள்
நாடுபடைதன்னைவென்றுநாளிகையில்வரக்காணேன்
தங்கப்பறியேறித்தளங்கூடிப்போனவர்கள்
கொங்கரையும்சங்கரித்து அண்ணாவிகோட்டைவந்துசேருமல்
வெட்டிக்கெலித்தல்லோ அண்ணாவிவீடுவந்துசேராமல்
பட்டாணிராவுத்தர்போல்படுகளத்தில்சாய்ந்ததென்ன
தார்க்கப்படைபொருதிசவுரியங்கள்தாளாமல்
ஏற்கப்படைபொருதியிரணகளமானீரோ
வர்ணக்கச்சைவரிந்துகட்டிவலதுபுரம்சொருகிவிட்டு
எண்ணைக்கச்சைவரிந்துகட்டியிருபுறமும்சொருகிவிட்டு
இடியம்புவேலெடுத்துஎரிவானக்குழலெடுத்து
கடியபரிமீதேறிவேடுவரைக்காலனுக்கேவிருந்தாக்கி
தம்பட்டம்பேரிகையும்...வில்முரசுதானதிர
கும்பிட்டசேவுகரும்கோடிபடைசேனையுடன்
கொங்கரையும்சங்கரித்துக்கோடிபடைகருவறுத்து
வெத்திக்கம்பு...பிடித்து அண்ணாவிவீடுவந்துசேராமல்
முல்லையிருவாட்சிமுகைமலர்ந்தசெண்பகமும்
வண்ணமலர்தான்முடிக்கும்மயிர்க்கூந்தலானதெல்லாம்
பாந்தாலடிவிரியலைபாரமலைச்சொருகுதனில்
தான்சொருகிவிரித்துதுக்கத்தலைகோலில்விதிப்படியோ
முடிகோதிமயன்னையிட்டுமுடிக்குமந்தக்கொந்தையெல்லாம்



செடியாலொருமயிருமண்ணாவிசிக்கிரிச்சக்காரியமென்
சம்பங்கியெண்ணையிட்டுத்தான்முழுகுங்கொந்தையெல்லாம்
வெம்பியதோர்கானகத்தில்விசிறக்கக்காரியமென்
சிந்தைதகலங்கித்தங்காள்சிவனேயுடையமென்று
அந்தவனங்கடந்துஅவ்வனமேபோகையிலே
முன்னாளில்ராவணனும்மூவுலகையாண்டாப்போல்
இன்னாளில்நீங்கள்ராச்சியத்தையாளமால்
நான்கண்டஆசேசம் அண்ணாவிநமக்கேபலித்துடா
கைமேல்ப்பலித்துதடாகாரணசோவீரியரே
மெய்யாய்ப்பலித்துதடா சின்னண்ணயென்பிறவி
முத்தத்துப்பொன்முரிந்துவிழக்கண்டேநான்
சித்திரமணிக்கூடங்களும்திருக்தாணும்மிடியக்கண்டேன்
தலைக்கடையிலுறக்கிணறுதாருமாறுயிடியக்கண்டேன்
பிறக்கடையில்தலைவாழைபோர்ந்துவிழக்கண்டேநான்
பொன்னளக்குநாழிகையும்போர்க்களத்துவேடுவர்கள்
மண்ணாழந்துவிளையாடக்கண்டுசொன்னேனண்ணாவி
முத்தளக்கும்பொன்னாழிமுனைவேடர்தானெடுத்து
வத்தளமுந்துவிக்கக்கண்டுசொன்னேன் அண்ணாவி
மாணமுட்டத்தானிருத்திவமர்திருக்குஞ்சாவடியும்
ஆனைகட்டுஞ்சர்வடியும்அருகுமுளைக்கக்கண்டேன்
கதிரோனுதிக்குமுன்னேகட்டிக்குரப்பமிடும்
குதிகரைகட்டும்ராயமதுகூடம்பாழாகக்கண்டேன்
பூராயமானதொருபொன்னிவளநாட்டாரும்
பேரூருக்கோட்டையெல்லாம்பேர்ந்துவிழக்கண்டேநான்,
சித்தூருஅம்பலமும்சிருமதுரைபட்டணமும்
அக்கினியும்சூழ்ந்துஅடியோடேவேகக்கண்டேநான்
வய்யவளநாடாளும்வாளவீரன்அத்தைபிள்ளை
செய்யபெருமாளும்சிலைநான்மதரிக்கக்கண்டேன்
அய்யாதகோபாலன்அருளாலேவந்துதித்த
வய்யபெருமாளுக்குவளதுபுறம்அம்புபட்டு
நிலையானஅம்பட்டுநிலத்திலேசாயக்கண்டேன்
எதிரில்லாப்பெருமாள்ஏறிவருங்குதிரை
பதியிளந்தாரவணர்போல்படுகளத்தில்சாயக்கண்டேன்
வெத்தியுள்ளசங்காணர்வெட்டிப்படைதான்கெலித்து
அத்தைபிள்ளைதம்பிசங்கன்அம்புபட்டுசாயக்கண்டேன்
ஆனைபடைதளமும்அத்தினையும்மடியக்கண்டேன்
தெண்டிரைசூழவ்வனத்தில்நான்திகைத்துவழிபோகக்கண்
கோனாட்டுப்பரிகுலன்குமாரசங்கன்தன்மேலே

மேனாட்டுவேடுப்டைமெய்தூர்ந்துவரவுங்கண்டேன்
நான்கண்டதொருசூதேசம்நமக்குப்பலித்துதா
என்றுசொல்லிதங்காளும்யீஸ்பரனேதஞ்சமென்று
அந்தவனங்கடந்துஅய்வனமேபோகையிலே
சிந்தைகலங்கியல்லோசிவனேஅபயமென்று
கண்கள்சிவந்துகடக்கண்ணில்நீர்சொரிய
பெண்கள்துணையில்லாமல்பிறந்துவந்தேனிவ்வனத்தில்
மாருபடாமேனியெங்கும்மாருபிடித்திளுக்கு
தூசுபடாக்கூந்தலெல்லாம்சூரிமுள்ளுததானிழுக்க
வெள்ளிவனக்காட்டில்வெளவிமுள்ளுத்தானிழுக்க
விசியகைபிரண்டும்மேலுதிரந்தான்பாய
கூசிமெள்ளத்தங்காளும்கொடுங்கானகம்போகையிலே
அய்யோசிவனே ஆதிமகாதேவா
குயில்ப்போல்புலம்புஞ்சத்தம்தங்காளுக்குகுணமுமதுவோர்கி
மயில்ப்போபுலம்பிமண்மேல்விழுந்தளுதாள்
சோபமெத்தத்தாளுங்கருண்டுவிழுந்தழுதால்
சிவ்வனை ப றுபுலம்பினதுசிவலோகந்தான்கேட்டு
ஆதிசிவனாக்குஅய்யர்க்குத்தான்கேட்டு

ஈஸ்பான் கன்னிகளை தங்காயிக்கு தண்ணீர்குடுக்க அனுப்பல்.

நீதியுள்ளகாரரளர் நிஷ்டூரிருவருண்டு
பொன்னும்பலத்தனிலெபுகழ்பெற்றகாரரளன்
அய்வர்கள்போல்ப்பிறந்து அரசாளும்நாளையிலெ
மேனாட்டுவேடுவரைவெட்டிக்கருவருந்து
பட்டார்களென்றுசொல்லித்தங்காள்படுகளத்தைத்தான்தேடி
கட்டழகிதானும்கானகத்தில்விழுந்துவிட்டாள்
[illegible] ஈஸ்பானா
மலையாவசந்தல்லவோமயங்கிவிழுந்துவிட்டாள்
அவ்வுலகில்நீபோயி ஆனநல்லசங்கையமொ
பக்கமேநீயிருந்துபரிவுசொல்லிஎழுப்பிவிட்டு
இங்கனவெவந்துவிடுமியல்பானகன்னியமொ

கன்னிகள் பூலோகத்தில் வந்து தங்காளுக்கு தீர்த்தம் கொடுக்கல்.

நல்லதென்றுகன்னிகள்நன்மையுடனெ எழுந்து
மழைக்காத்துத்தென்றல்போல்வந்தாளெகன்னியவள்
வாதூாசனையும்வருணனையும்தானழைக்க
கன்னியவள்தானும்கார்மேகந்தானழைக்க



தூதுகிறிவளஞ்சுழற்றுபொன்மாரிபெய்கிடுமாம்
ஊசிபோலமின்னியல்லோஉரிபோலகாலிறங்கி
பாசிபோலெபறந்துபலபலென்றுபொழிந்திடுமாம்
தேவேருசெரிடதிருவிழுத்திறுமேலதான்
காவேரிநதியிலேகரைபுறண்டுவெள்ளம்வற
அப்போஅண்ணருடன்பிறந்த அந்தகன்னி [illegible]
பொன்னருடன்பிறந்தபொற்கொடியாள்கல் [illegible]
மயக்கந்தெளிந்தல்லவோமயில் போலெ [illegible]
தியக்கந்தெளிந்தல்லவோ [illegible] மொழியாள் [illegible]
தீர்த்தங்கள்தானாடிசிவனேஅடிபணிந்து
நீற்றையள்ளித்தான்புனைந்துநீலவர்ணைப்பட்டுடுத்தி
உடுத்தாந்துயிலைப்புனைந்துஒருநற்றகுழக்காடுமிட்டு
எடுத்தாள்திருக்கரகம்வந்தாளேவேப்பங்குழை
வேப்பங்குழைபிடித்துத்தங்காள்விசிகடக்கலுற்று
காப்பிட்டகால்நோகத்தங்காள்கலங்கிசிப்புலம்பி
நடந்தாள்பிறவியருமல்லெஅண்ணமாருந்தேடி
அண்ணமார்தனைத்தேடி அழுகதாண யிளவரசு
நிலைகண்டுநிக்காமல்நினைவுகருமெய்மறந்து
தலைமேலேகைகளைவைத்து [illegible]
ஏங்கிபுலம்பியல்லோ [illegible]
ஏங்கியதங்காளும்ஈஸ்பரனே தஞ்சமென்று
இட்டஎழுத்தின்படியொரசைப்படவந்துமெ
கட்டியதேர்பாரமுடன்கருங்கச்சைசொருகி
பட்டாவுங்கேடையமும்பருங்காகம் [illegible] பிடித்து
வட்டமிடுமெபறியேரிமணிக்குடருளைதலைமிதித்து
கொக்கிரகூண்டமந்திரவாள்கொடுங்கையிலேதாவெண்டுபத்து
வங்காளசூரிவாங்குசம்தாபிடனே
எழுபதுகட்டியடிகதயிறுப்புநலையேடையுமம்
தழுவியேதானணைத்துதன்முதுகிலேபோட்டு
சிங்கப்பறியேரிசிலைவேடாத்தியும்
கொங்கரையுந்தான்வனைத்துக்கோடிபடைக்கருவறுத்து
வெட்டிப்படைகெலித்துவிடுதிவருகையிலே
கட்டழகிபாதகத்திநான்கண்குளிரப்பாற்றனே
பாக்கும்பறியேரிபாவியையாய்வருகையிலே
சிறக்கும்பறியேரிதெருவீதிவழிவருகையிலே
குத்திவெட்டிக்குடல்பிடுங்கிகூடஇறக்கட்டமாக

வெட்டித்தாக்கி வெங்கலகாட்டத்தினையும்
நாடுகாணிமேடைவுங்கல்லத்தையூருபூதமிட்டு
மேடுகாணிதான்வரைக்கும்மேனுபோகமட்டு
தாக்கான தாளம்பாடி தலையநாடுள்ளமட்டும்
திட்டையநாட்டையெல்லாம்தத்துனிநகத்தாக்கி
மூக்கனுங்குரிச்சிமட்டு முடிக்கித்தாக்கி
வலவனூர்மங்கைதயிலேயெடுத்துத்தாக்கி
மூலத்துறைகடந்துமூலனூர்பூதமட்டும்
வவ்வால்த்துறையளவும்வளைந்துவெட்டித்தாக்கி
நீலம்பூர்க்கரைவரைக்கும்வினைக்குடல்களற்றுவிழ
காவலூர்மூலத்துறைநடுக்கரைக்குட்டைமட்டும்
கல்பாறைவழியிலே கூட்டித்தாக்கி
காடையூர்பூதமட்டும்களுகுநரிபசிதீர
கொங்கக்கன்னிபாடிமட்டும்கொண்டாங்கியலைவரைக்கும்
வெங்கலக்கொம்புநீவெட்டிமுரசரைந்து
மரித்துக்குடல்பிடுங்கிமஞ்சைநகர்மங்கையிலே
நரிக்குவிருந்துசெய்து அண்ணுவிகளிவந்துசேராமல்
கொங்கரையும்சங்கரித்துகோட்டைவந்துசேரமல்
சேர்ந்துவெட்டிக்கருவறுத்துசேனைதளம்தான்கூடி
நூர்ந்துவெட்டிக்கருவறுத்துப்பொற்கொடியாள்பார்த்திருக்க
கட்டியதோர்பாருமுடன்களமடியக்காணமென
சிந்தைகலங்கித்தங்காள்சிவனே அப்பையென்று
அந்தவனங்கடந்து அவ்வனமேபோகையிலே
மருந்துக்குமணிமாலைகாப்புனந்தனிலே
அருந்தத்தப்போல்பிறவி அழுதுகொண்டுபோகையிலே
பேயுமபிசாசுப்பிள்ளைகாவனந்தனிலே
பேய்போலேதின்றுபுலம்பிவழிபோகையிலே
காப்பிட்டகானுநகங்கொல்லத்தட்டிதானிட்ட
கூப்பிட்டுப்புலம்புகிறாள்குன்றுடையான்தன்மகளும்
அண்ணாமிருவரையும்அன்புடனேதான்தேடி
என்னரியக்கானகத்திலேநந்தினையாள்புலம்புறது
மன்னுமவமுருக்கும்மயக்கங்களைதானுந்திரும்
அன்னிற்நகனுனைகளும் அயிர்தந்தூடியாது
பன்னிவிரைவெடுத்துப்பாம்புவாய்த்திறக்காது
மாடுபுள்ளுடியாதுமலடிமனம்நிடுமே
காடுகனில்வாழும்காடிபுலிசிங்கமெல்லாம்



வண்ணக்குறமொழியாள்வாயோசைகேட்டவுடன்
தன்னிகுறல்தான்கேட்டுகலங்கியேஓடிவந்து
கறடிபுலிசிங்கமெல்லாம்க வலாய்ச்சூழ்ந்துவரும்
அழுதுபுலம்பிஅய்வனபோகையிலே
அந்தவனங்கடந்துஅப்புறமேபோகையிலே
கந்தம்கஸ்தூரிகலந்துமனம்விசிடுமாம்
பரிமளங்கள்தான்வீசும்பாங்கானஅவ்வனத்தில்
நாகமலைவிரமலைநாவிடமூம்சூழ்ந்தமலை
தோகமயிலாடிநிக்கும்சந்திரநாற்போற்றுமலை
விண்ணோரிறங்குமலைவேதியர்கள்போற்றுமலை
ஆதிசிவநாரைஅடிபணிந்துபோற்றுமலை
கன்னியர்கள்வாழுமலைகையிலங்கிரிவிரமலை
என்னரியபூசைபண்ணிவீன்பாவையபோற்றுமலை
காகமெடுத்தாடுமலைகன்னியர்கள்போற்றுமலை
பரமசிவநாரைபரிந்தபசுபண்ணுமலை
நாகம்விளையாடும்மலைதற்றவசுபண்ணுமலை
மேகம்படருமலைவேதியநாற்போற்றுமலை
காகம்பரவாதுகடமானுறங்குமலை
நாகமெடுக்காதமலைசதுரகிரிவிரமலை
பாரமலைதிசைநோக்கிபைங்கொடியாள்தான்புலம்ப
விரமலையடிவாரம்தங்காள்விரும்பிப்புலம்புஞ்சத்தம்
மலைகள்சிலையோடும்வருந்திப்புலம்புஞ்சத்தம்
அண்டங்கள்சிலையோடும்அலரிப்புலம்புஞ்சத்தம்
மங்கையவள்சத்தமதுமலையடியில்கேட்டிடவே
தங்காள்புலம்புஞ்சத்தம்தரணியெல்லாம்தானதிரும்
யானெனவும்தேன்மொழியாள்வருந்திப்புலம்புறது
கானகத்தில்வாழுமந்தகறடிகண்டுஓடிவந்து
தங்காளருகில்வந்துதாயேயெனப்பணிந்து
கூந்தல்குலைவாடினஅம்மாகுலக்கொடியேஉந்தனுக்கு
வந்திழையாள்தன்மயிரைக்கறடியெடுத்தேமுடிந்திடுமாம்
விரித்தமயிர்முடித்துவிரும்பியங்கேசூழ்ந்துவரும்
சின்னண்ணயென்பிறவிஎன்னைசிறந்தலைபதியில்விட்டு
என்னைத்தனித்துவிட்டுஅண்ணுவியங்கேவந்தாரண்டயோ
அழுதுபுலம்பித்தங்காள்அய்யோசிவனேஎன்று
தங்காள்புலம்புஞ்சத்தம்தரணிகளும்தானடுங்க
புருஷமிருகமெல்லாம்பொற்கொடியைத்தான்பணிந்து

வழித்தூத்துமுள்ப்பொருக்கிவாகாகச்சூழ்ந்துவரும்
கண்டபேறண்டப்பச்சிகாட்டிதுள்ளமிருகமெல்லாம்
முகமாறடியாமல்முன்னேபிடித்துநிக்கும்
விருசாலசூரியன்மேகமெல்லாந்தான்கூடி
வெயிலினங்கள்தெரியாமல்மேலேகுடைபிடிக்கும்
கூட்டில்க்கிடக்குயந்சகுயில்கள்கிளிகளெல்லாம
அன்னமுடன்நாருவும்அவ்வனத்துப்பச்சியெல்லாம்
வன்னக்கிளிகளெல்லாம்தங்காள்க்குவாய்வார்த்தைபேசிவரும்
மயிலினங்கள் குயிலினங்கள்மாடைப்புறவினங்கள்
வெயிலனங்கள்தெரியாமல்மேலேபறந்துவரும்
சோடாளோரண்டுதோகைகல்லான்போரவழி
எத்தானையாங்களெல்லாம்பிருபிறமும்பிடிங்கிவிடும்
காட்டானைமுள்ப்பொருக்கறடிபுலிதடமொதுக்க
…துராசன்வளிஞூக்கவருணராசன்மழைதொழிக்க
…ராசன் குடைபிடிக்கவெள்ளார்மறசியுந்தான்
நாகலோகம்பெருந்தீவுநடுத்திவோலைகயிலைங்கிரி
கயிலங்கிரிபோமலைகைலாசவிரமலை
மேகம்வந்துசரிபுமலைவிண்ணுவற்கள்போற்றுமலை
…காலைவிமலைநாளடமுஞ்சூழ்ந்தமலை
…ளக்கன்னிமார்களதோத்திரங்கள்செய்யுமலை
…மலைஅண்ணுவிபாறமானவிரமலை
…னைருவாள அருந்தவசுசெய்யுமலை

… யககாண்டியம்மன் தபசு.

…நுளிவந்தபாங்காணதெய்வகன்னி
…பெரியபெரியக்காண்டிமாதாவும்
அரியபெரியகாண்டிஅய்யன்குமார்த்தியும்
சிவ்வனைமிகநினைந்துசிவபூசைநான்முடிக்க
கற்புடையகன்னியர்கள்கைலாசஞ்சேர்வதற்கு
அருந்தவசுதானிருக்கஅரியபெரியகாண்டி
செப்புக்குடம்கவிழ்த்துஏழுசெப்பூசிதானிருத்தி
செப்பூசிமேலிருந்துசிவபூசைநான்முடிக்க
கருந்தபுலித்தோலுங்கலைமானின் ஆசனமும்
உறித்தபுலித்தோலும்உள்ளிடையிலாசனமும்
…ற்றும்புலித்தோலும்புள்ளிமானாசனமும்
சாற்றும்புலித்தோலும்சங்கமணித்தாவடமும்
அரையிடும்வஸ்திரமும்அள்ளிதண்டைபூணூலும்



ஏகவேஷ்டிதானணிந்துவகாந்தவிற்திருப்பு
காலிலிடும்பொற்சிலம்பும்கைநிறைக்கருத்திருகூடம்
மேலிடும்வெண்ணீறுமேன்மையுடன்தானணிந்து
திருநீற்றுப்பளமேந்திசெப்பமுடன்தானுமப்போ
ஆதிசிவன்தன்மகளும்அருந்தவசுதானிருந்தால்
நீதியுடன்பெரியாக்காண்டிநின்றுள்பெருந்தவசு
ஊசிமுனைமேலிருந்துஒருகோடிகாலந்தவசிருந்தாள்
பாசிமுனைமேலிருந்துபருந்தவசுபண்ணுகிறாள்
விருந்தசடைவேருணவிரும்பித்தவசிருந்தாள்
ஆலுடனேவேம்புகளும்அன்பாய்விழுதுவிட்டு
பால்வேம்புவிருதோடபாரத்தவசிருந்தாள்
தவசிருந்துமனஞ்சலித்துதானிருக்கும்வேளையிலே
அண்ணருடன்பிறந்தஅருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்தபேடைமயில்த்தங்காளும்
பாரத்தைப்பார்த்தகண்ணும்தங்காள்பலதிசையும்பாருமல்
வீரமலைதிசைநோக்கித்தங்காள்விரும்பிவழிபோகையிலே
அண்ணரைத்தான்தேடிஅய்யோசிவனேஎன்று
கூப்பிட்டுபுலம்புகிறாள்குண்ணுடையான்தன்மகளும்
படுகளத்தைத்தான்தேடிபைங்கொடியாள்புலம்புஞ்சத்தம்
மடிந்தகளந்தனைத்தேடிவருந்திப்புலம்புஞ்சத்தம்
…லைகள்திடுக்கிடுமாம்மாமலைகள்சிலையோட
நிலையிலுள்ளமரங்களெல்லாம்நின்றுதிடுக்கிடுமாம்
தங்காள்புலம்புறதுதரணியதிர்ந்திடுமாம்
தேங்கியேயானகத்தில்த்திகைத்துபுலம்புறதை…
அருந்தவசுதானிருக்கும்அய்யன்குமார்த்திகண்டு
பெரியதவந்தானிருந்தபெரியக்காண்டிமாதாவும்
…செவியில்க்கேட்டிடவேதானேமிகச்சினந்து
சிறுகப்பெருந்தவசில்ஒருசிறகுராலும்தான்கேட்டு
மணிதாண்டாப்புனத்தனிலேமகாதவசுபண்ணையிலே
கனிதமுடன்நான்கேட்கக்காரணமேதோவென்றுசொல்லி
அருஞ்சாலகந்தனிலேஅருந்தவசுநிக்கயிலே
திருச்செவியில்க்கேட்டுதிரும்பிமிகச்சினந்து

பெறியக்காண்டி கன்னிகளை தங்காள் பேரில்
ஏவி விடல்.

ஒருபெண்ணாள்குரல்சத்தம்பெரியசத்தம்கேள்க்குதடி

ஒருகன்னியவள்சத்தக்கனைசத்தம்கேள்க்குதடி
ஆறடிகன்னிகளேஅரிந்துமெள்ளவாருங்கடி
பாருங்கடிகன்னிகளேபருங்காடுமேதேடி
ஏழுபேற்கன்னியருமெளுந்திருந்துதானுமப்போ
பெரியககாண்டிகன்னாருக்கல்கன்னிகளுமோடிவந்து
யெங்களையேயழைத்தாடயென்தாயேயின்பரியே
ஆறோருபெண்ணாளும்அழுதுகொண்டுதான்வாரான்
பேயோபிசாசோதெரியவில்லைகன்னியரே
காயாமலைடிபெற்றகன்னியரோவென்றறிந்து
அவளைக்கொன்றுசினந்தீர்த்துக்கொலைசெய்துவாருங்கடி
கண்டுசினந்திருந்துகடிகியிங்கேவாருங்கடி
வியல்பெரியமாதாவும்யேவிவிட்டாள்கன்னிகளை
ஆறுபேர்கன்னியருமடிபணிந்துதானோடி
கறடேறிப்பார்க்கையிலேகண்டாரேதன்னந்தனே
கறட்டைவிட்டுகீழிறங்கிக்கெஞ்சினமாஓடிவந்து
ஓடிவந்துகன்னியர்களுத்தம்மைக்கண்டவுடன்
பொற்கொடியைக்கண்டவுடன்போற்றியடிபணிந்து
மானத்தருந்துதிரேயிந்தவையகத்தலக்கண்டதில்லை
அன்னநடைதங்காளைஅன்புடனேபார்த்துநின்று
தங்காள்புலம்புறதைக்கண்டத்தக்கன்னியரும்
கூந்தல்விரித்தல்லவோகூடிமயிர்விரித்து
வன்னமயிர்விரித்துவசந்தங்களுந்தானோடி
கூந்தல்விரித்தல்லவோகொண்டலந்தானடித்து
பாடிக்கொண்டுகன்னிகளும்பக்கமேசூழ்ந்துவர
சிரிச்சினந்துசெங்கண்பொரிபறக்க
கர்த்தன்குமாரத்தியங்கேகடியசினந்தானாகி

பெறியக்காண்டியம்மன் மந்திகளை யேவி விடல.

மெத்தமனம்வெகுண்டுவெகுகோபந்தானாகி
காமனேவிவிட்டகன்னிகளும்யினித்திரும்பவில்லையென்று
இன்னம்வரக்காணோமென்றுஎரிந்துமிகச்சினந்து
பக்கத்தில்த்தானிருந்தபாங்கானகன்னியரே
அழைத்துமெள்ளப்பெரியக்காண்டிஆனதொருகன்னியுடன்
பார்மலைவாளுமந்தபருமூசுப்பந்தியெல்லாம்
திக்கெனவெநீயோடிசீக்கிறமேஅழையுமென்றாள்



கடிகியேதானோடிகன்னியவள்தானுமப்போ
மந்திவனந்தேடிக்கண்டுமந்தக்கன்னியவள்
அம்மைபெரியக்காண்டிஅழைத்துவாச்சொன்னாளெங்காண்
மந்தியெல்லாந்தான்கூடிவந்துமங்கைஅடிபணிந்து
திக்கெனவேஓடிவந்துதெண்டனிட்டும்வேலையேலே
ஒருமானிடஜன்மமவருகுதடாமந்திகளே
அவளைக்கொன்றுசரிபிடித்துகொலைசெய்துதானுமங்கே
நாமனேவிவிட்டகன்னிகளையிறக்கடித்துவாருமென்றாள்
மந்திகளுந்தானோடிமரமேறிப்பார்க்கையிலே
கன்னியவள்வாரதுவுங்கண்டுமேதமந்தியெல்லாம்
கண்டுமனஞ்சினந்துமந்திகடுசிவருகையிலே
கண்டந்தமங்கையரோசனிகளனுக்கொண்டுவந்து
தங்காளுக்குமுன்னாகத்தாவிக்கொண்டின்றிடுமாம்
வேரோடேமரம்பிடுங்கிவீதிகளைத்தாக்கிடுமாம்
அப்பமேவேபெரியக்காண்டிஅதிகோபந்தானாகி
நாமனேவிவிட்டமந்திகளும்யினித்திரும்பவில்லையென்று
கோவித்துப்போனமந்திகுலவையிட்டேவரக்காணேன்

பெரியக்காண்டியம்மன் நாகங்களை யேவி விடல்.

என்றுபெரியக்காண்டிஎரிபாகக்கண்சிவந்து
ஆறடிகன்னிகளேஅழையுமென்றாள்நாகமெல்லாம்
ஐந்தலைநாகமெல்லாம்அழைத்தோடிவாருமென்றாள்
செந்தலைநாகமெல்லாம்சீக்கிரமாஅழையுமென்றாள்
கருந்தலைநாகமெல்லாம்கடிகியேதானழையும்
அழைத்திடவேநாகமெல்லாம்அர்ச்சினமேஓடிவந்து
வந்ததொருநாகமெல்லாம்வகையுடனேதெண்டனிட்டு
ஒருபொன்னாள்புலம்பியிங்கேவாறதுவுங்கண்டேனே
அவளைக்கொண்டுசரிபிடித்துகொலையிட்டுவாருமென்றாள்.
ஏடிபதொருநாகங்களைக்கண்டவளைக்கொன்றுவிட்டு
ஏவிவிட்டமந்தியெல்லாம்யிறக்கடித்துவாருமென்றாள்
சிரிச்சினந்துசென்னாகமுள்ளதெல்லாம்
ஐந்தலைநாகமெல்லாம்அலரிச்சினத்துடனே
போனதொருநாகமெல்லாம்பொற்கொடியைக்கண்டவுடன்
தங்காளைக்கண்டவுடன்தான்போனநாகமெல்லாம்
கூரியநாகமெல்லாம்குணந்திரும்பிப்படம்விரித்து
படம்விரித்துகுடைபிடித்துபக்கநிழல்விட்டிடுமாம்

குடைபோலேபடம்விரித்து நந்தித்துவிளையாடி
இந்தநாகமெல்லாம்அளகுபடம்விரித்து
செந்தலைநாகமெல்லாம்சேர்ந்துபடம்விரித்து
தங்காள்தலைமேலேதான்விரித்து ஆடிவரும்
அய்யன்குமார்த்தியும்அதிகோபந்தானாகி

பெரியக்காண்டி வீரமகாமுனியே அனுப்புதல்

அருகிருந்தகன்னியேஅழைத்துமெள்ளத்தாயாரும்
வில்பிளந்துசாய்த்தொடுக்கும்வீரமகாமுனியே
மலைபிறந்தகாளையிலேவாரும்மகாமுனியே
சிலைபிழந்துவில்லேற்றும்சிவனுடையதன்மகனே
வீபூதிவீரனீவீரமகாமுனியே
அழைத்தோடிவாருமென்று அனுப்பினாள்கன்னிதனை
விந்தையுள்ளகன்னியரும்விரைந்துடனேதானோடி
கண்டுமகாமுனியைகன்னியரும்சொல்லிடுவாள்
அண்ணேமகாமுனியே அய்யன்குமார்த்தியும்
உன்னைவரச்சொன்னாள்காணென்னண்ணேமகாமுனியே
அரந்தழைக்கும்யீஸ்பரனார் அய்யன்குமார்த்தியும்
விரைந்துவரச்சொன்னாள்காண்வீரமகாமுனியே
என்றுரைக்கக்கன்னியவள்எழுந்தானேமகாமுனியும்
எழுந்துவந்தமகாமுனியும்பின்புமுடன்தெண்டனிட்டு
தெண்டனிட்டமாதாவேசேதியென்னசொல்லுமென்றான்
அண்ணாமகாமுனியேஅதிவீரகேட்டருள்வாய்
பெண்ணென்றுசென்மம் பெருந்தவசில்வருவாமோ
இருபெண்குறல்சத்தம்பெரியசத்தம்தான்கேட்டு
கன்னிகளெல்லாம்திகைத்தோதாகியங்கேவதிவிட்டேன்
போனதேயல்லாமல் திரும்பிவரக்காணேனே
கருநாகம்செந்நாகம்கடிகியே யேவிவிட்டேன்
போனதொருநாகமெல்லாம் திரும்பிவரக்காணேனடா
அந்தமாளிடத்தைதக்கொண்ணுமாண்டிடவேசெய்துமங்கே
ஏவிவிட்டபேரையெல்லாம்பிரணகளமாக்கிவிட்டு
வந்துவிடுமகாமுனியேமகாவீராசீதானும்
என்றுசொல்லிபெரியக்காண்டிஏவிவிட்டாள்மாமுனியே
வென்றுவாவென்றுசொல்லவிரைந்தோடிமாமுனியும்
பாரத்தடியெடுத்தான்பக்கமலைசரிந்துவிழ
வீரத்தடியெடுத்தான்விண்ணுலகந்திடுக்கிடவே



இருப்புத்தடியெடுத்தான்யியல்வீரமாமுனியும்
கருப்புத்தடியெடுத்தான்கருமலைகள்தீர்ந்துவிழ
சொக்குமாந்தடியெடுத்தான்துணிப்பேனென்றுதானடந்தான்
ஏக்கவேமாமுனிவன்எடுத்தான்பெரியதடி
தடியெடுத்துமலையநகில்தான்வந்துமாமுனியும்
உசந்தகறம்டாரிவனம்றுவப்பார்க்கையிலே
வசந்தகரைகோம்பையிலேதங்காள்வருவதுவுங்கண்டானே
அன்னநடையழகும்அழகானகைவீச்சும்
மின்னலொளிபோலதங்காள்மேனியெல்லாம்தான் துலங்க
சாயலளகுசந்திரனும்ஒப்பல்லவோ
சுந்திரிவுடிவளகுசூரியனுமஒப்பல்லவோ
கோதையவள்தன்னழகுயிந்தக்குவலையத்திலக்கிட்டாது
பாதத்தைப்பாத்தக்கண்ணுந்தங்காள்பலதிசையும்பாருமல்
தாரணியில்க்கண்டநல்லதங்கநல்லாள்தன்னழகை
வேதத்திலுள்ளபடிவிரும்பியவள்வாராதுகாண்
யெட்டியடிவைத்துயேந்திழையாள்வருகிறதை
கட்டழகிதன்வடிவுஇந்தகானகத்தில்க்கிட்டாது
கண்டந்தமாமுனியும்கனபிரியமுண்டாகி
ஓசந்தமலைவிட்டிறங்கிஓடியந்தமாமுனியும்
மாதாவின்அவகமுன்னேமாமுனியும்வந்துநின்று
பாதம்பணிந்துபைங்கொடியாள்தன்னழகை
கண்டுவந்தேன்மாதாவேயிந்தக்காசினியில்க்கிட்டாது
தெண்டிரைகுள்வய்யகததில்த்தேடக்கிடையாது
ஆதிசிவன்தன்னருளால்அருள்பெற்றபெண்ணணங்கு
சோதிசுடர்போலவொருதோகையருபதான்வாருள்
பார்த்தால்பசிதீரும்பரமனிட்டகட்டளைதான்
உன்னிலையுமஅதகவறம்பெற்றவள்காண்மாதாவே
அவள்உன்னிலையும்பெரியவடிஉததமாபத்தினியே
என்னாலுங்கூடாதுஎன்னிலையுமிகுத்தவடி
எரிட்டுப்பார்த்தவர்கள்யிரந்துமடிவார்கள்
அக்கினித்தூண்முன்னேஅனுகாதுயீய்க்குலங்கள்
எரிந்திடுவார்தப்பாமல்யீஸ்பரியேசொல்லுகிறேன்
உன்னிலையும்பெரியவடிஉத்தமியேசொல்லுகிறேன்
அவள்வந்தவுடனேஉன்அருந்தவசுமுடியுமம்மா
உன்தவசுஅவளாலேஉத்தமியேமுடியுமம்மா
நீ யெழுந்தருளவேணுமம்மாயீஸ்பரனார்தன்மகளே

தவசுமுடிந்ததம்மா தாயேயெழுந்தருளும்
எழுந்துநான்வருவேனெனங்கள்மகாமுனியே
எழுந்திருந்துவாருமம்மா என்னுடையமாதாவே
அய்யன்குமாரத்தியும் அன்பாயெழுந்திருந்து
குழுந்தமுகந்தானுகிகுமாரத்தியுந்தானெழுந்தாள்
தண்டைசிலம்புமணிசலங்கைகளுந்தான்புலம்ப
வெண்டையங்களோசையிடவீறமணிகளிரெனவே
விழுந்தசடைவேற்பிடுங்கிவிதமாய்த்தவசைவிட்டு
படர்ந்தசடைவேர்பிடுங்கிபாரத்தவசைவிட்டு
யிருந்தநிலையைவிட்டுயெழுந்தாளேமாதாவும்
அன்னநடைநடந்துவாறாளாமப்போது

## பெரியக்காண்டியம்மன் தங்காளைக் காணவருதல்

வாசவளிதனிலேவகையானபூமியிலே
பாதத்தில்பட்டெறும்புபதைபதைத்துசாகாது
வேதப்பிரமணிபோல்வேதவணிகையிலெடுத்து
பூமியில்க்கால்போறதுபுல்லுகளும்வாடாது
கல்லுநெகிலாமல்கர்த்தன்குமாரத்தியும்
அடிமேலடிவைத்து அன்னம்போல்நடைநடந்து
வீரமகாமுனிவன்முன்விதமாகவந்துநின்று
தேரையலங்காரியும்தேசிகனேமாமுனியே
அப்போதுமகாமுனியும்அடவாகத்தான்சமைக்க
ஆச்சாமரமெடுத்துஅளகானபூந்தேரு
தேக்கமரமெடுத்துத்தேருமிகச்சமைக்க
வாச்சியுளிநாடாதவச்சிரமணிப்பூந்தேரு
தச்சனுளிநாடாததங்கத்தேருண்டுபண்ணி
கொல்லனுளிநாடாதகோலவர்ணப்பூந்தேரு
தேரையலங்கரித்தான்தேர்மணிகளோசையிட
மேலேயலங்கரித்தான்வீரமணிஓசையிட
மதகிரிகள்போலெறண்டுவாணப்பரிதான்பூட்டி
தேருமேலேறுமென்றான்தெய்வமகாமுனியும்
தேரின்மேல்லேறினாள்தேவிபெரியக்காண்டி
தேரைநடத்தினான்தேர்மணிகளோசையிட
இரதத்தைநடத்தினான்ரதமணிகளோசையிட
தேரில்விட்டபூச்சாங்கள்திருமுடியில்போய்விழுமாம்
வர்த்தேருகட்டினவத்துப்பூச்சாங்களுள்ளதெல்லாம்



தங்காள்முடிதனிலேபோய்நிறையுமாம்பூச்சரங்கள்
கர்த்தன்குமாரத்தியும்கண்டாள்மனங்குளிர
தேரைநிறுத்தினாள்தேன்மொழியாள்பக்கலிலே
அரியபெரியக்காண்டிஅன்னம்போல்வாய்திறந்து
முத்தானவாய்திறந்துஉத்தாரம்சொல்லுமென்றாள்
பேயோபிசாசோபிணந்தின்னிப்பூச்சியடி
ஆறடிசொல்லுமென்றுஅன்புடனேதான்கேழ்க்க
காயாமலடிபெற்றகண்மணியேசொல்லுமடி
அற்பப்பிசாசோடிஆரடியோர்நீ தானும்
அற்பமாய்வந்தாயோநீ அப்புறமேநில்லுமடி
யென்றுபெரியக்காண்டியியல்புடனேதான்கேழ்க்க

## தங்காயி பெரியக்காண்டி யம்மனிடம் தங்கள் பிறப்புவளப்புகளை சொல்லுகிறது.

அழுதுபுலம்பித்தங்காள்அப்போதுசொல்வாளாம்
பெருமலடிபெற்றபெண்ணரியல்லநான்தானும்
காயாமலடிபெற்றகண்மணியுநான்தானும்
காரும்பசுப்போலேகண்மணியையீன்றெடுக்க
பெண்மைகுலத்தேண்டிபேச்சியைப்போலானேனடி
தாய்பெத்தமேனியதுஎன்தவமுங்குலத்தேண்டி
பேய்பெத்தபுத்திரிபோல்பிறப்பட்டேன்கானகத்தே
என்றுசொல்லத்தங்காளும்பெரியாள்தான்பார்த்து
கண்டதில்லையகத்தில்தாரிழையாள்தன்வடிவை
நீ யாருடவங்கிஷங்கள்அருக்கிளியேசொல்லுமம்மா
பேதேதுசொல்லுமடிபெண்ணேயிளவரசே
உன்சாதிஉன்குலமும்உனையீன்றமாதாவும்
உன்பேரும்உன்தாய்பேரும்உன்தகப்பனார்தன்பேரும்
உள்ளபடிசொல்லுமம்மாஉத்தமியேதங்கையரே
யென்சாதியென்குலமும்யினிக்கேளும்சொல்லுறேன்
நான்பஞ்சையாள்சொல்லவென்றால்பகலமொருசவாரும்
என்பாடுசொல்லவென்றாலெல்லைகரைகொள்ளாது
பாட்டில்டங்காதுபாமனுடைகசோறும்
எங்களய்யாதவமிருந்தார்சுப்பரனைத்தானோக்கி
பொன்னம்பலத்தனிலேபுகன்பெரியசன்னதியில்
இரண்டொருவருஷம்உத்தமனார்தவமிருந்து
சலுக்கிடாரிகளும்பிள்ளங்கண்ணுந்தாச்சியுடன்
கோதானமீய்ந்துகோயில்தவமிருந்து

பூதானமீய்ந்தன்னுச்சிபுத்திரனும்வேணுமென்று
அருகிப்பிராமணற்கு அன்னசொர்ணந்தான்கொடுத்து
முழுகும்பிராமணற்குமுத்துத்தானங்கொடுத்து
தவசிருந்துமனஞ்சலித்துதானிருக்கும்வேளையிலே
தெய்வப்பிராமணர்போல்நின்றக்கோல்தானொன்றி
கவசகுண்டலமுடனேகாசிப்பிராமணிபோல்
வந்தாள்பிராமணியும்வழிதப்பிவந்தாப்போல்
திருவேடம்பூண்டதொருதெய்வப்பிராமணரும்
அந்தநல்லவேளையிலேஆகிசிவனார்போலே
வந்தான்பிராமணனுமவழிதப்பிவந்தாப்போல்
வயிறுமெத்தப்பசிக்குதென்றுவந்தாரிருவருமே
பொற்பாடுவருமெனவேயாப்பான்போசனமும்வேணுமென்று
அரிசிபருப்புடனேஅருசுவையும்தான்குடுத்தார் [ன்
அன்னமதுதான்சமைத்தான்அந்தப்பிராமணனும்
அப்பவேமுன்றுபிண்டம்அன்புடனேதான்குடுத்தார்
இப்படித்தானேஇன்பமுடன்தான்குடுத்தார்
அரியபிண்டந்தானெடுத்துஅய்யன்கையில்க்கொடுத்து
எங்களய்யன்தான்வாங்கிஎன்றுச்சிகையில்க்குடுத்தார்
பிண்டத்தைவாங்கியல்லோஎன்றுச்சிபிரியமுடன்சாப்பிடவே
செவ்வாழிவெள்ளாழிசேறாண்டிபூகொடுத்தார்
புவையிற்சாப்பிடவேபுத்திரரும்உண்டாவார்
அண்ணரிருவோரும்அன்புடனேதான்பிறந்தார்
தாமொருபெண்பிறந்தே அரியபிண்டம்வாங்கியவள்
அம்மான்பெருமாளும்அரிராமன்சன்னதியில்
போனார்தவமிருந்தபுத்திரரும்வேணுமென்று
பெருமாள்தன்கோவிலிலேபெருந்தவசிதானிருந்து
தவசிருந்துமனஞ்சலித்துத்தானிருக்கும்வேளையிலே
வைகுண்டநாரணனும்நன்றாய்மனதிரங்கி
பஞ்சப்பிராமணனைப்போல்பாங்குடனேதானும்வந்து
புத்திரற்குவரங்கொடுத்துப்போய்மறைந்தாரப்போது
அதனால்தமலைக்கொழுந்திமூன்றுமாணிக்கத்தைப்பெற்றெடுத்தார்
ஆலத்தூர்பட்டணத்தையாண்டிருந்தோமின்னாளும்
வய்யபெருமாளும்வாழ்க்காளவல்லியரும்
செய்யபெருமாளுபசிலைக்காளமைத்தாளரும்
சதிரில்வாய்பெருமாளும்தெனகளத்துவள்ளியரும்
சதிசோதுவசித்தாப்போல்மூன்றுமகறணிக்கத்தான்பிறந்தார்



அரிவளநாட்டையண்டிருந்தோமின்னாளும்
அத்தைபிள்ளைமூவர்களும்அண்ணரிருவோரும்
வெத்தியுடன்தான்பிறந்துமேனாட்டைச்சங்கரிக்க
அய்வர்பிறந்துஅரசாளும்வளநாட்டை
பொய்வசனமில்லாமல்பொருந்திஅரசாளையிலே
வளநாட்டைக்கொள்ளையிட்டுவாழுகிறநாளையிலே
வளநாடுபத்தாமல்வானகிரிசீமையெல்லாம்
பாதிக்காவல்க்குடுத்துச்சோழன்பட்டமுந்தான்வாங்கி
இருப்பூசிபோனதும்பொன்னாசிதாரமென்று
மாருபடாமேனியுடன்வருணப்பரிமேதேறி
காடுவெட்டுதளங்களண்ணாரகரிவந்துசேர்ந்தபின்பு
உடுகரைவாங்கிஅண்ணர்ஊருவந்துசேர்ந்தபின்பு
வற்றுக்கடல்போலேநாங்கள்வாழ்ந்திருக்குந்நாளையிலே
வித்தாரமானவேடுபடைதான்கூடி
கோனாடுகொள்ளையிடகொங்கருமேவந்தார்கள்
மேனாட்டுவேடுவர்கள்மெய்துாந்துவந்தார்கள்
கூப்பிடுஞ்சத்தங்களும்கொள்ளைகடிங்காலாளுகளும்
தீய்ப்புகைகள்போலேவேடர்தேசமெங்குஞ்சூழ்ந்திறல்
ஆளோடிவந்துதென்றுளங்களண்ணர்அதிவீரர்தான்கூடி
பாளயத்தைகூட்டமிட்டுபடைமுரசைதான்முழக்கி
அண்ணரிருவோரும்அத்தைபிள்ளைமூவர்களும்
என்னவொன்றுச்சேனைக்குலதாணிதளத்துடனே
ஆனைபடைசேனையுடன்அதிவீரன்படையெடுத்து
சாடிவரும்சேவகரோதலைதாக்கள்தான்தாக்கி
கொங்கரையும்சங்கரித்துக்காடிபடைகருவறுத்து
வெங்கலக்கொம்பூதிவீரமுரசறைந்து
வெட்டிப்படைகெலித்துவீரமலைஅடிவனத்தில்
பட்டார்களென்றுசொல்லிப்பறையனார்தான்வீரபோகன்
பட்டகளம்பார்க்கநான்படுகளத்தைதிசைநோக்கி
தேடிவனந்தனிலேநான்திகைத்துப்புலம்பிவந்தேன்
என்றுரைக்கத்தங்காளும்வதுவைப்பாளிஸ்பரியும்
பண்டுமுன்னாள்செய்தபாக்கியத்தாலிங்கேவந்தாய்
அண்ணருடன்பிறந்தஅருக்காணிபிள்ளைவரசே
பொன்னருடன்பிறந்தபேடைமயில்த்தங்கையரே
சங்கருடன்பிறந்தசாதிமரிக்கொழுந்தே
உங்கள்நாட்டுவளப்பமெல்லாம்காரிகமானதாம்

எங்கள்நாட்டுவளப்பங்நாகரீகமுள்ளதெல்லாம்
கேட்டாயோயாதாவேயினிக்கேளும்சொல்லுகுறேன்
நெல்விளைநாடுநிகரில்லாக்கோனாடு
நெல்லுவிளைந்துநிறைசம்பாப்பேறும்
ஆலந்தூர்பட்டணமும்அழகுபொன்னிவளநாடு
காலால்மடைதிறந்தால்காதவழிநீர்ப்பாயும்
கற்றூலைப்பட்டணமும்ஆழ்ந்தபொன்னிவளநாட்டில்
முகநவிளைந்துதிரும்முளகுசம்பாப்போறும்
கரு புசெளித்துக்கணுவுக்கொருமுத்துதிரும்
அரும்புமலரெல்லாம்ஆணிமுத்துத்தான்விளையும்
வாழைவடக்கினும்வாண்கமுகுதெற்கினும்
சோலைகிளக்கினும்ஆய்யபலாமேற்கினும்
வாழைக்கிழிபேசுர்வையநெல்லிவளநாடு
தட்டுப்புருகனியும்தம்பிசங்கள்வளநாட்டில்
கட்டுக்கலங்காணும்கருதுளக்குநெல்காணும்
ஆனைகட்டித்தூர்விளையும்மாணமுட்டப்போறும்
வண்டணியும்மார்பன்வையநெல்லிவளநாட்டில்
கெண்டைகளும்சேல்பாயும்கெளிறுநின்றுகூத்தாடும்
மகரங்கள்நின்றுவயல்பாய்ந்துவிளையாடும்
சிகரமுள்ளகெண்டையெல்லாம்சேர்ந்துவிளையாடும்
அந்தவளநாட்டைஅரசாண்டோமின்னாளும்
சந்தவனத்திலுள்ளநாகரீகம்சொல்லுகுறேன்
பூங்காவனத்திலுள்ளபுதுமைகளைச்சொல்லுகுறேன்
பாங்கானபுஷ்பம்பலசாதிவறணமுண்டு
எடுத்துரைக்கநீகேளும்என்னுடையமாதாவே
அடுக்காலிசெவ்வாலிஅளகுமுல்லையிருவாச்சி
வெட்டிவேர்மரிக்கொழுந்துவிதமானசெண்பகப்பூ
கட்டிமாங்கனியுடனேகதலிபிலாநாரத்தையும்
வகையாலொருகனிகள்வையநெல்லிவளநாடு
சிகமேவில்க்கிடையாதுசிறந்தநெல்லிவளநாடு
மஞ்சக்கிணருமருதாணிப்பொய்கையுண்டு
விஞ்சியெலும்பிச்சையிதமானசதானி
வாழைப்பிலாக்கனியும்வையநெல்லிவளநாடு
சூரியகாந்தமதுசூரியனைப்போலிருக்கும்
மாங்கனிக்குமந்திவந்துமருவிவிளையாடும்
தேங்கனிக்குப்பூங்கிளிகள்சேர்ந்துவிளையாடும்



தேங்கனிகள்தானுடைந்துசெந்நெல்வயல்பாயும்
மாங்கனிகள்தானுடைந்துவயல்தோறும்தான்பாயும்
கன்னல்விளைந்துகதித்தாடும்ஆலையெல்லாம்
செந்நெல்விளைந்துசிறுசம்பாப்போறும்
சிறுசம்பாப்போறும்செய்யநெல்லிவளநாடு
பவளச்சம்பாநெல்விளையும்பாரநெல்லிவளநாடு
மிளகுசம்பாப்பேறும்விறநெல்லிவளநாடு
அந்தவளநாட்டைஆண்டவர்கள்எங்களண்ணர்
இந்தப்புதுமையெல்லாம்சவ்பரியாள்தான்கேட்டு
அண்ணமார்தங்கையரேஅருக்காணியிளவரசே
வறணப்பசுங்கிளியேவாய்பேசாத்தங்கையரே
மானீன்றகண்ணேமானத்தருந்துதியே
கானமயில்தானீன்றகண்மணியேயிளவறசே
காரும்பசுவீன்றகாற்குழலேதங்கையரே
தாருக்களீன்றெடுத்தத்தங்கத்திருமேனியரே
உன்னாட்டுவளப்பங்களும்நாகரீகமுள்ளதெல்லாம்
ஏட்டில்எழுதினல்போல்எடுத்துரைத்தாய்தங்கையரே
உன்தாயார்திருவழகும்தகப்பனார்தன்னழகும்
எனக்குரைக்கவேணுமடியிளவரசேதங்கையரே
தாயாரழகும்தகப்பனார்தன்னழகும்
வாய்வசனஞ்சொன்னல்மண்டலத்துக்கேறாது
பொய்யென்றிருப்பார்கள்பூதலத்திலுள்ளவர்கள்
மெய்யென்றிருப்பார்கள்மேதினியிலுள்ளவர்கள்
என்றுசொல்லத்தங்காளும்சவ்பரியாள்தானகைத்து
ஆறுழிமன்னாஅவரழகைசொல்லுகுறேன்
என்தகப்பன்தன்னழகையிஸ்பரியேகேளுமினி
தென்னமரம்போலேதிருத்தொடைகள்தானுமது
கரும்பனைத்துடையதுபோல்கையிரண்டும்நீண்டிருக்கும்
குண்ணைவப்போலிருக்கும்கொடியவயற்றழகு
மதயானைஉடல்போலெங்களய்யனார்திருமேனி
ஆனபடியினாலேஅய்யனுடபேருசொல்வேன்
குண்ணுடையானென்றுவலயத்தில்பேருச்சு
தாயாறழகைதயாபரியேநீகேளு
கூந்தல்யிருகொடுங்கைகொள்ளாதுதாயாற்கு
சேந்தஸ்தனபாரம்ரண்டுசெப்புக்குடம்போலிருக்கும்
ஆடுதுடைகள்ரெண்டும்அவ்வாழைத்தண்டதுபோல்

கூடப்பிருவம்செண்டும்கொண்ணைக்காய்போலிருக்கும்
ஆடும்பிறவம்செண்டும்அம்மானைப்போலிருக்கும்
சேடுவிளிகள்செண்டும்சொக்கட்டான்பூப்போலே
காட்டிலேயுங்மேன்மையுள்ளகல்லதிருவளகு
வட்டிலடங்காதளந்தாயார்திருவளகு
சிமையிலுமிலாதசிறந்ததிருவளகு
பாதத்திருவளகைபைங்கொடியாள்தானுரைக்க
கர்த்தன்குமார்தங்கைகலாசக்கன்னியரும்
மெத்தமனமகிழ்ந்துமேனியெங்கும்தான்குளிர்ந்து
வந்திழையாள்பாதத்துளடுத்துரைப்பாளீஸ்பரியும்
அருந்ததியெபென்னணங்கேஅதிருபநாயகியே
சாயலளகுசந்திரனும்ஒப்பல்லவோ
கூந்தல்அளகுகுலவையத்தில்கிட்டாது
அன்னக்கிளியேஅதிருபநாயகியே
வறணைக்கிளிபேவாய்பேசாத்தங்கையரே
நீயொருவியாய்வந்தென்னஉத்தமபத்தினியே
உத்ததுணையில்லாமல்ஒருவிவாக்காரணமேன்
ஆதிபரமேஸ்பரியேஅகிலாண்டநாயகியே
சோதிசிவன்றனைசொல்லுகுறேநீகேளாம்
வீனையின்றமாதாவும்என்பிறகேதான்வற்வே
எனக்கீடேற்றமில்லையென்றுஇருந்திவங்தேநித்தாரம்
அடந்துவந்கமனிதரெல்லாம்தூரதேதநில்லுமென்று
நால்வரையுந்தானேதடிகடந்துவந்தேநித்தூரம்
கானகத்தங்கிதெய்வமெல்லாம்காவலாய்வந்துதம்மா
என்றுசொல்லிமீஸ்பரியும்இன்பமுடன்தான்குளிர்ந்து
காணக்கிளிபோலேகாரிகையும்சொல்லுகிறாள்
அப்பவேயீஸ்பரியும்அன்புடனேவதுசொல்வாள்
பார்த்தவிடங்களெல்லாம்பாதிப்பிணங்கூத்தாட
குறைப்பிணங்கள்கூத்தாடக்குள்ளநரிபோருட
நிறைநிறையேநரிகளும்நின்றேப்பமிட்டிடவே
மேனாட்டுவேடுபடைவருகோடிமாண்டிடத்தில்
கொங்கருடசேனைகோடிதளமாண்டிடத்தில்
மலுக்கர்துலுக்கர்மன்னவர்கள்மாண்டிடத்தில்
துலுக்கர்பெரும்படையுமசோணகிரிவன்னியரும்
ஓட்டியப்பெரும்படையும்ஒருகோடிமாண்டிடத்தில்
வெட்டிவரும்ராசாக்கள்மேலுமலையாளரும்



விராதிவீரர்விருதுபடைக்கலைவருமே
சூராதிசூரர்களும்துரைமக்கள்மாண்டிடத்தில்
பட்டாணிராவுத்தரும்பரிவாரம்மாண்டிடத்தில்
கட்டாணிஉங்களண்ணர்காறரிகளெவரேனவே
அளவறுக்கக்கூடுமோடிஅருந்ததியேபெண்ணரசே
இளவரசேதங்கையரேநீதிருவென்றுதாண்மையடி
உங்களண்ணரிருவரென்றுஅளவறுப்பாய்தங்காய்நீ
உங்களண்ணருக்குஅடையாளம்உண்டோடியிளவரசே
எங்களண்ணருக்கும்அடையாளம்கேளும்மாதாஸ்பரியே
மாய்ந்தாரைவெட்டரியார்சவுரியமும்உள்ளவர்கள்
விழுந்தாரைவெட்டரியார்வீரியமுள்ளவர்கள்
தாழ்ந்தாலும்எங்களண்ணர்தன்முகங்கள்வாடாது
மாண்டாலும்எங்களண்ணர்மண்ணிற்விட்டாப்பாவினையாய்
வெல்லடாரைச்சங்கரிக்கும்விசையனைப்போலிருக்கும்
பரிசைகள்விழுந்தவிடம்பாராமலைபோலிருக்கும்
விரமலைமேலேவெண்முடிகவிந்தாப்போல்
கால்புரந்திகொண்டவிடம்கதிக்கமட்பானை
கைப்புரந்திரண்டவிடம்கார்மலைகள்போலிருக்கும்
துடையாடுஞ்சல்லிநாளிவிடம்போலிருக்கும்
இடையாடுஞ்சல்லிஅண்ணர்க்குளங்குநிழலாடிநிக்கும்
முதுகாடுஞ்சல்லிமுன்னேநிழலாடிநிக்கும்
எதிராடுஞ்சல்லிஎனக்குநிழலாடிநிக்கும்
பட்டபடுகளமும்பறலைகம்போலிருக்கும்
வெட்டிமடிந்தகளமும்விறகெறற்கம்போலிருக்கும்
ஆண்டவனருளாலேஅஞ்சியாரமடியெத்தவர்கள்
மாண்டகளமுழுதும்மலைகுந்தம்போலிருக்கும்
பூவாமரங்களெல்லாம்பூத்தாப்போல்விந்தாநிக்கும்
காயாமரங்களெல்லாம்கனிகளாய்மேவநிக்கும்
பட்டமரங்களெல்லாம்பச்சமரமாகிநிக்கும்
தலைமோதுஞ்சோலையிலெதலிமயில்களாடிநிக்கும்
அஞ்சுவரணக்கிளிகள்அத்தையின்னைபடுகளத்தில்
கொஞ்சிவிளையாடும்குமாரசங்கன்படுகளத்தில்
மாங்கனிக்கிளங்திவந்தமரந்தாவிவிளையாடும்
தேங்கனிக்ப்பூங்கிளிகள்சோந்துவிளையாடும்
இந்தஅடையாளம்இவ்வளத்தில்கண்டதுண்டோ
அந்தவடிவழகைஅவ்வனத்தில்கண்டதுண்டோ

என்றுரைத்தாள்தங்காளுமேங்கிமுகம்வாடி.
அப்பவேபெரியக்காண்டி ஆணிரதம்விட்டிறங்கி
தேரைவிட்டுமிறங்கித்தேன்மொழியாள்பக்கல்வந்து
ஏழுபேர்கன்னிகளையிதமாகத்தானழைத்து
நல்லவேடிக்கைப்போனிடத்தேகண்டதுண்டோகன்னிகளே
கண்டோம்அடையாளங்கண்டிவந்தோமென்றுசொன்னார்
ஏழுபேர்கன்னிகளுமெழுந்திருந்துஓடிவந்து
மருதுவெடுக்குங்கஸ்பரிகருமலர்தொடுக்கப்போனிடத்தில்
கதிரோனுதிக்குமுன்னேகனிபொரிக்கும்வேளையிலே
மதியோகியானதும்மலர்சாஸ்திரங்களானதும்
வித்தையைவெள்ளைகூடாதுவிருமகிட்டகட்டளைதான்
மண்டலத்தில்கண்டறியோம்மன்னன்அர்ச்சுனன்போல்
கண்டோம்அடையாளங்காரிகையாள்சொன்னபடி
சொன்னபடிதப்பாதுதோகைநல்லாள்சொன்னபடி
மண்டியிட்டபாவிளையாய்மலமெடுக்கும்வனந்தனிலே
இடைசல்விதுடைசல்விஇருபிறமுமதுவண்டாட
வில்பிடித்தகையுடனேவீற்றிருந்தார்கண்டுவந்தோம்
கள்ளிவனமுஞ்சோலைகாரிண்டவனக்காடு
வெள்ளியங்காடுமேல்குறுஞ்சிவனத்தருகே
கடுக்கல்லுக்குயிடுபாறைதச்சங்கோம்பைக்கணுவாயில்
முகடுமுட்டமரம்வளர்ந்துமொசுக்கறடிவாழும்வனம்
தேன்பாயுஞ்சோலையிலேதெய்வகன்னிமலரெடுக்கும்
மான்பாருஞ்சோலையிலேமானிடவர்வனந்தனிலே
வாங்குசிலையும்வடிக்கணையும்கையில்பிடித்து
வேங்கைமரத்தடியில்வீற்றிருந்தார்கண்டுவந்தோம்
ஆதிசிவன்கர்த்தாவும்அய்யருக்கொப்பிடலாம்
சொல்லடிவழங்கும்துய்யமுகத்தழகும்
மாயன்பெருமாள்போல்மண்டியிட்டபாவிளையாய்
ஆயன்பெருமாள்போல்அவ்வனத்தேகண்டுவந்தோம்
தோகைநல்லாள்பத்தினிதன்சொல்படியுந்தப்பாது
வாகுடனேஅவ்வனத்தில்மனமாறக்கண்டுவந்தோம்
என்றுசொல்லத்தங்கையரும்ஏங்கிமுகம்வாடி
நின்றநிலையடியில்நினைவுமெத்தத்தடுமாறி
மண்டலத்துச்சிதைகையைப்போல்மயங்கியேகீழ்விழுந்தாள்
கன்னியர்கள்சொல்கேட்டுகாரிகையாள்கண்கலங்கி
கோடையிடிஅண்ணன்விகுமாரசங்கரன்பிறவி



காடோலவனவாசம்காணவேலாவித்திருப்பு
சின்னண்ணனென்பிறவிசீறுபுலியென்றழுதாள்
குணஞ்சூழ்ந்தவளநாடாகோடையிடிதம்பிசங்கா
படையைஅலங்கரித்துப்படைமுகத்தேயேகினும்பி
குடையைஅலங்கரித்துக்குதிரைபடைமுன்னிருத்தி
ஆனையலங்கரித்துஅணியணியாய்முன்னிருத்தி
சேனையலங்கரித்துசேர்ந்தபடைபொருதாமல்
தென்னிலங்கைராவணன்போல்சேனைகளைமடித்தபின்பு
பொன்னிலங்கைபத்துமுடிபுரதிபிறண்டாற்போல்
வீரமலையடிவாரம்வேங்கைமரச்சோலையிலே
தோகைமலைக்கணுவாயில்சேர்ந்திருக்குங்காரியமென்
பெரியண்ணாபார்நகரேபேதகமாய்ப்போனதென்ன
அரியதொருதங்கையரைநீங்களரமனையில்வைத்தல்லோ
கோபங்கொடியவனையெண்ணைக்கோட்டையிலேதானிருத்தி
தாயுமுள்ளதங்கையரைதனித்தொருவிதானுக்கு
பகையானவேடுவரைபடைபொருதப்போனவர்கள்
வகையானகானகத்தில்மாண்டிருக்கக்காரியமென்
கட்டியதோர்பாறமுடன்கருங்கச்சைசொருகிவிட்டு
தொட்டகபாயுடனேசோடுவச்சிறச்சிறுவும்
பொன்னின்கடுக்கனிட்டுப்பொன்னெழுத்துச்சோமன்கட்டி
அஞ்சிறையார்மார்புருவஅம்புறாதோணிகட்டி
பட்டாவுங்கேடையமும்பாங்குடனேகைப்பிடித்து
வெட்டிப்படைகெலித்துவிடுதிவந்துசேராமல்
மூரேறுடைபத்திவந்தமாயன்செருமனைப்போல்
தாரேறுநாவுலர்ந்துதண்ணீர்மிகத்தேடி
நச்சுப்பொய்கைநீர்குடித்தநல்லதம்பிமாருடன்
பச்சைமயில்வண்ணருந்தான்பாதனித்துவிழுந்தாப்போல்
அச்சமில்லாத்தம்பியுடன்ஆனைபடைதளத்துடனே
மெச்சியதோர்கானகத்தில்விழுந்திருக்கக்காரியமென்
நாடுகலக்கியென்றுங்கடைபறிதேதரி
வேடுபடையத்தனையும்வெட்டிக்கருவறுத்து
ஓடிவருவாரென்றுநானுந்தமியும்பார்த்திருந்தேன்
காடிளந்தபஞ்சவர்ப்போல்கடுவனத்தேசாய்ந்தீரோ
நீண்டவிதிப்படியோபுண்ணியனார்சொல்படியோ
மூண்டவிதிப்படியோமுன்னாள்செய்தவினையோ
ஆண்டவனார்சொல்படியோஅதிகாரவிதிப்படியோ

காண்டபங்கையிலிருக்கக்கண்ணர்பட்டுவிழுந்தாப்போல்
தென்டிசைசூளவ்வனத்தில்சேனைப்படைசூழ்ந்துநிற்க
பொன்னம்பலக்கனிசெப்புகள்நெறிவேதானிருந்து
மண்டிப்பிட்டபாவினையாய்மடிந்திருக்கக்காரியமென்
சன்னசிவரம்பெற்றசாய்ந்திருக்காரியமென்
மந்திரவாளதானெடுத்தால்இந்தமண்டலந்திலுள்ளவர்கள்
கண்டால்நடுங்கிடுவார்கனசேனைக்கூட்டத்தினையும்
இந்திரலோகந்தனிலிருக்குந்தேவர்களெல்லாம
சந்திரரும்சூரியரும்தானேநடுங்கிடுவார்
கொக்கிரக்கண்டம்மந்திரவாள்கொக்கரித்துத்தானெடுத்தால்
கொங்குநாடுங்கிடுமேகோடிப்படைமாண்டிடுமே
சங்காண்ணர்வாளெடுத்தால்தந்தளிக்கவேயருப்பார்
தச்சங்கொம்பைக்கணுவாயில்சாய்ந்திருக்கக்காரியமென்
வத்தாதசெல்வமுடன்வைகவளநாடாளும்
அத்தைதபிள்ளைவாளெடுத்தால்ஆனைப்படைமாண்டிடுமே
அந்திக்கொலுவிருக்கும்ஆசாரவாசலெல்லாம்
சந்திக்கவந்தவர்கள்சதாகோடிமன்னவர்கள்
கரிக்காலன்மனமகிழக்கச்சைகட்டிவாள்பூட்டி
எக்குரோணிசேனைப்படையிருபுறமுஞ்சூழ்ந்துநிற்க
பதினெட்டுஅக்குரோணிபடைபக்கமேசூழ்ந்துநிற்க
பரிவானமீதேறிப்பதினெட்டுலாகுகொண்டு
எழுபதடிக்கல்த்தூணையிருபிளவுசெய்தாயே
கழுகுபறந்தாடஅண்ணமாரகளைத்திருக்கக்காரியமென்
அம்புபடவுமில்லைஅறக்காயந்தானுமில்லை
செம்பொன்திருமேனிசிவந்திருக்கக்காரியமென்
தந்திரமாய்வேடுவரைதான்வளைந்ததம்பிசங்கன்
மந்திரவாள்தன்னாலேமணிக்குடல்களற்றுவிழ
சாடினாய்வேடுவரைதலையூருபூதமட்டும்
கோடிப்படைகருவறுத்துக்கோடையிடிதம்பிசங்கன்
புனல்வேடாத்தனையும்பூர்த்துவெட்டிக்கருவறுத்து
கனவேடாத்தினையுங்காலனுக்கேவிருந்தாக்கி
முடிசிவந்தவேடுவரைமுன்வீச்சுக்காயிரமாம்
கடிசிவந்தவேடுவரைகழுகுபசிதீர
தத்தளிக்கவெட்டிகாளம்பாடிபூதமட்டும்
வெட்டித்தரந்தூக்கிவெங்கலக்கொம்புதானூதி
அதிவீரவருவையென்றுஅன்பாகநான்பார்த்திருந்தேன்



விதியெழுத்தைப்பாராமல்விடாயத்தகலமானதன்னை
சிற்றூலைப்பட்டணமும்சிறந்தநெல்வளநாட்டில்
சுற்றியேழுகோட்டையிட்டுசூரியனைக்காணாமல்
வற்றாதசெல்வமுடன்வாழ்ந்திருக்குநாளையிலே
வித்தாரமாகவீற்றிருக்கும்சபைமீதில்
மாடங்கமாளிகையும்வச்சிரமானஉப்பரிகை
ஆடரங்கமாளிகையும்ஆசாரமேடைகளும்
முடிமன்னராசாக்கள்முன்னாறுகில்சூழ்ந்திருக்க
கொடிமன்னராசாக்கள்கெலிவுள்ளவீரியரும்
ஆனைவாறதிர்ந்துநிற்கஅணிஅணியாய்சேவகரும்
சேனைவார்சூழ்ந்துநிற்கசேனைபரியாடிநிற்க
வரியகுதிரைவிட்டுசிங்காதவீரியரும்
ஆரியஆருவர்களும்அதிகபட்டாணிகளும்
எழுத்துவரைவிட்டிருக்குமெங்களத்தைப்பிள்ளைசேனைதளம்
கத்தித்தாரைமட்டடக்கும்காகமுடிவேந்தருடன்
வானவர்கள்கொண்டாடும்வையப்பெருமாளும்
சேனைமிகுங்காவலரும்செய்யபெருமாளும்
மதியுள்ளமந்திரியும்வய்யபெருமாளும்
எதிரில்லாப்பெருமாளும்சேனைகளத்துவண்ணியரும்
எல்லவருங்கூடியிருக்குந்தவேளையிலே
வல்லபிராமணர்கள்வந்துசாஸ்திரமேயுரைக்க
சித்திரமணிக்கூடத்தில்சிறந்துகொலுவிருக்க
உத்திரத்தூணருகேகொலுத்தம்பியும்பார்த்திருக்க
நான்காந்தாரிகண்ணீருகாரமல்பட்டதுண்டோ
வந்திழையாள்கண்ணீருயிருவருந்தம்பட்டதுண்டோ
பத்தினியாள்கண்ணீருப்பாராமல்பட்டதுண்டோ
வெள்ளைக்குடைபிடிக்கவெஞ்சாமரைவீச
தெள்ளியஅனுமக்கொடிசிறந்தங்கேஆடிநிற்க
சந்திரவட்டக்குடைதாலுதகதகென்றுஆடிநிற்க
இந்திரவர்ணடாலுகளுமிருபுறமுஞ்சூழ்ந்துநிற்க
கொங்கர்தெலுங்கர்வந்துகும்பிட்டுக்கொலுக்காண
வங்கர்லிங்கர்வந்துகப்பமேகட்டிநிற்க
அந்தநல்லவேளையிலேநானரியசொருதங்கையரும்
சிந்தைகுளிர்ந்துநான்செல்வமுடனிக்கையிலே
முன்னேவருங்காரியமும்மூதாக்கள்தானறிய
பின்னேவருங்காரியமும்பெருங்கதையாச்சொன்னேனே

தங்கச்சிசொன்னதெல்லாம் நரித்துதோ உன்மனதில்
பங்கப்படவேணுமென்று அண்ணுவிபாமனுர்சொல்படியோ
நாடிழந்து நகரிழந்து நல்லபதிகாணிழந்து
வீடுவிட்டுக்காடுமையவிதியும்விதித்தாரோ
சொல்லால்ப்பெரியவரொதுணிந்தீரோ ரணகளத்தில்
வில்லால்ப்பெரியவரெவீரியரேபெருமாளே
பனைபுளந்துவில்லேற்றும்பாறமுடிராவணனை
கணையெடுத்துஅம்புதொட்டால்காலனுமேவந்தனுகான்
சிலையெடுத்துஅம்புதொட்டால்சேனைதளமாண்டிடுமே
மலையடிவாரத்திலேமாண்டிருக்கக்காரியமென்
வர்க்கப்படைபொருதியிருந்தபடையெல்லாமல்
மார்க்கப்படைபொருதிமடிந்சகளமானதென்ன
தாளப்படைபொருதிசவுரியங்கள்தாளாமல்
மாளப்படைபொருதிமடிந்சகளமானதென்ன
வறப்போதலகாணிவைக்கலோபஞ்சமெத்தை
யிறப்போதலகாணியிடிகறையோபஞ்சமெத்தை
புல்லோதலகாணிபூமியோபஞ்சமெத்தை
கல்லோதலகாணிகானலோபஞ்சமெத்தை
கார்க்கடலுக்குள் ளகாமேகநீலவர்ணன்.
பாற்கடலுக்குள்ளேபள்ளிகொண்டபாவிணையாய்
உனக்கிந்தகிடைகிடக்கஎழுதினுனேபிர்மனுந்தான்
எனக்கிந்தவனந்தேடிவறஎழுதினுனே பிர்மனுந்தான்
பண்டுமுன்னாளய்வற்கும்பாவிதிரியோதனற்கு
கொல்லர்களும்ஆணிவைத்தகொடுமைகளும்போதாமல்
கண்டறியாத்தன்மருமேகளைந்துயீர்றுளிக்கவந்து
வண்டுரூபமாகியல்லோவந்தபெருமாளும்
வாழ்த்திவிடைகுடுத்தார்வனவாசமென்றுசொல்லி
தாழ்ந்தவரங்குடுத்தாரோஅத்தைபிள்ளைசாய்ந்திருக்காரியமெல்
புலியிருக்குங்கானகத்தேதபுல்லாயும்வந்தனுக
எலியிருந்துவாழ்ந்தாப்போல்இரந்தகளமானதென்ன
ஆளியும்சிங்கமும்ஆண்டிருந்தகானகத்தில்
குள்ளநரிகள்வந்துகூத்தாடநீதியுண்டோ
மானுமரையும்வளர்காப்புனந்தனிலே
பூனைபோல்த்தியங்கிபுலம்புவனோயிவ்வனத்தில்
சொல்லுமறந்தேதனோசொல்ப்பெரியகானகத்தில்
வில்லுமறந்தேதனோவிறமலையடிவனத்தில்



கொடப்பாவனென்றேவிக்குமேவனியிலொருகாயுதிலலே
வைப்பாவிஇவ்வனத்தில்மாண்டிருக்கக்காரியமென்
அம்பாடவுமில்லைஅறக்காயந்தானுமில்லை
சொம்பொன்திருமேனிசிவந்திருக்கக்காரியமென்
குத்திவிழுந்தவுடன்கோவென்றழைபாயமிட்டாள்
மெத்தவிளுந்தழுதாள்மேனிபொங்கும்புண்ணாக
புருகொருகுமலிபாபாபுண்ணியனைஎன்றழுதாள்
அழுதுவனத்துவிலேஅண்ணனையுந்தான்தேடி
அண்ணனிளந்தமான்போலேதாரைநல்லாள்பத்தினியும்
உனையிளந்துஅண்ணுவிகாணுவதில்லைபேரோ
உன்னைவிட்டுநான்தவிக்கஉடையாளிசொல்படியோ
என்னைவிட்டுநீபிரியாசரிட்டகட்டளையோ
என்றுபுலம்பித்திங்காளன்விக்கிக்குமேவியவியே
கண்டுபெரியக்காண்டிகண்குளிரத்தான்பார்த்து
அண்ணமார்தங்கையரெஅருக்காணியின்வாசே
உன்னெஞ்சுத்துயரமெல்லாம்உத்தமியேசொல்லுகிறேன்
உன்றுடையதுயரமெல்லாம்உள்ளடக்குந்தங்கையரே
பங்கமாய்வோடடைபங்கிளிமேயஉர்த்தமியே
அருக்குதீர்தான்புளிருக ஆனைசுத்தந்தானுமபண்ணி
முருகிரோடியிங்கேமெய்குழலேவாருமம்மா
அப்போஅண்ணருடன்பிறந்தஅருக்காணியென்னசொல்வாள்
பொன்னருடன்பிறந்தபேடைமயில்வாய்திறந்து
அண்ணம்போல்வாய்திறந்துஅருக்காணியென்னசொல்வாள்
என்னவகையாலேமாத்தாவோவார்வார்தனதசொல்கிறது
அண்ணனிருவரும்அத்தைபிள்ளைஏழுவரும்
என்னைத்தனிக்கத்தனக்கோடிசேனைதளம்
பட்டமுகளெல்லாம்பாசதமுங்காணுமல்
பட்டிபிடிம்பரியேறும்மன்னவரைக்காணுமல்
அறக்குக்கணுவதில்லைஆனைசுத்தம்பண்ணுவதில்லை
முறைதிரோடவில்லைமுடிக்குதல்முடிப்பதில்லை
எங்களண்ணமையுங்காணுமென்றான்ஆனைசுத்தம்பண்ணுவதில்லை
என்றுசொல்லத்தங்காளும்என்பதியும்சொல்வாள்
அந்நாளேதங்கையரெஉனக்காணதுணைநான்வாறேன்
வெந்தசமரிவந்துஉங்கள்வீரியரைக்காட்டுகிறேன்
மந்தனத்திர்த்தமுண்டேஅங்கேமருதாலிப்பொய்கையுண்டு
பொன்னுலவுஞ்சாவேடிபுகழ்ந்தனதிங்கிவையாம்

கன்னியர்கள்நீராடிகயிலாசதீர்த்தமுண்டு
நாயருக்காளுநல்லதிருச்சுனையில்
அந்தனதித்தீர்த்தம் அருந்திகிளியே ஆடுமம்மா
அந்தமொழிகேட்டல்லவோ அரியமாதாருதங்கையரும்
சிந்தைமிகவேதெளிந்துதேன்மொழியாளுத்தமியும்
தீர்த்தங்கள்தானாடிசிவனையடிபணிந்து
வாயாரவாழ்த்திமணியந்திரம்உச்சரித்து
முழுகிநீராடியங்கேமொய்குழலாள்தங்கையரும்
உடுத்துக்குயில்புளிந்துஒருசிறகுமுக்காடுமிட்டு
எடுத்தாள்திருக்கரகம்வந்துளேயப்பங்குலை
வர்ணமணிப்பூங்கரகம்வடிவுடனேதானெடுத்து
தண்ணீர்விடாய்தீர்க்கஅண்ணர்தாகந்தெளிவதற்கு
தாங்கியேபொற்கரகம்தலைமேலெடுத்துவைத்து
ஓங்கிவழிதானடந்துஒருகொடியில்த்தங்காளும்
போல்ப்பெரியபெரியக்காண்டிமாதாவும்
காராளவங்கிஷத்தைக்கண்டுவரவேணுமென்று
ஆதிசிவன்கர்த்தாவும்அய்யன்குமாரதியும்
பெரியக்காண்டிமாதாவும்பெருமையுடன்தான்பார்த்து
நீடுமோசாரகேசமுடன்வாறதையும்
எரிட்டுத்தான்பார்த்துஈஸ்பரியும்என்னசொல்வாள்
மானின்றகண்ணேமலடிபெத்தமாணிக்கமே
தலையானசந்திரன்போல்நீதனித்துவழிவந்தாயே
மலையானசூரியன்போல்நீமலையடியில்வந்தாயே
நீதானுங்கவந்தாயோஎன்தவசுமுடியமென்று
நானுகக்கண்டநடிநல்லதங்காளுத்தமியே
போல்ப்பெரியபெரியகாண்டியனமகிழ்ந்து
காராம்பசுவின்றகண்மணியும்நீர்தாமோ
என்றுசொல்லிமாதாவும்பிரந்தகளதான்தேடி
கண்டுவரவேணுமென்றுநல்லதங்காளுத்தமியும்
நடந்தாள்பெரியக்காண்டிநல்லாதம்விட்டிறங்கி
பேரூர்குடகுவனம்பெரியநரிக்கணுவாயில்
வழிநடந்தாளுத்தமியும்வாள்வீறர்களைத்தேடி
பளிகாரிதான்வாரேன்உங்கபடிகளத்தைத்தான்தேடி
வடுப்படாமேனியிலேவடுப்படுமோவென்றுசொல்லி
படிகளத்தைத்திசைநோக்கிபத்தினியும்வாறநடா
கோடையிடிதம்பிசங்கன்குமாரசங்கன்படிகளத்தை



தேடிவழிநடந்துநான் திகைத்துவழிவாறநடா
கண்ணானஎன்பிறவிகாவலரைநான்தேடி
உன்னோடுடன்பிறந்தஉத்தமியும்வாறநடா
காலுகளுந்தடுமாறிகண்ணுகளும்பஞ்சணைந்து
வேலும்விளிகளிரண்டும்விண்ணில்ப்பறந்திடவே
திங்கள்முகம்கண்டறியேன்நான் திகைத்துவளிவாறநடா
அங்காடிகண்டறியேன்அசல்முகத்தைப்பார்த்தறியேன்
விண்ணில்மழைநானறியேன்மேகத்தைநானறியேன்
தண்ணித்துறைவளிக்குதடங்களும்நானறியேன்
வாய்க்கால்கடந்தறியேன்வளிநடந்துவாறநடா
தாயானசந்திரனைதான்கண்டறிந்ததில்லை
முத்தம்பெருக்கறியேன்மூண்டுவளிவாறநடா
உற்றவிடந்தனக்குகாணுநாளும்போயறியேன்
வாசல்ப்படிகடந்துவழிநடந்துபோயறியேன்
தேசங்கடந்தறியேன்தேடிவழிவாறநடா
செம்பூலாம்வனக்காடுசிறுகுழுஞ்சிவனந்தேடி
மழைபெயும்கானகத்தில்வழிதேடிவாறநடா
காடேரபுனங்காடுகாரிரண்டவனந்தேடி
தாடாள்ன்தங்கையரும்நடந்தேடிவாறநடா
கூவிளம்பள்ளமதில்குலக்கொடியாள்வருகையிலே
தண்ணீர்தவித்திடுமாம்தங்கைநல்லாளுத்தமிக்கு
அண்ணருடன்பிறந்தஅருக்காணியிளவரசு
பொன்னருடன்பிறந்தபேடைமயில்த்தங்காளும்
அந்தக்கரைமணலில்அடிச்சுடுகாய்ந்திடவே
தணலையிழந்தாப்போல்தான்சுடவேதங்காள்க்கு
ஆக்கரித்தாள்தங்கையரும்அடியுங்குளுந்திடவே
மண்டியிட்டுத்தானிருந்துமணலைப்பரித்திடவே
மணலைப்பரித்திடவேமாமயிலாளன்னேரம்
கோவென்றபயமிட்டுகோடியிடைதம்பிசங்கா
தம்பிசங்கன்தனைநினைக்கதான்தீர்த்தம்பெருகியதே
ஆவென்றபையமிட்டாள்அருந்தீர்த்தந்தானைச்சு
வெள்ளிக்கிழமையினாள்விதமானதங்கையரும்
அள்ளியேதீர்த்தமதுஅடைவுடனேதான்குடிக்க
தாகம்தெளிந்தல்லவோதண்ணிவிடாய்தீர்த்தபின்
கூவிளம்பள்ளமென்றுகுவலயத்தில்ப்பேராச்சு
அந்தவனந்தான்கடந்துஅய்வனமேபோகையிலே

சிக்கதகலங்கியல்லோ திசைதோறுந் தான்பார்த்து
செப்புவாங்காடுமெது திருகன்னிவனந்தனிலே
அப்பால்க்குறிஞ்சிவனம் குணமுடனேதான் கடந்து
கல்லுக்கறுகெறுங்கறுகெனுவாயில்
மெத்தத்தனிகடந்து வியரந்துவழிபோகையிலே
சிங்கங்கரடிபுலிசெப்பருமுள்ளவனந்தனிலே
மோங்குமுடன்காட்டெருமைபுளகவனந்தனிலே
வால்நீண்டமிருகங்களும்வாளுமையாடிவர்க்கும்
கால்நீண்டபட்சிகளுங்கதித்ததொருகாட்டானை
போனசென்றையும்பெரியாரிவனங்களுமாம்
சோனைபட்சிகளுஞ்சித்தானைக்குட்டிகளும்
காண்டாமிருகவனங்கரடியங்கேதானைகடந்து
மாம்பாருஞ்சேவலிலேமானிடவர்கடவுதனில்
பாம்பாட்டிவீறன்பருங்களுவாய்வழிதனிலே
ஒங்கிவளர்திருக்குமுசந்தவனச்சோலையிலே
வேங்கைமரத்தடியில்தம்பிசங்கன்வீழுடனேசாய்ந்திருக்க
ஆதிசிவன்தன்மகளும்அன்புடனேதானுங்கண்டு

தங்காள் அண்ணமாரைக் கண்டது.

தங்கயரைத்தானிருந்திதங்காளைப்பாருமென்றான்
அவர்தாண்டிஉங்களண்ணர் அண்டிப்போய்ப்பாருமென்றாள்
ஆவ இடன்தானேடிதங்காள் அடையாளம்பார்த்திடவே
அண்ணன் திருவடியைக்கண்டுமெள்ளத்தங்காளும்
சின்னண்ணன் திருவழகைசிறப்பாகக்கண்டவுடன்
வலதுபிறந்தகத்திவந்துவாள்வீரரண்ணரையும்
இடதுபிறந்தகத்திவந்துஇன்பமுடன்தெண்டனிட்டு
கோவென்றலையமிட்டாள்குதித்துக்கொண்டாள்மார்போலெ
அடித்துவிழுந்தல்லவோஅய்யோசிவனேயென்று
மயிரைவிரித்தல்லவோமண்ணோடேதான்மோதி
கெட்டேனேஅண்ணாவிகெடுத்தாயோவென்றலறி
கோபமுள்ளமங்கையவள்கோட்டையிலேதானிருந்து
தாபமுள்ளதங்கையரைதனுத்தொருவிதானுக்கு
பாரமுடிராவணரேபடைகோரோஇவ்வனத்தில்
முடியினந்தராசமன்னருமுடனேசமரில்மாண்டதுபோல்
படியளந்தாமரைப்போல்பள்ளிகொள்ளக்காரியமென்
பச்சைக்கபாயணிந்துபரிவாளகச்சைகட்டி
கைச்சிலையுந்தான்பிடித்துக்களமடியக்காரியமென்
வெள்ளிவேல்கைவிருக்கசிங்கவிளிசோரக்காரியமென்
கொக்கிறகண்டவாளிருக்கக்குலக்களத்தில்மடிவானேன்
என்னைத்தவிக்கவைத்துஎமலோகஞ்சேர்ந்தாயோ
நானும்பாரதவிக்கஎமலோகஞ்சேர்ந்தாயோ
குலக்கொடியாள்தவிக்குமாரசங்காளன்பிறவி



உன்னோடுடன்பிறந்துகானகைதாரியானேனே
என்பிறவி அண்ணாவிநீயேமழுமதிபோனீரோ
பெண்ணோடுடன்பிறந்தபெரியண்ணரையுங்காணேனே
சின்னண்ணா அண்ணாவிபெரியண்ணரைஎங்கேவிட்டாய்
கொண்டல்வண்ணன்மாயவரும்கோபாலன்தன்னருளால்
அண்டாமல்பஞ்சவரைஆண்டிருந்தாற்றுவரை
கொண்ணுகருவருத்துகொடியதொருமாலையினால்
தேத்தாசன்தானுமங்கேதேர்விசையன்தன்மகனை
பார்த்துமிகமாலையினால்பலகபடைக்கக்கொன்றாப்போல்
அம்புமரந்தீரோஅத்தைபின்னமூவர்களும்
வில்லுமரந்தீரோஅண்ணாவிவிரமனகானகத்தே
கொக்கிரகண்டமந்திரவாள்கொடுங்கையிலேதானிடிக்கு
தாங்கியதோர்கேடயமும்தன்முதுகிலேயிருக்க
இருப்புநல்லகேடயமும்இடதுபிறந்தோளிருக்க
உருக்குநல்லசிராவும்உண்மையுடன்தானணிந்து
வெள்ளிகட்டும்வேலெடுத்துவீரமலைகானகத்தே
காண்டாவனமெரித்தகைலம்புதானிருக்க
வேண்டாரைச்சங்கரிக்கும்விசையனைப்போலிருந்து
ஆண்டவனார்சொல்ப்படியோஅதிகாரமிப்படியோ
மாண்டாயோதம்பிசங்காமாண்டுவிடக்காரியமென்
தென்னிலங்கைராவணனும்சீதைசிறைதானெடுத்து
போகையிலேசடாயுந்தான்போர்மூண்டுமடிந்தாப்போல்
இசரதனார்தன்மகனும்தென்னிலங்கைதான்போயி
மூவுலகையாளும்மந்தமுடிபெருத்தராவணனை
அங்குதனைவிட்டல்லவோஅவன்கிரிடங்கள்பறித்தாப்போல்
மோதியெஅங்கதனும்முடிவிலந்தபாவினைபோல்
வேடுவரைச்சங்கரித்துஅண்ணாவிவெந்திகொண்டுவாராமல்
படுகளத்தில்மாண்டதென்னபாரமுடிராவணரே
அச்சமில்லாதவனைலராயடங்கனுமேதானறுத்து
இராகுதனைத்தானறுத்துராமாசிறைமீட்டிலையோ
அந்தப்படிசெய்தலவோஅண்ணாவிவருவையென்று
பத்தினியும்பார்த்திருந்தேன்பாரமுடிராவணரே
சின்னண்ணாவென்பிறவிசிவலோகம்சேர்ந்தாயோ
இந்த்திடைதான்கிடக்கசரிட்டகட்டளையோ
என்றுசொல்லித்தங்கையருமங்கேயேதான்புலம்ப
மண்டியிட்டுத்தங்காளும்மார்மேலேமயிர்விரித்து
அண்ணரிடமேல்விழுந்துஅய்யோசிவனேயென்று
மயிரைவிரித்தலவோமார்மேலேதானரைந்தாள்
கோவென்றபயமிட்டாள் குத்திக்கொண்டாள்மார்மேலே
பத்துதடாஎன்னுயிருபாதகனேதம்பிசங்கா!
மார்மேலேகண்ணீருதாரைவிழத்தனழுதாள்

சின்னண்ணன்மார்மேலெசினந்துபிறண்டழுதாள்
அண்ணருடமேல்விழுந்து அழுதுபுலம்பையிலே
கையைப்பிடித்தலவோகடிகியங்கேதானெழும்பி
தண்ணீரைத்தான்வாங்கிதாயார்முகந்தான் துடைத்து
துயரமெய்லாமுள்ளடக்குந்தோகையிளமயிலே
பக்கமாநீவாடிபாங்கானதங்கையரே
உங்களண்ணர்தனையெழுப்பஉண்டடிவாடியம்மா
என்னுடனேசொல்லுமடியிளங்கொடியேதங்கையரே
வேணுமென்றதளவாடம்விதமாகச்சொல்லுந்தங்கா
என்தாயேயீஸ்பரியேயினிக்கேளுசொல்லுகுறேன்
காராவின்கோமாரிகடிகியங்கேவேணுமம்மா
ஆவுநெய்யும்பா லுடனே அதுவேணும்யீஸ்பரியே
நாடுமதுகோவாரியிந்தநடுவனத்திலுண்டோடி
குறிஞ்சிவனந்தனிலேகோதையரேகிடைக்குமடி
குறிஞ்சிவனந்தான்போயிக்கொண்டுவரவேணுமம்மா
காவேரித்தீர்த்தமதுகடிகியங்கேவேணுமென்றார்
காவேரித்தீர்த்தமதுகாதவழிபோகவேணும்
அந்தனதிக்கிலேயாறுஆனதொருதீர்த்தமது
மஞ்சள்சுனையருகேமருதசுணிதீர்த்தமுண்டு
சாம்பிராணிகூடங்களுஞ்சமுத்தேழுசுப்பிவேணும்
மஞ்சனீர்பொய்கைநீர்வரவேணுமாதாவே
அலரிஅரசுடனே அளருள்ளபாலின்சுப்பை
மாவும்புரசுடனேவகையாலத்தசுப்பியுடன்
வெற்றியுள்ளதற்பைகளும்வேணுமென்றாள்தங்கையரும்
புண்ணியதானஞ்செய்யப்புரசுடனேசமுத்துகளும்
எண்ணியேழுசப்பியிப்பவரவேணுமென்றாள்
கொண்டுவரவேணுங்குலக்கொடியேமாதாவே
அய்யன்குமார்த்தியுப்அப்போ அனுமாரைத்தானழைத்து
மலையிலுள்ளமந்திதன்னைவாருமென்றாள்தாயாரும்
வந்துமேமந்திகளும்வாருடனேஅடிபணிந்து
மெய்யாகவெழுசப்பிவிரைந்துகொண்டுவாருமென்றாள்
வலிறுள்மந்திதன்னையியல்பெரியமாதாவும்
சிந்தைகுளிர்ந்துசீக்கிரமாய்த்தான்தேடி
சீதைசிறைமீள்க்கத்தென்னிலங்கைபாய்ந்தாப்போல்
தாண்டியங்கேதானோடிச்சஞ்சீவிகொண்டுவந்தாப்போல்
அரைகூணமேமந்திகளும்ஆனசுப்பிதானெடுத்து
கொண்டுவந்துமந்திகளுங்கூடித்துமங்கேபோனதுவே
வாடாதபுஸ்பங்களும்மருதாணித்தீர்த்தமது
தேடாமலிருக்குமங்கேதெய்வப்பசங்கிளியே
இனியென்னதளவாடங்கள்வேணுமடிதங்கையரே
நவநீதமானதெல்லாம்வந்துதென்றாள்தங்கையரும்
ஓமம்வளர்த்திடவேகுருகுருக்களும்வேணுமென்றான்



நால்வேதசாஸ்திரமும்நான்முடிப்பேன்தங்கையரே
குருக்கள்மார்சாஸ்திரமுங்குறிப்புடனேதான்முடிப்போம்
அர்க்கையுடன்நால்வேதம்ஆருசாஸ்திரமுள்ளதெல்லாம்
பிரபலமாய்நான்முடிப்பேன்போரசேதங்கை யரே
என்றுசொல்லத்தங்கையரும்எழுந்துவந்தாள்கரையருகில்
நடத்துமென்றயாகமெல்லாம்நடத்துகின்றாள்தங்கையரும்
வடம்பிடிங்கிக்கோட்டைபிட்டுவகையாயரைதடித்து

யாகம் வளர்த்தனரே

ஓமுமலைகலசம்வைத்தான்ருகநாலணிந்து
நாலுதலைவாசலிட்டுநன்றாகதிண்ணையிட்டு
நடுவேயொருதிண்ணையிட்டுநாலுகும்பந்தானிருத்தி
வடம்பிடித்துநூலணிந்துமாவிலையுந்தான்சொருகி
குடம்பிடியாஅகல்ப்பதுப்பிகுயவிளக்குத்தானேற்றி
நடமதிற்துரைகுருக்கள்தான்சேரவேணுமென்று
திடமாகத்தானணிந்துசெபித்தாளேமந்திரத்தை
அய்யன்குமார்த்தியும் அப்படியேபூசைசெய்து
ஓமம்வளர்த்தாளேயுண்மையுடன்பெரியக்காண்டி
ஓமம்புகையெழும்பிதெய்வலோகமூடிதப்போ
ஆருபுகையென்றுசொல்லுஅப்போ அரனுங்கேட்டிடவே
நாரதனும் [illegible] வையைப்பான்
பஞ்சவர்கள் அய்வரைப்போல்பாருண்டார்பூமியிலே
வெற்றியுள்ளபஞ்சவர்கள்வீரியர்களிருவருண்டு
அத்தைபிள்ளைமூவருண்டு அதிவீரசூரர்களும்
சோணாட்டிடிக்குடியிருந்துகொங்கரையுஞ்சங்கரித்து
மேனாட்டுவேடுவரைவெட்டிக்கருவறுத்து
பாசமுடிராவணனும்பட்டுவிழுந்தாப்போல்
வீரமலையடிவனத்திலிவிடாய்த்தகளமாறாகன்
அவர்களுடன்பிறந்தஅருக்காணிபின்வாசி
ஓமம்வளர்த்து [illegible] யும்
யாகம்வளர்த்து [illegible] அருந்துதியாள்கல்லதங்கா
என்றுசொல்லச்சிவனுரும்யின்பமுடன்தான் [illegible]
ஆதிசிவன்தன்மகளாம்அகிலாண்டேஸ்வரியும்
ஏழுபேர்தனக்கிளையஎழுகன்னிநாச்சியரே
மழுவேந்தும்ஈஸ்பரனார்மலரடியைத்தான்போற்றி
அய்யாசரணமென்றுஅடிவணங்கிதெண்டனிட்டு
பொய்யாமொழியாரைப்போற்றியேதெண்டனிட்டு
அண்ணரிருவருக்கும் அத்தைபிள்ளைமூவருக்கும்
எண்ணத்துலையாதவர்க்குரோணிபடைதனக்கும்
ஆனைபடைசேனைதளம்அடங்குமேதானெழும்ப
மண்டலத்தில்தானிருக்கவரம்வாங்கிவாருமென்றான்
அனுப்பினாள்நாச்சியாரைஆதிசிவன்தன்மகளும்

மழுப்பெருக்கவேணுமென் றுமாதுயிளங்கிளியாள்
எழுகரைநாச்சியரும்இன்பமுடன்தானெழுந்து
பொன்னேணிவைத்தலவோபூவேணிமேலேறி
சிறந்தபொருநாச்சியரும்சிவலோகம்போய்ச்சேர்ந்து
சிவனாரைக்கண்டுதெண்டனிட்டாள்நாச்சியரும்
சிவனாருமப்போதுசிறும்பிமுகம்பார்த்து
கன்னியிளங்கிளியேகாரிகையைத்தான்பார்த்து
எழுசிரிநாச்சியரும்என்னவேவந்தாயெனக்கேழ்க்க
என்னவரம்வாங்கவந்தாயென் றுரைத்தாரீஸ்பரரும்
பொன்னனொன் றும்சங்கரொன் றும்பூதலத்திலிருவருண்டு
மன்னவர்களிருவரையும்வஞ்சேடர்சங்கரித்தார்
வேலேவரைச்சங்கரித்துவிடாயததகளமானூர்கள்
காடுபடைபொருதிங்கேவணதடுதேமாண்டார்கள்
எழுப்பவரம்வாங்கியிப்பவரச்சொல்லுமென் று
பிழைக்கவரம்வாங்கிபெரியக்காண்டிமாதாவும்
இத்தனைவரம்வேணுமெனழுப்பிவிட்டாள்மாதாவும்
அத்தனைவரம்வந்தேனென் றுஅடிபணிந்துதெண்டனிட்டாள்
மழுவேந்தும்ஈஸ்பரனார்மனமகிழ்ந்துகொண்டாடி
மனிதர்பொருட்டாகவந்தாயோயிதனாரம்
நல்லதென் றுசொல்லிநகைததுமென்னஈஸ்பரனும்
பொன்னூசிபொன்சரடுபொருதிட்டேகாயததுக்கு
கணையூசிதான்குடுத்துகனவரம்தான்குடுத்து
செம்பொன்சிலையேந்தும்சிவனாரும்என்னசொல்வார்
மல்பொருதும்படுகளந்தைவந்துநான்பார்க்கவேணும்
வந்துநின் றுபார்த்துவகையுடனேஅவர்களுக்கு
வாக்குவாழும்மனதாரநான்தருவேன்
எழுகரைநாச்சியரேயினியேகுமென் றுசொன்னார்
அனுப்பவேநாச்சியரும்அன்புடனேசிரிந்தி
பக்கமேநடைவந்துமாதானைததான்பணிந்து
சீராணநாச்சியருஞ்செப்பினார்ஸ்யிக்கும்
போரவ்பெரியபெரியக்காண்டிமாதாவும்
அரியபெரியக்காண்டிஅய்யன்குமார்த்தியும்
கர்த்தன்குமார்த்தியும்கைலாசக்கன்னியரும்
மெத்தமனமகிழ்ந்தலவோமேலானதங்கையரும்
அண்ணருடன்பிறந்தஅருக்காணியிளவரசே
பொன்னருடன்பிறந்தபேடைமயில்தங்கையரே
திக்கெனவேதானழைததுசெப்பினாள்மாதாவும்
தங்கதிருமேனியரோதாழ்விலாப்பததினியே
சங்கருடன்பிறந்தசாதிமரிக்கொழுந்தே
பக்கமேதானழைததுப்பததனியாள்தன்கையிலே
பொன்னூசிபொன்சரடுபோததேதான்குடுத்து



காயம்பொருதக்கனகமுடிததங்கையரே
எழுப்பவரம்வந்துதடிஉங்களண்ணரையும்யெழுப்புயினி
என் றுபெரியக்காண்டியியல்புடனேவாங்குடுத்தாள்
அய்யன்குமார்த்தியும்ஆச்சரியம்போலிருந்தாள்

அண்ணமார்களை யெழுப்புவது.

ஆதிசிவன்தனைநோக்கித்தங்காளன்புடனேஸ்தானம்பண்ணி
யாகமதுதான்வளர்ந்தாள்அரியபிறவியரும்
ஓமம்வளர்த்தலவோஉத்தமபத்தினியும்
அண்ணருடன்பிறந்தஅருக்காணியிளவரசி
பொன்னருடன்பிறந்தபேடைமயில்த்தங்காளும்
திக்கெனததானெழுந்துதிசைதோறுந்தெண்டனிட்டு
சந்திரகாந்திப்பட்டா சரிமுக்காடுதான்போட்டு
இந்திரநீலப்பட்டெடுத்துத்திடீகமெங்குந்தான்மூடி
தம்பிசங்கர்காயமதைசதுருடனேதான்பார்த்து
பொன்னூசிகொண்டல்லவோபொருதிநாள்ரேகமெங்கும்
காயம்பொருதியல்லோகடுப்புழுதிதான்துடைத்து
தாய்பெத்தமேனியைப்போலசரீரமெங்குஞ்சுத்தம்பண்ணி
[illegible]மாலைதான்சாத்தி
சூடாதபுஷ்பமெல்லாஞ்சூட்டியலங்கரித்தாள்
சந்தனம்புனுகுசவ்வாதுகளபமுடன்
குங்குமம்கஸ்தூரிகுமுகுமெனத்தான்தெளித்து
முத்துவர்ணப்பட்டெடுத்துமுக்காடுதானுமிட்டு
சற் றுமுகந்தெரியாமல்சரீரமெல்லாந்தான்மூடி
இட்டவிதியென் றுசொல்லிஈஸ்பரனைத்தான்பணிந்து
வட்டமழுய்ச்சுத்திவுந்தலரிவிழுந்தழுதாள்
பின்னண்ணுதம்பிசங்காசிறுபுலியென றழுதாள்.
மயிரைவிரித்தலரிமார்மேலரைந்துக்கொண்டாள
மண்டியிட்டுமயிர்விரித்துமண்மேலேதான்புரம்ப
தாகத்துக்கொருகாகம்தண்ணீருகொண்டுவந்தேன்
தாகம்தணிக்கவந்தேன்தண்ணிவிடாய்தீர்க்கவந்தேன்
கோபந்தணிக்கவந்தேன்குழுந்தமுகம்பார்க்கவந்தேன்
தாபமுள்ளதங்கையரேதனித்தொருவிதானுக்கி
வஞ்சினையும்செய்தாப்போல்வகைமூன் றாய்த்தான்பிரித்தோம்
நெஞ்சிலரைந்துகொண்டுநின் றழுதாள்தங்கையரும்
என்செய்வேனண்ணாவென் றேங்கியேதானழுதாள்
அய்யோசிவனேஎன் றுஅடிசுந்துவிழுந்தழுதாள்

சின்னண்ணன்தேவியரெதிர்கூட்டி வேள்விசெய்து
கல்லுக்கடன்களித்துகயிலாசஞ்சேருமென்று
சொல்லியேதண்ணியிறைத்துசொல்லிவந்தேதன்அண்ணனை
பேச்சிமுலையுண்டருரும்பெருமாள்வடிவெடுத்து
காச்சியபால்தயிருகளவாண்டகள்ளனைபோல்
வச்சமண்டிவாங்காமல்மந்திரவாள்தோளில்வைத்து
பச்சைமேனிவர்ணனைப்போல்பள்ளிகொள்ளக்காரியமென்
சூளிகையுமண்டபமுந்தூய்யமணிமாளிகையும்
தாளம்பாடிக்கக்கனுவாயில்சாய்ந்திருக்கக்காரியமென்
அத்தைபிள்ளைமச்சினனே அருமைப்பெருமாளே
மண்ணளந்தாமரைப்போல்மாண்டிருக்கக்காரியமென்
போட்டமண்டிவாங்காமல்பிழைமோசம்வந்ததென்ன
இட்டமண்டிவாங்காமல்நீங்களிங்கிருக்கக்காரியமென்
தொட்டகபாயுடனேசோமதுவாங்காமல்
கட்டிவற்கம்குலையாமல்கனவேடாத்தினையும்
தந்திரமாய்ப்படைபொருதிதான்மீண்டுவாராமல்
மந்திரவாள்கைசோறமாயகிட்டகட்டளையோ
சொம்புமந்திரோதோகைமலையானந்தல
அம்புமாந்ததென்னஅய்யரிட்டகட்டளையோ
வில்லுமாந்திரோவிராமலைகானகத்தே
என்னைவிட்டுநீபிறியஎழுதினோபிர்மாவும்
உன்னைவிட்டுநான்தவிக்கஉகைளந்தார்சொல்படியோ
ஈசனெழுத்தோநானமணிட்டபாவினையோ
எழுத்துப்படிதப்பாமல்இறந்தீரோகானகத்தில்
என்றுசொல்லித்தங்கையரும்ஈஸ்பரனைத்தானினைக்க
அந்தநல்லவேளையிலே ஆதிசிவன்கர்த்தாவும்
சாந்திபண்ணும்பிராமணன்போல்தள்ளாடித்தள்ளாடி
செல்லரித்தபுஸ்தகமுந்திண்டுகோல்த்தானூன்றி
பூர்ஊள்ளவெஷ்டிகட்டிபெரியவன்போல்நடுநடுங்கி
வள்ளம்பிடித்தகையில்வாகானசொம்பேந்தி
பூராநல்லவேட்டியுடன்பூணூலுந்தானணிந்து
நீர்மெத்தத்தான்பூசிநிறைந்தருத்திராச்சியுடன்
புண்ணும்பொடியுடனேபுறப்பட்டான்வேதியனும்
அண்ணருடன்பிறந்தஅருக்காணிதானறிந்து
அறிந்துகொண்டாள்தங்கையரும்அய்யநாதன்வடிவை
எரிட்டுப்பார்த்தல்லவோஎன்னசொல்வாள்தங்கையரும்



செப்புச்சிலையேந்திசிவரூபமானீரோ
அம்புகளைதிருத்திஅலகுமாகுயிதளாக
கொடுங்கணையும்வில்லெடுத்து [illegible] கம்கொண்டதெல்லாம்
வானைத்தகலைட [illegible] துமாரி [illegible] ம்புதொட்டு
தாமரைமலரம்புதொட்டு [illegible]
மார்க்கமுடன்வந்தவகைமலந் [illegible]
வந்திர்பிராமணரேவாகாகநீர் [illegible]
* சாந்திபண்ணும்பிராமணரே சாந்தியதுபண்ணுமென்றாள்
சிவநாருந்தானபார்த்து செல்வமுள்ள [illegible]
செப்புக்காகந்தண்ணீர் [illegible] வாரும்
அப்படியேதங்காளும் [illegible] கொண்டுவந்தாள்
நாலுசதுரமுடன்நன்றாய்மெழுகுமென்று
தலைவாழையிலையும் [illegible] குடுத்தாள்
வாழையிலையும [illegible] தான் [illegible] ள்
முன்னாளிபச்சரிசி [illegible]
அப்படியேதானேஅடவுடனே [illegible]
வாழையிலைதான்விரித்து [illegible] வாரியதும்
பச்சரிவாரிகொண்டுவந்து [illegible]
அட்சரதனைதீட்டிவைத்துஆனதொருவே [illegible]
சொம்பை [illegible] வைத்து [illegible]
உள்ளேசொருகியே [illegible]
சிவனையெழப்பவன் [illegible]
நால்வேதசாஸ்திரமும் [illegible]
தங்காள்கையிலக்கு [illegible]
வேணுமென்றபேரை [illegible]
தன்னரிதெளித் [illegible]
நல்ல [illegible] கையில்வாங்கி [illegible]
வந்தபிராமணர்க்கு [illegible]
போர்களத்தில் [illegible]
கானயதுசொரிந்து [illegible]
ஆதிசிவன்கர்த்தாவும் [illegible]
வேணுமென்றபேரை [illegible]
என்றுவாங்கு [illegible] பிராமண [illegible]
அண்ணருடன்பிறந்த அருக்காணி [illegible]
அஷ்டதிசை [illegible]
வட்டமிட்டெச்சத்துடன் [illegible] வாள்விராண்ணையும்

கொண்டுவந்ததண்ணீரைக்குலக்கொடியாள்விட்டெறிந்தாள்
மண்டியிட்டுஅண்ணரையும்வலமாகச்சுத்திவந்து
தீர்த்தத்தைவாங்கிச்சின்னண்ணன்மேல்த்தெளித்தாள்
(அண்ணமார் யெழுந்திருந்தது)
கீர்த்தியுள்ளதம்பிசங்கன்கிணுக்கண்டபாவினைபோல்
குலவையிட்டுயெழுந்திருந்தான்கோயிடிதம்பிசங்கன்
அலைக்கொட்டியெழுந்திருந்தானண்ணரையுங்காணேனே
ஆக்கரித்துத்தம்பிசங்கன் அதட்டியெழுந்திருந்தான்
தங்காளுந்நிற்கிறதைக்கண்டானேதம்பிசங்கன்
சிக்கிறதில்த்தங்கையரைச்சினந்துமுகம்பார்த்தான்
கோட்டையிலேவைத்துவந்தேன்கூசாமலித்தூரம்
நாட்டில்வழிவந்ததென்னதற்றுணையுமில்லாமல்
வழிக்குத்துணையில்லாமல்வெகுதூரம்வந்ததென்ன
பழிகாறன்தேசத்திலேபத்தினியும்வந்ததென்ன
என்றுசொல்லித்தம்பிசங்கன்எடுத்தானேமந்திரவாள்
வாளெடுத்துக்கைமேலோங்கிவடிவுடனேதானெழுந்தான்
வெட்டுவேனென்றுவீறுடனேநிர்க்கையிலே
கண்டுபெரியக்காண்டிகனேமோசம்வந்ததென்று
நன்றாச்சுத்தம்பிசங்காநானிக்கிறதுயெண்ணாமல்
வாளாலேதங்கையரேவீசவென்றுதானெழுந்தாய்
மனந்துணிந்துஎழுந்திருந்தான்மாபாவிதம்பிசங்கன்
பெண்ணென்றசென்மம்பிறப்பாரோவையகத்தில்
அண்ணரையுந்தேடித்தங்காள்அழுதகுரல்தான்கேட்டு
வழிக்குத்துணையாகவந்தேகாண்தங்கையுடன்
பளிக்குத்துணையாகயிந்தப்பத்தினியைக்கூட்டிவந்தேன்
என்றுசொல்லத்தம்பிசங்கன்யிருதோளும்பூரிதமால்
கட்டியணைத்துக்கதறியேதம்பிசங்கன்
அண்ணரையுங்காணேனேஐயோவெனவழுதான்
அண்ணாவியென்பிறவிநம்மஅண்ணரையுங்காட்டுகுறேன்
அண்ணரையுங்காட்டுகுறேன்யெழுப்புகுறேன்என்பிறவி
பெண்ணாய்ப்பிறந்தல்லோயெங்கள்பழிதீர்க்கவந்தாய்
நீயாணாய்ப்பிறந்தால்அரசாள்வாய்பூமியிலே
என்றுசொல்லித்தம்பிசங்கன்யிருகணெடுவணைத்து
விட்டாரேதம்பிசங்கன்மேனியெங்குந்தான்துடைத்து
பெரியண்ணர்பட்டயிடம்யெங்கேயென்றான்தம்பிசங்கன்
அண்ணர்பட்டபடுகளத்தில்அழைத்துப்போய்விட்டார்கள்



அடித்துவிழுந்தழுதுஅட்டமாய்ச்சுத்திவந்து
கேட்டேனேஅண்ணாவிஉனைக்கெடுத்தானேஎமனுந்தான்
மட்டுப்படாவெகுதளங்கள்வந்ததையுங்காணாமல்
சத்தியமேமெய்யாகசதிகாரன்பின்போனீர்
வெத்திசெய்துநானும்விடாயத்தகளமானேனே
எந்தன்படுகளத்தையெழுப்பிநாய்தங்கையரே
அண்ணன்படுகளத்தைநீஆரணங்கேயெழுப்புமென்றார்
வெத்தியுள்ளதம்பிசங்கன்விரியனும்பார்த்துநிற்க
தண்ணீர்தெளித்தாளேதங்கைநல்லாளுத்தமியும்
பதறியெழுந்திருந்தார்பகவான்கிருபையாலே
முத்திபெற்றபொன்னருந்தான்மொய்குழலைத்தான்பார்த்து
தங்காள்புறவியம்மாநீதனித்துவரக்காரியமென்
இத்தூரம்வந்ததென்னயிளவரசேதங்கையரே
உன்தோளிமாரெங்கையடிதோகையரேஎன்பிறவி
உன்தாதிமாரெங்கேயடிதங்கைநல்லாள்பத்தினியே
என்றுசொல்லஅண்ணரும்வதுசொல்வாள்தங்கையரும்
துணைவாருமென்றுசொல்லித்தோழியரைத்தானழைத்தேன்
தேடித்துணைவாருமென்றுசிராகநானழைத்தேன்
கூடித்துணைவாருமென்றுகூப்பிட்டேன்தோழியரை
கூப்பிட்டகுறல்கேட்டுக்குலக்கொடியாள்தோழியரும்
நாங்கள்வருவதில்லையென்றுசொன்னாளேதோழியரும்
எங்களைவிட்டுஎந்திழையேநீபோனால்
ஈடேற்றமில்லையென்றுசொல்லியேதோழியரும்
தீமூட்டுயேகுமென்றுசெப்பினாள்தோழியரும்
அக்கினியைமூட்டியவல்லோர்ஆனநல்லவேளையிலே
தீமூட்டிவேள்விசெய்துதிக்கெணவேகடன்கழித்து
பாக்கமுள்ளசாஸ்திரங்கள்பலகடனும்தான்முடித்து
நல்லுக்கடன்கழித்துக்கயிலாசஞ்சேர்த்துவந்தேன்
அண்ணரையுந்தான்தேடிஅழுதகுரல்தான்கேட்டு
வழிக்குத்துணைவந்தாள்வன்மையுள்ளமாதாவும்
அழைத்துவந்தாளீஸ்பரியும்அண்ணாவிநானும்வந்தேன்
உத்தமபத்தினியேஅத்தையின்பிள்ளைமூவர்களும்
காணுமேஎன்பிறவிகயிலாசக்கன்னியரே
அத்தைபிள்ளைபடுகளத்தில்அன்பாகக்கூட்டிவந்தார்
தம்பிசங்கன்பொன்னருந்தான்கூடிக்கண்கலங்கி
அண்ணாவியென்பிறவிஅவர்களையுமெழுப்புகுறேன்

செப்புக்கரகக் கன்னி திரமாகவிட்டெறிந்தாள்
அத்தைபிள்ளை மூவர்களும் அலரியங் கேதாவெழுந்தார்
ஆனைபடைசேனையெல்லாமெழுந்த பின்பு
இந்தவனந்தனிலே நாங்கள்பட்ட படுகளத்தை
வந்துயெழுப்பினையே வாகான தங்கையரே
தங்கையதுகேட்டுத் தானுரைப்பாளப்போது
ஆனைபடைசேனைகளும் அந்தனையுந்தான்கூட்டி
அண்ணாவியென்பிறவி போவோம் நீவாருமென்றாள்
அரியபிறவியரே அன்பான தங்கையரே
இருக்கவிதியில்லையம்மா வென்பிறவி தங்கையரே
நீங்களிருக்கவுமே அதிகாரமில்லையம்மா
பதினாறுவயதளவும் பாரவிட்ட கட்டளைதான்
அய்யோ சிவனே ஆதிபரமேஸ்பரனே
எனக்கும் ஆணையென்று யெழுப்பினேன் அண்ணரையும்
பஞ்சமாபாதகரே பாவியுநான் தனித்திருக்க
எழுதினான் பிரமனுந்தானென்றழுதாள் தங்கையரும்
பொன்னருந்தான் புலம்பிப் பொற்கொடியாள் பக்கல்வந்து
அஞ்சாதே தங்கையரே உனக்கான துணைசொல்லுகிறேன்
கண்ணீர் தனைத்துடைத்துக் கண்ணோடுறவணைத்து
அரியபெரியக்காண்டி அம்மாள் துணையுனக்கு
ஈஸ்பரியாள் துணையுனக்கு இளவரசே தங்கையரே
பாங்கான விசய்யமன்னி பக்கத்துணையாயிருப்பாள்
எங்களுக்கு குப்பம் [illegible] தம்பினிற்றாடி என்பிறவி
கயிலாசமனங்களுக்கு [illegible]யிளவரசே
சீக்கிரமாய்ச் செய்யுமம்மா தெய்வப்பசுங்கிளியே
கயிலாசஞ்சேர்க்கையல்லோ கனகமுடித்தங்கையரே
கனவேள்வி செய்துதங்காள் கயிலாசஞ்சேருமென்று
அப்படியே தங்காளும் அறநாளைத்தான் பணிந்து
கோதானம் பண்ணியங்கேக்கசந்திக்கிரைவணைத்து
அண்ணாவிருவருக்கும் அன்பானபட்டெடுத்து
மேலெங்குந்தெரியாமல் மூடியே தங்கையரும்
மஞ்சநீர்தான் தெளித்து அவளையாயிருவரையும்
பொன்னூசி கொண்டு பொருத்தின சட்டையெல்லாம்
செப்பூசி கொண்டு சேர்த்த சட்டையெல்லாம்
தங்காளும் தானுருவத்தாணியிலே மாண்டுவிட்டார்
பொன்னுருசாருவ பொன்னரும் மாண்டுவிட்டார்



தம்பிசங்கன் சாருவத்தான் மடிந்தானப்போது
அத்தைபிள்ளை மூவர்களும் அங்கனவே தான்மடிந்தார்
சங்கர்மடிந்ததுடகந்தல் தளமுமடிந்ததுவே
அண்ணரையும் இருக்கவைத்து அன்பான தங்கையரும்
அக்கினியில் வைத்து அடவாயனல்மூட்டி
தீக்கடலும் நீர்க்கடலுஞ் சீக்கிரமே தான்முடித்து
கல்லுக்கடன் கழித்துக் கயிலாசஞ்சேருமென்று
வீரமலைவனத்தில் வீற்றிருந்தார் தேவதையாய்
என்றுசொல்லித் தங்காளும் வந்திரிக்கும் வேளையிலே
அரியபெரியக்காண்டி அன்புடனே ஓடிவந்து
கன்னியந்தஈஸ்பரியும் கனகமுடித்தங்காளை
கூட்டியழைத்துக் குலாவியிருக்கும் வேளையிலே
அரியசிவனாரும் அன்பாய்மனமகிழ்ந்து
பெருமையுடனே பூந்தேர் அனுப்பிவைத்தார்
கன்னியுடன் தங்காளும் கனகமுடிமாதாவும்
பூந்தேரின்மேலேறியரியமுடன் தானேறி
பொன்னுலகந்தன்னில் போய்ச்சேர்ந்தாள் தங்கையரும்
அந்நாதமேமரி அனைவரும் போய்ச்சேர்ந்தார்
தூபதீபம் பெருமபுகையும் சீரானமணிக்குரலும்
பூமாலைமணிவிளக்கும் பொன்னர்சங்கர் விளையாட்டும்
மாதாவிளையாட்டும் மங்கைதங்காள் சன்னதமும்
காட்டின்மேல் சன்னதமும் கல்லுமலையில் பூசைகொண்டு
வாக்குவரமுமருப்பசவுகளும்
உண்டென்றுறபங்கில் உகந்திருப்பார் பொன்னர்சங்கர்
விறமலைவனத்தில் வீற்றிருந்தார் தேவதையாய்
பட்டமறங்களெல்லாம் பாலாய்ச் சொரிந்திடவே
காய்ந்தமரங்களெல்லாம் காய்த்துக்கனியுதிரும்
பாரமலைதாண்டித்துப்பாடினேனிப்புவியில்
வீரமலைகாவியத்தை விதமுடனே சொன்னதுவும்
தோகைமலைக்கிழப்புறமாய்ச் சுற்றமுள்ளவளநாடு
தண்மையுள்ள சோழமன்னன் தான்விளங்குதஞ்சைநாட்டில்
வேலூர்தன்னில் விளங்குங்கிராமமதில்
காசிபகோத்திரத்திற் கருணையுடன் வந்துதித்தோன்
சிவஞானசமங்கதேசிகனுஞ்சிதம்பரவேள்
வண்மையுடனீன்றருளும் வாரணவாசிக்கவிஞன்
சொல்லிலுமே மன்மைபெற்ற துலங்குங்கவிவாணன்

வல்லமையிற்பேறுபெற்றவாரணவாசிக்கவிஞன்
இத்தினையும்ஆராய்ந்துஇயல்புடனேசொன்னகதை
மாயகருளாலேவலகையுடனேமுடித்தகதை
சொன்னவிபரமிதுதொல்புவியார்தானறிய
பாரதயுத்தமதில்பண்பாகத்தான்பார்த்து
தெளிந்துவிபரமுடன்செய்தோனிக்கதையை
கனிதமுடன்பார்த்துக்கருதினேனிக்கதையை
வண்ணப்பிறபந்தன்வல்லகவிவாணனுக்கான்
சொன்னபிறபந்தமதுசொன்னநல்லகாவியந்தான்
கலியுகசகாப்தங்கணிதமதுதான்பார்த்தி
காலாயிறத்துநானூறுதித்தெண்ணூறுந்தாராமாண்டில்
தான்முதிவருஷமதுதலங்குமங்களாயிலெ
கார்த்திகைமாசம்கூடியபதினாறில்
பதினாறாந்தேதியகறமுள்ளஉத்திரத்தில்
சேயாதசயிவினுள்செய்யகன்னிலக்கினத்தில்
வாரணவாசிக்கவிஞன்வண்மையுடன்சொன்னகதை
சயலகுணமறிந்துசொல்லிமுடித்ததுவே
பொன்னசங்கர்காவியத்தைப்பொருத்திமுடித்தகதை
தங்காள்புலம்பல்தயவுடனேதான்முடிக்க
ஏழுபேர்கன்னியரும்இணைபிரியாத்தங்கையரும்
அரியபெரியக்காண்டிஅன்பானமாதாவும்
இணையாகச்சேர்த்துஇன்பமுடன்தான்படிக்க
வண்மையுடன்பாடிவுனதமுடன்சொன்னகதை
பாடிப்படித்தவர்கள்பதினாறும்பெற்றிடுவார்
சந்ததியுண்டாகும்வந்தவினைதான்தீரும்
இத்தலத்தைநினைத்துஎத்தலத்திற்போனாலும்
சத்தியுடன்பூசைகொண்டுமுத்திவரந்தான்குடுப்பார்
அவரைநினைத்தவர்க்கெல்லார்க்கும்நீடூழிகாத்திடுவார்
சென்றவழியெங்கும்சிறந்ததுணைதான்வருவார்
தஞ்சமென்றபேரைத்தப்பாமல்க்காத்திடுவார்
கேட்டவரங்குடுப்பார்கேழ்விக்குமுன்னடப்பார்
பட்டதுயரம்படுந்துயரந்தான்தீர்ப்பார்
பில்லிசூனியங்களைவெல்லக்கவல்லவன்காண்
கேட்டபெரியோர்கள்திருவுடைக்கடல்போலெ
எழுதிப்படித்தவர்கள்இன்பமுடன்கேட்டவர்கள்
பவுசுகொடுத்துப்பாங்காகக்கேட்டவரும்



இன்பமுடன்கேட்டவரும்என்றும்பதினாறாய்
பாக்கியத்தைப்பெற்றுப்பவுசுடனேவாழ்ந்திருப்பார்
காதினால்கேட்டவர்க்குக்கருமந்துலைந்துவிடும்
ஏழுபிறப்புக்குமியல்புடனேவாழ்ந்திருப்பார்
சின்னண்ணுபெரியண்ணுசீரானதங்காயி
பொன்னும்பலவர்புகழ்பெரியகாவியத்தை
நல்லதங்காயிநலமுடனேவாழியவே
யென்றும்பதினாறாய்ச்சேடறதான்வாழி
சந்திரசூரியர்கள்தானவரும்வாழியவே
வாழிமிகவாழிவய்யகத்தோர்வாழியவே
பாடினோர்வாழிபடித்தோர்கள்வாழியவே
நாடியேஅச்சிவிட்டோர்நன்றாகவாழியவே
எழுதினோர்தானும்யின்பமுடன்வாழியவே
ஆல்போல்தழைத்துஅருகுபோல்வேரூணி
மூங்கில்போல்சுற்றம்முசியாமல்வாழியவே

முற்றிற்று.

11690